# மத்திய மாகாண

# தமிழ் சாகித்திய விழா



# சிறப்பு மலர் - 2001

## மாத்தளை மாவட்டத் தமிழர்கள்

## வரலாறும் பாரம்பரியமும்

மத்திய மாகாண கல்வி (தமிழ்), கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி,
உணவு, வர்த்தகம், வாணிப, சுற்றுலாத்துறை,
இந்துக் கலாசார அமைச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண

# தமிழ் சாகித்திய விழா

# 2001



ஆக்கம் : ஏ. ஏ. எம். புவாஜி

மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில் கால்நடை
அபிவிருந்தி, உணவு வர்த்தகம், வாணிப சுற்றுலாத்துறை
இந்துக் கலாசார அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிநிகர் சமானமாய்
வாழ்வமிந்த நாட்டிலே"

*- பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே ................


1. மாத்தளையில் தமிழர்கள் ..................

2. மாத்தளை தமிழர்கள் – ஒரு பொருளியல் நோக்கு ...........

3. மாத்தளை மாவட்டத் தமிழர்களும் கல்வியும் ..................

4. பொது வாழ்வில் மாத்தளைத் தமிழர்கள் ...................

5. மாத்தளைத் தமிழர்களும் அவரது கோயில்களும் ................

6. மாத்தளை மாவட்டத் தமிழர்களின் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் ....................

7. விளையாட்டுத் துறையில் மாத்தளைத் தமிழர்கள் ............




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE HON. GOVERNOR OF THE CENTRAL PROVINCE

It is a great pleasure to receive an opportunity to give a message for the Tamil Sahithya Vizha - 2001 celebrate by the Indian community to honor their languages and culture by respecting the Artists, Scholars and Achievers who have contributed to sustain the religious and cultural values of Tamil origin.

The cultural programme performed by the school students and Artists of Plantation sector will show the religious and cultural value of the Tamil Origin.

I take this opportunity to thank the Hon. V. Radhakrishnan, Minister of Industries, Trade and Commerce, Tourism, Estate Infrastructure, Livestock Development, Hindu Cultural Affairs, Education (Tamil), Social Services & Rehabilitation, Central Provincial Council to make the Tamil Sahithya Vizha a culturally valuable occasion.

I Wish the above occasion is a success.

Dr. K.B. RATNAYAKE,

*Governor - Central Province.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මො. කු. ගොපල්ලව
සංස්කෘතික කටයුතු අමාත්‍ය
மொ. கு. கொபல்லவ
கலாசார அலுவல்கள் அமைச்சர்
M. C. GOPALLAWA
MINISTER OF CULTURAL AFFAIRS
8 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල
8 வது மாடி., "செத்சிறிபாய", பத்தரமுல்லை
8th Floor, Sethsiripaya, Battaramulla.

2001 – 08 – 06

# සාහිත්‍ය උත්සවය – 2001 වර්ෂය
## මාතලේ දිස්ත්‍රික්කය

සෑම වර්ෂයක් පාසාම මධ්‍යම පළාතේ හින්දු සංස්කෘතික අමාත්‍යංශය මගින් පවත්වනු ලබන සාහිත්‍ය උත්සවය මෙවරත් 2001 සැප්තැම්බර් මස මාතලේ ශ්‍රී මුත්තුමාරි අම්මන් දේවස්ථානයේදී අති උත්කර්ශවත් අන්දමින් පැවැත්වීමට කටයුතු කර ඇතිබව දැන්වීම ගැන සතුටු වන අතර ඒ වෙනුවෙන් ප්‍රකාශයට පත්කෙරෙන විස්තර අඩංගු සඟරාව සඳහා පණිවිඩයක් එවීමට කරන ලද ඉල්ලීමට ද ස්තුතිවන්ත වෙමි.

සංස්කෘතික අංශයන් සංරක්ෂණය කිරීමත්, සංස්කෘතික ප්‍රවර්ධනය සහ ව්‍යාප්තිය සඳහා ප්‍රතිපත්ති හා වැඩසටහන් සම්පාදනය කොට ඒවා ක්‍රියාත්මක කිරීමට අත හිත දීම මෙම අමාත්‍යංශයේ ප්‍රධාන මෙහෙවර වන්නේය. එම කාර්ය භාරය පළාත් මට්ටමේ ප්‍රගුණ කිරීම සඳහා ඔබගේ කටයුතු අතිශයින් උපකාරීවනු නොඅනුමානයි.

ඈත අතීතයේ සිටම මාතලේ ජනතාව සාමකාමී සහජීවනයෙන් කටයුතු කළ පිරිසක් හෙයින් විශේෂයෙන් මෙම වකවානුවට අවශ්‍ය යහපත් අවබෝධය මෙවන් කලා කටයුතු වල විපුල ප්‍රතිඵලය ලෙස ලැබෙනු ඇතැයි හගිමි.

ඔබ විසින් මහත් උද්යෝගයෙන් පවත්වනු ලබන සාහිත්‍ය උත්සවය අතිශයින් සාර්ථක වේවා! යි අපගේ සුභාශිංෂණයයි.

*මෙයට*
*විශ්වාසී,*

**මොන්ටි ගොපල්ලව**
*සංස්කෘතික කටයුතු අමාත්‍ය.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. இராதாகிருஷ்ணன், ஜே. பி., யூ. எம்.
அமைச்சர்

கைத்தொழில், வர்த்தக வாணிப, சுற்றுலாத்துறை, தோட்ட உள்ளக கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி,
இந்து கலாசார அலுவல்கள், கல்வி (தமிழ்), சமூக சேவைகள், புனருத்தாரண அலுவல்கள் அமைச்சு

மத்திய மாகாண சபை

திகதி: 27.08.2001.

# ஆசிச் செய்தி



வளர்ந்து விட்ட விஞ்ஞான யுகத்தில் மலையகம் காணவிருக்கும் காணவேண்டிய புதுமைகள், மாற்றங்கள் பல, அவற்றில் எனது அமைச்சினால் மலையக சாகித்திய விழாவை பல்வேறுபட்ட பல்சுவை அம்சங்களுடன் மாத்தளை மாநகரில் நடாத்துவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சங்கத் தமிழின் இனிமையைத் " தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான முத்திக் கனியே முத்தமிழ் " எனப் பண்டையச் சான்றோரால் போற்றப்பட்ட நமதருந்தமிழ் உலகின் மொழிகள் பலவற்றுள்ளும் முதிர்ந்த முதன் மொழியாய் வழிகாட்டும் ஒளிவிளக்காய் அழகு மிளிர்ந்து, இளமை ததும்பி பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துக் காக்கும் எல்லையற்ற பரம்பொருள் போன்று விளங்குகின்றது. இம்முருகு தமிழை சிறப்பிக்கும் முகமாகவே இச் சாகித்திய விழாவில் கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகளை பிரதிபலிக்கும் பல நிகழ்ச்சிகள் நடைபெற இருப்பது இந்த விஞ்ஞான யுகத்திலும் எமது பாரம்பரிய பண்பாடுகள் அழிந்து போகாமல் கட்டிக் காக்கும் வகையில் எடுத்துக் கொண்ட ஒரு பெரும் முயற்சியாகும்.

எமது கலாசாரத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டவும், உளவியல் ரீதியாக உயர்வு பெறும் தனது தனித்துவ தன்மையைக் காத்து வெளிப்படுத்தவும் இவ்விழா பெரும் பங்களிப்பினைச் செய்கின்றது என்றால் மிகையாகாது. இவ்விழாவில் இலக்கியம் படைத்த எழுத்தாளர்கள், கல்விமான்கள், சமூக, சமய சேவகர்கள் மற்றும் அறிஞர்கள் பலர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள். மற்றும் நூல் கண்காட்சி போன்றனவும் இடம்பெறவுள்ளது.

எனவே இத்தகைய சாகித்திய விழாவினை ஏற்பாடு செய்த எமது அமைச்சின் இந்து கலாசார திணைக்களத்தின் சகல அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

*"வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர் –*

*வாழிய எம் இலங்கைத் திருநாடு"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண சாகித்திய விழா**

*செயற்குழுத் தலைவரும்*

*மத்திய மாகாண சபை உறுப்பினருமான*

**எம். சிவஞானம்** *அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டின் சிறப்பையும், மக்களின் கலை, கலாசார, பண்பாட்டின் விழுமியங்களையும் எடுத்துக்கூறும். அதைப்போலவே ஒரு மாவட்டத்தின் வரலாறு அம்மாவட்டத்தில் வாழ்ந்த, வாழுகின்ற மக்களின் வாழ்வியலை அவர்கள் கடந்து வந்த கல்லும் முள்ளும் நிறைந்த பாதையினை பலர் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும்.

பன்னாகமம் எனும் பழமைப் பெயர் கொண்ட மாத்தளை மாநகரில் வாழுகின்ற தமிழ் மக்களின் வரலாற்றை வெளிக்கொணர்வதின் மூலம் அம்மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துள்ளார் வரலாற்று ஆசிரியர் ஏ. ஏ. எம். புவாஜி அவர்கள்.

மத்திய மாகாண சாகித்திய விழா மாத்தளை மாவட்டத்தில் நடைபெறும் இவ்வேளையில் இந்நூல் வெளிவருவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் மலையகத்திற்கு அழைத்து வரப்பட்ட போது மாத்தளை நகரில்தான் முகாம் அமைத்து தங்கினார்கள் என்பது வரலாறு. ஆகவே இங்கிருந்து தான் மலையக மக்களின் வரலாறு தொடங்கியதும் சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
மாத்தளை - இலங்கை
SRI MUTHUMARIAMMAN THEVASTHANAM
MATALE - SRILANKA
TEL: 066-22481, 066-22320

ශ්‍රී මුත්තුමාරියම්මන් දේවස්ථානය
මාතලේ

10 - 09 - 2001

## மலையக தமிழ் சாகித்திய விழா சிறப்பாக நடைபெற

# எனது வாழ்த்துக்கள்

இந் நாட்டில் குறிப்பாக மலையகத்தின் தமிழ் மொழிக்கும் சமயத்திற்கும் மாத்தளைப் பிரதேசம் அன்று முதல் இன்றுவரை அளித்து வரும் பங்களிப்பு அளப்பரியதாகும். மாத்தளை மாநகரிலே சமய சம்பந்தப்பட்ட விழாக்கள் மட்டுமல்லாது கலை, இலக்கிய விழாக்கள், நாடக விழாக்கள், கருத்தரங்குகள் போன்ற இன்னோரன்ன இலக்கிய முத்தமிழ் விழாக்கள் தொடர்ச்சியாக நடைபெற்று களைக்கட்டிய ஒரு காலப்பகுதியும் இருந்தது. இருந்தும் ஒரு சில கலைஞர்களினால் பலசிரமத்திற்கு மத்தியில் சிறிய அளவிலான விழாக்களை நடத்தி வருகின்றார்கள். அதே நேரத்தில் எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள், கலை இலக்கிய வாதிகள், கலை ஆர்வலர்கள் போன்றோரும் தோட்டப்பகுதிகளில் காமன் கூத்து, தப்பு, உருமி போன்ற இன்னோரன்ன வாத்தியங்களும் நம் கலை கலாசாரத்தை வளர்க்கத் தவறவில்லை. என்றாலும் சமீப காலமாக சமயத்தோடு ஒட்டிய விழாக்களைத் தவிர இலக்கியம் சார்ந்த விழாக்கள் நடைபெறுவது அபூர்வமாகி வருகின்றது. இதற்குக் காரணம் ஆர்வலர்களிடமிருந்து ஊக்கம் கிட்டாததே என்று சொல்லலாம்.

இப்படியாக தமிழ்கலை கலாசாரங்கள் அருகிவரும் காலகட்டத்தில் ஓர் உந்து சக்தியாக சாகித்திய விழாக்கள் நடாத்திவருவது போற்றத்தக்கது. அந்த வகையிலே இவ் வருடம் மத்திய மாகாண அமைச்சர் கௌரவ வீ. இராதாகிருஷ்ணன் அவர்கள் தமிழ் சாகித்திய விழாவினை மாத்தளையில் 2001ம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இப்பகுதி இலக்கிய வாதிகளுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஓர் உந்து சக்தியாக அமையப்பெற்றுள்ளது என்பதை அறியும் போது மனதிற்கு மகிழ்ச்சியாகவிருக்கின்றது.

இவ்விழாவினையொட்டி இடம்பெறவிருக்கும், கலாசாரத்தை பிரதி பலிக்கும் கலாசார ஊர்திகளின் ஊர்வலமும், அதனையொட்டி நடைபெறவிருக்கும் விழாவும் சிறப்பாக அமைய வேண்டும் என எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இவ்விழாவினை முன்னின்று நடாத்தும் விழாக்குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் கடமைப்பட்டுள்ளேன். மலையக தமிழ் சாகித்திய விழாவின் அனைத்து செயல்பாடுகளும் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல அம்பிகையின் அருள் கிட்ட வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
அம்பாள் சேவையில்,
**த. மாரிமுத்து செட்டியார்**
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**M. SATCHIDANANDAN**

MINISTER OF

TAMIL EDUCATION, ESTATE INFRASTRUCTURE, HINDU CULTURAL AFFAIRS & TOURISM

UVA PROVINCIAL COUNCIL

# சாகித்திய விழா - 2001 -
# மாத்தளை

மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு இவ்வாண்டு கொண்டாடும் தமிழ் சாகித்திய விழாவினையொட்டி வெளிவருகின்ற சிறப்புமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும்மகிழ்ச்சியடைகின்றேன்.

யுகங்கள் பல மாற்றங்களுக்குள்ளாகி மிகவும் வேகமாக இயங்கி கொண்டிருக்கின்ற தொழில்நுட்ப யுகத்திலும்,எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதன் மூலமும், மக்கள் மத்தியிலே மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதன் மூலமும், மனிதனை மனிதனாக வாழவைக்கும் சிந்தனை ஆற்றலை தூண்டுவதாக இச்சாகித்திய விழா அமைய வேண்டுமென வாழ்த்துவதோடு, தமிழர் பண்பாடானது காலத்தால் அழியாத தத்துவார்த்தமான உண்மைகளை உலகிற்கு விதைத்துள்ளது. ஆகவே இன்றைய நவீன யுகம் அறிவியல் ரீதியில் மின்னல் வேகத்தில் முன்னேற்றமடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் வளர்ந்து வருகின்ற புதிய இளைஞர் சமுதாயத்துக்கு தமிழ் சாகித்தியம் தொடர்புடைய விழுமியங்களை செம்மைப்படுத்துவது எமது கடமை இதனை வழுப்படுத்துவதற்கே மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு செயற்றிட்டங்கள் அமைந்துள்ளது.

மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் கௌரவ வீ. இராதாகிருஷ்ணன் அவர்களின் தீர்க்கதரிசனமான சிந்தனையின் பிரதிபலனே இச்சாகித்திய விழா, கலைக்கும், கல்விக்கும் கரம் கொடுக்க வேண்டும். பண்பாட்டுத் தார்பரியங்கள் என்றும் பேணப்பட வேண்டும் என்ற உணர்வுடன் இச்சாகித்திய விழாவை ஏற்பாடு செய்த அனைவரையும் வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

**வாழ்க தமிழ்! வளர்க நம் பண்பாடு!**

*நன்றி*

**எம். சச்சிதானந்தன்**

*அமைச்சர்*

*தமிழ் கல்வி, இந்து கலாசார, தோட்ட உட்கட்டமைப்பு,*
*சுற்றுலாத்துறை அமைச்சு,*
*ஊவா மாகாண சபை,*
*பதுளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்திய விழா 2001 - மாத்தளை

இந்துக் கலாசார அமைச்சினால் மாத்தளை மண்ணில் நடாத்தவிருக்கும் தமிழ் சாகித்திய விழா சிறப்பும் பெருமையும் பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

மாத்தளை பிரதேசம்..... தென்னாட்டுத் தமிழர்கள் துயரம் நிறைந்த காவியத்தை சுமந்துக் கொண்டு காலடி வைத்த முதல் நுழைவாசலாகும்!

வறுமையையும் கண்ணீரையும் மடியில் கட்டிக்கொண்டு வாழ்வைத்தேடி.... "வாழ்வை காட்டுகிறேன்" என்று வரவழைத்துக் கொடியவர்களை பின்தொடர்ந்து.... கட்டுச்சோற்றை - கம்பங்கலியை அவிழ்த்து களைப்பாற்றி நின்ற முதல் வரலாற்று மண்ணாகும்!

சமுத்திரத்தின் ஜலசந்தியைப் போல மாத்தளை இவர்களுக்கு நிலச்சந்தியாக விருந்தது. இங்கிருந்தே மத்திய மலைநாடு இரத்தினபுரி, பதுளை என்று பயணம் புறப்பட பாதை வகுத்த முதல் திசையாகும்!

இந்த வேதனை நினைவுகள் தென்னாட்டுத் தமிழர் வரலாற்றின் ஓர் பகுதி....

இந்த வரலாற்றை நினைவூட்டிக் கொண்டிருக்கும் மாத்தளை மண்ணில் சமூக பிரக்ஞை கொண்ட கலை இலக்கியவாதிகள் உருவாகினர். இன்னும் உருவாகிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த மக்கள் கூட்டம் வெறும் உழைக்கும் பட்டாளம் அல்ல..... அவர்கள் ஒரு சமூகம்.... அவர்கள் இந்த நாட்டின் குடி மக்களின் ஒரு பகுதியினர்.... அவர்களுக்கும் கலை, கலாசாரம் மொழி பண்பாடு என்ற வாழ்வியல் அம்சங்கள் உண்டு என்பதை பறைசாற்றுவதற்கு மாத்தளை மண்ணில் ஒரு சிந்தனைப் பட்டாளம் இன்று வரை சீரோங்கி வளர்வதை நாம் அறிகின்றோம்.

மாத்தளை.... மண் வளம் நிறைந்த குறிஞ்சி திணையாகும். தேயிலையும் தென்னையும் மிளகும் கராம்பும் கோப்பியும் கொக்கோவும் இறப்பரும் கனிவளங்களும் உள்நிறைந்த சுந்தர பூமியாகும்.

இந்த வளங்களைப்போலவே இன்று மலையக தமிழரின் கலை,இலக்கிய வாழ்வுக்கு புடம் போட்டுக் கொண்டிருக்கும் நாடறிந்த சிந்தனையாளர்கள் இந்த பிரதேசத்தில் வாழ்ந்து வருவது இந்த இலக்கிய விழாவுக்கு இன்னும் பெருமை கூட்டித் தருகின்றது.

இவ்விழா சிறப்படைவதற்கு இனி என்ன வேண்டும்?
எல்லாம் இதன்பால் உள!

இவ்வண்ணம்,


**மு.சிவலிங்கம்**
மத்தியமாகாண சபை உறுப்பினர்
இல. 56,ரொசிட்டா வீடமைப்புத் திட்டம்,
கொட்டகலை, தொ. பேசி : 051 - 23012




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

நான் இந்து கலாசார அமைச்சின் செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் இரண்டாவது சாகித்திய விழா இது. இந்தச் சாகித்திய விழாக்கள் பொதுவாக மலையகத் தமிழ் மக்களால் கலை, கலாச்சாரத்தையும் பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஒன்றாக அமைந்தாலும், என்னைப் பொருத்தவரை ஓரினம் தனது கடந்த கால அடிச்சுவட்டை ஒரு முறை திரும்பிப் பார்க்கும் ஒரு நிகழ்வாகவே எண்ணுகிறேன்.

மலையகத் தமிழினம் 160 வருட கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும், கடந்த 03 தசாப்தங்களாகவே பல குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான மாற்றங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. குறிப்பாகக் கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி தோட்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. குறிப்பாகக் கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, தோட்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், அரசியல் துறையினால் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றங்களும் பிரதேச, மாகாண, தேசிய மட்ட அரசியல் பிரதிநிதித்துவங்களையும் குறிப்பிடலாம். தோட்ட முகாமைத்துவத்திலிருந்த நிர்வாகிகளின் முகாமைத்துவம் வெகுவாகக் குறைந்துள்ளது. சனநாயக அடிப்படையிலான அணுகுமுறை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கல்வியில் பாரிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் உருவாகியுள்ளார்கள். பாடசாலைப் பௌதீக வளங்கள் திருப்திகரமாக உள்ளது. அரசியலைப் பொறுத்தவரை வெகுநீண்ட இடைவெளிக்குப் பிறகு மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எட்டுப் பேர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.

எனவே மலையகத்திலே சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலையிலான ஓர் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் இந்த 2001 ஆம் ஆண்டுக்கான தமிழ் சாகித்திய விழா இதுவரை நாம் கண்ட மலையகத்தைத் திரும்பிப் பார்க்கும் ஒரு நிகழ்ச்சியாகவே அமையும் என நான் நினைக்கின்றேன். இவ்விழாவிலே மலையகத்திற்குச் சேவையாற்றிய பல பெரும் தலைவர்கள் சாகித்திய விழா விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இது ஒரு ஆரோக்கியமான நிகழ்வாகும். ஓரினம் முன்னேறும் பொழுது அவ்வினத்திலிருந்து முன்னேறியவர்களும் அவ்வினத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

இவ்விழாவின் வெற்றிகளுக்காக உழைத்த அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து இச்செய்தியினை நிறைவு செய்து கொள்ளுகிறேன்.

**ஈ. எச். எம். பி. எல்கடுவ**
செயலாளர்
இந்து கலாசார அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

අධ්‍යාපන පීඨය
கல்விப் பீடம்
FACULTY OF EDUCATION

සමාජ විද්‍යා අධ්‍යාපන අධ්‍යයනාංශය
Department of Social Science Education

තැපැල් පෙට්ටිය 1490
කොළඹ 3
Post Box 1490
Colombo-3
දුරකථනය / Telephone 588812

# வாழ்த்துரை

எதிர் வரும் செப்டம்பர் மாதம் 15 , 16 ஆம் திகதிகளில் மத்திய மாகாண சபையின் அமைச்சர் மாண்புமிகு வே. இராதாகிருஷ்ணன் அவர்களின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெறவுள்ள மாத்தளை சாகித்திய விழா பெரு வெற்றி அடைய வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன். மலையகத்தில் வாழுகின்ற பல இலட்சக்கணக்கான இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஒரு பெரும் கலாசாரத்தின் வாரிசுகள். அவர்களுடைய கலாசார மரபுகளும் கலை வடிவங்களும் போற்றிப் பேணப்படலும் அவை நவீன வாழ்க்கை முறைக்கேற்ப மெருகூட்டப்பட்டு வளம் பெறுதலும் இன்றைய முக்கிய தேவையாகும். எம்மக்கள் போற்றிப் பாதுகாத்து வந்த தனித்துவ கலை,கலாசார அடையாளங்கள் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியன. அத்துடன் அம்மக்கள் மத்தியில் தோன்றியுள்ள கலைஞர்களும் படைப்பிலக்கிய கர்த்தாக்களும் சிறப்பறிஞர்களும் பல இன்னல்களுக்கும் பின்னடைவுகளுக்குமிடையில் தமது கலைசார், அறிவுசார் பணிகளையும் பங்களிப்புகளையும் செய்து வருகின்ற பாங்கு போற்றத்தக்கது. இவை அனைத்தையும் உள்ளடக்கிதாய மலையகத்தில் தோன்றியுள்ள கலாசார, இலக்கிய மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாக நடைபெறும் இச்சாகித்திய விழாவை ஏற்பாடு செய்துள்ள அமைச்சரவர்கள் பெரும் பாராட்டுக்குரியவர். அவரது தலைமையின் கீழும் வழிகாட்டலினூடாகவும் மலையக சமூக, கலை, கலாசார வாழ்க்கையானது புதிய பல பரிணாமங்களை எட்டும் என்பது திண்ணம். விழாவின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்து வரும் அனைத்து ஆர்வலர்களுக்கும் அமைப்பாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
கொழும்புப் பல்கலைக்கழகம்
10. 08. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தமிழ் வலுவும் வனப்பும், வளமும் நிறைந்த மொழி பழந்தமிழ் இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தவை. சில மொழிகளைப் போல் உலக வழக்கு அழிந்தொழியாமல், சீரிளமைத் திறத்தோடு இலங்கும் மொழியாக இது விளங்குகிறது. புதிய வாழ்க்கைத் தேவைகளுக்கும், காலமாற்றத்துக்கும் ஈடு கொடுத்துத் தமிழ் மேலோங்கி வளர்ந்து வந்துள்ளது. இலங்கையில், மத்திய மாகாண சபையின் இந்துக் கலாசார, தமிழ், கல்வி அமைச்சு மத்திய மாகாணத் தமிழ்ச் சாகித்திய விழாவினை மாத்தளை நகரிற் கொண்டாடுவது தமிழ் பேசும் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழ்ச் சாகித்திய விழாவில் வெளியிடப்படுகின்ற இம்மலர், பல்வகைப்பட்ட சிந்தனைகளின் புதிய நறுமணத்தை வாசக நெஞ்சங்கள் நுகரச் செய்யும் என்பது திண்ணம். இவ்விழா மலர் தொடர்பாக உழைத்த அனைவரும் நம் அனைவரதும் மரியாதைக்கும் உரியவர்கள்.

மத்திய மாகாணத் தமிழ் சாகித்திய விழா சிறப்புற நடைபெறவும், இவ்விழா மலர் பெருமையோடு மலரவும் காரணகர்த்தராக விளங்கும் மாண்புமிகு அமைச்சர் திரு. வே. இராதாகிருஷ்ணன், நமது மனந்திறந்த பாராட்டுக்கு உரியவர். அவரது பல்வேறு பணிகளோடு, அவர் புரியும் தமிழ்ப் பணிக்கு ஒரு சான்றாக மத்திய மாகாணத் தமிழ்ச் சாகித்திய விழாவும், சாகித்திய விழா மலரும் விளங்குகின்றன.

விழா சிறப்புறவும், மலர் பெருமையுறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் !

கலாநிதி **துரை. மனோகரன்**
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## *தமிழ் சாகித்திய விழா - 2001*

### *மாத்தளை*

**உ**லகின் எந்த ஒரு சமூகத்தின் நலத்திற்கும் வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காலம் காலமாகக் கலை - இலக்கியங்கள் ஆற்றிவந்துள்ள பணிகள் எவராலும் அலட்சியப்படுத்த முடியாதவை. மலையகத் தமிழ்ச்சமூகமும் அச்சமூகம் பற்றிய கலை - இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஈழத்துத் தமிழ்ப்பேசும் மக்களது கலை - இலக்கிய வளர்ச்சியில் மலையகத்திற்கும் காத்திரமான பங்கு உளது என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகங்களுள் 'மலையகத் தமிழ்ச்சமூகம்' தனித்துவமான பல பிரச்சினைகளையும் பிரத்தியேகமான பல பண்பாட்டம்சங்களையும் கொண்டுள்ளது. கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அச்சமூகம் இந்த நாட்டின் வளத்திற்கும் பலதுறைகள் சார்ந்த முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவந்துள்ளது; அரும்பெரும் தியாகங்களைச் செய்துள்ளது. துயரம் தோய்ந்தும் இருள் நிறைந்ததுமான அவர்களது சோகவரலாற்றில், அவர்கள் கண்ட இழப்புகள் அளப்பில; அனுபவித்த இன்னல்களும் வேதனைகளும் எடுத்தியம்ப முடியாதவை; செய்துள்ள தியாகங்கள் மிகமிக அதிகம்; அஹிம்சை வழியில் நடாத்திய போராட்டங்கள் அநந்தம். அவர்களது முன்னேற்றத்திற்காகவும் விமோசனத்திற்காகவும் தங்களது வாழ்வை அர்ப்பணித்த தியாகிகளை நாம் இவ்விடத்தே நினைவு கூருதல் அவசியம்.

இவற்றுக்கு மத்தியிலேயே அச்சமூகம் படிப்படியாக விழிப்புற்று எழுச்சியுற்றுக் கொண்டிருக்கிறது; ''தோட்டக் காட்டான்கள்" எனவும், ''கள்ளத்தோணிகள்", ''கூலிகள்" எனவும் ''தென்னிந்திய கீழ்சாதி மக்கள்" எனவும் பலவாறெல்லாம் எள்ளி நகையாடப்பட்ட நிலைமைகளை வெற்றி கரமாகக்கடந்து ''மலையகத்தமிழ்ச் சமூகம்" (இந்திய வம்சா வழித் தமிழர் ) என உரிய முறையில் இன்று இனங்காணப்பட்டுள்ளது. அச்சமூகம் இன்று முன்னேற்றப்பாதையில் வீறுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மனித நேயம் கொண்ட சகலரும் அவர்களது முன்னேற்றத்திற்குத் துணைநிற்க வேண்டியது இன்றியமையாததொன்றாகும்.

தேசிய சாகித்திய விழா, மாகாண சாகித்திய விழா முதலியன காரணமாக மலையகத் தமிழ்ச் சமூகத்தில் காலம் காலமாக மறைக்கப்பட்டிருந்த அறிஞர்கள், இளைஞர்கள் மாணவர்கள் முதலியோரது ஆற்றல்களும் ஆளுமைகளும் கடந்த சில பல ஆண்டுகளுள் உரிய முறையில் படிப்படியாக வெளிக்கொணரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கு மேன்மேலும் உந்துதல் அளிக்கும் வகையில் மத்திய மாகாண கல்வி (தமிழ்), இந்து கலாசார கௌரவ அமைச்சர் வே. இராதாக்கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் மனந்திறந்து பாராட்டத்தக்கவை. அன்னாரது பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

பேராசிரியர் **க. அருணாசலம்**

தமிழ்த்துறை

பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை

05. 08. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின்

## தலைவர், இரா. அ. இராமன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எமது தாய் மண்ணில் தமிழுக்கு விழாக்கள்
எடுத்துச் சிறப்பித்தவர்கள் பலர்.
தமிழுக்கு மட்டும் இவர்கள் விழா எடுக்கவில்லை.
அதன் சிறப்பை,
அதன் செழுமையை,
அதன் பெருமையை
எழுதுகோல் ஏந்திய
இலக்கிய மேதைகளையும்,
கலைகளை அரங்கேற்றியவர்களையும்
இவர்கள் கௌரவித்து சிறப்பித்ததை
மலையக சாகித்திய விழா
நடைபெறும் இவ்வேளையில்
அவர்களை நினைவுகூருவது
மிகப் பொருத்தமாகும்.
தமிழுக்கு ,
தமிழன்னைக்குப் பெருமை சேர்த்த
முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி
மாநாட்டை நடாத்தி உலகத் தமிழருக்கு
உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தந்தவர்
மறைந்த தமிழ் அறிஞர் வண. தனிநாயக அடிகளார்,
இந்துக் கலாசார முன்னாள் அமைச்சரும்,
மலேசியா நாட்டின்
இலங்கைக்கான முன்னாள் தூதுவருமான செ. இராசதுரை
இந்து கலாசார இராஜாங்க பிரதியமைச்சர்
பி. பி. தேவராஜ்.
மத்திய மகாண இந்து கலாசார,
முன்னாள் தமிழ் கல்வி அமைச்சர்
புத்திரசிகாமணி ஆகியோர்.
இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி
வீறுநடைபோட்டு
மத்திய மாகாணத்தின் இரண்டு,
சாகித்திய விழாக்களை நடாத்தி தமிழுக்கு,
தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளார்
மாண்புமிகு அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அவர்கள்,
தனது இரண்டாவது சாகித்திய விழாவை
இலக்கியம் மணக்கும் மண்ணாம்
மாத்தளை மாநகரில்
நிகழ்த்தி கொண்டுள்ளார்.
இவர் தலைமையில் நடைபெறும்
இவ்விழா மிகச் சிறப்புப் பெறும் என்பது திண்ணமே.
இச்சாகித்திய விழா மலர்
இனிய மலராக,
சிறப்பு மலராக,
தேன் சிந்தும் மலராக,
பயனுள்ள மலராக,
பாதுகாக்க வேண்டிய மலராக,
தமிழ் அன்னைக்கு மகுடம் சூடும் மலராக,
இலங்கை மண்ணுக்கு,
மலையக மண்ணுக்கு
பெருமை சேர்க்கும் மலராக,
மணம் வீசும் மலராக மலர
எமது கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
வாழ்த்துகின்றது.
இவ்விழாவிற்கு தலைமை நாயகனாகத் திகழும்
எமது மாண்புமிகு அமைச்சருக்கும்,
இவ்விழா சிறப்புற நடைபெற உழைத்த
மாத்தளை ஏற்பாட்டுக் குழுவினருக்கும்,
அமைச்சைச் சேர்ந்த
இச்சாகித்திய விழாவுக்கு
தூண்களாக இருந்து உழைத்த
மத்திய மகாண இந்து கலாசார அமைச்சின்
இணைப்புச் செயலாளர்
வீ. சாந்தகுமார்.
மத்திய மகாண இந்து கலாசார அமைச்சரின்
பிரத்தியேகச் செயலாளர்
நா. துரைசாமி.
அமைச்சின் ஊடகத் தகவல்துறை,
மற்றும் பொதுசன அதிகாரி
பி. சி. இராஜேந்திரன்.
அமைச்சின் கலாசார உத்தியோகஸ்தர்
செல்வி எம். கிருஷ்ணவேணி ஆகியோர்களுக்கும்.
சாதித்திய விழா குழுத் தலைவரும் ,
மத்திய மகாண சபையின் உறுப்பினருமான
எம். சிவஞானம் அவர்களுக்கும்
எமது வாழ்த்துக்கள்.
தொடர்ந்து பல தமிழ் விழாக்கள் காண
எமது மாண்புமிகு அமைச்சர்
வே. இராதாகிஷ்ணன் அவர்களுக்கு
உயர்வினை வழங்கிடுவோம்,
ஊக்கத்தை அளித்திடுவோம்.
வாழ்த்துக்கள் மலரச் செய்வோம்.

தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மாத்தளையில் நடக்கவிருக்கும் மத்திய மாகாண சபை தமிழ் சாகித்திய விழா ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் மத்திய மகாண சபை உறுப்பினரும் மாத்தளை மாநகர சபை முன்னாள் துணை முதல்வருமான உயர்திரு. எம். சிவஞானம் அவர்களின் தலைமையில் நடந்த பூர்வாங்க கூட்டமொன்றில் சாகித்திய விழாவின் போது மாத்தளை மாவட்ட தமிழர்களின் வரலாறு பற்றிய நூல் ஒன்று வெளியிடப்படல் வேண்டும் என்னும் தன் விருப்பத்தை மத்திய மாகாண கைத்தொழில், வர்த்தக, இந்து கலாசார அலுவல்கள், கல்வி, (தமிழ்), சமூக சேவைகள், அமைச்சர் மாண்புமிகு வே. இராதாகிஷ்ணன் அவர்கள் முன்வைத்தார்கள். இத்தகைய நூலொன்று வெளிவரவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்ட சபைத் தலைவர் அத்தகைய நூல் ஒன்றினை எழுதுவதற்குப் பொருத்தமானவன் என என்னை இனம் காட்டினார். சபையின் கருத்தும் இதற்கு இசைவானதாக இருக்கவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாத்தளை மாவட்டத் தமிழர்கள் பற்றிய நூலினை எழுதுமாறு என்னை அன்பாகப் பணித்தார்கள், அந்தப் பணிப்பின் விளைவே உங்கள் கரங்களில் இருக்கும் இந்நூல்.

"கடந்த கால வரலாறு பற்றிய தெளிவு அற்ற ஒரு சமூகம் தனக்கென்று ஒரு தெளிவுள்ள எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியாது. இலக்குகளோடு கூடிய எதிர்காலத்தை நோக்கிய பாதையில் நடை போடவும் முடியாது" என்பது உண்மை. இலங்கையில் வாழும் தமிழர்களைப் பற்றி வரலாற்று நூல்கள் பல வெளிவந்துள்ளன என்ற போதிலும், இவற்றில் எந்த ஒரு நூலும் தமிழர்களின் வரலாற்றை முழுமையாகக் கூறும் நூல் என்ற பெருமைக்கு உரித்தானது அல்ல என்ற உண்மையை - அது கசப்பானதாக இருந்தாலும் நாம் ஏற்கவே வேண்டும். இதற்குப் பின்னராவது இத்தகைய முழுமையான ஒரு நூல் எழுதப்பட வேண்டுமானால் அதற்கு முன்னர் தமிழர்கள் கணிசமான தொகையினராக வாழும் பிரதேசங்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் வெளிவர வேண்டும். இந்நூல்களில் தமிழர்கள் தொடர்பான அத்தனை தகவல்களும் பதிவு செய்யப்பட வேண்டும். பின்னர் இவற்றை அடிப்படையாக வைத்தே தேசிய மட்ட நூல் எழுதப்பட வேண்டும், அப்போது தான் தேசிய மட்ட நூல் முழுமையானதாக விளங்கும்.

ஒரு பிரதேசம் தொடர்பான ஒரு சிறு நிகழ்வு தேசிய மட்டத்தில் ஓர் இனத்தின் வரலாறை எழுதும் போது முக்கியமற்றதாகக் கருதப்பட்டு ஒதுக்கப்படலாம். ஆனால் அப்பிரதேசத்தைப் பற்றிய வரலாறு எழுதும் போது அந்நிகழ்வு முக்கியமானதாகக் கருதப்பட்டு வரலாற்றில் பதிவு செய்யப்படலாம். இந் நிகழ்வினைப் போன்ற அல்லது இதற்கு ஒத்த நிகழ்வுகள் வேறு பிரதேசங்களிலும் பதிவு செய்யப்பட்டால் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு பொது உண்மையை எடுத்துக் காட்டலாம். அப்போது அது தேசிய மட்டத்தில் எழுதப்படும் வரலாற்றிலும் இணைக்கப்படலாம். இப்புதிய கணிப்பீட்டையே மாற்றிவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் பொது வாழ்வில் மாத்தளைத் தமிழர்கள் எனும் அத்தியாயத்தில் திரு. எதிர்மானசிங்கம், திரு. எட்வர்ட் சில்வா எனும் இருவரைப் பற்றிய ஒரு நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கொடுத்த வாக்கை மீறாது இருப்பதற்காக தன்னைத் தேடிவந்த நகரபிதா பதவியை திரு. எதிர்மானசிங்கம் நிராகரித்ததை இந்நிகழ்வு காட்டுகின்றது. இப்படிப்பட்ட சிறுசிறு சம்பவங்கள் பல்வேறு பிரதேச வரலாறுகளில் பதிவு செய்யப்படும் போது தமிழர்கள் எத்தனை கண்ணியமானவர்கள் என்ற எண்ணம் தானாகவே தோன்றும். மாத்தளையில் உள்ள சிவகுரு சுருட்டுக் கடை எனும் ஒரு கடை இரண்டு தலைமுறைகளாக யாழ்ப்பாணத் தமிழர்களினாலும் சிங்களவர்களாலும் நடத்தப்படுவதைக் காட்டியுள்ளேன். வேறு பிரதேச வரலாறுகளிலும் இத்தகைய தகவல்கள் பதிவு செய்யப்படும் போது சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது என கூறுவோர் தலைகுனிவர். இந்த தீர்க்க தரிசனம் தான் மாத்தளை மாவட்டத் தமிழர்கள் என்ற மாவட்ட வரலாற்றினை எழுதி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை அமைச்சர் அவர்களுக்கு வழங்கியிருக்கும். எங்கள் அமைச்சரின் முன்மாதிரியினைப் பின்பற்றி ஏனைய மாவட்டங்களிலும் தமிழர்களின் வரலாறு எழுதப்பட்டால் தமிழ்ச் சமூகம் நன்மை பெறும்.

காலக்கெடு விதிக்கப்பட்டு செயற்பட நேர்ந்த நிர்ப்பந்தம் காரணமாய் இவ் ஆய்வில் விடுபட்டுப் போனவை பல இருக்கலாம். இன்னும் சில விரித்தெழுதப்பட வேண்டியனவாயும் மேலும் ஒளி பாய்ச்சப்பட வேண்டியனவாயும் இருக்கலாம். குறிப்பிடப்படவேண்டிய சில பெயர்கள் விடுபட்டும் இருக்கலாம் எனவே மாத்தளைத் தமிழர்களின் வரலாற்றுக் குறிப்பினைப் பதிவு செய்யும் பூர்வாங்க முயற்சியாக இதனைக் கொள்வதே பொருத்தமென நினைக்கிறேன். வருங்காலத்தில் இவ் ஆய்வை மேலும் விரிவாக மேற்கொள்ள முன்வரும் வரலாற்று மாணவர்களுக்கு எனது முயற்சி வழி அமைக்கும் என நம்புகின்றேன். இதுவே என் அவாவும் கூட.

எனக்கு இந்த அரிய வாய்ப்பினைத் தந்த அமைச்சர் மாண்புமிகு வே. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் மகாண சபை உறுப்பினர் இலக்கிய ஆர்வலர் எம். சிவஞானம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். கனிவோடும் கண்ணியத்தோடும் எனக்கு உற்சாகமூட்டிய அமைச்சு இணைப்பதிகாரி திரு. வி சாந்தகுமார் அவர்களுக்கும் இந்நூல் எழுதுகையில் எனக்குப் பெரும் ஊக்கம் தந்த எம். எம். பீர்முகம்மது அவர்களுக்கும் என் நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன். என் வாழ்வின் ஊன்று கோலாய்த் திகழும் என் அன்பு மனைவி நஸீஹா இப்பணியிலும் எனக்கு உதவினார். அவருக்கும் என் நன்றி.

**ஏ. ஏ. எம். புவாஜி**

*111, கொடப்பொல ரோட்,*

*மாத்தளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**2000** ம் ஆண்டுக்கான தமிழ் சாகித்திய விழா நேற்று போல் நினைவிலிருந்தும் இதோ மாத்தளையில் நாம் 2001ஆம் ஆண்டுக்கான சாகித்திய விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இத்தகைய விழாக்கள் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு போன்ற எல்லைகளோடு நின்றுவிடாது நாம் சிறுபான்மையினத்தவராக வாழும் எமது இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் எமது ஒற்றுமையையும் சக்தியையும் வெளிக்காட்டும் அளவிற்கு அமையவேண்டும் என்பதே எமது அவா. இவ்வாண்டிற்கான தமிழ் சாகித்திய விழாவின் தொனிப் பொருளாகப் பாரதியின்

*"சரிநிகர் சமானமாய் வாழ்வமிந்த நாட்டிலே"*

என்ற அடி தெரிவு செய்யப்பட்டதில் முழு நோக்கமும் இதுவே. ஓரினத்தின் மொழி, பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவற்றில் காணப்படும் தனித்துவப் பண்புகளிலேயே அவ்வினத்தின் மேன்மை போற்றப்படுகின்றது. எனவே இவ்விழுமியங்கள் போன்று பேணிப் பாதுகாக்கப்பட்டு எம் எதிர்காலச் சந்ததியினருக்கு முறையாகக் கைமாற்றப்பட வேண்டும்.

இவ்வருட விழாவிற்காக மாத்தளை நகர் தெரிவு செய்யப்பட்டமைக்குப் பல முக்கிய காரணங்களுண்டு. இங்கு வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்களது ஒற்றுமையுணர்வை ஒரு முறை மொழியின் பெயரால் ஒருங்கே வெளியுலகுக்குணர்த்த வேண்டும் என்பதே முதலாவது முக்கிய காரணமாகும். இவ்விழாவின் சிறப்பு மலராக மாத்தளை வாழ் தமிழர்களின் வரலாறு என்ற நூல் ஒரு முக்கிய ஆவணமாக எதிர்காலத்தில் திகழுமென்பது திண்ணமே. இம்மாதிரியான விழாக்கள் நினைவை விட்டகன்றாலும் விழாவையொட்டிப் பதிக்கப்படும் இவ்வாறான தடயங்கள் காலத்தில் அழிக்க முடியாதவை. இவ்விவாதத்தைத் தொகுத்தளித்த திரு. புவாஜி அவர்களுக்கும் எனது சிறப்பான நன்றிகள்.

மேலும் இவ்விழாப் பணியில் இசைப் பொறுப்புக்களைத் தான் பொறுப்பேற்று ஒத்துழைப்பு நல்கிய கௌரவ மத்திய மாகாண சபை உறுப்பினர் சிவஞானம் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

*நன்றி*

**வி. சாந்தகுமார்**

இந்து கலாசார இணைப்பதிகாரி,

மத்திய மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டத் தமிழர்கள்

# வரலாறும் பாரம்பரியமும்

ஏ. ஏ. எம். புவாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில் தமிழர்கள்

இலங்கையின் மத்திய மாகாணத்தின் வட பகுதியில் அமைந்துள்ளதும், தெற்கே கண்டி, வடக்கே அநுராதபுரம் கிழக்கே பொலன்னறுவை, மேற்கே குருனாகல் எனும் மாவட்டங்களால் சூழப்பட்டிருப்பதுமான மாத்தளை மாவட்டம் தன் பெயரை எவ்வாறு பெற்றது என்பதை விளக்கும் வழக்காறுகள் பல வரலாற்று ஏடுகளில் காணப்படுகின்றன. அவை மக்கள் மத்தியிலும் பிரசித்தி பெற்றிருக்கின்றன.

அநுராதகமம் என அழைக்கப்பட்ட கிராமத்தினை அநுராதபுரம் எனும் தலைநகராக மாற்றிய மூத்த மன்னனான பந்துகாபயன், கிரிகந்த என முன்னர் அழைக்கப்பட்ட இன்றைய மாத்தளைப் பிரதேசத்தின் ஆட்சிப் பொறுப்பினை தனது தாய் மாமனும் தனது பட்டமகிஷி சுவர்ணபாலியின் தந்தையுமான சிவ என்பவனுக்கு வழங்கியதிலிருந்து இப்பிரதேசம் 'மாதுல' குடியேற்றம் என அழைக்கப்பட்டதென்றும், இச் சொற்பிரயோகமே பின்னர் மாத்தளை என மருவிற்று என்பதுவும் ஒரு வழக்காறு தரும் தகவலாகும்.

இரண்டு மலைத்தொடர்களுக்கிடையில் அமைந்துள்ள பரந்த உயர் பிரதேசம் என்பதனால் 'அகண்ட உயர் சமவெளி' எனும் பொருள்பட இப்பிரதேசம் 'மகாதல' என அழைக்கப்பட்டதென்றும், இதுவே பின்னர் மாத்தளை என திரிபுண்டது என்றும் இன்னுமொரு வழக்காறு கூறுகின்றது.

கஜபாகு எனும் சிங்கள மன்னன் (கி.பி. 112–134) சோழ மண்டலத்திலிருந்து சிறை பிடித்து வந்த பன்னீராயிரம் கைதிகளில் ஒரு பெரும் தொகையினர் இப்பிரதேசத்தில் குடி அமர்த்தப்பட்ட படியால், 'பெரும் பாகம்' என பொருள்பட இப்பிரதேசம் 'மகா தளய' என அழைக்கப்பட, அதுவே காலப்போக்கில் மாத்தளை என மாறிற்று என்பது மற்றுமொரு நம்பிக்கை.

தொன்மைக் காலத்திலிருந்து இப்பிரதேசம் மாத்தளை என அறியப்பட்டு வந்துள்ள போதிலும், இப்பிரதேசத்திலும் அண்மைப் பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம், தமிழ் மக்கள், மல்வத்த, ஹிக்கொல, கொங்காவலை, அகலக்கொட்டுவ எனும் பகுதிகளை உள்ளடக்கிய இப்பிரதேச நகரப் பகுதியினைப் பண்ணாமம் என்றும் அழைத்து வந்துள்ளனர் என்பது நினைவில் நிறுத்தப்படவேண்டிய ஓர் உண்மையாகும். 1762 ஆம் ஆண்டில் கண்டி மன்னன் கீர்த்தி சிறி ராஜசிங்கனைச் சந்திக்க மாத்தளை ஊடாக சென்ற ஆங்கிலேயத் தூதுவர் ஜோன் பைபஸ், தான் எழுதிய குறிப்புக்களில் மாத்தளையைப் பண்ணாமம் என்றே அடையாளம் காட்டியுள்ளார். மிக அண்மைக் காலம் வரை மாத்தளையிலும் அண்மை பிரதேசங்களிலும் வாழ்ந்த முஸ்லிம், தமிழ் முதியோர் மாத்தளை நகரினைக் குறிக்க பண்ணாமம் எனும் பெயரினையும் பயன்படுத்தினர் என்பதை பலரும் அறிவர்.

பண்ணாமம் எனும் பெயர் பேச்சு வழக்கில் மாத்திரந்தான் நிலவிற்று என்பதுவும் இல்லை. மாத்தளை கொங்காவலையில் வசித்த இரு முஸ்லிம்களுக்கிடையே 1861 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு கடன்பத்திரம், அதனை எழுதியவர் என பண்ணாமத்து கடை விதானை ஆரச்சி எனும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரை அறிமுகப்படுத்துகிறது. இதே காலப்பகுதியில் எழுதப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள் பல, மாத்தளை நகர்ப்பகுதியைப் பண்ணாமம் எனும் பெயரினாலேயே குறித்துள்ளன. 1954 ஆம் ஆண்டு மெய்கண்டான் தமிழ் நாட்குறிப்பில் காணப்படும் புகையிரத நிலையங்களின் பெயர் பட்டியலிலும் மாத்தளை பண்ணாமம் எனும் பெயரினாலேயே இனம் காட்டப்பட்டுள்ளது. வணிக நிறுவனங்கள், பெருந்தோட்டங்கள் போன்றவை பற்றிய தகவல்களை வழங்கும் பேர்கூஸன் வழிகாட்டியில் (Ferguson Directory) மாத்தளை நகரத்தின் தமிழ்ப் பெயராக பண்ணாமம் எனும் பெயர் இன்றும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை என்ற பெயர் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி கருத்து வேற்றுமைகள் இருக்கலாம், மாத்தளை பண்ணாமம் எனும் பெயரினாலும் அழைக்கப்பட்டது என்பதையும் பலர் அறியாது இருக்கலாம். ஆனால் இலங்கை வரலாற்றின் ஆரம்பக் காலத்திலிருந்து இன்று வரை மாத்தளைப் பிரதேசம் முக்கியத்துவம் மிக்க ஒரு பிரதேசமாகவே விளங்கியிருக்கின்றது என்பதில் கருத்து வேறுபாடுகள் என்றும் இருந்ததில்லை.

மூவாயிரம் வருடங்களுக்கு முந்தியவை என கணிக்கப்படும் மட்பாண்ட அழிவுகள் சில குதிரைமலை, ரத்தினபுர போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளதைப் போலவே, மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த இப்பன்கட்டுவ எனும் இடத்திலும் பெறப்பட்டிருப்பது மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே இப்பிரதேசத்தில் மனிதர் சஞ்சரித்திருக்கின்றனர் என்ற உண்மையை உணர்த்துகிறது. இலங்கேஸ்வரன் இராவணனின் கோநகராம் லங்காபுர என்பது மாத்தளை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லக்கலையே என்ற கருத்து பல ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளதும் அவதானத்திற்குரியதாகும். இம்முடிவுக்கு அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களில் ஒன்று இப்பகுதியில் இன்றும் வழக்கில் இருக்கும் இராவண கல, இராவண எல, சீதாகல, சீதாலேன போன்ற இடப் பெயர்களாகும்.

மிக கடினமான அளவுகோள்களின் அடிப்படையில் வரலாற்றுத் தகவல்களை ஆராய்வோர், இப்பன்கட்டுவயில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஒரு சில பொருட்களை மாத்திரம் ஆதாரமாக கொண்டு, அப் பொருட்கள் குறிக்கும் காலத்தில் மாத்தளை மாவட்டம் முழுவதிலும் மக்கள் வசித்து இருக்கின்றனர் என்ற முடிவுக்கு வருவது ஏற்புடையது அல்ல என வாதிடலாம்; தனி மரம் தோப்பாகாது என கூறலாம்; இராவணன் கதை வரலாறு பூர்வமானதா என்ற ஐயத்தையும் எழுப்பலாம். ஆனால் அத்தகையோர் கூட கீழே தரப்படும் உண்மைகளை மறுக்கப்போவதில்லை.

மாத்தளை மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருக்கும் தம்புள்ள, கண்டலம, தெமதஓய, எதா பெந்தி வெவ, திகம்பதஹ, என்ட்டராவ, நிலகம, அலுவிகாரை, நெலுவாகந்த, ருஸிகம, வேகடப் பொல போன்ற இடங்களில் கி.மு. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு உரியவை என கருதப்படும் பிராமி கல்வெட்டுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளமை, பௌத்த மதத்தின் வருகைக்கு முன்னரே இப்பிரதேசத்தில் குடியேற்றங்கள் பல தோன்றி நிலைபெற்றிருந்தன என்பதை உணர்த்துகின்றது.

எந்த வெள்ளரசு மரத்தின் கீழ் அமர்ந்து தியானம் செய்யும் போது புத்த பெருமான் ஞானம் பெற்றாரோ, அந்த மரத்தின் கிளையொன்றோடு அசோக மாமன்னர் மகள் பிக்குணி சங்கமித்தை இலங்கை வந்தபோது, அவரோடு வந்த பிராமணர்கள் சிலர் மாத்தளைப் பகுதியில் குடி அமர்ந்ததாக 'கடயம் பொத்' எனப்படும் எல்லை ஏடுகள் சில பகர்கின்றன. மேலும், புனித வெள்ளரசு மரக்கிளையோடு கொண்டுவரப்பட்ட நாற்பது வெள்ளரசு கன்றுகளில் ஒன்று இம் மாவட்டத்தைச் சேர்ந்த ருஸிகம எனும் ஊரில் நடப்பட்டது என்று இவ்வேடுகள் கூறுவதும் மாத்தளையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

அதுவரை ஏட்டில் பதிக்கப்படாதிருந்த புத்த பெருமானின் போதனைகளை ஏட்டில் பதிக்கவேண்டியதன் அவசியத்தை கி. மு. முதலாம் நூற்றாண்டில் நடந்த சில சம்பவங்கள் உணர்த்தியபோது, தனது பரிபாலனத்துக்குள் இருந்த அலுவிகாரை எனுமிடத்தில் ஐந்நூறு பிக்குகளை ஒன்றுகூட்டி அவர்களை அங்கே பல நாட்கள் தங்கவைத்து, அப்போதனைகளை எழுத்தில் பொறிக்கும் புனித கைங்கர்யத்தைச் செய்து முடித்தவன் மாத்தளை பகுதிக்குப் பொறுப்பாக இருந்த ஒரு பிரதானியே. ஐந்நூறு பிக்குகளை ஒன்று கூட்டி, பல நாட்கள் தங்க வைத்து, உணவளித்து, ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து, ஒரு தலைவன் ஒரு காரியத்தைச் செய்து முடித்தானென்றால், அவனது பரிபாலனத்துக்குள் கணிசமான ஒரு சனத்தொகை இருந்திருக்கத்தானே வேண்டும்.

முதலாம் காசியப்பனின் ஆட்சிக் காலம் (கி. பி. 477 – 495) மாத்தளை மாவட்டத்தின் பொற்காலமாகும். இவன் சீகிரியாவைத் தன் இராசதானியாக மாற்ற, அதனைத் தன்னகத்தே கொண்டிருக்கும் மாத்தளை மாவட்டம் அதுவரை கண்டிராத மகத்துவத்தை இக்காலகட்டத்தில் கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவம்ம எனும் மன்னனின் ஆட்சி காலத்திலே (கி.பி. 684–718) மாத்தளைக்கும் தம்புள்ளைக்கும் இடையே அமைந்துள்ள நாலந்தையில் பல்லவ சிற்ப, கட்டிடக் கலைப் பண்புகளைப் பிரதிபலிக்கும் அழகான கட்டிடம் ஒன்று எழுப்பப்பட்டது, சனச் செறிவு அற்ற பிரதேசமாக இது இருந்திருந்தால், கெடிகே என அழைக்கப்படும் இக்கட்டிடம் இங்கு எழுப்பப்பட்டிருக்குமா என்பது சிந்தனைக்குரியது.

அநுராதபுரம் யுகத்தினைத் தொடர்ந்து வந்த பொலன்னறுவை யுகத்திலும் மாத்தளைப் பிரதேசத்தின் முக்கியத்துவம் இம்மியளவேனும் குறையவில்லை என்பதை வரலாறு உணர்த்துகிறது. மகா பராக்கிரமபாகு பொலன்னறுவையைத் தனது உறவினனான இரண்டாம் கஜபாகுவிடமிருந்து கைப்பற்ற போராடிய காலத்திலே, மாத்தளை மாவட்டமே முக்கியமான யுத்த அரங்காக திகழ்ந்ததைக் காண்கின்றோம். இக் கால கட்டத்தில், நாலந்த, பராக்கிரமபாகுவின் பிரதான யுத்த பாசறையாக இருந்தது, லங்காகிரி (லக்கலை) ரன்துர (ரனமுர) அம்பவானய (அம்பன) கீரவாப்பிய, (கிரிஓருவ) கஹல்ல, தலகிரியாகம, தம்புள்ள போன்ற மாத்தளை ஊர்கள் பல யுத்தங்களைக் கண்டன.

முக்கியமான தகவல்களை அறிவிப்பதற்காக பொறிக்கப்படும் கல்வெட்டுகள், அதிகமான மக்களின் பார்வைபடும் இடங்களிலே அமைக்கப்படுவதே வழக்கம். கம்பளை ராசதானியாக விளங்கிய காலத்திலே பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு மாத்தளையைச் சேர்ந்த ஹுகஸ்தென்ன என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டமை, அக்காலகட்டத்திலும் மாத்தளை முக்கியமான பிரதேசமாகவே தொடர்ந்து இருந்திருக்கிறது என்பதை உணர்த்துகின்றது.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், போத்துகேயர் இலங்கை வந்தபோது இத்தீவு கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி என மூன்று ராச்சியங்களாக பிரிந்து இருந்தது. அப்போது மாத்தளை கண்டி ராச்சியத்தின் ஒரு பகுதியாக விளங்கியது. 1635 ஆம் ஆண்டிலிருந்து சிறிது காலம் மாத்தளை, கண்டி மன்னன் சேனரத்தின் மூத்த மைந்தனான விஜயபாலவின் ஆட்சியின் கீழ் ஒரு தனி ராச்சியமாக திகழ்ந்தது. மாத்தளை நகருக்கு அண்மையில் அமைந்திருக்கும் கொடபொல எனும் ஊரிலிருந்து ஆட்சி செய்த விஜயபால, கொடபொல மன்னன் என்றே அழைக்கப்பட்டான். இவ்வூரை மாத்தளை நகரோடு இணைக்கும் பாதைகளில் ஒன்று இன்றும் கொடப்பொல பாதை என்ற பெயருடனயே திகழ்கின்றது. மாத்தளை நகரின் ஒரு பகுதியான ஹரஸ்கமையில் அமைந்திருக்கும் விஜயபால மகா வித்தியாலயம் எனும் பாடசாலை இந்த கொடபொல மன்னனைப் பற்றிய நினைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு நினைவுச் சின்னமாகும்.

சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை விட கூடுதலான முக்கியத்துவத்தை மாத்தளை, ஆங்கிலேயர்களின் ஆட்சியிலே பெற்றது. ஆங்கிலேயரின் முக்கிய கடற்படைத்தளமான திருகோணமலைக்கும் கண்டிக்கும் இடையே மாத்தளை அமைந்திருந்ததுவே இதற்குரிய காரணமாகும். கண்டிக்கு ஒரு நுழைவாயிலாக மாத்தளை விளங்கியதால் 1803 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இங்கு ஒரு கோட்டையை எழுப்பினர். மக்டோவல் கோட்டை என அழைக்கப்பட்ட இதன் அழிவுகளை இன்றும் காணலாம். 1830 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கண்டி – திருகோணமலை பாதை மாத்தளை ஊடாக ஓடியதும் இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தைக் கூட்டியது.

அங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக 1848 ஆம் ஆண்டில் வெடித்த கலகம், மாத்தளைக் கலகம் என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றது. இக் கலகத்தின் பிரதான களமாக மாத்தளை விளங்கியமையே இப்பெயருக்குக் காரணமாகும். மாத்தளைப் பிரதேசத்திலே ஒரு கணிசமான சனத்தொகை இல்லாதிருந்திருந்தால் ஆங்கிலேயரின் படை பலத்திற்கு எதிராக கிளம்பும் துணிவு இப்பிரதேச மக்களுக்கு ஏற்பட்டிருக்குமா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாம் நான்காம் தசாப்தங்களில் கோப்பிச் செய்கையும், அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் தேயிலை, ரப்பர், கொக்கோ செய்கையும் மலைநாட்டில் வளர்ச்சியுற்றபோது, இப்பயிர்ச் செய்கைகளுக்கு மாத்தளையின் புவியியல் அமைப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாத்தியமும் பொருத்தமானவையாக இருந்தபடியால், அப்பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகள் இங்கும் வளர்ச்சியுற்றன. இவ்வளர்ச்சி மாத்தளையின் முக்கியத்துவத்தைப் பன்மடங்கு உயர்த்தியது.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாத்தளை மாவட்டத்தில் இன்று பெருந்தொகையினராக வாழும் தமிழ்ச் சமுகத்தினர் இம்மாவட்டத்தில் எவ்வாறு குடியேறினர். எப்போதிருந்து குடியேற ஆரம்பித்தனர் போன்ற விவரங்களை முழுமையாக, கோவையாக வழங்கும் வரலாற்று நூல்கள் எதுவும் இல்லாதிருப்பது துரதிர்ஷ்டமானதாகும். இலங்கையின் பண்டைய வரலாற்றினைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்கள் பௌத்த மதத்தின் வளர்ச்சியைக் கூறுவதில் காட்டிய அக்கறையை இந்நாட்டின் பொருளாதார, கலாசார வளர்ச்சிகளைப் பற்றி கூறுவதில் காட்டவில்லை என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். இத்தகைய நூல்கள் தமிழர்களைப் பற்றிய விரிவான தகவல்களைத் தரவில்லை என்பதில் வியப்படைவதற்கு எதுவும் இல்லை என்றே கூறவேண்டும்.

தமிழர்கள் வரலாறு உணர்வு அற்றவர்கள் அல்லர்; வடமாகாணத்தில் பெருவாரியாக குடியேறிய தமிழர்கள் தம் குடியேற்ற வரலாற்றை யாழ்ப்பாண வைபவ மாலை எனும் நூலாக எழுதவே செய்தனர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பமான பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக பெருந்தொகையான தென்னிந்திய தமிழர்கள் இலங்கையில், குறிப்பாக மத்திய மலைநாட்டில் குடி அமர்த்தப்பெற்றது முன்னர், வடக்கு, கிழக்கு எனும் இரண்டு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் வாழ்ந்த தமிழர்களின் தொகை சொற்பமானதே; எனவே இத்தகைய குடியேற்றங்களைப் பற்றி தமிழர்கள் எதுவும் எழுதவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நான்காம் தசாப்தத்தில் கோப்பிச் செய்கையுடன் ஆரம்பமான பெருந்தோட்ட வளர்ச்சியோடு மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்ட தமிழ்க் குடியேற்றங்களைப் பற்றியும் தமிழ் சனத்தொகை பரம்பலைப் பற்றியும் ஓரளவு ஆதாரப் பூர்வமாக கூறுவதற்கு மாத்தளை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களின் பரிபாலன அறிக்கைகள், குடிசன மதிப்பீடு அறிக்கைகள், அரசாங்க திணைக்கள பதிவுகள் எமர்ஸன் டெனன்ட், போர்ப்ஸ், எட்வர்ட் சலிவன், ரி வை, ரைட், ஏ.சி லோரி போன்றோர் எழுதிய நூல்கள் போன்றவை பெரிதும் துணை புரிகின்றன. ஆனால் அதற்கு முந்திய காலகட்டங்களிலே மாத்தளைப் பிரதேசத்தில் தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றனரா? அப்படி வாழ்ந்திருந்தால் அவர்கள் எவ்வாறு இங்கு வந்தனர்? போன்ற கேள்விகளுக்கு விடை பகர்வது கடினமானதாகும். எனினும் மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலிய, பூஜாவலிய, நிக்காய சங்கிராய போன்ற பண்டைய நூல்களிலும், இலங்கையில் பணியாற்றிய அல்லது இலங்கையில் பிரயாணங்களை மேற்கொண்ட மேலை நாட்டவர்கள் விட்டுச் சென்றுள்ள குறிப்புகளிலும், மாத்தளையைப் பற்றியும் மாத்தளைக்கு அண்மையில் அமைந்துள்ள பிரதேசங்களைப் பற்றியும் காணப்படும் தகவல்கள் ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இம் மாவட்டத்தில் தமிழர்கள் வாழ்ந்திருப்பர் என ஊகிப்பது தவறானதல்ல என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகின்றன.

கி.மு. 177 ஆம் ஆண்டில் சூரதிஸ்ஸ எனும் அரசனிடமிருந்து அநுரதபுர அரியாசனத்தை சேனன், குத்திக்கன் எனும் இரு தமிழ் குதிரை வணிகர்கள் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் நாட்டை ஆண்டனர். இவர்களின் ஆட்சி முடிவுக்குப் பின்னர் பத்தாண்டுகள் அசேலன் எனும் சிங்கள மன்னனின் ஆட்சியில் இருந்த அநுரதபுரத்தை மீண்டும் எல்லாளன் எனும் சோழ சிற்றரசன் கைப்பற்றி நாற்பத்து நான்கு ஆண்டுகள் (கி. மு. 205 – 161) பாரிய எதிர்ப்புகள் எதுவுமின்றி நாட்டை ஆண்டான். கி.மு.102 ஆம் ஆண்டில் பாண்டிய இளவரசர்கள் ஐவர் படையோடு வந்து, அநுராதபுர அரசனான வலகம்பாகுவை விரட்டிவிட்டு பதினான்கு வருடங்கள் அநுராதபுர ராச்சியத்தைத் தம் ஆதிக்கத்துக்குள் வைத்திருந்தனர்.

இதன் பின்னர் ஐந்து நூற்றாண்டுகளாக சுதேச மன்னர்களின் ஆட்சியில் இருந்த இந்நாட்டினைப் பாண்டிய தமிழர்கள் சிலர் கி.பி 432 இல் கைப்பற்றி தந்தைக்குப் பின் தனையன், தமையனுக்குப் பின் தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஒருவருக்குப் பின் ஒருவராக இருபத்தெட்டு வருடங்கள் ஆண்டனர். கடைசி பாண்டிய மன்னனைத் தோற்கடித்து, கி.பி. 459 இல் தாதுசேனன் ஸ்தாபித்த சிங்களவர் ஆட்சி கி.பி. 993 வரை நீடித்தது.

கி. பி. 993 இல் சோழ மாமன்னன் ராஜராஜனின் படை ஒன்று இலங்கை வந்து ராஜரட்ட பிரதேசத்தைக் கைப்பற்றியது, கைப்பற்றிய பகுதி சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக ஆட்சி செய்யப்பட்டது. 1017 இல் ருகுணைப் பகுதியும் ராஜேந்திரனால் கைப்பற்றப்பட இலங்கை முழுவதும் சோழப் பேரரசின் ஒரு மண்டலமாக மாறியது. 1070 இல் விஜயபாகுவினால் விரட்டப்படும் வரை இலங்கை சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது.

கி.பி. 1070–1190 காலப்பகுதி இலங்கை வரலாற்றின் பொற்காலம் என கருதபடக்கூடியதாகும். முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, நிஸங்கமல்ல போன்ற மாமன்னர்கள் இலங்கையை ஆண்ட காலமிது. ஆனால் கி. பி. 1190 க்குப் பின்னர் இந்நாட்டின் வரலாற்றில் ஒரு பெரும் வீழ்ச்சி ஏற்படுகிறது; தென்னிந்திய தமிழ் படையெடுப்புகள் பல நடந்தன; இப்படையெடுப்புக்களில் ஒன்று இந்நாட்டின் சமூக அமைப்பினையும் சமய அமைப்புகளையும் முற்றாக நிர்மூலமாக்கிற்று என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

சேனன், குத்திக்கன் எனும் இரு தமிழர்களின் ஆட்சி துவங்கிய காலத்திலிருந்து கி. பி. 1070 ஆம் ஆண்டு வரை இருக்கும் ஆயிரத்து முன்நூறு வருடங்களில் ஏறத்தாழ இருநூறு வருடங்கள் இலங்கை தமிழர்களின் ஆட்சிக்குள் இருந்திருக்கிறது என்பது அவதானத்திற்கு எடுக்கப்படவேண்டிய விடயமாகும். இவ்வாறு வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த தமிழர்கள் தம்மோடு வந்த படைவீரர்களை உடனடியாக இலங்கையைவிட்டு திருப்பி அனுப்பியிருக்கப் போவதில்லை; தம் உயிரையும் தம் ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ள அவர்களின் பெரும் பகுதியினரை இங்கேயே தங்க வைத்திருப்பர். படையெடுப்புக்களின் போது வீரர்கள் மாத்திரமே வந்திருப்பர்; ஆனால் தமிழரசர்களின் ஆட்சி நிலைபெற்ற காலகட்டங்களில், அவ்வரசர்கள் பரிபாலன விடயங்களில் உதவுவதற்காக தமக்கு விசுவாசமிக்க பலரைத் தம் நாட்டிலிருந்து வரவழைத்திருப்பர்; தமது சமயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் தமது பரிவாரங்களின் சமயத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காகவும் சமய குருமார்களையும் ஏனைய ஊழியர்களையும் வரவழைத்திருப்பர்; ஏனைய தேவைகளுக்காக வேறு பலரையும் வரச் செய்திருப்பர். தம் இனத்தவரின் ஆதிக்கத்துக்குள் வீழ்ந்திருக்கும் புதிய நாடு வழங்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வணிகர், கைத்தொழில் வினைஞர்கள், நடன சங்கீத கலைஞர்கள் போன்றோர் வந்திருப்பர். படையெடுப்புகள் தொடர, தொடர இலங்கையில் வாழும் தமிழர் தொகை அதிகரித்துக்கொண்டே சென்றிருக்கும்.

இத்தகைய படையெடுப்புகள் மாத்திரமன்றி, ஈழத்து அரச வம்சங்களிடையே தோன்றிய ஆட்சியுரிமை போட்டிகள், உள்நாட்டு அரசியல் குழப்பங்கள், வாரிசுரிமைப் பிரச்சினைகள் போன்றவையும் இலங்கையில் தமிழர் சனத்தொகை அதிகரிப்பதற்குக் காரணங்களாக அமைந்தன. பிறரிடம் தம் ஆட்சியை இழந்தோரும், பிறரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற விரும்பியோரும் தமிழகம் சென்று அங்கிருந்து கூலிப்படைகளைக் கொணர்ந்து, ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தல் ஒரு வழக்கமாகவே வளர ஆரம்பித்தது. ஈழநாக, அபயநாக, சீலமேகவண்ண, மூன்றாம் அக்கிரபோதி, முதலாம் தாதோபதிஸ்ஸ போன்றோர், இவ்வாறு தமிழ் கூலிப்படையினரை அழைத்து வந்து ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியவர்களுக்கு உதாரணங்களாவர். பணத்திற்காக மாத்திரம் போரிட, நாடு விட்டு நாடு வந்த கூலிப்படைவீரர்களில் எத்தனைபேர் இலங்கையின் வளத்தையும் செழுமையையும் கண்டபின்னர் இங்கிருந்து போக விரும்பியிருப்பர்? எனவே வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இங்கு வந்த தமிழ் கூலிப்படைவீரர்களில் பலர் இங்கேயே தங்கியிருப்பர் என அனுமானிப்பது நியாயமானதே.

இலங்கையில் வாழ்ந்த தமிழர் தொகை ஏழாம் நூற்றாண்டிலேயே கணிசமாக அதிகரித்துவிட்டது என்பதை வரலாறு உணர்த்துகிறது. பல்லவ மாமன்னன் இரண்டாம் நரசிம்மபல்லவனின் படையுதவியோடு இலங்கை ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய மானவம்மனின் நீண்ட ஆட்சி காலத்திலே (கி. பி. 684 – 718) தென்னிந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய அரசியல், கலாசார உறவுகள் நிலை பெற்றன. பல்லவ கட்டிட, சிற்பக் கலைப் பண்புகளை முழுக்க, முழுக்க பிரதிபலிக்கும் கட்டிடங்கள் பல இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுவது, மானவம்மனின் ஆட்சிக் காலத்திலே பல்லவ கட்டிடக் கலைஞர்கள், சிற்பிகள் போன்ற தொழில் வினைஞர்கள் ஏராளமானோர் இங்கு வந்திருக்கவேண்டும் என்பதை புலப்படுத்துகிறது. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என கணிக்கப்படும் கட்டிடங்கள் பல பல்லவ பண்புகளைப் பிரதிபலிப்பது, மானவம்மனின் காலத்தில் இங்கு வந்தவர்களின் சந்ததியினர் இக்கட்டிடங்களை நிர்மானித்திருக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது.

சோழர்கள் இலங்கையை ஆண்ட காலத்திலும் பதவியா, மாதோட்டம், பொலன்னறுவை போன்ற பல்வேறு இடங்களிலும் கோயில்கள் எழுப்பப்பட்டன, பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட வானவன்மாதேவி ஈஸ்வரம் தஞ்சை பெரிய கோயிலோடு ஒப்பிடப்படமுடியாதது என்ற போதிலும் அது ஒரு பிரமாண்டமான கோயில் என்பதை மறுக்க முடியாது. எனவே இக்காலகட்டத்திலும் தமிழக தொழில் வினைஞர்கள் பலர் வந்தே இருப்பர்.

கி. பி. 845 ஆம் ஆண்டளவில் இலங்கையைச் சூறையாடும் நோக்கோடு பாண்டியச் சக்கரவர்த்தியான சிறிமாற ஸ்ரீ வல்லவன் ஒரு பெரும் படையோடு இறங்கிய போது இங்கு வாழ்ந்த தமிழர்கள் பலர் அவனோடு இணைந்து கொண்டனர். இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்த தமிழர்கள் ஏராளமானோர் ஸ்ரீ வல்லபனின் படையோடு இணைந்து கொண்டனர்; இது வல்லபனின் படைப்பலத்தைப் பெரிதும் கூட்டியது என சூளவம்சம் கூறுவது தமிழர்களின் தொகை எத்துணை கணிசமானதாக இருந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறது.

போர்த்திறனும் படைப்பலமுமிக்க விஜய பாகுவிற்கு எதிராக இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் செய்த கிளர்ச்சியும் இதனையே உணர்த்துகிறது. படைப்பலமிகு விஜயபாகுவிற்கு எதிராக கிளர்ச்சி செய்யக்கூடிய அளவிற்கு இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுக்குத் துணிவிருந்த தென்றால், அவர்களின் தொகை கணிசமானதாக இருந்திருக்க வேண்டும் என ஊகிப்பது நியாயமானதுதானே?

அநுராதபுர யுகத்திலும் பொலன்னறுவை யுகத்திலும் கணிசமான அளவு தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்தனர் என்பதை வரலாறு தெளிவாக உணர்த்துகிறது. இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் அனைவரும் தலைநகரிலேயே வாழ்ந்திருக்க முடியாது என்பது வெளிப்படை. அரச சேவையில் இருந்த தமிழர்கள் பாதுகாப்புத் தேவைகளுக்காகவும் பரிபாலனத் தேவைகளுக்காகவும் பல பிரதேசங்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பர். அமைதி நிலவிய காலகட்டங்களிலே பாரிய படைகளை வைத்திருக்க வேண்டிய அவசியம் மன்னர்களுக்கு இருந்திருக்காது; அதற்குரிய வசதிகளும் இருந்திருக்காது. எனவே போர்வீரர்களாக வந்த தமிழர்கள் பலர் இத்தகைய காலகட்டங்களில் இலங்கையின் பல பகுதிகளிலும் பரவி, பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருப்பர். இத்தகையோர்களில் சிலர் மாத்தளையிலும் வாழ்ந்திருக்கலாம்.

அநுராதபுரம் இலங்கையின் தலைநகராக விளங்கியபோதும் சரி, பொலன்னறுவை அதன் தலைநகராக விளங்கிய போதும் சரி, மன்னனின் நேரடி பரிபாலனத்தின் கீழ் அமைந்திருந்த ராஜரட்ட பிரதேசத்தின் தெற்கு எல்லையாக மாத்தளையே திகழ்ந்தது. எனவே எல்லைப் பாதுகாப்பிற்காக காவற்படை ஒன்று இங்கு நிறுத்தப்பட்டிருக்கும்; படைவீரர்களில் கணிசமானோர் தமிழர்கள் என்றபடியால், மாத்தளை காவற்படையினர் மத்தியிலும் ஒரு சில தமிழர்களாவது இருந்திருப்பர். தமது உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றிய மானவம்மனின் பாதுகாப் பிற்காக இலங்கையில் தங்கிய பல்லவப் படையின் ஒரு பிரிவு மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த நாலந்தையில் பாசறை அமைத்திருக்க வேண்டுமென்றும் அப்படைவீரர்கள் தமது நாட்டு கட்டிடக் கலைப் பண்புகளும் சிற்பக்கலைப் பண்புகளுக்கும் ஏற்ப நாலந்த கெடிகே என அழைக்கப்படும் கட்டிடத்தை அமைத்திருக்கவேண்டும் என்றும் டபிள்யூ. ஏ. விமலரட்ன என்பவர் முன்வைத்திருக்கும் கருத்து கவனத்திற் குரியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பராக்கிரமபாகு பொலன்னறுவையைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலக்கட்டத்தில் நாலந்த, செலகம போன்ற மாத்தளை மாவட்ட ஊர்களே அவனது பிரதான யுத்த பாசறைகளாக இருந்தன. இந்த பாசறைகளில் வாழ்ந்த வீரர்களில் அனேகமானோர் தமிழர்களாகவே இருந்திருப்பர்.

தமிழ் இனம் ஆக்கிரமிப்பாளர்களாக வந்த இனம்; இவ்வினத்தைச் சிங்களவர்கள் வெறுத்திருப்பர். இத்தகைய நிலையில் சிங்களவர்கள் மத்தியில் சிறு, சிறு குழுக்களாக எல்லா இடங்களிலும் சிதறி வாழத் தமிழர்கள் துணிந்திருப்பார்களா என்ற சந்தேகம் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் நாம் நினைக்கின்ற அளவுக்கு அன்று இன குரோதமோ, வெறுப்போ இருக்கவில்லை என்பதே உண்மை. இன குரோதம் அந்தளவு இருந்திருந்தால் தமிழ் மன்னனான எல்லாளனின் சமாதியை நெருங்கும் போது வாகனங்களை விட்டு இறங்கவேண்டும் என துட்டகைமுனு ஆணை பிறப்பித்திருப்பானா? அவன் ஆணை பிறப்பித்திருந்தாலும் மக்கள் அதனை மதித்திருப்பார்களா? ஆனால் இந்த ஆணையையோ எழுநூறு வருடங்களுக்குப் பின்னர் கூட மக்கள் மதித்தனர் என்பதற்கு மகாவம்சம் சான்று.

சிங்கள அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் ஆட்வர்களை, பெண்களை மணம் முடிப்பது ஓர் இயல்பான விடயமாகவே கருதப்பட்டது. பராக்கிரமபாகு, இரண்டாம் விமலதர்ம சூரிய, வீர நரேந்திரசிங்க போன்றோர் தமிழ்ப் பெண்களை மணம் முடித்த அரசர்களே. இலங்கையின் மிகச் சிறந்த மன்னன் என சிங்களவர்களால் போற்றப்படும். பராக்கிரமபாகுவின் தந்தை மானாபரண விஜயபாகுவின் தங்கை மித்தாவுக்கும் ஒரு பாண்டிய இளவரசனுக்கும் பிறந்தவனே. இவ்வாறு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே சுமுகமான உறவுகள் நிலவிய படியால் இலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் வாழ்வது தமிழர்களுக்குச் சிரமமானதாக இருந்திருக்கமாட்டாது என கூறலாம்.

மாத்தளைப் பிரதேசத்தை உள்ளடக்கிய கண்டி இராச்சியம் நாயக்கர்கள் என அழைக்கப்பெற்ற தமிழ் மன்னர்களின் ஆட்சிக்குள் இருந்த காலப்பகுதியில் (1739–1815) மாத்தளையில் தமிழர்கள் குடியேறக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்தன என கூறலாம். கண்டியை ஆண்ட கடைசி இரண்டு சிங்கள அரசர்களான இரண்டாம் விமலதர்ம சூரியவின் மனைவிமார்களும், நரேந்திரசிங்கனின் மனைவிமார்களும், நாயக்கர் தமிழ் இளவரசிகளே. அவ்வாறே நாயக்க மன்னர்களான விஜயராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், ராஜாதிராஜசிங்கன், விக்கிரம ராஜசிங்கன் ஆகியோரின் மனைவிமார்களும் தமிழ்ப் பெண்களே; இந்நால்வரும் பல தாரங்களை முடித்திருந்தவர்கள். நாயக்க தமிழ்ப் பெண் திருமணத்திற்காக இலங்கை வந்த போது அவளோடு அவளது பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர் என பலர் வந்தனர். எனவே காலப்போக்கில் நாயக்கர்களின் தொகை குறிப்பிடக் கூடியளவிற்கு அதிகரித்துவிட்டது. இவர்கள் அனைவரும் தலைநகரினிலேயே தங்கியிருக்கப் போவதில்லை. வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டிருந்த இவர்கள் மாத்தளை போன்ற அண்மை பிரதேசங்களிலும் குடியமர்ந்திருப்பர் என நம்பலாம்.

அம்பன எனும் கிராமத்தில் வாழ்ந்த மீ கொமுவ முதியான்ஸே எனும் தமிழர் அக்கிராமத்தில் தனக்கு உடமையாக இருந்த சில நிலங்களை 1751 ஆம் ஆண்டில் உடகே மாணவல கம்மாஹே என்பவருக்கு வழங்குவதற்காக எழுதிய உறுதிப்பத்திரம் ஒன்றினை ஏ. சி. லோரி எனும் ஆங்கிலேயர் தான் எழுதிய மத்திய மாகாணத்தின் விவரணக்கோவை எனும் நூலில் முன்வைத்து, நாயக்கர் மன்னர் காலத்தில் மாத்தளை மாவட்டத்தில் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் மீ கொமுவ முதியான்ஸே என்பவர் நீர்கொழும்பில் நடந்த ஒரு யுத்தத்தில் கண்டியரசன் படையில் இணைந்து போரிட்டு கண்டியரசனின் அன்பை வென்ற நீர்கொழும்பு தமிழராவார். இவரது வீரத்தைக் கண்டு வியந்த கண்டி மன்னன் அம்பன எனும் கிராமத்தை ஒரு சன்னஸ் மூலம் இவருக்கு வழங்கியிருந்தான்; அதன் பின்னர் அம்பன மீ கொமுவ முதியான்ஸே என இவர் அழைக்கப்பட்டுள்ளார். இவரது பரம்பரையில் தோன்றிய ஒருவர் காளியம்மா என்றும் இவர் வடமத்திய மாகாணத்தில் கோராளை எனும் உயர் பதவியை வகித்த ஒருவரைத் திருமணம் செய்திருந்தார் என்றும் லோரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நூலில் கூறியுள்ளார். மன்னம்பிட்டியில் வசித்த கந்தப்பனின் மகன் அழகரத்தினமும், வர்ணகுலசூரிய வெத்திசிங்க முதியான்சலாகே காளியம்மாவும், தங்கரத்தினத்தின் மகள் தங்கநாச்சியாரும் இணைந்து அம்பனையில் இருந்த பரம்பரைக் காணிகள் பலவற்றை விற்றதை 1947 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஓர் உறுதிப்பத்திரம் உணர்த்துகிறது. லோரி குறிப்பிடும் காளியம்மா, காணி உறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காளியம்மாவாகவே இருக்கவேண்டும். இந்த ஊகம் சரியென்றால் மீகொமுவ முதியான்ஸவின் குடும்பத்தினர் தமிழர்களாகவே தொடர்ந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது தெளிவு.

மீகொமுவ முதியான்ஸேவிற்கு மாத்தளைக்கு அண்மையில் இருக்கும் படிவிட்ட எனும் கிராமத்திலும் கண்டி அரசனால் காணிகள் வழங்கப்பட்டிருந்தன, ராஜாதிராஜ சிங்கனது ஆட்சிக் காலத்திலே இக்கிராமத்தில் படிவிட்ட ஈஸ்வர தேவாலயம் மீகொமுவ முதியான்ஸேயினால் கட்டப்பட்டது என்றும் அத்தேவாலயம் பின்னர் அழிந்துவிட, அதில் பூஜிக்கப்பட்ட தெய்வச்சிலை படிவிட்ட விகாரையில் வைக்கப்பட்டதாகவும் லோரி கூறியுள்ளார்.

அம்பன மீ கொமுவ முதியான்ஸைப் பற்றி லோரி தந்துள்ள தகவல்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் ஒரு தமிழ் குடும்பமாவது வாழ்ந்திருக்கிறது என்பதை உறுதிப் படுத்துகிறது; மேலே தரப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் தமிழர்கள் பலர் அந்த காலகட்டத்தில் மாத்தளைப் பிரதேசத்தில் வாழ்ந்திருக்கலாம் என அனுமானிப்பது தவறானதல்ல என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் இத்தகவல்களை அடிப்படையாக வைத்து, பெருந்தொகையான தமிழர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்தனர் என்ற முடிவுக்கு நாம் வந்து விடக் கூடாது.

1898 ஆம் ஆண்டில் வெளிவந்த ஏ. சி. லோரியின் மத்திய மாகாண விவரண நூல் ( Gazatter of the Central Province) எனும் நூல் மாத்தளை மாவட்டத்தில் அமைந்திருந்த அத்தனைக் கிராமங்களினதும் தோற்றம், மொத்த சனத்தொகை, அவற்றில் வாழ்ந்த இனங்கள், சாதிகள் போன்றவற்றைப் பற்றிய சிறு சிறு தகவல்களைத் தருகின்றது. இவற்றில் ஏறத்தாழ ஐம்பது கிராமங்களில் தமிழர்களும் வசித்தனர் என அவர் குறிப்பிட்டுள்ள போதிலும் அவற்றில் எந்தவொரு கிராமத்தையும் அவர் தமிழ் கிராமம் என இனங்காணவில்லை. இக்கிராமங்களின் சனத்தொகையில் அடங்கி இருக்கும் இனங்களின் பெயர்களை லோரி வழங்கியிருக்கும் முறை இக்கிராமங்களில் கூட தமிழர்களின் தொகை விரல்விட்டு எண்ண கூடியதாகவே இருந்திருக்கும் என்பதைப் புலப்படுத்துகின்றது. எனவே எமக்கு கிடைக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் ஆராயும்போது, ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னரே மாத்தளைப் பிரதேசத்தில் தமிழர்கள் வசித்தனர்; ஆனால் அவர்களின் தொகை சொற்பமானதாகவே இருந்திருக்கும் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தின் போது மாத்தளை மாவட்டத்தில் தமிழர்களின் சனத்தொகை மிக வேகமாக அதிகரித்ததற்கு அடிப்படை காரணம் ஆயிரத்து எண்ணூற்று முப்பது, நாற்பதுகளில் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட பெருந்தோட்டச் செய்கையின் வளர்ச்சியே என உறுதியாக கூறலாம். எனவே மாத்தளை மாவட்ட தமிழ் சனத்தொகை வளர்ச்சியைப் பற்றி சரியாக கணிக்கவேண்டுமானால் இம்மாவட்ட பெருந்தோட்ட வரலாற்றைப் பற்றி ஓரளவு அறிவது அவசியமாகும்

கோட்டை இராச்சியத்தைச் சிங்கள மன்னர்கள் அரசாண்ட காலத்திலும், போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலும் அரசுக்குப் பெரும் வருவாயைப் பெற்றுக் கொடுத்தது கறுவா எனும் வாசனைத் திரவியமே. வீட்டுத் தோட்டங்களிலும் காடுகளைச் சார்ந்த பகுதிகளிலும் இயற்கையாகவே வளர்ந்த ஒரு பயிர் என்பதனால் கறுவா பயிர்ச் செய்கைக்கு அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படவில்லை. கறுவா பயிர்ச்செய்கையிலும், அத்தோடு இணைந்த ஏனைய தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தவர்கள் சுதேசிகள் மட்டுமே; சுதேசிகளால் திருப்திகரமாக பராமரிக்கப்படக் கூடிய அளவிற்கே இப்பயிர்ச் செய்கையும் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப தசாப்தங்களான ஆயிரத்து எண்ணூற்று பத்துகளிலும் இருபதுகளிலும் கூட இந்தநிலையே தொடர்ந்து நீடித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுவாவுக்கு ஒரு மாற்றுப் பொருளான இலவங்கப் பட்டையின் உற்பத்தி பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதிகரித்தபடியால் கறுவாவின் விலை பெரிதும் குறைந்தது. இதனால் கறுவா பயிர்ச் செய்கையில் ஆங்கிலேயர் அக்கறை காட்டவில்லை; கிடைத்த கறுவாவை ஏற்றுமதி செய்வதோடு திருப்தியுற்றனர். ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் இங்கு முதலீடு செய்ய வைத்து நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கோடு, வெளிநாட்டினர் கொழும்பு நகருக்கு வெளியே நிலம் வாங்குவதற்குத் தடையாக இருந்த சட்டம் 1810 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டபோதிலும் கறுவாவின் விலை சரிந்து கொண்டிருந்ததால், இலங்கையில் நிலம் வாங்குவதில் ஆங்கிலேயர்களோ ஏனைய வெளிநாட்டினரோ அக்கறை காட்டவில்லை.

ஒல்லாந்தர் வழங்கிய ஊக்கத்தினால் இலங்கையில் வளர்ச்சியுற்ற ஒரு பயிர்ச்செய்கை கோப்பி பயிர்ச் செய்கையாகும். கிராம மட்டங்களில் இப்பயிர்ச் செய்கை வளர்ச்சியடைவதற்கு ஒல்லாந்தர் பாரிய பங்களிப்புகளை வழங்கினர்; இவர்களின் முயற்சியினால் 1739 ஆம் ஆண்டில் ஓர் இலட்சம் இறாத்தல் கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் பின்னர் கோப்பியின் விலை குறைந்ததனால், கோப்பி உற்பத்தியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. இருப்பினும் கிராமங்களில் கோப்பிச் செய்கை தொடர்ந்தது.

1823 ஆம் ஆண்டில் ஜோர்ஜ் பேர்ட் எனும் ஆங்கிலேய இராணுவ அதிகாரி ஒருவர் கம்பளைக்கு அண்மையில் உள்ள சிங்கப்பிட்டிய எனும் இடத்தில் நானூறு ஏக்கர் கோப்பித் தோட்டம் ஒன்றினை ஆரம்பித்து குறுகிய காலத்தில் பெரும் இலாபம் சம்பாதித்தார். இவர் பெற்ற வெற்றி இலங்கையில் கோப்பி பெருந்தோட்டச் செய்கைக்கு அத்திவாரத்தை இட்டது. அன்றைய தேசாதிபதியான எட்வர்ட் பார்ன்ஸ் உட்பட பலர் கோப்பித் தோட்டங்களை கண்டிப் பகுதிகளில் ஆரம்பித்தனர். கிராம மட்டத்தில் உற்பத்தியான கோப்பியும் பெருந்தோட்டங்களில் உற்பத்தியான கோப்பியும் ஒன்றிணைய 1827 ஆம் ஆண்டில் 1,792,448 இறாத்தல் கோப்பி இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதைப் பார்க்கின்றோம்.

ஆயிரத்து எண்ணூற்று இருபதுகளிலும் முப்பதுகளின் முற்பகுதியிலும் பல கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்றபோதிலும் இக் காலகட்டத்தில் கோப்பியின் வளர்ச்சிக்குத் தடையாக சில முட்டுக்கட்டைகள் இருந்தன. இவற்றுள், மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட கோப்பிக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரியை விட, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோப்பி மீது விதிக்கப்பட்ட வரி பன்மடங்கு அதிகமாக இருந்ததே பிரதான காரணமாகும். இதனால் இலங்கை கோப்பி மேற்கு இந்திய கோப்பியோடு பிரித்தானிய சந்தையில் போட்டியிட முடியாது தத்தளித்தது.

1835 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசு, இலங்கை கோப்பி மீது விதிக்கப்பட்ட இறக்குமதி வரியை, மேற்கு இந்திய கோப்பி மீது விதிக்கப்பட்ட வரியின் அளவுக்குக் குறைக்க, இலங்கையில் கோப்பிச் செய்கை துரித வளர்ச்சி காண ஆரம்பித்தது. இவ்வளர்ச்சியைக் கீழ்வரும் அரசு நில விற்பனைப் புள்ளி விபரங்கள் உணர்த்தும். 1835 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 400 ஏக்கர் நிலம் விற்கப்பட்டது; 1836 ஆம் ஆண்டில் இது 3920 ஏக்கராக உயர்ந்தது. 1837 க்கும் 1844 க்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டுகளில் 255,000 ஏக்கர் நிலங்கள் கோப்பிச் செய்கைக்காக விற்கப்பட்டன. தும்பறை, அம்பங்கமுவ, கொத்மலை, நுவரஎலிய, பதுளை, கம்பொல புசல்லாவ, மாத்தளை போன்ற பிரதேசங்கள் எங்கினும் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பமாயின.

இக்காலப்பகுதியில் கோப்பித் தோட்ட முதலாளிகள் பெற்ற கொழுத்த இலாபத்தை 1837 ஆம் ஆண்டில் ஹன்தான பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒ' எனும் கோப்பித் தோட்டத்தின் வரவு செலவுக் கணக்கு விபரம் உணர்த்தும்.

'ஒ' தோட்டம் – காட்டின் பரப்பு 1892 ஏக்கர். 1892 ஏக்கர் நிலம் வாங்கிய தொகை, அதில் 305 ஏக்கர் நிலத்தில் காடழித்து கோப்பி நாட்டிய செலவு, பண்டகசாலை அமைத்தல், தேவையான இயந்திரங்கள் கொள்வனவு போன்றவைகளுக்கு 1841 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்ட முழுச் செலவினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6958 பவுண், 7 சிலிங், 3 பென்ஸ்

## வரவு

1839 42 மூடை கோப்பி விற்பனை மூலம் வந்த வரவு 445 பவு. 18 சி. 6 பெ.

175 ஏக்கர் நிலம் விற்றுப் பெறப்பட்ட தொகை 176 பவு. 0 சி. 0 பெ.

1840 796 அந்தர் கோப்பி விற்று வந்த வரவு 3017 பவு. 10 சி. 5 பெ.

1841 இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 2000 அந்தர் கோப்பியின் உத்தேச பெறுமானம் 8000 பவு. 0 சி. 0 பெ.

மூன்று வருட இறுதியில் பெற்ற நிகர இலாபம் 4681 பவுண்; 1842 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அறுவடை 5000அந்தர், 1841 ஆம் ஆண்டு விலை அடிப்படையில் கணித்தால் அதன் பெறுமதி 20,000 பவுண்

இவ்விவரங்கள் கோப்பித் தோட்டங்கள் வழங்கிய உயர் இலாபங்களைக் காட்டப் போதுமானவையாகும். ஆதாரம் சிலோன் ஒப்சேர்வர் மே, 1842.

கோப்பித் தோட்டங்கள் இவ்வாறு தங்கச் சுரங்கங்களாக இலாபத்தை வாரி வாரி வழங்கியபோது, கோப்பித் தோட்டங்களின் எண்ணிக்கை உயர, உயரச் சென்றதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது; உண்மையில் 1840 களில் மலையகம் ஒரு பாரிய கோப்பித் தோட்டமாக மாறிவிட்டது என்றே கூறிவிடலாம்.

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த உக்குவளை, பண்டாரப்பொல, இரத்தோட்டை, கம்மடுவ, யடவத்த, அலுவிகாரை, மடவளை, மில்லவான போன்ற பிரதேசங்கள் கோப்பிச் செய்கைக்கு உகந்தனவாக இருந்தபடியால் இங்கெல்லாம் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1832 ஆம் ஆண்டில் வாரியப்பொல பெருந்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது; அதன் பிறகு மவுஸாகல, பிடகந்த, பொயன்கல, கபரகல, சில்வகந்த, லக்கல என தோட்டங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே சென்றது. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதுகளில் அகில இலங்கை தோட்டத் துரைமார் சங்கம் அமைக்கப்பட்டபோது அதில் பிரதிநிதித்துவம் பெற்ற நூற்றிப் பத்து பாரிய தோட்டங்களில் பதினான்கு மாத்தளை மாவட்டத்தில் அமைந்திருந்தன என்ற உண்மை இப்பிரதேசத்தில் கோப்பிச் செய்கை எந்தளவு வியாபித்திருந்தது என்பதை நன்கு உணர்த்துகிறது.

கோப்பித் தோட்டங்கள் எக்கச் சக்கமாக இலாபம் ஈந்ததைக் கண்டு, பணம் வைத்திருந்த ஏராளமானோர் தம் பணத்தைக் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தனர். பொருத்தமற்ற நிலங்களில் கூட கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தோட்டங்களின் தொகை அதிகரித்ததனால் தோன்றிய தொழிலாளர் பற்றாக்குறை, போதிய அளவு வண்டிகள் இல்லாப் பிரச்சினை போன்றவை உற்பத்திச் செலவைக் கூட்டின. இங்கே உற்பத்திச் செலவு கூடிக்கொண்டு இருக்கும் போது ஐரோப்பாவில் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் கோப்பியின் விலை சரிந்தது. 1845 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஓர் இறாத்தல் கோப்பியின் விலை 45 சில்லிங்காக இருந்தது. 1849 ஆம் ஆண்டில் இது 17 சில்லிங்காகக் குறைந்தது. கோப்பித் தோட்ட உரிமையாளர்கள் பலர் ஒட்டாண்டிகள் ஆயினர்; 1843 இல் 15000 பவுண்களுக்கு வாங்கப்பட்ட ஒரு கோப்பித்தோட்டம் 1847 இல் 50 பவுண்களுக்கு விற்கப்பட்டது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக இந்நிலை விரைவில் மாறியது. நிதி நெருக்கடியில் இருந்து பிரித்தானியா மீட்சி பெற்றது; தொழிற்துறை வேகமாக வளர்ச்சி கண்டது, இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கோப்பிக்கான தேவை அதிகரித்தது. கோப்பியின் விலையும் கூடியது. பெரும் இலாபத்தைக் கொடுக்கும் துறையாக மீண்டும் கோப்பிச் செய்கை, மாறியது. இது காலம் வரை கோப்பிச் செய்கைக்கு உட்படுத்தப்படாத பிரதேசங்களிலும் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1850 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கோப்பிச் செய்கைக்காக இலங்கையில் நூற்றி இருபது இலட்சம் பவுண்களுக்கு மேல் முதலீடு செய்யப்பட்டதாக கலாநிதி வென்டன் ரீஸன் கூறியுள்ளது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிய தோட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்த்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இது அணையப் போகும் விளக்கின் கடைசி சுடர்தான் என்பதை அன்று பேராதனை தாவரவியற் பூங்காவின் இயக்குனராகவிருந்த கலாநிதி தவய்ட்ஸ் மாத்திரமே உணர்ந்தார். இலங்கை கோப்பிச் செடிகளைத் தாக்க ஆரம்பித்திருந்த ஹெமிலிய்பா வெஸ்டார்டிரிக் எனும் நோய் விரைவில் கோப்பித் தோட்டங்கள் அத்தனையையும் அழித்துவிடும் என அவர் தீர்க்கதரிசனமாகக் கூறினார். ஆனால் அவரை யாரும் நம்பவில்லை. அவர் கூறியதைப் போலவே இந்நோய் பெரும்பான்மையான தோட்டங்களை முற்றாக அழித்தது. அன்று வீழ்ந்த கோப்பிப் பயிர்ச் செய்கை என்றுமே தன்னை சுதாரித்துக் கொள்ளவில்லை. அன்று இழந்த பொருளாதார முதன்மையை அது ஒருபோதும் மீண்டும் பெறவில்லை.

ஏனைய பகுதிகளில் போலவே, மாத்தளை மாவட்டத்திலும் கோப்பி நோயினால் நஷ்டத்திற்குள்ளான தோட்டத்துரைமார்களில் சிலர் கிடைத்த விலைக்குத் தம் தோட்டங்களை விற்று விட்டுத் தாயகம் திரும்பினர்; ஆனால் பலர் திடமான மன உறுதியைக் காட்டினர். கோப்பிச் செடிகளைப் பிடுங்கி எறிந்து விட்டு தம் தோட்டங்களிலே அவர்கள் தேயிலை, ரப்பர், கொக்கோ போன்ற பயிர்களை நாட்டினர். கோப்பித் தோட்டங்கள் தேயிலைத் தோட்டங்களாக, ரப்பர் தோட்டங்களாக, கொக்கோ தோட்டங்களாக மாற்றம் பெற்றன. கோப்பிக்குப் பொருத்தமில்லாத மிக உயர் பிரதேசங்களும் தேயிலைக்குப் பொருத்தமானவையாக இருந்தபடியால் மாத்தளைப் பிரதேசத்தில் புதிய தோட்டங்கள் பலவும் ஆரம்பிக்கப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மாத்தளை மாவட்டத்தில், ஐம்பது ஏக்கருக்கும் மேற்பட்ட தோட்டங்கள் நூற்றிப் பத்தொன்பது இருந்தன. அத்தனை தோட்டங்களினதும் மொத்த நிலப்பரப்பு 61530 ஏக்கர்களாகவும் இவற்றில் பயிர் செய்யப்பட்டிருந்த மொத்த நிலப்பரப்பு 22493 ஏக்கர்களாகவும் இருந்தன. இப்புள்ளி விபரங்கள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இம் மாவட்டத்தில் எந்தளவு அபிவிருத்தி அடைந்திருந்தது என்பதை உணர்த்துகின்றன.

பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆயிரத்து எண்ணூற்று இருபதுகளிலும் முப்பதுகளின் ஆரம்பத்திலும் தோட்டங்களுக்குத் தேவைப்பட்ட தொழிலாளர்கள் கண்டி கிராம வாசிகளில் மத்தியிலிருந்தே பெறப்பட்டனர். அடர்ந்த காடுகளை வெட்டி, தோட்டங்களை உருவாக்கும் கடினமான வேலை –சிறுத்தைகளுக்கும். காட்டுப் பன்றிகளுக்கும், அட்டைகளுக்கும் அரவங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய ஆபத்து நிறைந்த வேலை, எனினும் இவ்வேலைகளைச் செய்ய கண்டியர்கள் தயாராகவே இருந்தனர். ஆனால் இவர்களில் பலர் தோட்டத்துரைமார்களால் ஏமாற்றப்பட்டனர் என்பதை அக்கால கட்டத்திலே கண்டிப் பொலிஸ் அதிபராகப் பணியாற்றிய கோல்பெப்பர், கம்பளை பொலிஸ் நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றிய சி. எச். சேரம் போன்றோர் கூட ஏற்றுக் கொள்கின்றனர். தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கண்டியர்கள் பின்னர் விருப்பம் காட்டாமல் இருந்ததிற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

கோப்பித் தோட்டங்களுக்குக் கூடுதலான தொழிலாளர்கள் தேவைப்பட்டது, ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் எனும் நான்கு மாதங்களில் மாத்திரமே. இம்மாதங்களிலே தான் கண்டி விவசாயிகள் சிறுபோக விவசாயத்தில் ஈடுபடவேண்டியிருந்தது. எனவே தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தபோது, தமக்குத் தேவையான தொழிலாளர்களை மலையகக் கிராமங்களில் இருந்து பெற்றுக் கொள்வது முடியாதது என்பதை உணர்ந்த தோட்டத்துரைமார் தமக்குத் தேவையான தொழிலாளர்களைத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைப்பதே இலாபகரமானது எனத் தீர்மானித்தனர்.

ஜமய்க்கா, டிரினிடாட், கயானா, மோரிஷியஸ் போன்ற நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை அனுப்புவது தொடர்பாக அந்நாடுகளோடு இந்திய அரசாங்கம் ஆயிரத்து எண்ணூற்று முப்பதுகளின் பிற்பகுதியில் சில ஒப்பந்தங்களைச் செய்திருந்தது. இவ்வொப்பந்தங் களுக்குப் புறம்பாக வேறு நாடுகளுக்கு இந்தியத் தொழிலாளர்கள் செல்வதையும், அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் 1839 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டம் தடுத்தது. ஆனால் இத்தடைச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

இராமநாதபுரம், மதுரை, திருச்சி, சேலம், போன்ற வானம் பார்த்த பூமிகளில் சிரமமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த தமிழ் மக்கள் அரசாங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை மீறி இலங்கை வருவதற்குத் தயங்கவில்லை. ஆட்கள் சேர்ப்பதற்காக இலங்கையிலிருந்து சென்றிருந்த முகவர்கள் அள்ளி வீசிய வாக்குறுதிகளும், அவர்கள் விதைத்த நம்பிக்கைகளும் இம் மக்களின் ஆர்வத்தைக் கூட்ட பலர் கடலைக் கடந்து வர ஆரம்பித்தனர். இவ்வாறு வந்தவர்களில் பலர் தம்முடைய உழைப்பின் கணிசமான ஒரு பகுதியை மீதப்படுத்திக் கொண்டு நவம்பர் முடிய நாயகம் திரும்பினர். சிலர் இங்கேயே தங்கி பாதைகள் அமைத்தல் போன்ற பொதுப் பணிகளில் ஈடுபட்டனர்.

"கடந்த எட்டு, ஒன்பது ஆண்டுகளில்தான் இலங்கை வரும் இந்தியத் தொழிலாளர்களின் தொகை கணிசமானதாக உயர ஆரம்பித்தது" என எமர்ஸன் டெனன்ட் 1847 ஆம் ஆண்டில் எழுதியுள்ள ஒரு குறிப்பு கூறுகின்றது. மேலும், 1839 ஆம் ஆண்டில், 1971 ஆண்களும், 182 பெண்களும் 90 குழந்தைகளும் வந்ததாகவும், 1845 ஆம் ஆண்டில் 66,557 ஆண்களும், 642 பெண்களும், 79 குழந்தைகளும் வந்ததாகவும் அவர் தனது குறிப்பில் கூறியுள்ளார். வந்த ஆண்களின் தொகைகளுக்கும் பெண்களின் தொகைகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடு, வந்தவர்கள் இங்கு தங்க வந்தவர்கள் அல்லர் என்பதைப் புலப்படுத்துகின்றது. 1874இல் இலங்கை வந்த இந்தியத் தொழிலாளர்களின் தொகை 1,25,156 ஆகவும் 1877 இல் இது 1,67,196 ஆகவும் உயர்ந்தது என வேறு புள்ளி விபரங்கள் கூறுகின்றன. 1911 இல் இலங்கையில் 530,983 இந்தியத் தமிழர்கள் வசித்துள்ளனர். 1921 இல் இவர்களது தொகை 602,735 ஆகவும் 1946 இல் 780,589 ஆகவும் 1971 இல் இது, 1,174, 900 ஆகவும் உயர்ந்திருக்கின்றது.

இக்காலகட்டத்தில் இலங்கை வந்த இந்தியத் தொழிலாளர்களில் ஒரு சாரார் வடமேற்குக் கரையோரங்களில் இறங்கி புத்தளம், குருனாகல் ஊடாக நடந்து கண்டியை அடைந்தனர். மற்றுமொரு சாரார் மன்னார் போன்ற துறைமுகங்களில் இறங்கி அனுராதபுரம், தம்புள்ளை, மாத்தளை ஊடாக நடந்து கண்டியை அடைந்தனர். காட்டு வழிப் பாதைகள்; பகல் வேளைகளிலும் அப்பாதைகளில் உலாவும் யானைக் கூட்டங்கள்; சிறுத்தைகள், கரடிகள் போன்ற வன விலங்குகள்; மலேரியா, கொலரா போன்ற கொடிய நோய்கள் – இப்படி பல ஆபத்துக்களைக் கடந்தே இவர்கள் மலையகத்தை அடைந்தனர். எனவே வழியிலேயே மடிந்தோர் பலர்; மலைநாட்டை அடைந்த பின்னர் அதன் கடுங்குளிரைத் தாங்க முடியாது மாண்டோர் பலர். ஆயினும் இந்தியத் தமிழரின் வருகை குறையவில்லை?

அநுராதபுரம், தம்புள்ளை ஊடாகக் கண்டிக்கு வரும் இந்தியத் தொழிலாளர்கள் காணும் முதல் மலையகப் பிரதேசமான மாத்தளையிலும் ஆயிரத்து எண்ணூற்று முப்பதுகளிலேயே பல கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததனால் இவ்வாறு வந்த தொழிலாளர்களில் பலர் மாத்தளை மாவட்டத் தோட்டங்களிலும் குடி அமர்ந்தனர். மாத்தளைப் பிரதேசத்தில் இந்தியத் தமிழரின் சனத்தொகை எவ்வாறு படிப்படியாக அதிகரித்தது என்பதை பின்வரும் அட்டவணை புலப்படுத்துகிறது.

## மாத்தளை மாவட்டத்தில் இந்தியத் தமிழர் சனத்தொகை வளர்ச்சி

| ஆண்டு | மாத்தளையில் வாழ்ந்த இந்தியத் தமிழர் சனத்தொகை | மாத்தளை மாவட்ட மொத்த சனத்தொகை |
|---|---|---|
| 1871 | 13052 | 75189 |
| 1881 | 18182 | 86655 |
| 1891 | 15446 | 76514 |
| 1911 | 31372 | 108367 |
| 1921 | 34963 | 116584 |
| 1946 | 34174 | 155720 |
| 1953 | 40655 | 201049 |
| 1971 | 48358 | 314841 |
| 1977 | 55194 | 360857 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871, 1881, 1891 ஆம் ஆண்டுகளுக்குத் தரப்பட்டுள்ள தொகைகள் தோட்டங்களில் வேலை செய்து கொண்டு, அங்கேயே வாழ்ந்த தமிழர்களின் தொகைகளையே குறிக்கின்றன. இவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு இலங்கைத் தமிழர் இருந்திருப்பர்; தொண்ணூற்று ஒன்பது வீதத்திற்கு அதிகமானோர் இந்தியத் தமிழர்களாகவே இருந்திருப்பர்.

1881 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களுக்கு உட்படாத ஏனைய மாத்தளைப் பிரதேசங்களில் 8778 தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றனர்; 1891 இல் இத்தொகை 2433 ஆக இருந்திருக்கிறது. தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்த தமிழர் எனும் பிரிவில் இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் என்ற இரு சாராரும் அடங்கியிருப்பர்.

1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனத்தொகை மதிப்பீட்டின் போதே முதன் முறையாக இலங்கைத் தமிழர் வேறாகவும், இந்தியத் தமிழர் வேறாகவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். இதற்கு முந்திய காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் வசித்த இலங்கைத் தமிழர்களின் தொகை சொற்பமானதாகவே இருந்திருக்கவேண்டும்; இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என வேறுபடுத்திக் கணக்கெடுக்கப்படாததற்கு இதுவே காரணமாக இருந்திருக்கும். 1911 ஆம் ஆண்டில் கூட மாத்தளை மாவட்டத்தில் 1561 இலங்கைத் தமிழர்களே வசித்திருக்கின்றனர், என்ற புள்ளிவிபரமும் இதைத்தான் உணர்த்துகிறது. எனவே 1881 ஆம் ஆண்டில் தோட்டங்களுக்கு வெளியே இருக்கும் மாத்தளைப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்கள் என்று கருதப்படுகின்ற 8778 பேர்களிலும், 1891 ஆம் ஆண்டு இவ்வாறு வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்ற 2433 பேர்களிலும் கணிசமானோர் இந்தியத் தமிழர்களாகவே இருந்திருப்பர்.

தேயிலையே இலங்கைப் பொருளாதாரத்தின் முழுகெலும்பாக மாறும் காலம் வரை, பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக இலங்கை வந்த அத்தனை இந்தியத் தமிழர்களும் நிரந்தரமாக இங்கே வசிப்பவர்களாக இருக்கவில்லை. கோப்பித் தோட்டங்களுக்கு அதிகமாகத் தொழிலாளர்கள் தேவைப்பட்ட ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இங்கு வேலை செய்து விட்டுத் தென்னிந்தியா திரும்புபவர்களாகவே இருந்தனர். தாயகம் திரும்பியவர்களில் கணிசமானோர் மீண்டும் மீண்டும் வந்தனர் என்பது உண்மை. இதிலிருந்தே பழைய ஆள், புதிய ஆள் என்ற சொற்பிரயோகங்கள் தோட்ட வழக்கில் இடம் பெறலாயின.

## இந்தியத் தொழிலாளர்கள் - குடியேற்றமும் வெளியேற்றமும்

| ஆண்டு | வருகை | செய்கை | மிகுதி அல்லது குறை |
|---|---|---|---|
| 1871 | 88,529 | 58610 | 29919 |
| 1872 | 80,121 | 74035 | 6086 |
| 1873 | 89,012 | 80629 | 8383 |
| 1874 | 125,156 | 89727 | 35429 |
| 1875 | 86712 | 95519 | –88807 |
| 1876 | 164,497 | 91960 | 72837 |
| 1877 | 167,196 | 88609 | 78587 |
| 1878 | 101,093 | 91188 | 9905 |
| 1879 | 76,887 | 80750 | –3853 |
| 1880 | 45,600 | 73683 | –28083 |
| 1881 | 53,887 | 63240 | –9353 |
| 1882 | 50,907 | 57820 | –6913 |
| 1883 | 39,204 | 52962 | –13758 |
| 1884 | 45,777 | 55085 | –4308 |
| 1885 | 47,794 | 48863 | –1069 |
| 1886 | 39,907 | 45250 | –5343 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1887 | 72660 | 55121 | 17539 |
| 1888 | 82,587 | 55805 | 26782 |
| 1889 | 61,735 | 52619 | 9116 |
| 1890 | 84,106 | 45756 | 38350 |
| 1891 | 103,149 | 60042 | 43107 |
| 1892 | 116,472 | 67616 | 48,856 |
| 1893 | 91676 | 73181 | 18495 |
| 1894 | 85256 | 66292 | 18964 |
| 1895 | 123,611 | 80673 | 42938 |
| 1896 | 128,350 | 93281 | 35069 |
| மொத்தம் | 2,252,191 | 1,793,316 | 458875 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணை இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களின் வருகையையும் செய்கையையும் உணர்த்துகின்றது.

1878 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் 2,32,339 இந்தியத் தமிழர்கள் இருந்தனர். ஆனால் 1886 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தொகை 159,659 ஆக குறைகின்றது. கோப்பியின் வீழ்ச்சியே இந்தியத் தொழிலாளரின் எண்ணிக்கை குறைவுக்குக் காரணமாயிருந்தது. 1887 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேயிலை வளர ஆரம்பித்தவுடன் இந்தியத் தமிழரின் தொகை படிப்படியாக அதிகரித்து, 1896 ஆம் ஆண்டளவில் இந்தியத் தமிழரின் தொகை 458,875 ஆக உயர்வதைப் பார்க்கின்றோம்.

இதே ரீதியில் ஒவ்வோராண்டும் மாத்தளை மாவட்டத்திற்கு வந்த இந்தியத் தமிழர்களைப் பற்றியும் தாயகம் திருப்பியவர்களைப் பற்றியும் கூறுவதற்குப் புள்ளி விபரங்கள் எவையும் இல்லை. எனினும் கிடைத்திருக்கும் சில புள்ளிவிபரங்கள் 1881 ஆம் ஆண்டில் 18182 ஆக இருந்த மாத்தளை மாவட்ட இந்தியத் தமிழர் சனத்தொகை கோப்பி வீழ்ச்சியின் காரணமாக 1891 இல் 15446 ஆக குறைந்ததையும் பின்னர் தேயிலை, றப்பர் கொக்கோ போன்ற பயிர்கள் வளர்ச்சி பெற, இந்தியத் தமிழர் தொகை மாத்தளையில் பெருகியதையும் புலப்படுத்துகின்றன.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி தேசிய பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியதைப் போலவே, மாத்தளை மாவட்ட பொருளாதார வளர்ச்சியிலும் சமூக வாழ்விலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. கோப்பிச் செய்கை பரவலான முறையில் அறிமுகப்படுத்தப்படும் வரை, மாத்தளைப் பிரதேசத்தில் வாழ்ந்த அத்தனை இனங்களும் தமது உணவுத் தேவைகளையும் ஏனைய முக்கியமான தேவைகளையும் தாமாகவே பூர்த்தி செய்து கொள்ளும் இனங்களாகவே இருந்தன. ஆனால் இந்தியத் தொழிலாளர்களின் வருகை, ஏற்றுமதிக்காகப் பொருட்களை உற்பத்தி செய்து விட்டு, தனது உணவுத் தேவைகளுக்கும் பிற தேவைகளுக்கும் ஏனையோரை எதிர்பார்த்து நிற்கும் ஒரு சமூகத்தை அறிமுகப்படுத்தியது. உள்ளூர் வர்க்கத்தின் விருத்திக்கு உந்து சக்தியாக இருப்பது இத்தகைய சமூகங்களே.

எனவே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விளைவாக ஏற்பட்ட பணப் புழக்கமும் இந்தியத் தமிழர்களின் வருகையும் மாத்தளை மாவட்ட வர்த்தகத்திற்குப் புது இரத்தம் பாய்ச்ச அதுவரை மந்த கெதியில் நடைபோட்டுக் கொண்டிருந்த அது பெரும் வேகத்துடன் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. 1848 ஆம் ஆண்டில் கூட ஓலைகளாலும் வைக்கோலாலும் வேயப்பட்ட ஒரு சில கடைகளையும், ஓடு வேயப்பட்ட ஐந்தே ஐந்து கட்டிடங்களையும் மாத்திரமே கொண்டிருந்த மாத்தளை, 1888 ஆம் ஆண்டிலேயே 'லோக்கல் போர்ட்' என அழைக்கப்பட்ட ஓர் உள்ளூர் சபை பரிபாலனத்துக்குள் வைக்கப்படக்கூடிய அளவு வளர்ச்சி கண்டதற்கு இந்தியத் தமிழர்களின் வருகையும் ஒரு முக்கிய காரணமாகும்.

இவ்வாறே பெருந்தோட்டங்களின் வளர்ச்சியினாலும், கிராமிய மட்டத்தில் ஏற்பட்ட கோப்பிச் செய்கை விருத்தியினாலும் அதிகரித்த பணப் புழக்கமும் இந்தியத் தமிழர்களின் குடியமர்வும் ஒன்றிணைய மடவளை, தம்புள்ளை, பலாபத்வெல, உக்குவளை, ரத்தொட்ட, அலுவிகாரை, கவுடுபெலல்ல போன்ற கிராமங்களும் சிறு நகரங்களாக உருவெடுத்தன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பரந்த வயல் வெளியாகத் திகழ்ந்த ரத்தொட்டையில் அடுத்த இருபது, முப்பது ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த பாரிய மாற்றங்களைச் சுட்டிக் காட்டி தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கின் மேல் விரலை வைக்கின்றார் இப்பகுதியில் வாழ்ந்து, இம்மாவட்ட பெருந்தோட்ட வளர்ச்சிக்கும், தேசிய அடிப்படையிலான பெருந்தோட்ட வளர்ச்சிக்கும், அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ள தோட்ட உடமையாளரான கேணல் ரி. வை. ரைட் எனும் ஆங்கிலேயர்.

பெருந்தோட்டங்களின் வளர்ச்சி, அதனை ஒட்டி ஏற்பட்ட போக்குவரத்து விருத்தி, இந்தியத் தமிழர்களின் வருகை, வணிக வளர்ச்சி, இவை அனைத்தும் தோற்றுவித்த புதிய தொழில் வாய்ப்புக்கள் ஆகியவற்றின் கூட்டுத் தாக்கத்தினால் கவரப்பட்ட இலங்கை கரையோரச் சிங்களவர்கள், தென்னிந்தியத் தமிழ்ச் செட்டிமார்கள் எண்ணெய் வியாபாரிகள், பிற வணிகர்கள் போன்றோர் மலையகத்தை நோக்கி வந்தனர்; இத்தகையோர் பலர் மாத்தளை மாவட்டத்தையும் வந்தடைந்தனர்.

1871 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்ட பெருந்தோட்டங்களில் 13052 தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றனர்; தோட்டங்களுக்கு வெளியேயும் தமிழர்கள் பலர் வாழ்ந்திருக்க வேண்டும்; ஆனால் இவ்வெண்ணிக்கை என்ன என்பதை திட்டவட்டமாகக் கூறுவதற்கு ஆதாரங்கள் எதுவுமில்லை. 1881 ஆம் ஆண்டில் தோட்டங்களில் 18182 தமிழர்களும் தோட்டங்களுக்கு வெளியே 8778 தமிழர்களும் வசித்திருக்கின்றனர். 1891 ஆம் ஆண்டில் தோட்டங்களில் வாழ்ந்த தமிழர்களின் தொகை 15446 ஆகவும் வெளியே வாழ்ந்தவர்களின் தொகை 2433 ஆகவும் இருந்தன. 1881க்கும் 1890க்கும் இடைப்பட்ட ஒன்பதாம் சகாப்தமே 'கிங் கொபி' (King Coffee) என்றழைக்கப்பட்ட கோப்பியின் மரணத்தைக் கண்ட தசாப்தம். அத் தசாப்தம் தேயிலையின் ஜனனத்தைக் கண்டது என்றபோதிலும், தேயிலை அக்காலகட்டத்தில் போதியளவு வளர்ச்சியடைந்திருக்கவில்லை. எனவே தான் இத் தசாப்தத்தில் தமிழர்களின் தொகையில் ஒரு சரிவினைக் காண்கின்றோம்.

1881 இலும் 1891 இலும் தோட்டங்களில் வசித்த தமிழர்களில் தொண்ணூற்று ஒன்பது வீதத்திற்கு மேலானோரும், தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்த தமிழர்களில் கணிசமான தொகையினரும் இந்தியத் தமிழர்களாகவே இருந்திருப்பர். பெருந்தோட்டங்கள் என்ற பிரிவில் சேர்க்க முடியாத சிறிய தோட்டங்களிலும் கிராம நிலபுலன்களிலும் வேலை செய்து கொண்டிருந்த இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களும், பாதைகள் அமைத்தல், அவற்றைப் பராமரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்த கூலித் தொழிலாளர்களும், லேவாதேவி, எண்ணெய் வியாபாரம் போன்ற வியாபாரங்களுக்காகத் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த செட்டிமார்களும் , ஏனைய வர்த்தகங்களுக்காக வந்த இதர சமூகத்தவர்களும், முடி திருத்துதல், துணி வெளுத்தல், நகைகள் செய்தல் போன்ற இன்னோரன்ன என்ன தொழில்களை மேற்கொண்டிருந்த இந்தியத் தமிழர்களும் தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்தவர்கள் என்ற பிரிவுக்குள்ளேயே அடக்கப்பட்டிருப்பர். இவர்களைத் தவிர, ஆங்கிலேய ஆட்சி நிலைபெறுவதற்கு முன்னரே இம்மாவட்டத்தில் குடி அமர்ந்திருந்த தமிழர்களும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வழங்கிய புதிய வாய்ப்புக்களினால் கவரப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இங்கு வந்த தமிழர்களும் கூட இதே பிரிவுக்குள் தான் சேர்க்கப்பட்டிருப்பர். இலங்கைத் தமிழர்கள் என அழைக்கப்படும் பிந்திய பிரிவினரின் எண்ணிக்கை 1911 ஆம் ஆண்டில் கூட 1561 ஆகவே இருந்தது. எனவே ஆயிரத்து எண்ணூற்று எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் இவர்களின் தொகை பெரும்பாலும் இதனைப் பார்க்கக் குறைவாகவே இருந்திருக்கும் என்று கருதுவது நியாயமானதே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தமிழர்கள் மாத்தளை மாவட்டம் எங்கிலும் பரந்து வாழ ஆரம்பித்துவிட்டனர் என்பதை 1901 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் காணப்படும் புள்ளி விபரங்கள் உணர்த்துகின்றன. அவ்விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

## மாத்தளை மாவட்ட சனத்தொகை விபரம் - ஆண்டு 1901

| பெரும்பாக பகுதி - கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| மாத்தளை லோக்கல் போர்ட் – பரிபாலனப் பகுதி | 4951 | 1352 |
| மாத்தளை தெற்கு – கொஹன்ஸிய பத்து | | |
| தென்ன | 1115 | 7 |
| ஓவில்ல | 935 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெரும்பாக பகுதி - கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| திப்பட்டுவாவ | 585 | 10 |
| புரிஜ்ஜல | 1214 | 77 |
| வரக்காமுற | 146 | – |
| நாகொல்ல | 566 | 28 |
| படிவிட்ட | 519 | 13 |
| ஹுலன்கமுவ | 851 | 45 |
| ஹரஸ்கம | 1312 | 95 |
| கொங்காவலை | 578 | 91 |
| மாத்தளை தெற்கு – கம்பஹஸிய பத்து | | |
| அம்பன | 171 | 4 |
| மடவளை | 468 | 3 |
| நாரன்கமுவ | 230 | 20 |
| புவக்பிட்டிய | 232 | 4 |
| இம்புலன்தண்ட | 266 | 23 |
| தொரகும்புற | 601 | 34 |
| அலுவிகாரை | 814 | 213 |
| உடுகம | 1165 | 199 |
| தொம்பவல | 425 | 21 |
| கல்வடுகம்புற | 545 | 74 |
| பொது வேலைத் திணைக்களம் – கூலித் தொழிலாளர் | 67 | 62 |
| நிரந்தர வதிவிடமற்றோர் | 14 | 6 |
| மாத்தளை தெற்கு – உடஸிய பத்து | | |
| உடன்கமுவ | 721 | 31 |
| ரத்வத்தை | 104 | – |
| வெலிகல | 455 | 9 |
| வாரப்பிட்டிய | 823 | 12 |
| ஹபுவித | 206 | 2 |
| முவான்தெனிய | 1259 | – |
| பண்டாரப் பொல | 323 | – |
| உள்பொத்தப்பிட்டிய | 270 | 34 |
| மாத்தளை தெற்கு – மெதசிய பத்து | | |
| இம்புல்பிட்டிய | 1048 | 64 |
| வாரியப்பொல | 503 | 10 |
| உக்குவளை | 690 | 52 |
| வரக்காமுற – கிழக்கு | 352 | 2 |
| போவத்த | 652 | 17 |
| நுகப்பிட்டிய | 586 | – |
| மானாம் பொட | 532 | 11 |
| மாருக்கோன | 363 | – |
| கடுவெல | 288 | 58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெரும் பகுதி - கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| மாத்தளை தெற்கு – அஸ்கிரி உடஸிய பத்து | | |
| அளுத்கம | 294 | 1 |
| பமுனுவ | 364 | – |
| எம்பிட்டியாவ | 558 | 3 |
| எட்டிப் பொல | 471 | 17 |
| துல்லேவ | 387 | 5 |
| மாத்தளை தெற்கு – அஸ்கிரிய பள்ளேசிய பத்து | | |
| மஹவெல | 910 | 56 |
| கலகாமம் | 666 | 8 |
| நிக்ககொல்ல | 279 | – |
| யட்டவத்த | 698 | 8 |
| அம்பான்பொல | 536 | 6 |
| உடஸ்கிரிய | 462 | – |
| கம்முல்ல | 608 | 3 |
| மாத்தளை தெற்கு தோட்டங்கள் | 17666 | 16735 |
| மாத்தளை வடக்கு – வகபனக பள்ளேசிய பத்து | | |
| எம்புல்லம்ப | 463 | 7 |
| லேன தொர | 511 | 29 |
| நயாகும்புற | 348 | 1 |
| கழுந்தேவ | 312 | – |
| தித்தவெல்கொல்ல | 1013 | 122 |
| எராவுல | 346 | – |
| நிக்கவட்டவான | 144 | 8 |
| கும்புக்கந்தன்வெல | 285 | 3 |
| கண்டலம | 151 | 13 |
| பள்ளேகம | 185 | 2 |
| பொதுப்பணி திணைக்களம் – தமிழ் கூலித் – | | |
| தொழிலாளர்கள் | 80 | 75 |
| நிரந்தர வதிவிடமற்றோர் | 41 | 5 |
| மாத்தளை வடக்கு – உடுகொட பள்ளேசிய பத்து | | |
| மில்லவான | 379 | 3 |
| வெஹர | 394 | 3 |
| பொரகொரகம | 305 | – |
| அளுத்கம | 438 | 2 |
| வஹகோட்ட | 661 | 3 |
| லேனவல | 583 | 1 |
| எலமல் பொத்த | 268 | – |
| தெம் பாவ | 429 | – |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெரும் பகுதி - கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| மாத்தளை வடக்கு – கந்தப் பொல கோரளை | | |
| பெலிகமுவ | 450 | – |
| கலே வெல | 332 | 12 |
| வலஸ்வெவ | 307 | – |
| நமடகஹவத்த | 285 | 1 |
| பம்பரகஸ் வெவ | 266 | – |
| அளுத்வெவ | 365 | – |
| பெலியாகந்த | 355 | – |
| தந்து பெந்தி ரூப | 482 | – |
| தலகிரியாகம | 243 | 19 |
| நிரந்திர வதிவிட மற்றோர் | 19 | 13 |
| | | |
| மாத்தளை வடக்கு – வகபனஹ உடசிய பத்து | | |
| பிளிஹுது கொல்ல | 294 | – |
| ஹாடுவ | 305 | 3 |
| சுரவிலஹேன | 230 | – |
| பிபில்ல | 653 | 22 |
| மேல்பிட்டிய | 528 | 1 |
| நாலந்த | 281 | 12 |
| பொதுப்பணித் திணைக்கள கூலித் தொழிலாளர்கள் | 41 | 38 |
| | | |
| மாத்தளை வடக்கு – இனாமலுவ கோரளை | | |
| இனாமலுவ | 261 | 12 |
| பலுட்டாவ | 300 | 9 |
| அவுடன்காவ | 333 | 10 |
| கெடிகஸ் வெவ | 186 | – |
| சீகிரிய | 496 | 61 |
| பொதுப்பணித் திணைக்கள கூலித் தொழிலாளர்கள் | 60 | 56 |
| நிரந்தர வதிவிட மற்றோர் | 17 | 7 |
| | | |
| மாத்தளை வடக்கு – உடுகொட உடசிய பத்து | | |
| எஹலப்பொல | 731 | 9 |
| வல்மோருவ | 402 | – |
| கிரி ஒருவ | 126 | 4 |
| அக்குரம் பொட | 782 | 9 |
| கொஸ் வத்த | 422 | 2 |
| பல்தெனிய | 679 | 10 |
| அம் பொக்க | 657 | 10 |
| | | |
| நிரந்தர வதிவிட மற்றோர் | 3 | – |
| | | |
| மாத்தளை வடக்குத் தோட்டங்கள் | 170 | 140 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெரும் பகுதி – கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| மாத்தளை கிழக்கு – மாத்தளை பள்ளேசிய பத்து | | |
| வேரகம | 1099 | 34 |
| ஓவல | 468 | 26 |
| பள்ளேகம | 525 | 27 |
| உடகம | 582 | – |
| மவுஸ்ஸாகல | 896 | 28 |
| ரத்தொட்ட நகரம் | 519 | 38 |
| நிக்கவெல்ல | 157 | – |
| குருபெபில்ல | 531 | 43 |
| ரயித்தளாவ | 209 | – |
| கும்பளோளுவ | 428 | – |
| ஆந்தாவலை | 197 | 28 |
| ஓபல்கல | 459 | – |
| ரத்தொட்ட கிராமம் | 1303 | 116 |
| தங்கந்த | 1058 | 24 |
| | | |
| பொதுப்பணித் திணைக்கள கூலித் தொழிலாளர்கள் | 50 | 40 |
| நிரந்தர வதிவிடமற்றோர் | 11 | 8 |
| | | |
| மாத்தளை கிழக்கு – லக்கல உடசிய பத்து | | |
| பிடவல | 405 | 7 |
| எட்டன்வல | 453 | 5 |
| மஹல கொட்டுவ | 332 | 4 |
| கஹகல | 356 | 3 |
| ரம்புக்கொளுவ | 207 | – |
| | | |
| மாத்தளை கிழக்கு – லக்கல பள்ளேசிய பத்து | | |
| இமாதுவ | 248 | – |
| நாரன்கமுவ | 255 | – |
| ஹல்மினிய | 328 | – |
| காரகம | 176 | – |
| குருவெல | 200 | – |
| வில்கமுவ | 242 | – |
| அக்கரஹாடுவ | 208 | 2 |
| பள்ளேகம | 201 | – |
| வேல்ஓய | 110 | 9 |
| | | |
| மாத்தளை கிழக்கு – கொங்கால உடசிய பத்து | | |
| பொத்தொட்டவல | 163 | – |
| புவக்பிட்டிய | 498 | – |
| கம்பரவ | 126 | – |
| கலுகங்கை | 216 | 1 |
| அந்தரகல்லாவ | 29 | 1 |
| எலஹெர | 143 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெரும் பகுதி - கிராமம் பெயர் | மொத்த சனத்தொகை | தமிழர் தொகை |
|---|---|---|
| ஹெலம்பகஹவத்த | 255 | – |
| பப்பிளிய | 145 | – |
| மாரகமுவ | 128 | – |
| எலகமுவ | 169 | – |
| கல்பொட | 269 | – |
| கொங்கா வெல | 188 | 1 |
| நிரந்தர வதிவிட மற்றோர் | 7 | 7 |
| மாத்தளை கிழக்கு – தோட்டங்கள் | 8300 | 7919 |
| மொத்தம் | 92090 | 28624 |

மேலே தரப்பட்டுள்ள மாத்தளை மாவட்டத் தமிழர் குடிசன பரம்பல் அட்டவணை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அதன் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் லக்கல, வில்கமுவ, கம்பரவ, எலஹெர, பப்பிளிய, மாரகமுவ போன்ற பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தமிழர்கள் ஓரளவு பரந்தும் ஏனைய இன மக்களோடு இணைந்தும் வாழ ஆரம்பித்து விட்டனர் என்பதனைப் புலப்படுத்துகிறது. மாத்தளை நகரிலும் அதற்கு அண்மையில் அமைந்திருந்த ஹரஸ்கம, நாகொல்ல, ஹுலன்கமுவ, அலுவிகாரை, கியுள போன்ற பகுதிகளிலும் ரத்தோட்ட, உக்குவளை, இம்புலன்தண்ட, கவ்டுபெலல்ல போன்ற இடங்களிலும் தமிழர்கள் கூடுதலாக வாழ்ந்ததற்கு இப்பகுதிகளில் காணப்பட்ட சிறு தோட்டங்கள், கிராம கோப்பி நிலங்கள் போன்றவை ஒரு காரணமாக இருந்ததைப் போலவே, மாத்தளை நகரம் வழங்கிய வர்த்தக, தொழில் வாய்ப்புக்களும் ஒரு காரணமாக இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் ஜனனத்திற்கு முன்னரே, பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, கலாசார பின்னணிகளைப் பிரதிபலிக்கும் தமிழ் சமூகங்கள் பலவற்றை மாத்தளை மாவட்டத்தில் நாம் பார்க்கின்றோம்.. இவற்றுள் தொகையில் மிகப் பாரியதாக இருந்தது பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காகவே தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்த இந்தியத் தமிழினமாகும். மாத்தளை மாவட்ட மொத்த தமிழர் சனத் தொகையில் தொண்ணூற்று ஆறு வீதத்திற்கும் கூடுதலாக இருந்த இச்சமூகத்தினர் தம் உழைப் பொன்றையே நம்பி, தம் உடலுரம் ஒன்றினையே மூலதனமாக கொண்டு இங்கு வந்தவர்கள்.

இவர்கள் எத்தகைய அவல வாழ்விலிருந்து தப்ப இங்கு வந்தவர்கள் என்பதை பட்டாபி சீத்தா – ராமையா என்பவர் 1940 ஆம் ஆண்டில் எழுதிய........

"சேற்றிலும் சகதியிலும் உழன்று பயிரிடும் பண்ணையடிமை, அரைவயிற்றுக் கஞ்சியுடனோ, முழுப் பட்டினியாகவோ வேலை செய்கின்றான். அவனுக்குப் புயல், மழை, வெயில் எதுவும் ஓய்வு தருவதாக இல்லை. மரணம் ஒன்றே ஓய்வு தருகிறது. நமக்காக நெல் விளைவித்து, அவன் வறுமையில் வாடுகிறான். நம் பசுவை வளர்த்து நமக்குப் பால் தருகிறான். ஆனால் அவனோ கஞ்சியையும் தண்ணீரையும் தவிர வேறறியான். அவன் நமக்காகக் கிணறு தோண்டுகிறான்; ஆனால் அதில் நீர் ஊறும் போது, அவனை அதிலிருந்து விலக்கி விடுகின்றோம். அவன் பரிதாப நிலை நம் நெஞ்சைத் தொடுவதாக உள்ளது" எனும் வரிகளும்.......

கலாநிதி க. அருணாசலம் தனது 'மலையகத் தமிழ் இலக்கியம்' எனும் நூலில் எழுதியிருக்கும்.

"இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மூதாதையர் தமது தாயகத்திலே – தமிழகத்திலே, நிலவுடமை அமைப்பின் கீழ் அவ்வமைப்பினைத் தாங்கி நிற்கும் தூண்களாக விளங்கி வந்த போதும், பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகளாகச் சமூக பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்த தமது இனத்தவருள் ஒரு பகுதியினரால் காலம் காலமாகச் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டனர். சமூக பொருளாதார ரீதியாக மேலாதிக்கம் பெற்றிருந்தோர் அத்தகைய தமது கொடுஞ் செயல்களை மூடி மறைக்க சமயம், சாத்திரம், தெய்வம் முதலியவற்றைத் தக்கவாறு பயன்படுதினர். 'சும்மா இருந்து சுகம் காண' முயன்ற சுகபோகவர்க்கம், தனது சுகபோக வாழ்வுக்குத் தேவையான அளவில் உழைக்கும் வர்க்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை 'விஞ்சவும் விடாது துஞ்சவும் விடாது' – அதாவது வாழவும் விடாது சாகவும் விடாது – கவனித்துக் கொண்டது. பல்லவ, சோழ, விசய நகர பேரரசுகளின் காலம் முதற்கொண்டு 'காந்தியுகம்' வரை நாம் இதனையே காண்கிறோம். இடையில் ஏற்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியமும் நிலவுடமை ஆதிக்கத்தைப் பொறுத்தவரை, அடிப்படை மாற்றங்கள் சிலவற்றை ஏற்படுத்தினாலும், நீண்ட காலமாக வஞ்சிக்கப்பட்ட உடலுழைப்பாளிகளின் வாழ்க்கை நிலையிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை."

எனும் வரிகளும்

ஆ. சிவசுப்பிரமணியம் என்பவரது 'அடிமை முறையும் தமிழகமும்' என்ற நூலில் காணப்படும்.

"பண்ணையார் வீடுகளின் முகப்பில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் திரிக்கைவால் சவுக்கை எடுத்து மயக்கம் வரும் அளவிற்கு அடிப்பார்கள். மயங்கிக் கீழே விழுந்த பிறகும் அவர்கள் விடுவதில்லை. மாட்டுச் சாணத்தைக் கரைத்து மாட்டுக்கு மருந்து புகட்டும் மூங்கில் கொட்டத்தில் நிரப்பிச் சாணிப்பாலை பருகிடச் செய்வார்கள்.

எனும் வரிகளும் மிகத் தெளிவாகச் சித்திகரிக்கின்றன.

இத்தகைய வேதனை மிகு வாழ்க்கைக்கு ஏற்கனவே நன்கு பழக்கப்பட்டிருந்த ஒரே காரணத்தினால் மாத்திரமே இலங்கைப் பெருந்தோட்டங்கள் சுமத்திய வேலைப் பளுவினைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாகவும் அவற்றில் நிலவிய அடக்கு முறைகளுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாகவும் இங்கு வந்த தென்னிந்தியத் தொழிலாளர்கள் இருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை. தாம் தம் தோட்டங்களின் உடமையாளர்கள் மட்டுமல்லர்; தாம் தம் தோட்டங்களையும் அங்கு வேலை செய்த தொழிலாளர்களையும் ஆளும் மன்னர்களும் கூட, என நினைத்த அதிகார திமிர்பிடித்த தோட்டத் துரைமார்களின் ஆணவப் போக்கு, கைகளிலே சாட்டைகளை வைத்துக் கொண்டு தொழிலாளர்களை விரட்டி, விரட்டி வேலை வாங்கிய கங்காணிகளின் கண்டிப்பு, ஒப்பந்தங்களின் அடிப்படையிலே தோட்டங்களுக்குக் கொண்டு வரப்பட்டிருந்த தொழிலாளர்களை ஏறத்தாழ அடிமைகளாகவே மாற்றிய 1841 ஆம் ஆண்டுச் சட்டம் – இவையாவும் ஒன்றிணைய தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் பெருந்தோட்ட வாழ்க்கை நரக வாழ்க்கையாகவே இருந்தது.

தொழிலாளர்கள் எத்தனையோ வழிகளில் சுரண்டப்பட்டனர், ஆனால் சட்டமோ சுரண்டிய தோட்டத் துரைமார்களின் பக்கமே சாய்ந்தது. சில வேளைகளில் சுரண்டிய துரைமார்களே சரண்டப்பட்ட தொழிலாளர்களின் முறைபாடுகளை விசாரித்து தீர்ப்புக் கூறும் நீதிபதிகளாக நீதிமன்றங்களில் அமர்ந்திருந்த வினோதங்களையும் அன்றைய தொழிலாளர்கள் கண்டிருக்கின்றனர். வேலை எவ்வளவு கடினமாக இருந்தாலும், எவ்வாறு சுரண்டப்பட்ட போதிலும் ஒப்பந்த கால முடிவுக்கு முன்னர் ஓடித் தப்பக் கூடிய வாய்ப்புகள் தொழிலாளர்களுக்கு இருக்கவில்லை. தப்பி ஓட முயன்றவர்கள் பெரும்பாலும்ட பிடிக்கப்பட்டனர்; கொடூரமாகத் தண்டிக்கவும் பட்டனர்.

1900 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த கரகஹலந்த தோட்டத்திலிருந்து சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் தப்பியோடினர். ஆனால் பிடிபட்டு அதே தோட்டத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். திரும்பி வரும் போது, தப்பியோடிய தொழிலாளர்களில் ஓர் இளம் பெண் நோய்வாய்ப்பட்டாள்; மற்றவர்கள் அவளைச் சுமந்து சென்றனர். இருப்பினும் அவள் இறந்து விட்டாள். மனக் கிலேசம் அடைந்த மற்ற தொழிலாளர்கள் பிரேதத்தை எறிந்து விட்டு அதனைப் பற்றி எதுவும் பேசாது இருந்துவிட்டனர். அவர்கள் செய்த ஒரே பிழை இளம் பெண்ணின் மரணத்தைப் பற்றி மௌனம் சாதித்தது மட்டுமே. ஆனால் தோட்டத் துரையின் தூண்டுதலினால் அவர்கள் மீது சுமத்தப்பட்டதோ கொலைக் குற்றச் சாட்டு. தோட்டத்தை விட்டு தப்பியோட விரும்பிய மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக இருந்தது.

இந்த தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வின் அன்றாட அவலங்களை, அவர்கள் அனுபவித்த வேதனைகளை, சகித்துக் கொண்ட சிரமங்களை கோப்பிப் பழம் பறிக்கும் ஒரு பெண் பாடியதாக வரும்.

*கோண கோண மலையேறி*
*கோப்பிப் பழம் பறிக்கையிலே*
*ஒத்தப் பழம் தப்பிச்சின்னு*
*ஒதைச்சானையா சின்னத்துரை*

என்ற பாடலும், கடினமான வேலைகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளி பாடுவதாக வரும்.

*எண்ணி குழிவெட்டி*
*இடுப்பொடிஞ்சி நிக்கையிலே*
*வெட்டு வெட்டு என்கிறானே*
*வேலையத்த கங்காணி*

என்ற பாடலும்

*"ஹந்தானை தோட்டமுனு*
*ஆசையா தானிருந்தேன்*
*ஒரு மூட்டைத் தூக்கிச் சொல்லி*
*ஒதைக்கிறாரே கண்டாக்கையா"*

என்ற தோட்டப் பாடலும் வெகு இயல்பாக சித்தரிக்கின்றன.

இத்தனை ஏச்சுப் பேச்சுக்களையும், அடி, உதைகளையும், அவமானங்களையும், ஏமாற்றங்களையும் தாங்கிக் கொண்டு தொடர்ந்து இத் தோட்டங்களில் வேலை செய்யும் மனப்பக்குவத்தை வழங்கியது நாம் இங்கிருந்து இந்தியா திரும்பினால் மட்டும் , என்ன ஏச்சுப் பேச்சு கேட்காமலா வாழ்ந்துவிடப் போகின்றோம் அடி, உதை, படாமலா சீவிக்கப் போகின்றோம் என்ற விரக்தியும் இங்கிருந்தால் நாலு பணம் சேர்த்திடலாம் என்ற நப்பாசையும் தான்.

ஆனால் நாலு பணம் சேர்த்திடலாம் என்பது கூட நப்பாசையாகத்தான் பெரும்பாலும் இருந்ததே ஒழிய யதார்த்த பூர்வமான நம்பிக்கையாக இருக்கவில்லை. ஆயிரத்து எண்ணூற்று நாற்பதுகளில் ஒரு தொழிலாளிக்குக் கிடைத்த சராசரி மாத வருமானம் பதினைந்து சிலிங்காக அல்லது ஏழரை ரூபாவாக இருந்தது. இது கூட தோட்டத் துரைமார்களின் பார்வையில் கொழுத்த ஊதியமாகவே தென்பட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கில் சீவித்துவிட்டு இரண்டு பங்கினைச் சேமிக்கக் கூடிய நிலையில் தொழிலாளிகள் இருந்தனர் என்று எழுதியுள்ளார் ஹுனஸ்கிரியப் பகுதியில் தோட்ட உரிமையாளராக இருந்த ஒஸ்டின் என்பவர். 1880 களில் இலங்கை வந்த கிளட்டர்பக் என்பவர் தோட்டத் தொழிலாளி நாளொன்றுக்கு ஆறு பணம் அல்லது முப்பத்தெட்டு சதம் என்ற ரீதியில் உயர் ஊதியத்தைப் பெற்று தன் பிள்ளைகளின் கால்களில் வெள்ளிச் சலங்கைகள் அணிவிக்கக் கூடிய அளவுக்கு வசதியாக வாழ்கின்றான் என அங்கலாய்க்கின்றார். ஒரு தோட்டத்துரையின் சராசரி சம்பளம் ஒரு தொழிலாளியின் ஊதியத்தைவிட நாற்பது மடங்கு அதிகமாக இருந்தபோதிலும் எந்த ஒரு துரையும் தனக்குக் கிடைக்கும் சம்பளம் நியாயமானது என்று கூறியதில்லை. ஒரு சில தொழிலாளிகள் 'நாலு பணம்' சேகரிப்பதில் வெற்றி பெற்றிருக்கலாம்; ஆனால் அதனைச் சேர்க்க அவர்களும் அவர்களது பிள்ளைகளும் எவற்றையெல்லாம் இழந்திருப்பார்கள்; எந்தளவு சிக்கனமாக அல்ல, கருமித்தனமாக வாழ்ந்திருப்பார்கள் என்பதையெல்லாம் இறைவனே அறிவான்.

ஏறத்தாழ பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தம் வரை இலங்கையிலே நிரந்தரமாக தங்கவேண்டும் என்ற நினைப்பு இந்தியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களுக்கு இருக்கவில்லை என்றே கூறவேண்டும். கோப்பித் தோட்டங்களுக்கு ஆட்கள் அதிகம் தேவைப்படுகின்ற ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் வேலை செய்து விட்டு கிடைத்த பணத்தோடு தாயகம் திரும்புபவர்களாகவே பலர் இருந்தனர். நான்கு ஐந்து ஆண்டுகள் இங்கேயே தங்கி, குறிப்பிட்டளவு பணத்தைச் சேர்த்துக் கொண்டு, இந்தியா செல்லும் நோக்கோடு பலர் செயற்பட்டனர். ஆனால் எப்படியோ ஓரளவு செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு தம் சொந்த ஊர் திரும்பி, ஒரு சிறு துண்டு நிலத்தையாவது வாங்குவது தான் எல்லோருடைய ஆசையாகவும் இருந்தது. ஒரு சிலர் தம் ஆசையை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி பெற்றனர்; பெரும்பாலானோரின் நிலம் வாங்கும் கனவு கனவாகவே முடிந்தது சோகமானதுதான். ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டிலிருந்தே இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையைத் தமது நிரந்தர வதிவிடமாகக் கருத ஆரம்பித்தனர் எனலாம்.

அன்று இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமுகத்தின் அத்தனைப் பிரிவுகளிலும் தமிழ்த் தோட்ட தொழிலாளர் என்ற பிரிவே அன்றைய இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆகக் கூடுதலான பங்களிப்பை நல்கியது என்பதில் இரு வேறு வித கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆனால் இவ்வுண்மையை அத் தொழிலாளர்கள் உணர்ந்திருக்கவில்லை என்று நினைக்கக் கூடிய அளவிற்கு அவர்களின் போக்கு மிக அடக்கமானதாகவும் பணிவுமிக்கதாகவும் இருந்தது. நாம் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் – இந்த நாட்டில் எவ்வித உரிமைகளும் அற்றவர்கள் என்ற எண்ணம் அவர்களின் உள்ளங்களில் வேரூன்றியிருந்ததை அவர்களின் நடத்தையில் காணப்பட்ட அசாதாரண பணிவு உணர்த்தியது. அவர்களுக்கு மரியாதை கிடைத்த ஒரே இடம் கடைகள் மட்டுந்தான்; அங்கும் அவர்களின் கைகளில் இருந்த பணம் பிடுங்கப்படும் வரை தான். தொழிலாளி கொண்டு வந்த பணம் முடிந்துவிட்டது என்பதை அறிந்தவுடன் கடைக்காரனும் அவனை ஒரு செல்லாக் காசாகவே மதித்தான்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மாத்தளையில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்களின் தொகையோடு ஒப்பிடும் போது, இங்கு வாழ்ந்த ஏனைய தமிழ்ச் சமூகப் பிரிவினர்களான செட்டிமார்கள், வர்த்தகர்கள், பொற்கொல்லர்கள் போன்றோரின் தொகை மிகச் சிறியதாகவே இருந்த போதிலும் மாத்தளை மாவட்டத்தின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு இவர்களும் கணிசமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர் என்பதை மறுக்கமுடியாது. இவர்களுள் பணக்கட்டுகளோடு இங்கு வந்து, விசேஷமாக மாத்தளை நகரத்திலும் ஓரளவு ரத்தொட்டை, உக்குவளை போன்ற சிறு நகரங்களிலும் குடியமர்ந்து லேவாதேவி வியாபாரம், எண்ணெய் வியாபாரம், எண்ணெய் செக்குகள் வைத்து எண்ணெய் உற்பத்திச் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்த செட்டிமார்கள் முக்கியமானவர்கள்.

ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே நகரத்தார் என்றும் அழைக்கப்பட்ட நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் பலர் மாத்தளை மாவட்டத்தில் பிரபலமானவர்களாக விளங்கினர் என்பதற்கு காணி உறுதிப் பத்திரங்களும் ஈட்டு உறுதிப் பத்திரங்களும் சான்றுகளாக இருக்கின்றன. கூனா பானா ராவன்னா மானா ஆனா அண்ணாமலைச் செட்டியார், அவரது சகோதரர் வெங்கடாசலச் செட்டியார், எஸ்.பி. என் அண்ணாமலைச் செட்டியார், பேனா ரீனா சீனா நானா பெரிய கருப்பன் செட்டியார், சீனா சின்னப்பன் செட்டியார், ஆனா லானா கானா ரூனா லட்சுமணன் செட்டியார் போன்றோர் சென்ற நூற்றாண்டின் முதல் இரண்டு மூன்று தசாப்தங்களிலும், ஆர். எல். எஸ். வி. என் அருணாச்சலம் செட்டியார், கே. என். நல்ல கருப்பன் செட்டியார், எஸ். டி. கே. எம். குமரப்ப செட்டியார், எம். ஆர். பி. எல். எம். ஆர். முருகப்ப செட்டியார், எஸ். கே. எம் மெய்யப்ப செட்டியார், ஓ. உலகப்ப செட்டியார் போன்றோர் முப்பது, நாற்பதுகளிலும் மாத்தளைப் பிரதேசத்தில் பெரும் வசதியோடும், பிரபல்யத்தோடும் வாழ்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுள் ஒரு சிலராவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை பிரதான வீதியில் நெடுங்காலமாக ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் ஸ்தாபனம் இயங்கிக் கொண்டிருக்கும் பகுதியில், பாதையின் இரு பக்கங்களிலும் ஒரே மாதிரி ஏழெட்டு கடைகள் சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலும் காணப்பட்டன. முன் இரவு வேளைகளில் அமர்ந்து உரையாடுவதற்கு வசதியான உயர்ந்த ஒடுக்கமான திண்ணைகள்; நடுவிலே இரும்புச் சட்டங்களால் பலப்படுத்தப்பட்ட கனமான மரக் கதவுகள்; கதவுக்கு இரண்டு பக்கங்களிலும் இரும்புக் கம்பிகள் ஊன்றப்பட்ட சிறு ஜன்னல்கள் – இவையே செட்டிமார்களின் லேவாதேவி கடைகளின் முத்திரைகள். இன்று இக்கடைகளில் எதுவுமே லேவாதேவி கடையாக இல்லை; அங்கே செட்டியார்களும் இல்லை; கடைகளின் அமைப்பும் முற்றாக மாற்றம் பெற்று விட்டன. இப்போது இக்கடைகளுள் திரு. குழந்தை வேலு அவர்களுக்குச் சொந்தமான ஒரு கடை மாத்திரம் பழைய அமைப்பின் ஒரு சில அம்சங்களைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றது.

அன்று இக்கடைகளில் செட்டிமார் கலாசாரம் பரிமளித்தது; ஒவ்வொரு கடையிலும் சமையலைக் கவனிக்க ஒரு 'தவசிப்பிள்ளை'; உயர்தர உணவு வகைகள்; மல் வேட்டிகள், பெனியன் போன்ற அரைக்கை வெள்ளைச் சட்டைகள், 'மார்பல்' விளையாடும் போது கூட 'சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்' 'வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு' போன்ற பழமொழிகளைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் உதிர்க்கும் பழனியப்பன், வைரவன் போன்ற தமிழ்ப் பற்றும் பயிற்சியும் மிகு செட்டிமார் பிள்ளைகள்.

ஏறத்தாழ மாத்தளை நகரின் மையப் பகுதியிலே பிரதான வீதியையும், ராஜ வீதியையும் இணைக்கும் தெரு; இத் தெரு ராஜ வீதியில் இணையும் இடத்தில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களினால் கட்டப்பட்ட கதிரேசன் கோயில் – அத் தெருவிலே இரு பக்கமும் செட்டிமார்களின் வீடுகள் – எனவே அன்று இந்த தெரு செட்டித் தெரு என்றே அழைக்கப்பட்டது. இன்று அங்கு செட்டியார்கள் யாரும் இல்லை; செட்டித் தெரு என்ற பெயரும் வழக்கிலில்லை.

மாத்தளை கொடப்பொல பாதையில் என்றும் வற்றாத ஒரு கிணறு – இன்றும் அது செட்டிக் கிணறு என்றே அழைக்கப்படுகிறது. முதுகு தேய்ப்பதற்கு வசதியான கற்சுவர்கள் – துணிகள் துவைப்பதற்கு ஏற்ற கற்தொட்டிகள். முன்னர் செட்டிமார்கள் பலர் இக் கிணற்றில் தான் குளித்தார்கள். அவர்கள் குளித்ததனால் மட்டும் இக் கிணறு செட்டிக் கிணறு என்று அழைக்கப்பட்டதா அல்லது இதனைச் செட்டியார்கள் அமைத்ததனால் இப் பெயர் ஏற்பட்டதா என்பது தெரியாது.

கட்டு கட்டாக பணத்தோடு வந்த செட்டிமார்கள் மாத்திரமன்றி, வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காக சிறு முதலோடு வந்த வணிகர்கள் பலரும், தம் தொழிற் திறமையை நம்பி வந்த ஆசாரிமார் போன்ற தொழில் வினைஞர்கள் சிலரும், தம் உழைப்பாற்றலை மாத்திரமே நம் ஒரே மூலதனமாகக் கருதி இங்கு வந்த தொழிலாளர்களில் சிலரும் சொற்ப காலத்திலேயே இங்கு நிலபுலன்கள் வாங்கக் கூடிய அளவிற்கு மூலதனத்தைச் சேர்ப்பதில் வெற்றி பெற்றனர் என்பதை இம் மாவட்ட வரலாறு உணர்த்துகிறது. தோட்டத் தொழிலாளர்களாக வந்தவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் தொழிலாளர்களாகவே மடிந்தனர் என்பது உண்மை, பெரும்பாலும் அவர்களின் பரம்பரையினரும் அவ்வாறே மறைந்தனர். ஆனால் இவர்களில் ஒரு சிலர் தமது அசாதாரண உழைப்பினாலோ, அதிர்ஷ்ட தேவதையின் பார்வை தம் மீது விழுந்ததாலோ அல்லது 'அதீத சிக்கனத்தினாலேயோ காணி பூமிகள் வாங்குவதில் வெற்றி பெற்றனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையே. இவர்களைத் தவிர பல்வேறுவிதமான வர்த்தகங்களில் ஈடுபட்டிருந்த தமிழர்களில் சிலரும், பெருந்தோட்டங்களில் கங்காணி, கணக்குப்பிள்ளை, கண்டக்டர் போன்ற பதவிகளை வகித்த தமிழர்களில் சிலரும் மாத்தளை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் அசையா சொத்துக்கள் வாங்கி நில உடமையாளர்களாக மாறியதை காணிப் பதிவுக் காரியாலயங்களில் பாதுகாக்கப்பட்டிருக்கும் பழைய ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன. இதற்குரிய சான்றுகள் சில கீழே தரப்படுகின்றன.

1. கருப்பன் மகன் கருப்பனும், பிச்சை கங்காணியின் மகள் ராக்கியும் இணைந்து 11–12–1902 இல் அலுவிகாரையில் காணி ஒன்றினை எலோகவத்த மெதும்ம பண்டார என்பவரிடமிருந்து வாங்கியுள்ளனர். இவ்விருவரும் இதே தினத்தில், இதே நபரிடமிருந்து வேறு இரண்டு காணிகளையும் வாங்கியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அஸ்கிரிய பல்லேசியப் பத்துவில் அமைந்துள்ள உடஸ்கிரிய எனும் கிராமத்தில் சுப்பையாவின் மகன் வைரவன், 1902 இல் காணியொன்றினை வாங்கியுள்ளார். 1907 ஆம் ஆண்டில் இதே உடஸ்கிரியாவில் கருப்பண்ணன் சேர்வையின் மகன் ரங்கசாமி, பரகஹகொட்டுவ பகல வளவுவே மெதும்ம பண்டார என்பவரிடமிருந்து ஒரு காணியினை வாங்கியுள்ளார்.

3. 29–4–1914 இல் அழகன் மகன் சின்னராமன் கங்காணி என்பவர் உபதிஸ்ஸநம வசல அத்த பத்து முதியான் சலாகே அலுத் வளவுவே லொகு பண்டாவிடமிருந்து மாணிங் கொமுவ எனும் ஊரில் காணி ஒன்றினை ஈடு எடுத்துள்ளார்.

4. 8.10.1902 இல் முத்து ஆசாரி என்பவர் கானா மூனா முத்துராமன் செட்டியிடமிருந்து மந்தண்டாவளையில் நிலமொன்றினை வாங்கியுள்ளார். 1903இல் ராமசாமி ஆசாரியின் மகள் லெட்சுமி, கஞ்சமலை படையாச்சி ஆசாரியின் மகள் மாரியாயிக்கு மந்தண்டாவளையில் காணியொன்றினை விற்றுள்ளார்.

5. கம்பஹஸிய பத்து மெதகம எனும் ஊரில் 1910 ஆம் ஆண்டில் நுவரேலியா சிராப்பர் முதலியார் அம்பலவாணர் நாகநாதன் காணி ஒன்று வாங்கியுள்ளார்.

6. 1911 இல் முனியாண்டி பிள்ளையின் மகன் லட்சுமணன் பிள்ளை படிவிட்ட பகுதியில் காணி ஒன்று வாங்கியுள்ளார்.

7. 1907 இல் எஸ். பி. குமரேசப்பிள்ளை ஹுலங்கமுவ பகுதியில் காணியொன்று வாங்கியுள்ளார்.

8. கொழும்பு ஸ்லேவ் ஐலன்டைச் சேர்ந்த ரெங்கசாமி நாராயணசுவாமி பெரியசாமி மடவளைக்கு அருகாமையில் இருக்கும் நாரங்கமுவ எனும் கிராமத்தில் காணி வாங்கியிருக்கிறார்

9. 1852 ஆம் ஆண்டுக்கு முன்னரே மாத்தளை கொங்காவலையில் வாழ்ந்த பெரிய கருப்பன் செட்டியார் மகன் கருப்பன் செட்டியாருக்கு மாத்தளை நகரில் காணிகள் இருந்தன என்பதை ஓர் உறுதிப்பத்திரம் காட்டுகிறது.

10. கூனா மாரிமுத்து தேவரின் மகன் மாரிமுத்து, மந்தண்டா வளையில் இருந்த தனது காணியொன்றினை 1919 ஆம் ஆண்டில் கானா நானா ராமசாமி செட்டிக்கும் கானா மூனா நாவன்னா நல்ல கருப்பன் செட்டிக்கும் இரண்டாயிரம் ரூபாவுக்கு ஈடு வைத்துள்ளார். ரூபாவின் மதிப்பு மிக உயர்வாக இருந்த அக்காலத்திலே இரண்டாயிரம் ரூபாவுக்கு ஈடு வைப்பதாக இருந்தால் அக்காணி எத்துணை விசாலமானதாக இருந்திருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

1920 ஆம் ஆண்டுக்கு முன்னரே மாத்தளை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நிலங்கள் வாங்கி, தமிழ்ச் சமூகம் அந்தஸ்த்துடன் வாழ ஆரம்பித்துவிட்டது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாக மேலே வழங்கப்பட்டுள்ள தவல்களை நாம் கருதலாம்.

இருபதாம் நூற்றாண்டின் இருபது, முப்பதுகளில் மாத்தளை மாவட்டத் தமிழர்களின் பொருளாதார நிலை மேலும் பல படிகள் உயர்ந்தது; பொருளாதார உயர்வு சமூக வாழ்வினையும் உயர்த்தியது. தமிழ் நில உடமையாளர்களின் எண்ணிக்கை கூடியது. அதே நேரம் அவர்களின் உடமைகளாக இருந்த காணிகளின் பரப்பும் விசாலித்தது. அலுவிகாரைக்கும் பளாபத்வெலைக்கும் மத்தியில் இருந்த கிரிகல்பொத்த என்ற ஊரில் வசித்ததால் வெள்ளைக்கல் முருகையா என அழைக்கப்பட்ட பொன்னையா தேவர் முருகைய்யாவுக்கு கிரிகல்பொத்த என சிங்களவர்களாலும் வெள்ளைக்கல் என தமிழர்களாலும் அழைக்கப்பட்ட ஊரில் விசாலமான நிலபுலன்கள் இருந்தன. கே. செல்வநாயகத்திற்கு நோர்த் மாத்தளைப் பகுதியிலும், ஜீ. பொன்னம்மா, கனகசபை, திருமதி விஜயரத்தினம், சி. எஸ். ராஜரத்தினம், கே. எஸ். நாராயணன் போன்றோர்களுக்கு கவுடு பெலல்ல பகுதியிலும், சானா பானா நானா ஆனா நானா அண்ணாமலைச் செட்டியாருக்கும் என். மாரிமுத்துப் பிள்ளைக்கும் கியுளயிலும் எஸ். இராமையாவுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடன் தெனியவிலும், பெரிய சாமி உச்சி முத்து சேர்வைக்கு உடுபிஹில்லையிலும் நிறையக் காணிகள் இருந்தன. களுதாவளையில் இராஜசிங்கமும் எஸ். அருணாசலம் பிள்ளையும் பெரும் நில உடமையாளர்களாக இருக்க, தமிழகக் கிராமமான இளம்பிளிக்குடியைப் பூர்வீகமாகக் கொண்டிருந்த சுப்பையா சேகுவாரர் கணக்குப்பிள்ளை கனங்கமுவ, துனுக்கேவத்த, தொரக்கும்புர பகுதிகளில் நிறையக் காணிகளுக்குச் சொந்தக்காரராக இருந்தார். மாத்தளை நகரில் திரு எஸ். எஸ். கந்தசாமி அவர்களுக்கு அன்றே நிறைய ஆஸ்திகள் இருந்திருக்கின்றன.

மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டச் செய்கையின் மையமாக மாத்தளை நகரே திகழ்ந்தது. உக்குவளைக்கு அண்மையில் இருந்த தோட்டங்களைத் தவிர, மாத்தளை மாவட்ட ஏனைய அனைத்துத் தோட்டங்களிலும் விளைந்த கோப்பியையும், தேயிலையும், றப்பரையும், கொக்கோவையும் கொழும்புக்கு அனுப்புவதற்கு, அவற்றைத் தலை சுமையாகவோ, அல்லது மாட்டு வண்டிகளிலோ மாத்தளைப் புகையிரத நிலையத்திற்கே கொண்டுவர வேண்டியிருந்தது. அவ்வாறே தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவைப்பட்ட உணவுப் பொருட்கள், தோட்டங்களுக்குத் தேவைப்பட்ட உரம், உபகரணங்கள் போன்றவற்றை மாத்தளை நகரிலிருந்தே அத்தோட்டங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இதனால் மாத்தளை நகரம் துரித வளர்ச்சி காண்பது காலத்தின் கட்டாயமாக மாறியது.

மாத்தளை நகரின் பிரதான பாட்டையான திருக்கோணமலை வீதியையும் அதற்குச் சமாந்தரமாக ஓடும் கொங்காவலை பாதையையும் ஏறத்தாழ மத்தியில் இணைக்கும் பாதை 1921 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஹெரிசன் ஜோஸ் ரோட் என்பதாகும். இப்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தில் மாத்தளை உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஹெரிசன் ஜோன்ஸ் கொங்காவலை பாதையில் நிலவும் வாகன நெரிசலைக் குறைப்பதற்கு இப்புதிய பாதை ஓரளவுக்கு உதவும் என்று தனது பரிபாலன அறிக்கையில் எழுதியிருப்பது அன்றே மாத்தளை நகர் எந்தளவு வளர்ந்திருந்தது என்பதைப் புலப்படுத்துகின்றது.

மாத்தளை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விருத்தியுற்றிருந்த பெருந்தோட்டங்களினதும், தோட்டத் துரைமார்களினதும் துரைசானிமார்களினதும், தோட்டத் தொழிலாளர்களினதும் ஏனைய மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாத்தளை நகரினிலே சிறிய, பெரிய கடைகள், வியபார நிறுவனங்கள் போன்றவை நிறையத் தோன்றின. தோட்டத் தொழிலாளர்களினதும் சாதாரண குடி மக்களதும் தேவைகளை நிறைவேற்ற சிறிய கடைகள் திறக்கப்பட்டன; முடி சூடா மன்னர்கள் போல் வாழ்ந்த தோட்ட துரைமார்களினதும் ஏனைய மேற்குடி

## மாத்தளை மாவட்டம் - தமிழர் சனத்தொகை வளர்ச்சி

| ஆண்டு | மாத்தளை மாவட்டத்தில் வாழ்ந்த இலங்கைத் தமிழர் | மாத்தளை மாவட்டத்தில் வாழ்ந்த இந்தியத் தமிழர் | மாத்தளை மாவட்ட மொத்த சனத்தொகை | இலங்கையில் வாழ்ந்த மொத்த இலங்கைத் தமிழரின் தொகை | இலங்கையில் வாழ்ந்து இந்தியத் தமிழர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1911 | 1561 | 31372 | 108,367 | 528024 | 530983 |
| 1921 | 1417 | 34963 | 116584 | 517324 | 602735 |
| 1946 | 4883 | 34174 | 155720 | 733731 | 780589 |
| 1953 | 7857 | 40655 | 201049 | 884703 | 974098 |
| 1971 | 11552 | 48358 | 314841 | 1424000 | 1174900 |
| 1977 | 13178 | 55194 | 360857 | - | - |
| 1981 | 20579 | 24912 | 357354 | 1886900 | 818700 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பாரிய வியாபார நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டன. எஸ்டேட் சப்ளையர்ஸ் – தோட்டங்களுக்குப் பொருட்கள் வினியோகிப்போர் என்ற புதுவகையான வணிக நிலையங்கள் சிலவும் நிலை பெற்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இருபதுகளில் மாத்தளை நகரின் பெரிய வர்த்தக நிறுவனங்கள் எனக் கருதப்பட்ட இருபது நிறுவனங்களில் கே. என். ராமசாமி செட்டி, ஓ. உலகப்ப செட்டி, எஸ். எஸ் கந்தசாமி, எஸ். எஸ் சரவணமுத்து அன் கோ. குரூஸ்பிள்ளை அன் கோ, ஜே. கொஸ்டா அன் பிரதர்ஸ், கே. எம். மாரிமுத்து அன் பிரதர்ஸ் போன்ற பல நிறுவனங்கள் தமிழர்களினால் நடத்தப்பட்டவை என்பதைக் கிடைக்கும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. அன்றைய மாத்தளை வர்த்தகத்தில் தமிழர்கள் வகித்த பெரும் பங்கினை இவ்வுண்மை புலப்படுத்துகின்றது.

வர்த்தகத் துறையில் தமிழர்கள் சிறப்பான நிலையில் இருந்ததைப் போலவே, அன்று, மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டத் துறையிலும் பெருந்தோட்ட உடமையாளர்கள் என்ற அடிப்படையிலும் தமிழர்கள் முக்கியத்துவம் பெற ஆரம்பித்துவிட்டனர். இருபதுகளிலேயே ஏறத்தாழ இருபது பெருந்தோட்டங்கள் தமிழர்களின் உடமைகளாக இருந்தன. காலப்போக்கில் தமிழர்களின் உடமைகளாக இருந்த தோட்டங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில் இருந்து மாத்தளை மாவட்ட சனத்தொகை வளர்ச்சியில் காணப்படும் ஒரு விசேஷ அம்சம் இலங்கைத் தமிழர்கள் என அழைக்கப்படும் தமிழர்களின் தொகையில் ஏற்பட்ட துரித அதிகரிப்பாகும். இந்த அசாதாரண அதிகரிப்பைக் முன் தரப்பட்டுள்ள அட்டவணை புலப்படுத்தும்.

1911 இல் 31372 ஆக இருந்த மாத்தளை மாவட்டம் வாழ் இந்தியத் தமிழர்களின் தொகை 1977 இல் கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்துவிட்டு 1981 இல் பாதிக்கும் குறைவாக வீழ்ச்சி கண்டுள்ளது. சிரிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெருந்தொகையான இந்தியத் தமிழர்கள் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டதே இத் திடீர் வீழ்ச்சிக்குக் காரணம். இவ்வீழ்ச்சி தேசிய அளவிலும் காணப்பட்ட வீழ்ச்சி என்பதை அட்டவணை காட்டுகின்றது. 1911 இல் 108367 ஆக, இருந்த மாத்தளை மாவட்ட சனத்தொகை 1981 இல் 357354 ஆக, அதாவது மூன்று மடங்குகளாக அதிகரித்திருக்கின்றது. 1911 இல் இலங்கையில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களின் தொகை 528024 ஆகும்; 1981 ஆம் ஆண்டில் இத்தொகை 1,886,900 ஆக உயர்ந்திருக்கின்றது; அதிகரிப்பு மூன்றரை மடங்குகள் மாத்திரமே. ஆனால் 1911 ஆம் ஆண்டில் 1561 ஆக இருந்த மாத்தளை மாவட்டம் வாழ் இலங்கைத் தமிழரின் தொகை 1981 இல் 20579 ஆக கூடியிருக்கிறது; இவ் அதிகரிப்பு பதின்மூன்று மடங்குகளாகும்.

மாத்தளை மாவட்டம் வாழ் இலங்கைத் தமிழர் தொகை மிக வேகமான முறையில் உயர்ந்ததற்கு முக்கிய காரணம் வர்த்தகம், தொழில் போன்ற காரணங்களுக்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் தொடராக வந்து மாத்தளையில் குடியேற ஆரம்பித்தமையாகும். யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து மலையகத்திற்கு வருவதற்கு போதிய அளவு போக்குவரத்து வசதிகள் விருத்தியடையாது இருந்த காரணத்தினால், பெருந்தோட்ட வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களிலே வர்த்தகங்களில் ஈடுபடுவதற்காகவும் தொழில்கள் தேடிக் கொள்வதற்காகவும் மாத்தளை வந்த யாழ்ப்பாணத் தமிழர் தொகை மிக சிறியதாகவே இருந்தது. ஆனால் 1905 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் புகையிரதப் பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தவரின் வருகை அதிகரிக்க ஆரம்பித்தது.

இருபது, முப்பது, நாற்பது, ஐம்பதுகளில் ஏராளமான யாழ்ப்பாணச் சுருட்டுக் கடைகள் மாத்தளை மாவட்டத்தின் பலபகுதிகளிலும் நிலைபெற்றிருந்தன. கந்தையா கடை, அன்னலிங்கம் கடை, சிவகுரு சுருட்டுக்கடை, செல்லக்கண்டு கடை, முருகப்பிள்ளை கடை, ஆழ்வார்ப் பிள்ளை கடை, பாலன் பிரதர்ஸ், பாக்கிய லட்சுமி ஸ்டோர், ஜோதி ஸ்டோர் போன்றவை அக் காலத்திலே பிரசித்தி பெற்றவையாகும். இவ்வாறே சரவணமுத்துக்கடை, உக்குவளையில் பிரபலமான சுருட்டுக் கடையாக இருந்தது. தமது உறவினர்களின் கடைகளிலே, அல்லது தமது ஊரவரின் கடைகளிலே வேலை செய்ய வந்தவர்கள் சில வருடங்களில் சொந்தக் கடைகள் ஆரம்பித்து, தம் உறவினர்களையும் ஊரவர்களையும் வேலைக்கு அழைக்க – இதே முறையில் சக்கரம் சுழல – யாழ்ப்பாணத் தமிழர் தொகை இம் மாவட்டத்தில் அதிகரித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத் துறையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி பல புதிய தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தது. அவ்வாறே பெருந்தோட்ட விருத்தியினால் ஏற்பட்ட வர்த்தக விருத்தியும், போக்குவரத்து விருத்தியும் மேலும் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கின. இப் புதிய தொழில் வாய்ப்புக்களும் யாழ்ப்பாணத் தமிழர் பலர் இங்கு குடி அமர்வதற்குக் காரணமாயின. அவ்வாறே மாத்தளை நகரிலும் அண்மைப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலும் அரசாங்கப் பாடசாலைகளிலும் நியமனங்கள் பெற்று, இம் மாவட்டத்தில் வாழ ஆரம்பித்த யாழ்ப்பாண ஆசிரிய, ஆசிரியைகளின் எண்ணிக்கையும் கணிசமானதாகும்.

1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட, சமூக நலப் பணிகளில் அரசாங்கம் கூடுதலாக ஈடுபடுவது அவசியமாயிற்று. ஏனைய மாவட்டங்களில் போலவே, மாத்தளை மாவட்டத்திலும் பாடசாலைகள், தபாற் கந்தோர்கள், மருத்துவ மனைகள் பொலிஸ் நிலையங்கள் போன்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது; அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கிறிஸ்தவ சமயப் பிரச்சார சபைகளுக்கு யாழ்ப்பாணப் பிரதேசம் எங்கனும் கிடைத்த வரவேற்பினாலும், அச் சபைகளின் நற்பணிகளாலும் அப்பிரதேசத்தில் கல்வி – நிலை ஓங்கியது; ஆங்கிலக் கல்வி பரவியது. ஆங்கில அறிவின் காரணத்தால் யாழ்ப்பாணத் தமிழர்களே அரசாங்க சேவையில் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். எனவே மாத்தளை மாவட்டத்தில் அமைந்திருந்த அரசாங்க காரியாலயங்களில் பணி புரிய வந்தவர்களில் கணிசமான ஒரு தொகையினர் யாழ்ப்பாணத் தவர்களாகவே இருந்தனர்.

இப்படிப் பல்வேறு காரணங்களுக்காக மாத்தளை மாவட்டம் வந்த யாழ்ப்பாணத் தமிழர்களில் கணிசமானோர் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டதுக்கு இம்மாவட்டத்தின் இதமான கால நிலை, வாழ்க்கை வசதிகள் போன்றவைகள் காரணங்களாக இருந்திருக்கலாம். பல்வேறு தொழில்கள் நிமித்தமாக இங்கு வந்து, இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்ட யாழ்ப்பாணத் தமிழ்க் குடும்பங்களுக்கு உதாரணமாக, மாத்தளைத் தமிழ் மக்களின் கல்விப் பிதா என மதிக்கப்படும் அமரர் எஸ். எஸ். கந்தசாமி குடும்பம், குழந்தவேலு மாஸ்டர் குடும்பம், போஸ்ட் மாஸ்டர் சின்னத்தம்பி குடும்பம், ராஜா குடும்பம் என்பவற்றைக் காட்டலாம்.

மாத்தளை மாவட்டத்தில் 1920 களில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 1417 ஆகும்; இவர்களில் 671 பேர் மாத்தளை நகர எல்லைகளுக்குள்ளும் 114 பேர் அலுவிகாரை, தென்ன, ஹூலன்கமுவ, ஹரஸ்கம, கஞதாவலை போன்ற நகரோடு ஒட்டிய பகுதிகளிலும், 91 பேர் ரத்தோட்டை, மடவளை, நாலந்த உக்குவளை போன்ற சிறு நகரங்களிலும் வாழ்ந்திருப்பது வர்த்தகமே இவர்களது பிரதான தொழிலாக இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

தொழிலாளர், வர்த்தகர்கள், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், என பல்வேறுபட்ட யாழ்ப்பாணத் தமிழர்கள் மாத்தளைக்கு வந்து குடியமர்ந்திருக்கின்றனர். இம் மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் உதவியுள்ளனர். எனினும் பயன்பாட்டைப் பொறுத்தவரையில் இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு இவர்கள் வழங்கியுள்ள பங்களிப்பே மிக உயர்வாகக் கருதப்படவேண்டியதாகும். ஏறத்தாழ சென்ற நூற்றாண்டின் அறுபதுகள், எழுபதுகள் வரை மாத்தளைப் பிரதேச தமிழ், முஸ்லிம்கள் பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரிய, ஆசிரியைகளுள் எண்பது சதத்திற்கும் மேலானோர் யாழ்ப்பாணத்தவர்களே. இவர்கள் மாத்தளை மக்களின், குறிப்பாக மாத்தளைத் தமிழ், முஸ்லிம் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பு நன்றியோடு நினைவு கூரப் படவேண்டிய ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டின் நான்காம், ஐந்தாம், ஆறாம் தசாப்தங்களில் மாத்தளைப் பிரதேச வர்த்தகத்தில் குறிப்பிடக்கூடிய ஒரு பங்கினை வகித்த மற்றுமொரு தமிழ்ச் சமூகம் தென்னிந்திய கிறிஸ்தவ பரவர் சமூகமாகும். மிராண்டோ, தோமஸ், விக்டோரியா, கொஸ்டா, கொரேரா, பெர்னான்டோ என இச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலரே மாத்தளைப் பகுதிக்கு வந்தனர்; ஆனால் மாத்தளை நகர வர்த்தகத்திலே இவர்கள் தம்மை மிக நன்றாக இனங்காட்டிக் கொண்டனர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. சென்ற முப்பதுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளையில் வாழ்ந்த தோட்ட உடமையாளரான கேணல் ரி.வை. ரைட் எழுதிய 'இலங்கையில் என் வாழ்க்கை' எனும் நூலில் மாத்தளையின் பிரதான வர்த்தகர் என வர்ணிக்கப்படும் மிராண்டோ அன்று மிகப் பிரசித்திப் பெற்ற ஒரு ஹோட்டல் அதிபராகவும் இருந்திருக்கிறார். அன்றைய மாத்தளையின் 'ஹோம் சீஸ்' ஆக விளங்கிய இவரது ஹோட்டலில் வாடிக்கையாளர்களாக விளங்கியவர்கள் தோட்டத் துரைமார்களும் மேற்குடி மக்களும் மாத்திரமே. தேவை உள்ளவர்களுக்கு ஒரு குதிரை வண்டியையோ சேணம் பூட்டிய ஒரு குதிரையையோ கேட்ட கணமே கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தவர் என புகழப்படும் மிராண்டோ பின்னர் 'பெட்ரல் செட்' ஒன்றையும் நடத்தி உள்ளார்.

மாத்தளை மணிக்கூடு சந்திக்குப் பக்கத்திலே 'தோமஸ் பார்மஸி' எனும் பெயரிலே டிஷான் தோமஸ் என்பவரால் நடத்தப்படும் நிறுவனம், இவரது தந்தை வழி பாட்டனார் தோமஸினால் 1931 இல் நிறுவப்பட்டதாகும். மருந்து வகைகள், தோட்டத் துரைமார்களுக்கு அதிகம் தேவைப்பட்ட குளிரூட்டப்பட்ட பலவகை இறைச்சிகள், ஜேம் வகைகள், பட்டர் சீஸ் போன்ற பால் பொருட்கள், பிஸ்கட், கேக், சொக்லட் வகைகள் – இப்படி இந்நிறுவனம் பலவிதமான பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தது. 1960 கள் வரை இதுவே 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகளின் மாத்தளை மாவட்ட வினியோக நிறுவனமாகவும் இயங்கியது.

ஜோஸப் கொஸ்டா என்பவர் வெளிநாட்டு மதுபான விற்பனையில் முன்னணியில் இருந்தவர்; இதே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய ஜுப்லி ஸ்டோர்ஸ், சந்தியாகோ ஸ்டோர்ஸ் போன்றவை ஐம்பதுகளிலே பிரபலமான மணிக் கடைகள். இன்று ஏ. எம். பெர்னான்டோ எனும் ஜவுளிக் கடையும் தோமஸ் பார்மஸியும் மாத்திரமே இச் சமூகத்தவர்களால் நடத்தப்படுகின்றன.

தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக, தன் இன உரிமைக்காக தமிழ்ச் சமூகம் தொடங்கிய போராட்டத்தின் ஆரம்ப விளைவுகளில் ஒன்று 1958 ஆம் ஆண்டில் நாடெங்கிலும் தமிழ் இனத்திற்கு எதிராக நடந்த வன்செயல்கள். அம்பாறை, பதவியா, ஹிங்குராத்கொடை, பொலநறுவை, அநுராதபுரம், தம்புள்ளை, மின்னேரியா போன்ற பல இடங்களில் தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன; ஆஸ்திகள் தீக்கிரையாக்கப்பட்டன. நாடெங்கிலும் குழப்பம், ஊர்கள் எல்லாம் தீ; ஆனால் மாத்தளையில் பூரண அமைதி.

மாத்தளை தமிழர்களுக்கு, மிகப் பாதுகாப்பான ஊர் என்ற நம்பிக்கை தமிழர்களின் மனங்களில் வேரூன்ற, பிற பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் பலர் இங்கு வந்து குடியமர ஆரம்பித்தனர்; தொழில் நிமித்தம் தனியாக வந்த தமிழர் பலர் தத்தம் குடும்பங்களையும் அழைத்து வந்து இங்கேயே காலூன்றினர்.

தனிச் சிங்களச் சட்டத்தின் மறைமுக விளைவொன்று இவ்வாறு மாத்தளையில் தமிழர்களின் தொகையைக் கூட்டியபோது, அச்சட்டத்தின் நேரடி விளைவாக அரசாங்க காரியாலயங்கள், தபாற் கந்தோர்கள் போன்றவற்றில் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழர்களின் தொகை குறைந்ததனால், மாத்தளைத் தமிழர் சனத்தொகை குறைந்ததையும் மாத்தளை கண்டது. முன்னர் ஏராளமான தமிழர்கள் பணியாற்றிய கச்சேரி, தபாற் கந்தோர், புகையிரத நிலையம் போன்ற இடங்களில் தமிழ் அதிகாரிகளைக் காண்பது குதிரைக் கொம்பு என நினைக்கும் நிலை தோன்றியது.

மாத்தளை நகரில் இயங்கிய புனித தோமியர் கல்லூரி, விஜயா கல்லூரி, கிறிஸ்து தேவ கல்லூரி, பி. எம். எஸ் என அழைக்கப்பட்ட பெப்டிஸ்ட் மிஸன் ஸ்கூல், பாக்கிய வித்தியாலயம் போன்ற அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளில் யாழ்ப்பாண ஆசிரிய, ஆசிரியைகள் பலர் நியமனம் பெற்றிருந்தனர். 1961ஆம் ஆண்டில் இப்பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாகின. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இக்கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருந்த யாழ்ப்பாண ஆசிரிய, ஆசிரியைகள் பலர் இடமாற்றம் பெற்று தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பினர். அவ்வாறே மாத்தளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் உள்ளூர் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனம் பெற இப் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருந்த யாழ்ப்பாண ஆசிரிய, ஆசிரியைகளும் படிப்படியாக இடமாற்றங்கள் பெற்றனர்.

ஆனால் இவை யாவும் மாத்தளைத் தமிழர் சனத்தொகையில் ஏற்பட்ட சிறிய சரிவுகளே; 1977 – 1981 காலப்பகுதியில் ஏற்பட்ட சரிவு பாரியதாகும். இப்பாரிய சரிவுக்குக் காரணமாக அமைந்தவை இலங்கை – இந்தியா அரசுக்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட சில உடன்படிக்கைகளாகும். இவ்வுடன்படிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும் வரை இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தமிழர்களில் பெருந் தொகையானோர் இலங்கையராகக் கருதப்படவில்லை; அவர்கள் எல்லோரும் 'நாடற்றவர் களாகவே' கருதப்பட்டனர். இவ்வுடன் படிக்கைகளின் படி, குறிப்பிட்ட சில தகமைகள் உடையவர்களைத் தன் பிரசைகளாக ஏற்றுக் கொள்ள இலங்கை சம்மதித்தது; அந்த தகமைகள் அற்றவர்களைத் தன் பிரசைகளாக ஏற்றுக் கொள்ள இந்தியா உடன்பட்டது. இந்தியாவுக்குச் செல்லவேண்டியவர்கள் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் இலங்கையை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே முடிவாக இருந்தது. குடும்பங்களை, உற்றார் உறவினர்களை, ஒரே தோட்டத்தில் பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்தவர்களை இரு கூறுகளாக பிரித்த இந்த அவலமான உடன்படிக்கைகளே 1980 ஆம் ஆண்டளவில் மாத்தளையில் வாழ்ந்த இந்தியத் தமிழர் சனத்தொகை பாதியாக குறைவதற்குக் காரணங்களாக இருந்தன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை மாத்தளைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட எண்ணிக்கை இழப்பை உணர்த்தும்.

இலங்கை இந்திய ஒப்பந்தங்களின் அடிப்படையிலே மாத்தளையை விட்டு இந்தியா சென்றோர், தாம் பிறந்த மண்ணை விட்டு, தாம் வளர்ந்த மண்ணை விட்டுச் செல்கின்றோமே என்ற வேதனையுடனேயே சென்றிருப்பர்; ஆனால் 1983 இல் மாத்தளையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை, இழப்புக்களைப் பற்றி அறிய வந்த போது தெய்வாதீனமாக நாம் தப்பிவிட்டோமே என்று அவர்கள் மகிழ்ந்தும் இருக்கலாம்.

தம் இனத்திற்காகப் போராடத் தெற்கில் இருந்து வடக்கே சென்ற தம் இளைஞர்கள், கண்ணி வெடிகளுக்கும், மிதி வெடிகளுக்கும் பலியாகி, சிதறுண்ட சடலங்களாக திரும்புவதைக் காண பொறுக்காத சிங்களவர்கள் சிலர் கொதித்தெழுந்து, அது காலம் வரை, சகோதரர்களாக, தம்மோடு இணைந்து வாழ்ந்த தமிழர்கள் மீது தம்வெஞ்சினத்தைக் காட்டியபோது ஏற்பட்ட அனர்த்தங்களே 1983 வன்செயல்கள் எனப்படுகின்றன. நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இவ் வன்செயல்களினால் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட நகரங்களில் ஒன்றாக மாத்தளை கருதப்படுகின்றது. மாத்தளை மாவட்டம் எங்கினும் தமிழர்கள் தாக்கப்பட்டனர்; அவர்களது ஆஸ்திகள் சூறையாடப்பட்டன அன்றேல் அழிக்கப்பட்டன. மாத்தளை நகரில் இருந்த அத்தனை தமிழ்க் கடைகளும் பல வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் அதுவரை கண்ணியத் தோடும் கௌரவத்தோடும் வாழ்ந்த பெருந்தொகையான

| ஆண்டு | மாத்தளை மாவட்டத்தில் வாழ்ந்த இந்தியத் தமிழர் தொகை | இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தமிழர் தொகை |
|---|---|---|
| 1971 | 48358 | 1174900 |
| 1977 | 55194 | 818700 |
| 1981 | 24912 | – |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு சிங்கள, முஸ்லிம் நண்பர்களின் இல்லங்களிலும், கோயில்களிலும் கல்லூரிகளிலும் அகதிகளாக வாழவேண்டிய அவல நிலை. கோடீஸ்வரர்கள் கூட பிறர் கொடுத்த உணவைக் கைநீட்டி வாங்கவேண்டிய கொடியநிலை; வெறுந்தரையில் சயனிக்கும் வேதனை நிரம்பிய நிலை; இத் துயரங்களுக்கெல்லாம் தமிழ்ச் சமூகம் முகங் கொடுக்கத்தான் செய்தது.

தம் இல்லங்கள், தம் கடைகள், தம் தொழிற்கூடங்கள் தம் கண் முன்னால் எரிக்கப்பட்டதைக் கண்ட மாத்தளைத் தமிழர் பலர், இதன் பிறகும் இங்கு வாழ்வதில் அர்த்தமில்லை என எண்ணி இந்தியா சென்றனர். சிலர் தம் ஆஸ்திகளைக் கிடைத்த விலைக்கு விற்று விட்டு அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். யாழ்ப்பாணத்தவர் பலர் தம் குடும்பங்களை மீண்டும் அங்கேயே அழைத்துச் சென்றனர். 1981 இல் 45491 ஆக இருந்த மாத்தளை வாழ் தமிழர் தொகை 1991 இல் 40912 ஆக குறைந்தது எனும் புள்ளிவிபரம் மாத்தளைத் தமிழர்களின் சனத்தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

அதிர்ஷ்ட வசமாக வெகு விரைவில் நாடு சகஜ நிலைக்குத் திரும்பியது. தம் இனத்தவர்கள் சிலரின் வெறியாட்டத்தால் தம் இனத்தின் மீது சுமத்தப்பட்ட தீரா பழியை நினைத்து கூனி குறுகிய பெரும்பான்மையான சிங்களவர்கள் முன்னிலும் பார்க்க கூடிய அன்பினையும் ஆதரவையும் தமிழர்கள் பால் காட்ட ஆரம்பித்தனர். எரிந்தாலும் மரிக்காத பீனிக்ஸ் பறவைகள் போல் தமிழினம் மீண்டும் எழுந்தது. ஆழ்வார்ப் பிள்ளையின் சுருட்டுக் கடை தவிர்ந்த, மாத்தளை நகரில் தீக்கிரையாக்கப்பட்ட அத்தனைத் தமிழ் கடைகளும் புதுப் பொலிவுடன் எழுப்பட்டன. 1983 க்கு முன் வாழ்ந்ததை விட வளமையோடும் வனப்போடும் தமிழினம் இப்போது மாத்தளையில் வாழ்கிறது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கருத்தாகும்.

1983 இல் சீர்குலைக்கப்பட்ட இன ஐக்கியம், சௌஜன்யம் விரைவில் மீண்டும் உருவாக்கப் பட்டுவிட்டது என்பதையும் 1983க்கு முன்னர் மாத்தளை மாவட்டத்தில் எவ்வெவ் பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் மீண்டும் வாழ ஆரம்பித்துவிட்டனர் என்பதையும் கீழே தரப்பட்டுள்ள 1991 ஆம் ஆண்டு மாத்தளை மாவட்ட சனத்தொகை அட்டவணை உறுதிப்படுத்துகிறது.

மாத்தளை மாவட்டம் மாத்தளை, ரத்தொட்ட, உக்குவளை, லக்கல, வில்கமுவ, தம்புள்ளை, கலேவெல, நாவுள, அம்பன் கங்கை, யடவத்த என பதினொரு உப அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் வில்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1983 க்கு முன்னரும் தமிழர்கள் வசிக்க வில்லை; 1991 இலும் யாரும் வசிக்கவில்லை. ஏனைய பத்து பிரிவுகளிலும் அவற்றில் இருக்கும் அத்தனை கிராம சேவகர் பிரிவுகளிலும் தமிழர்கள் வசிக்காத போதிலும் பெரும்பான்மையானவற்றில் அவர்கள் வசிக்கின்றனர். தமிழர்கள் வசிக்கும் கிராம சேவகர் பிரிவுகளும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் கீழே காணப்படும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்ட சனத்தொகை கணக்கெடுப்பு: ஆண்டு 1991

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு: மாத்தளை

கிராமச் சேவகர் பிரிவு : 52
தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 44

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அலுவிகாரை | 1011 | 1065 | 2076 | 221 | 220 | 441 |
| 2. அங்கந்த | 428 | 323 | 751 | 112 | 127 | 239 |
| 3. பீரிதவெல | 727 | 912 | 1639 | 136 | 148 | 284 |
| 4. போகஹ கொட்டுவ | 875 | 920 | 1795 | 35 | 90 | 125 |
| 5. டிக்கிரிய | 255 | 229 | 484 | 2 | 2 | 4 |
| 6. தியபுபுள்ள | 650 | 747 | 1397 | 310 | 344 | 654 |
| 7. தொடன்தெனிய | 324 | 248 | 572 | 1 | – | 1 |
| 8. தொரக்கும்பற | 636 | 639 | 1275 | 35 | 28 | 63 |
| 9. துங்கொலவத்த | 449 | 441 | 890 | 3 | 6 | 9 |
| 10. கொலஹென்வத்த | 385 | 449 | 834 | 12 | 11 | 23 |
| 11. கொங்காவலை | 2718 | 2141 | 4859 | 352 | 250 | 602 |
| 12. ஹரங்கம | 281 | 316 | 597 | 48 | 54 | 102 |
| 13. ஹதமுனகால | 394 | 264 | 658 | 3 | 3 | 6 |
| 14. ஹுலன்கமுவ வடக்கு | 619 | 854 | 1473 | 52 | 102 | 154 |
| 15. ஹுலன்கமுவ தெற்கு | 616 | 599 | 1215 | 4 | 4 | 8 |
| 16. இம்புலன்தண்ட | 212 | 197 | 409 | 64 | 61 | 125 |
| 17. ஈரியக்கொல்ல | 161 | 154 | 315 | 26 | 28 | 54 |
| 18. களுதாவலை | 974 | 867 | 1841 | 708 | 587 | 1295 |
| 19. கந்தகெதர | 440 | 506 | 946 | 30 | 33 | 63 |
| 20. கிரிகல்பொத்த | 576 | 558 | 1134 | 229 | 302 | 531 |
| 21. கோட்டக்கொட | 516 | 493 | 1009 | 8 | 3 | 11 |
| 22. கொட்டுவகெதர | 690 | 675 | 1365 | 20 | 35 | 55 |
| 23. கொட்டுவகெதர வடக்கு | 380 | 324 | 704 | 3 | 3 | 6 |
| 24. கூம்பியான்கொட | 478 | 425 | 903 | 49 | 31 | 80 |
| 25. மடவெல | 508 | 438 | 946 | 6 | 2 | 8 |
| 26. மடவெல உள்பொத்த | 1069 | 1155 | 2224 | 146 | 162 | 308 |
| 27. மகுகஹரூப | 248 | 234 | 482 | 27 | 37 | 64 |
| 28. மாளிகாதென்ன | 1843 | 1847 | 3690 | 225 | 230 | 455 |
| 29. மல்வத்த | 1267 | 915 | 2182 | 150 | 90 | 240 |
| 30. மந்தன்டாவளை | 956 | 805 | 1761 | 280 | 235 | 515 |
| 31. மொரகஹமட | 557 | 533 | 1090 | 117 | 105 | 222 |
| 32. முஸ்லிம் டவுன் | 2281 | 2069 | 4350 | 542 | 532 | 1074 |
| 33. நாகொல்ல | 547 | 565 | 1112 | 24 | 29 | 53 |
| 34. நாரன்கமுவ | 318 | 356 | 674 | 42 | 62 | 104 |
| 35. ஒயபஹல | 495 | 489 | 984 | 65 | 54 | 119 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 36. படிவிட்ட வெலகம | 403 | 394 | 797 | 6 | 6 | 12 |
| 37. பரண தொம்பவெல | 511 | 453 | 964 | 20 | 12 | 32 |
| 38. பாராவத்த | 1065 | 1180 | 2245 | 305 | 343 | 648 |
| 39. புவக்பிட்டிய | 812 | 769 | 1581 | 169 | 128 | 297 |
| 40. சிங்கள நகரம் | 411 | 475 | 886 | 33 | 20 | 53 |
| 41. தலகஸ்யாய | 343 | 297 | 640 | 75 | 56 | 131 |
| 42. விகார பார | 890 | 992 | 1882 | 85 | 60 | 145 |
| 43. வள்ளி வெல | 296 | 341 | 637 | 38 | 53 | 91 |

மாத்தளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 33539
பெண்கள் : 31954
மொத்தம் : 65493

மாத்தளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

ஆண்கள் : 4821
பெண்கள் : 4589
மொத்தம் : 9410

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : பள்ளேபொல

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 44
தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 24

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அம்பொக்கடேன | 399 | 389 | 788 | 28 | 35 | 63 |
| 2. ஆரியகம | 247 | 250 | 497 | 7 | 13 | 20 |
| 3. போமருவ | 211 | 224 | 435 | 65 | 70 | 135 |
| 4. தேவாரமுல்ல | 224 | 235 | 459 | 5 | 5 | 10 |
| 5. திம்புல்கமுவ | 411 | 459 | 870 | 71 | 77 | 148 |
| 6. எஹெலபொல | 219 | 252 | 471 | 3 | 5 | 8 |
| 7. கிரி ஒருவ | 157 | 193 | 380 | – | 1 | 1 |
| 8. கொப்பே வெஹர | 279 | 332 | 611 | 6 | 5 | 11 |
| 9. கொஹலன்வல | 503 | 477 | 980 | 103 | 81 | 184 |
| 10. மனன்வத்த | 326 | 280 | 606 | 15 | 9 | 24 |
| 11. மில்லவான மெதகம | 303 | 283 | 586 | 3 | 3 | 6 |
| 12. மில்லவான பகலகம | 568 | 597 | 1165 | 224 | 239 | 463 |
| 13. மொனரா வில | 153 | 189 | 342 | 5 | 10 | 15 |
| 14. மொரகஸ்பிட்டிய | 222 | 251 | 473 | 22 | 16 | 38 |
| 15. நிலன்னோருவ | 231 | 233 | 464 | 4 | 3 | 7 |
| 16. பல்தெனிய | 337 | 358 | 695 | 43 | 35 | 78 |
| 17. பள்ளே பொல வடக்கு | 242 | 242 | 484 | 12 | 7 | 19 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18. பள்ளே பொல தெற்கு | 443 | 519 | 962 | 6 | 7 | 13 |
| 19. பொல்வத்த | 227 | 194 | 421 | 2 | 2 | 4 |
| 20. ருஸிகம இஹலகம | 266 | 244 | 510 | 6 | 4 | 10 |
| 21. தல்கிரியாவ | 499 | 441 | 940 | 1 | 3 | 4 |
| 22. தெம்பிளிதெனிய வடக்கு | 279 | 318 | 597 | 28 | 24 | 52 |
| 23. உடுரம் பெலஸ்ஸ | 348 | 340 | 688 | 4 | 2 | 6 |
| 24. வல்மோருவ | 415 | 352 | 767 | 4 | 2 | 6 |

பள்ளேபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 7539
பெண்கள் : 7652
மொத்தம் : 15191

பள்ளேபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

ஆண்கள் : 668
பெண்கள் : 662
மொத்தம் : 1330

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : யட்டவத்த

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 56
தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 29

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அளுத்கம | 203 | 227 | 430 | 7 | 4 | 11 |
| 2. அலுவத்த | 166 | 166 | 332 | 143 | 140 | 283 |
| 3. தளுவெல | 282 | 250 | 532 | 129 | 96 | 225 |
| 4. டங்கன் பிளேஸ் | 161 | 155 | 316 | 8 | 10 | 18 |
| 5. தீவில்ல – வடக்கு | 353 | 352 | 705 | 3 | 4 | 7 |
| 6. தீவில்ல – தெற்கு | 180 | 145 | 325 | 2 | 10 | 12 |
| 7. தெல்கொல்ல | 238 | 176 | 414 | 3 | 2 | 5 |
| 8. துள்ளேவ | 239 | 224 | 463 | 12 | 17 | 29 |
| 9. துள்ளேவ கிழக்கு | 196 | 203 | 399 | 29 | 26 | 55 |
| 10. எட்டிப்பொல | 310 | 311 | 621 | – | 1 | 1 |
| 11. கலகம | 468 | 380 | 848 | 21 | 20 | 41 |
| 12. கம்முல்ல | 372 | 240 | 612 | 73 | 43 | 116 |
| 13. கவுடு பெலல்ல | 411 | 411 | 822 | 118 | 113 | 231 |
| 14. லக்ஷ ஹேன | 203 | 193 | 296 | 2 | 3 | 5 |
| 15. மஹ வெல | 184 | 192 | 376 | 71 | 68 | 139 |
| 16. மாளிகாதென்ன | 239 | 291 | 530 | 190 | 240 | 430 |
| 17. நோர்த் மாத்தளை | 335 | 396 | 731 | 307 | 367 | 674 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18. மீதியாபொல | 419 | 437 | 856 | –1 | – | 1 |
| 19. முருத்தவத்த | 257 | 252 | 509 | 3 | 1 | 4 |
| 20. பமுனுவ | 192 | 215 | 407 | 9 | 8 | 17 |
| 21. பொல்வத்த | 162 | 171 | 333 | 5 | 6 | 11 |
| 22. ரத்தல வெவ | 313 | 296 | 609 | – | 1 | 1 |
| 23. செலகம கிழக்கு | 286 | 295 | 581 | 4 | 6 | 10 |
| 24. தல்கஹ கொட | 206 | 208 | 414 | 9 | 8 | 17 |
| 25. தெம்பிளி தெனிய தெற்கு | 214 | 224 | 438 | 32 | 35 | 67 |
| 26. உடுகம வடக்கு | 337 | 400 | 737 | 259 | 321 | 580 |
| 27. வாளவெள | 225 | 233 | 458 | 13 | 15 | 28 |
| 28. வத்தே கெதர | 195 | 188 | 383 | 13 | 18 | 31 |
| 29. யட்டவத்த | 326 | 352 | 678 | 6 | 4 | 10 |

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : நாவுளை

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 51

தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 18

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அம்பன | 126 | 120 | 246 | 1 | – | 1 |
| 2. ஆந்தாவெல | 500 | 380 | 880 | 40 | 25 | 65 |
| 3. அரங்கல | 336 | 333 | 669 | 90 | 95 | 185 |
| 4. நியன்கடுவ | 140 | 152 | 292 | – | 1 | 1 |
| 5. ஹபுகஸ்யாய | 343 | 309 | 652 | 98 | 79 | 177 |
| 6. கூம்பியன் கஹ எல | 247 | 264 | 511 | 8 | 6 | 14 |
| 7. லிஹினி பிட்டிய | 215 | 204 | 419 | 7 | 5 | 12 |
| 8. மேல்பிட்டிய | 1116 | 1328 | 2444 | 1 | – | 1 |
| 9. மாரன் கமுவ | 159 | 188 | 347 | 1 | – | 1 |
| 10. மீ கொல்ல | 238 | 208 | 446 | 37 | 34 | 71 |
| 11. மில்ல கஹ முல தென்ன | 254 | 232 | 486 | 1 | 1 | 2 |
| 12. நாலந்த | 399 | 377 | 776 | 6 | 2 | 8 |
| 13. நாவுள | 696 | 612 | 1308 | 80 | 69 | 149 |
| 14. நிக்குள | 349 | 317 | 666 | 2 | 3 | 5 |
| 15. ஒபல் கல | 444 | 387 | 831 | 51 | 44 | 95 |
| 16. பெனல பொட | 350 | 355 | 705 | 54 | 65 | 119 |
| 17. பிளிஹுது கொல்ல | 519 | 540 | 1059 | 8 | 11 | 19 |
| 18. உடுதெனிய | 380 | 425 | 805 | 75 | 50 | 125 |

நாவுள உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை :

ஆண்கள் : 14253

பெண்கள் : 14039

மொத்தம் : 28282

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுள உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த தமிழர் தொகை :

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 560 |
| பெண்கள் | : | 490 |
| மொத்தம் | : | 1050 |

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : ரத்தொட்ட

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 54

தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 43

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அள்வத்த | 398 | 423 | 821 | 26 | 32 | 58 |
| 2. பம்பரகிரியெல்ல | 749 | 691 | 1440 | 460 | 423 | 883 |
| 3. பண்டாரப் பொல | 475 | 568 | 1043 | 29 | 27 | 56 |
| 4. போதிக் கொட்டுவ | 314 | 343 | 657 | 23 | 21 | 44 |
| 5. போகம்பர | 347 | 357 | 704 | 1 | – | 1 |
| 6. தம்பகொல்ல | 468 | 529 | 997 | 271 | 265 | 536 |
| 7. தங்கந்த | 555 | 431 | 986 | 19 | 12 | 31 |
| 8. தொம்பகொட | 211 | 221 | 432 | 53 | 50 | 103 |
| 9. எபிட்ட முல்ல | 325 | 376 | 701 | 58 | 58 | 116 |
| 10. கலேகொட்டுவ | 576 | 575 | 1151 | 164 | 164 | 328 |
| 11. கன்சரப்பொல | 191 | 191 | 382 | 19 | 12 | 31 |
| 12. கொடப்பொல | 450 | 442 | 892 | 56 | 51 | 107 |
| 13. ஹங்கரன் கந்த | 748 | 718 | 1466 | 593 | 566 | 1159 |
| 14. ஹொர கொல்ல | 358 | 359 | 717 | 135 | 115 | 250 |
| 15. இஹல ஒவல | 527 | 599 | 1126 | 118 | 143 | 261 |
| 16. இக்கிரியா கொல்ல | 391 | 355 | 746 | 195 | 182 | 377 |
| 17. கைக்காவளை | 516 | 383 | 899 | 17 | 11 | 28 |
| 18. கைனெக்க | 419 | 473 | 892 | 1 | 1 | 2 |
| 19. கந்தநுவர தெற்கு | 558 | 613 | 1171 | 205 | 225 | 430 |
| 20. கந்தநுவர மேற்கு | 465 | 441 | 906 | 312 | 275 | 587 |
| 21. குருவாவ | 453 | 433 | 886 | 61 | 55 | 116 |
| 22. லோங்வில் | 884 | 676 | 1560 | 204 | 136 | 340 |
| 23. மடகும்புற | 445 | 439 | 884 | 169 | 171 | 340 |
| 24. மாரதுரவல | 437 | 458 | 895 | – | 4 | 4 |
| 25. மெதவேரகம | 346 | 279 | 625 | 3 | 2 | 5 |
| 26. மெதவத்த | 429 | 575 | 1004 | 413 | 560 | 973 |
| 27. முவான் தெனிய | 385 | 397 | 782 | 5 | 6 | 11 |
| 28. பகல ஹபுவித | 451 | 354 | 805 | 22 | 11 | 33 |
| 29. பகல ஒவல | 363 | 337 | 700 | 5 | 2 | 7 |
| 30. பள்ளே வேரகம | 442 | 434 | 876 | 2 | 1 | 3 |
| 31. பள்ளேகம | 304 | 315 | 619 | 14 | 18 | 32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 32. பொல்வத்தா தந்த | 376 | 457 | 833 | 36 | 45 | 81 |
| 33. புஞ்சி செல்வ கந்த வத்த | 861 | 741 | 1602 | 818 | 719 | 1537 |
| 34. ரத்தொட்ட | 1475 | 1070 | 2545 | 470 | 320 | 790 |
| 35. தம்பல கல | 622 | 579 | 1201 | 576 | 506 | 1082 |
| 36. உடகம | 338 | 287 | 625 | 136 | 100 | 236 |
| 37. உட ஹபுவித | 416 | 519 | 935 | 145 | 162 | 307 |
| 38. உள்பொத்தப் பிட்டிய | 743 | 753 | 1496 | 39 | 28 | 67 |
| 39. விகாரகம | 413 | 447 | 860 | 97 | 104 | 201 |
| 40. வனராணி | 406 | 440 | 846 | 10 | 8 | 18 |
| 41. வாரப்பிட்டிய | 190 | 160 | 350 | 5 | 3 | 8 |
| 42. வெலன் கஹ வத்த | 599 | 672 | 1271 | 150 | 140 | 290 |
| 43. வெடஸேயாய | 355 | 413 | 768 | 70 | 80 | 150 |

ரத்தொட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 25236
பெண்கள் : 24438
மொத்தம் : 49674

ரத்தொட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

ஆண்கள் : 6217
பெண்கள் : 5824
மொத்தம் : 12041

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : லக்கல

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 39
தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 5

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. திவுல்கஸ்பட்டன | 334 | 303 | 637 | 283 | 262 | 545 |
| 2. எட்டன்வல | 197 | 176 | 373 | 72 | 69 | 141 |
| 3. ரத்னிந்த | 106 | 121 | 227 | 22 | 23 | 45 |
| 4. மஹலகொட்டுவ | 142 | 111 | 253 | 6 | 7 | 13 |
| 5. பிட்டவல | 160 | 133 | 293 | 4 | 2 | 6 |

லக்கல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 6970
பெண்கள் : 6518
மொத்தம் : 13488

லக்கல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

ஆண்கள் : 387
பெண்கள் : 363
மொத்தம் : 750

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி அரசாங்க அதிபர் பிரிவு : உக்குவளை

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 73

தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 41

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. பலக்கடுவ | 246 | 267 | 513 | 96 | 101 | 197 |
| 2. தெஹிபிட்டிய | 626 | 564 | 1190 | 7 | 9 | 16 |
| 3. தும்புக் கொல | 535 | 523 | 1058 | 22 | 26 | 48 |
| 4. எல்கடுவ | 501 | 598 | 1099 | 60 | 72 | 132 |
| 5. எல்கடுவ வத்த | 671 | 866 | 1537 | 502 | 651 | 1153 |
| 6. எல்வள | 361 | 567 | 928 | 6 | 9 | 15 |
| 7. கலஉடஹேன | 282 | 236 | 518 | 87 | 75 | 162 |
| 8. குறலவெல தெற்கு | 286 | 292 | 578 | 4 | 3 | 7 |
| 9. ஹலாங் கொட | 431 | 406 | 837 | 253 | 253 | 506 |
| 10. உனஸ்கிரிய வத்த | 666 | 822 | 1488 | 483 | 594 | 1078 |
| 11. உனுகெட்ட வல | 455 | 446 | 901 | 239 | 254 | 493 |
| 12. கடுவெல | 430 | 409 | 839 | 68 | 62 | 130 |
| 13. கந்தேமட | 300 | 322 | 622 | 1 | – | 1 |
| 14. கலு அட்டா மட | 211 | 204 | 415 | 4 | 1 | 5 |
| 15. கந்த கொல்ல | 229 | 262 | 491 | 27 | 33 | 60 |
| 16. கொஹொம்பிலிவெல | 657 | 622 | 1279 | 152 | 146 | 298 |
| 17. குரிவெல | 331 | 290 | 621 | 43 | 45 | 88 |
| 18. லேலியம்ப | 314 | 302 | 616 | 219 | 196 | 415 |
| 19. மாபேரிய | 508 | 573 | 1081 | 5 | 6 | 11 |
| 20. மகுலே மட | 154 | 169 | 323 | 33 | 28 | 61 |
| 21. மானம்பொடை | 844 | 810 | 1654 | 86 | 82 | 168 |
| 22. மாருக்கோன | 899 | 904 | 1803 | 32 | 36 | 68 |
| 23. மீதெனிய | 489 | 465 | 954 | 6 | 5 | 11 |
| 24. நாகஹ தென்ன | 671 | 685 | 1356 | 4 | 5 | 11 |
| 25. நாகொல்ல | 238 | 264 | 502 | 43 | 56 | 99 |
| 26. ஒவிலிக்கந்த | 456 | 364 | 820 | 164 | 114 | 278 |
| 27. பஹல வெல | 566 | 526 | 1092 | 1 | – | 1 |
| 28. பன் வத்த | 203 | 232 | 435 | – | 1 | 1 |
| 29. பரகஹ வெல | 460 | 592 | 1052 | 147 | 128 | 275 |
| 30. ரய்த்தாள வெல | 495 | 392 | 887 | 49 | 31 | 80 |
| 31. ரத்வத்த | 263 | 285 | 548 | 81 | 79 | 160 |
| 32. தவளன்கொய | 425 | 484 | 909 | 87 | 65 | 152 |
| 33. உடத்தென்ன | 410 | 378 | 788 | 3 | 2 | 5 |
| 34. உடுபிஹில்ல | 479 | 463 | 942 | 3 | 2 | 5 |
| 35. உடுப்பிட்டிய | 536 | 455 | 991 | 30 | 26 | 56 |
| 36. உக்குவளை | 553 | 544 | 1097 | 127 | 107 | 234 |
| 37. உள்பொத்தப்பிட்டிய | 290 | 330 | 620 | 132 | 141 | 273 |
| 38. வரக்காமுற | 655 | 547 | 1202 | 9 | 16 | 25 |
| 39. வாரியப்பொல | 553 | 649 | 1202 | 4 | 5 | 9 |
| 40. வாரியப்பொல வத்த | 494 | 543 | 1037 | 285 | 330 | 615 |
| 41. வெலிகல | 209 | 226 | 435 | 3 | 3 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்குவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 28321 |
| பெண்கள் | : | 28889 |
| மொத்தம் | : | 57210 |

உக்குவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 3705 |
| பெண்கள் | : | 3385 |
| மொத்தம் | : | 7590 |

# உதவி அரசாங்க அதிபர் பிரிவு : கலேவெல

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 59

தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 31

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அளுத்வெவ | 669 | 995 | 1664 | 11 | 8 | 19 |
| 2. இஹல பொம்பாவ | 1250 | 550 | 1800 | 15 | 12 | 27 |
| 3. பஹல பொம்பாவ | 551 | 575 | 1126 | 13 | 10 | 23 |
| 4. பெலிகொமுவ | 480 | 463 | 943 | 17 | 10 | 27 |
| 5. தம்பவட்டவான | 348 | 387 | 735 | 24 | 17 | 41 |
| 6. தண்டுயாய | 431 | 464 | 895 | 35 | 41 | 76 |
| 7. தேவாஹுவ கொலனி | 611 | 605 | 1216 | 6 | 4 | 10 |
| 8. தேவா ஹுவ | 844 | 858 | 1702 | – | 1 | 1 |
| 9. திவுல்கஸ் கொட்டுவ | 381 | 416 | 797 | 3 | 2 | 5 |
| 10. எலமல் பொத்த | 719 | 655 | 1374 | 14 | 13 | 27 |
| 11. கலபவுல்ல | 274 | 325 | 599 | 2 | 2 | 4 |
| 12. கலேவெல நகரம் | 562 | 581 | 1143 | 40 | 49 | 89 |
| 13. ஹத்ததுக்குவ | 535 | 527 | 1062 | 116 | 105 | 221 |
| 14. ஹெவன வெல | 622 | 671 | 1293 | 14 | 20 | 34 |
| 15. இப்பன் கட்டுவ | 321 | 269 | 590 | 12 | 19 | 31 |
| 16. கொஸ் பொத்த | 540 | 533 | 1073 | 30 | 28 | 58 |
| 17. லேனவல | 555 | 518 | 1073 | 6 | 5 | 11 |
| 18. மக்குல்கஸ் வெவ | 355 | 308 | 663 | 1 | – | 1 |
| 19. மெத பெத்த வடக்கு | 580 | 599 | 1179 | 1 | – | 1 |
| 20. மீவள பதஹ | 487 | 436 | 923 | 12 | 15 | 27 |
| 21. நமடகஹவத்த | 674 | 676 | 1350 | 18 | 17 | 35 |
| 22. நிலகம | 584 | 650 | 1234 | 1 | 4 | 5 |
| 23. பஹலவெவ | 464 | 450 | 914 | 14 | 11 | 25 |
| 24. பலு ஹொம்பாவ | 283 | 278 | 561 | 6 | 10 | 16 |
| 25. பத் கொலா கொல்ல | 563 | 702 | 1265 | 3 | 4 | 7 |
| 26. பட்டி வெல | 541 | 711 | 1252 | 2 | 5 | 7 |
| 27. புவக்பிட்டிய | 454 | 444 | 898 | 14 | 24 | 38 |
| 28. ரன்வெடியாவ | 825 | 906 | 1731 | 47 | 41 | 88 |
| 29. வஹ கோட்டை | 425 | 462 | 887 | 5 | 3 | 8 |
| 30. வலஸ்வெவ | 643 | 646 | 1289 | 7 | 12 | 19 |
| 31. வேரகஹவத்த | 465 | 440 | 905 | 43 | 26 | 69 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலேவெல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 32763 |
| பெண்கள் | : | 32471 |
| மொத்தம் | : | 65234 |

கலேவெல உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 538 |
| பெண்கள் | : | 522 |
| மொத்தம் | : | 1060 |

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு : அம்பன் கங்க

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 20

தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 16

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. அலுத் வெவ | 326 | 324 | 650 | 131 | 131 | 262 |
| 2. குளோடா | 312 | 295 | 607 | 20 | 12 | 32 |
| 3. கம்மடுவ | 991 | 919 | 1910 | 865 | 783 | 1648 |
| 4. குருபெபில்ல | 343 | 301 | 644 | 5 | – | 5 |
| 5. ஹுனு கெட்ட | 562 | 539 | 1101 | 67 | 72 | 139 |
| 6. இம்புல் கொல்ல | 267 | 281 | 548 | 39 | 37 | 76 |
| 7. கலுகல் தென்ன | 250 | 230 | 480 | 56 | 56 | 112 |
| 8. கொஸ் கொல்ல | 357 | 332 | 689 | 1 | 1 | 2 |
| 9. கும்ப ளோளுவ | 388 | 402 | 790 | 46 | 43 | 89 |
| 10. மெட்டியக்க | 432 | 474 | 906 | 63 | 59 | 122 |
| 11. நகுலியத்த | 421 | 382 | 803 | 209 | 203 | 412 |
| 12. பல்லே அஸ்வதும | 311 | 254 | 565 | 15 | 10 | 25 |
| 13. பள்ளே தென்ன | 327 | 361 | 688 | 117 | 136 | 253 |
| 14. புசல்ல | 563 | 618 | 1181 | 308 | 325 | 633 |
| 15. சிரங்கவத்த | 668 | 691 | 1359 | 267 | 302 | 569 |
| 16. திப்படுக்க நாத | 299 | 268 | 567 | 7 | 11 | 18 |

அம்பன்கங்கை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 7757 |
| பெண்கள் | : | 7686 |
| மொத்தம் | : | 15443 |

அம்பன்கங்கை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 2216 |
| பெண்கள் | : | 2181 |
| மொத்தம் | : | 4397 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி அரசாங்க அதிபர் பிரிவு : தம்புள்ளை

கிராமச் சேவகர் பிரிவு மொத்தம் : 59
தமிழர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 10

| கி. சே. பிரிவு பெயர் | மொத்த சனத்தொகை | | | தமிழர்களின் சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1. எலோபாராயாய | 552 | 505 | 1057 | 4 | 4 | 8 |
| 2. தம்புள்ள | 1061 | 1009 | 2070 | 80 | 40 | 120 |
| 3. திகம்பதஹ | 527 | 421 | 948 | 22 | 31 | 53 |
| 4. எலவர ஹேன | 466 | 549 | 1015 | 5 | 7 | 12 |
| 5. ஹலுவா புலனவெவ | 307 | 374 | 681 | – | 1 | 1 |
| 6. கிராள கொல்ல | 301 | 288 | 589 | 1 | – | 1 |
| 7. பெல்விகார | 505 | 743 | 1248 | 5 | 8 | 13 |
| 8. ரத்மல்கஹ எல | 732 | 966 | 1698 | 6 | 1 | 7 |
| 9. வெவுல் அம்ப | 280 | 273 | 553 | 6 | 5 | 11 |
| 10. யாபா கம | 435 | 382 | 817 | – | 2 | 2 |

தம்புளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 23747
பெண்கள் : 24136
மொத்தம் : 47883

தம்புளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை

ஆண்கள் : 129
பெண்கள் : 99
மொத்தம் : 228

# உதவி அரசாங்க அதிபர் பிரிவு : வில்கமுவ

வில்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்த சனத்தொகை

ஆண்கள் : 13613
பெண்கள் : 13445
மொத்தம் : 27058

வில்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு : மொத்தத் தமிழர் தொகை : 00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டம் சனத்தொகைக் கணக்கெடுப்பு

## ஆண்டு - 1991

| | உ. அ. அதிபர் பிரிவு | அனைத்து இனங் களினதும் மொத்தம் | சிங்களவர்கள் | தமிழர்கள் | முஸ்லிம்கள் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாத்தளை | 65493 | 43501 | 9410 | 12179 | 403 |
| 2 | யட்டவத்த | 28366 | 23604 | 3056 | 1703 | 3 |
| 3 | உக்குவளை | 57210 | 40993 | 7590 | 8541 | 86 |
| 4 | ரத்தொட்ட | 49674 | 36055 | 12041 | 1505 | 73 |
| 5 | கலேவெல | 65234 | 57051 | 1060 | 7121 | 2 |
| 6 | தம்புள்ளை | 47883 | 46491 | 228 | 1164 | 0 |
| 7 | பள்ளே பொல | 28249 | 26537 | 1330 | 366 | 16 |
| 8 | நாவுளை | 28292 | 26879 | 1050 | 357 | 6 |
| 9 | அம்பன் கங்கை | 15443 | 10985 | 4397 | 59 | 2 |
| 10 | லக்கலை | 13488 | 12734 | 750 | 4 | 0 |
| 11 | வில்கமுவ | 27058 | 27058 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 426390 | 351888 | 40912 | 32999 | 591 |

# மாத்தளை மாவட்டம் சனத்தொகைக் கணக்கெடுப்பு

## ஆண்டு - 1997

| | உ. அ. அதிபர் பிரிவு | அனைத்து இனங் களினதும் மொத்தம் | சிங்களவர்கள் | தமிழர்கள் | முஸ்லிம்கள் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாத்தளை | 67524 | 43656 | 10923 | 12740 | 205 |
| 2 | யட்டவத்த | 28929 | 23635 | 3312 | 1945 | 37 |
| 3 | உக்குவளை | 58470 | 39346 | 9065 | 9928 | 131 |
| 4 | ரத்தொட்ட | 47834 | 34130 | 11877 | 1694 | 133 |
| 5 | கலேவெல | 61240 | 52799 | 979 | 7321 | 141 |
| 6 | தம்புள்ளை | 52429 | 50699 | 305 | 1374 | 51 |
| 7 | பள்ளே பொல | 27588 | 25616 | 1125 | 836 | 11 |
| 8 | நாவுளை | 27955 | 26551 | 1148 | 251 | 5 |
| 9 | அம்பன் கங்கை | 16378 | 11573 | 4718 | 84 | 3 |
| 10 | லக்கலை | 13847 | 13290 | 557 | 0 | 0 |
| 11 | வில்கமுவ | 29243 | 29242 | 1 | 0 | 0 |
| | மொத்தம் | 431437 | 350537 | 44010 | 36173 | 717 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம் ஆண்டில் நடைபெற்ற இன வன்செயல் அனர்த்தங்களின் போது தமிழர்கள் பலர் தம் பாரம்பரிய வதிவிடங்களிலிருந்து விரட்டப்பட்டனர்; பலர் அச்சத்தினால் தாமாகவே இடம் பெயர்ந்தனர். ஆனால் இப்படி விரட்டப்பட்டவர்களும் சுயமாக இடம் பெயர்ந்தவர்களும் மீண்டும் தம் பழைய இடங்களுக்குத் திரும்பி விட்டனர் என்பதை மேலே தரப்பட்டிருக்கும் 1991ஆம் ஆண்டு, 1997ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீடு அட்டவணைகள் காட்டுகின்றன.

மாத்தளை மாவட்டத்தில் தமிழர்கள் பெருந்தொகையினராகக் குடியமர ஆரம்பித்த காலந்தொட்டு, பெருந்தோட்டங்கள் அதிகமாக அமைந்துள்ள மாத்தளை, ரத்தொட்டை, உக்குவளை, கம்மடுவ, யட்டவத்தை, நிக்கலோய போன்றவையே இவர்களின் பாரம்பரிய வதிவிடங்களாக இருந்து வந்திருக்கின்றன. இன்றும் அதே நிலையே தொடர்கிறது என்பதையும் மேலே தரப்பட்டுள்ள அட்டவணைகள் இரண்டும் உணர்த்துகின்றன. அன்று முதல் இன்று வரை மாத்தளை வாழ் தமிழர்களில் பெருந் தொகையானோர் தோட்டத் தொழிலாளர்களாகவே, தமது வாழ்க்கையைத் தொடர்வது, அவர்கள் அன்றும் இன்றும் தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலேயே வசிப்பதற்குரிய முக்கிய காரணமாகும்.

இம்மாவட்டத்தில் ஆரம்பத்தில் உருவான நகரங்கள் பெருந்தோட்டப் பெருக்கத்தின் விளைவாகத் தோன்றிய மாத்தளை, உக்குவளை, ரத்தொட்ட, யட்டவத்த, பலாபத்வெல, மடவளை போன்றவையே. வர்த்தகத்திற்காகவும் பெருந்தோட்ட வளர்ச்சி தோற்றுவித்த புதிய தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வந்தவர்களும் இந்நகரங்களிலும் அவற்றைச் சுற்றி அமைந்திருந்த பகுதிகளிலுமே குடியேறினர். வர்த்தகர்களாக வந்த தமிழரின் சந்ததியினரில் பலரும் தொழிலாளர்களாக வந்த தமிழர்களின் சந்ததியினரில் சிலரும் கங்காணிகளாக கணக்குப்பிள்ளைகளாகத் தோட்டங்களில் பணியாற்றியவர்களின் சந்ததியினரில் சிலரும் வர்த்தகத்தில் ஈடுபட்டபடியால், இப்பகுதிகளே தமிழர்கள் கூடுதலாக வாழும் பகுதிகளாகத் தொடர்ந்தன.

1991 இல் 40, 912 ஆக இருந்த மாத்தளை மாவட்டம் வாழ் தமிழர் தொகை 1997 இல் 44010 ஆக அதிகரித்திருக்கிறது. 1997 ஆம் ஆண்டு சனத் தொகைக்கும் இன்று மாத்தளை மாவட்டத்தில் வாழும் தமிழர் சனத் தொகைக்குமிடையே பாரிய வித்தியாசம் எதுவுமில்லை.

இப்புள்ளி விவரங்கள் கடந்த தசாப்தத்தில் மாத்தளை தமிழர்களின் வாழ்வு இம்மாவட்டத்தில் சீராக அமைந்திருந்தது என்பதையும் மக்கள் தொகை இயல்பான முறையில் வளர்ந்திருக்கிறது என்பதையும் புலப்படுத்துகின்றன.

மாத்தளை மாவட்டத்தின் வடகீழ்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள வில்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்கள் என்பதை 1991, 1997ஆம் ஆண்டு சனத் தொகை கணக்கெடுப்புகள் வெளிப்படுத்துகின்றன. இவ்விவரங்கள் சில முக்கியமான உண்மைகளை மறைமுகமாக உணர்த்துகின்றன.

இம் மாவட்டத்திலே தமிழர்கள் சிங்களவர்களோடும் முஸ்லிம்களோடும் மிக நெருக்கமாக வாழ்கிறார்கள் என்பதே இப்புள்ளி விவரங்கள் உணர்த்தும் மிக முக்கியமான உண்மையாகும். ஏனைய சமூகங்களோடு இன வெறுப்புகள், விரிசல்கள், முரண்பாடுகள், பூசல்கள், பிரச்சினைகள் இருந்திருக்குமேயானால் தமிழர்கள் இவ்வாறு சிதறி வாழத் துணிந்து இருக்க மாட்டார்கள். 1958இல் இலங்கையின் ஏனைய பல பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு எதிரான பல சம்பவங்கள் நடைபெற்ற போதிலும் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளையில் தவிர, வேறு எந்த ஒரு பகுதியிலும் இன அமைதிக்குக் குந்தகமான எச்செயலும் நடைபெறவில்லை என்பதே மாத்தளை மாவட்டத்தில் நிலவும் இன ஒற்றுமைக்கு ஒரு நற்சான்றிதழ்தான்.

1983 ஆம் ஆண்டு வன்செயல்கள் மாத்தளைத் தமிழர்களுக்குப் பேரதிர்ச்சியை வழங்கியது உண்மைதான். அந்தக் காலகட்டத்தில் தமிழர்களுக்குச் சிங்களவர்களைப் பற்றிய ஒரு நம்பிக்கையின்மை ஏற்பட்டே இருக்கும். ஆனால் இந்த நம்பிக்கையின்மை வெகு விரைவில் அகன்றுவிட்டது. சிங்களவர்கள் உண்மையான வேதனையுடன் தங்கள் துயரில் பங்கு கொள்வதை தமிழர்கள் கண்டனர்; எத்தனையோ தமிழர்களின் உயிர், ஆஸ்தி, தமிழ்ப் பெண்களின் கற்பு சிங்களவர்களால் காப்பாற்றப்பட்ட கதைகளைக் கேட்டார்கள்; தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்குக் காரணம் தனிப்பட்ட ஒரு சில சிங்களவர்களே தவிர சிங்கள இனம் அல்ல என்பதை உணர்ந்தார்கள். இடம் பெயர்ந்திருந்த தமிழர்கள் தம்முடைய சொந்த ஊர்களுக்கே திரும்பினர்.

தமிழர்கள் அந்தஸ்த்தோடும் மன மகிழ்ச்சியோடும் இங்கு வாழ்வதற்குப் பெரும்பான்மை இனமான சிங்களவர்களின் பெருந்தன்மையும் உயர்ந்த மனப்பாங்கும் ஒரு முக்கியமான காரணமாகும். அவர்கள் எவ்வித வேற்றுமையும் காட்டாது தமிழ், முஸ்லிம் வியாபார நிறுவனங்களுக்குத் தம்முடைய ஆதரவை வழங்குவதனால் தான் இவ்வினங்கள் பொருளாதார அந்தஸ்த்தோடு வாழக்கூடியதாக இருக்கிறது. சிங்களவர்களும் முஸ்லிம்களும் தம்மீது காட்டும் அன்பையும் பாசத்தையும் அவ்வினங்களைச் சார்ந்தோருக்கு மாத்தளைத் தமிழர்களுக்கும் காட்டுவதால் இன நல்லிணக்கத்திற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக மாத்தளை திகழ்கிறது.

★ ★ ★
★ ★
★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளைத் தமிழர்கள் – ஒரு பொருளியல் நோக்கு

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையே இலங்கை பொருளாதாரத்தின் அடிப்படையாக மாறும் வரை, தன்னிறைவு ஒன்றினையே நோக்காக கொண்ட கிராமிய உணவு விவசாயப் பொருளாதாரமே இங்கு நிலவிய பொருளாதார முறைமையாக இருந்தது. அதுவரை மாத்தளையில் நிலவிய பொருளாதார முறைமையும் இதுவே. இம் முறைமையிலே மக்களின் பிரதான சீவனோபாயமாக இருப்பது உணவு உற்பத்தியே. எனவே ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னர் மாத்தளைப் பிரதேசத்தில் தமிழர்கள் வசித்திருப்பாரெனில், அவர்களது பிரதான தொழிலாகவும் விவசாயமே விளங்கியிருக்கும்.

கோப்பி பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் சிலவற்றிலும் கண்டி, மாத்தளை போன்ற மலையகப் பகுதிகளிலும் கோப்பி ஒரு முக்கியமான கிராமியப் பயிராக இருந்தது. அக்காலத்தில் மாத்தளைப் பிரதேசத்தில் தமிழர்கள் வாழ்ந்திருந்தால், சிங்கள கிராம வாசிகளைப் போலவே அவர்களும் தத்தம் இல்லங்களைச் சூழ இருந்த நிலங்களில் கோப்பிச் செடிகளைப் பயிரிட்டு ஒரு மேலதிக வருமானம் பெற்றிருப்பர் என்று கருதலாம்.

1823ஆம் ஆண்டில் சிங்கப்பிட்டிய கோப்பித் தோட்டத்தின் ஊடாக ஜோர்ஜ் பேர்ட் பெற்ற வெற்றி, 'கோப்பி ராஜாவின்' இலங்கை விஜயத்திற்குக் கட்டியம் கூற, கோப்பி மலையகம் எங்கினும் மணம் பரப்ப ஆரம்பித்தது. மாத்தளை மாவட்டத்தின் முதல் கோப்பி தோட்டம் 1832ஆம் ஆண்டில் மாத்தளை நகருக்கு அண்மையில் இருந்த வாரியப்பொலயில் ஆரம்பமானது, இதனைத் தொடர்ந்து மவுஸாகல, பிடகந்த, கபரகல, பொயன்கல, சில்வகந்த எனும் பாரிய தோட்டங்கள் ஆரம்பமாயின.

ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதுகளில் பெருந் தோட்டங்களில் எண்ணிக்கை குறைவாகவே இருந்ததென்றும் அன்று அம்பகமுவையில் மூன்று தோட்டங்களும், பதுளையில் ஐந்தும், கம்பளையில் பத்தும், ஹேவாஹெட்டயில் பன்னிரண்டும் இருந்ததென்று கூறும் கேணல் ரி. வை. ரைட் மாத்தளையில் பதினான்கு தோட்டங்கள் இருந்தன என்று கூறியிருப்பது கோப்பி பயிர்ச் செய்கை எத்துணை விரைவாக மாத்தளையில் பரவியிருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது.

கண்டி – நாவலப்பிட்டிய ரயில் பாதை 1874 இல் அமைக்கப்பட்ட போதும் 1885க்குப் பின்னரே நாவலப்பிட்டி நானு ஓயாவுடன் இணைக்கப்பட்டது. 1894ஆம் ஆண்டில் தான் கண்டி – பண்டாரவளை ரயில் பாதை அமைக்கப்பட்டது. ஆனால் மாத்தளை கண்டியோடு ஏற்கனவே ஒரு நல்ல தரைப்பாதையால் இணைக்கப்பட்டிருந்த போதிலும் 1880 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னரே கண்டி மாத்தளை ரயில் பாதை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதிற்கு மாத்தளையில் விளைந்த கோப்பியைச் சீக்கிரமாகவும் குறைந்த செலவிலும் கொழும்பு கொண்டு செல்வதற்கு அது உதவும் என்பதே பிரதான காரணமாக இருந்தது, கோப்பிச் செய்கை அந்தளவுக்கு மாத்தளையில் வளர்ந்திருந்தது.

1880களில் கோப்பி வீழ்ச்சியுற்ற போதிலும் அதனால் மாத்தளை மாவட்டத்தின் பொருளாதாரத்தில் எவ்வித சரிவும் ஏற்படவில்லை; மலையகத்தின் ஏனைய பல பகுதிகளில் போலவே மாத்தளையிலும் கோப்பியின் மரணமே தேயிலையின் ஜனனமாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டு விடிவதற்கு முன்னரே மாத்தளை மாவட்ட தேயிலைத் தோட்டங்களின் மொத்தப் பரப்பு 61, 530 ஏக்கர்களாகவும் இதில் தேயிலை பயிரிடப்பட்டிருந்த நிலத்தின் பரப்பு 22493 ஏக்கர்களாகவும் இருந்தது என்ற புள்ளிவிவரம் மாத்தளையில் கோப்பித் தோட்டங்கள் தேயிலைத் தோட்டங்களாக மாறிய வேகத்தைக் காட்டுகின்றது.

இதே காலப்பகுதியில் 9627 ஏக்கர் கொக்கோ தோட்டங்களும் 1515 ஏக்கர் ஏலக்காய் தோட்டங்களும் இம் மாவட்டத்தில் இருந்தன என்ற புள்ளிவிவரமும் நினைவில் நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டில் மாத்தளை மாவட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட பெருந்தோட்ட வளர்ச்சி பிரமிப்பை ஏற்படுத்துகின்றது. தேயிலை, றப்பர், கொக்கோ– என புதிய தோட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. 1931ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு தோட்ட கணக்கெடுப்பு மாத்தளை மாவட்டத்தில் 170 தோட்டங்கள் இருந்தன என்றும் அவற்றுள் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்த தோட்டங்களில் எண்ணிக்கை 102 என்றும், ஐம்பதுக்கும் நூறுக்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தவற்றின் எண்ணிக்கை இருபத்தேழு என்றும் இருபத்தைந்திற்கும் ஐம்பதிற்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தவற்றின் எண்ணிக்கை பதினேழு என்றும் கூறுகின்றது. 1930க்குப் பின்னரும் பெருந்தோட்டங்களின் பரப்பு அதிகரித்ததே ஒழிய குறையவில்லை.

1901ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் 7, 252, 215 இறாத்தல் தேயிலையும், 77, 408 இறாத்தல் ஏலமும், 14,026 அந்தர் கொக்கோவும் உற்பத்தி செய்யப்பட்டதாக மாத்தளை உதவி அரசாங்க அதிபரின் அவ்வாண்டுக்கான பரிபாலன அறிக்கை கூறுகின்றது. 1901 ஆம் ஆண்டிலேயே உற்பத்தி இந்தளவு இருந்ததென்றால், புதிய தோட்டங்கள் பல உருவான பின்னர் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்து இருக்கும் என அனுமானிப்பது நியாயமானதே. இந்த உற்பத்தி தேசிய வருமானத்தை எந்தளவு கூட்டியிருக்கும்? அது மாத்தளை மாவட்டத்தில் பொருளாதார நிலையை எந்தளவு உயர்த்தியிருக்கும்? என்பனவற்றைப்பற்றி சிந்திப்பதும், இந்த உற்பத்தியைப் பெற்றுக் கொடுத்தவர்கள் யார்? என்பதைப்பற்றி சிந்திப்பதும் அவசியமானதாகும்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்ப கட்டமான ஆயிரத்து எண்ணூற்று இருபதுகளிலும் முப்பதுகளிலும் உள்ளூர் மக்களைக் கொண்டே தத்தம் தோட்ட வேலைகள் அனைத்தையும் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தோட்ட உடமையாளர்களுக்கு இருந்தது. தேவையான அளவு தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் பல இருந்த போதிலும், அக்கால கட்டத்திலே தோட்டங்கள் ஒரு சில மாத்திரமே இருந்ததாலும், அத்தோட்டங்களில் பயரிடப்பட்டிருந்த நிலங்களின் பரப்பு சிறியதாக இருந்ததாலும், தோட்ட உடமையாளர்கள் ஏதோ ஒரு வகையில் இப் பிரச்சினையைச் சமாளித்துக் கொண்டனர்.

ஆனால் தோட்டங்களின் எண்ணிக்கை பெரும் வேகத்தில் அதிகரிக்க ஆரம்பித்தபோது தொழிலாளர் பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்தது. கோப்பித் தோட்டங்களுக்கு அதிக அளவில் தொழிலாளர்கள் தேவைப்பட்டது கோப்பி முற்றிப் பழுக்கும் ஆகஸ்ட், செம்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் எனும் நான்கு மாதங்களில் மாத்திரமே ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் கோப்பி பழுக்க ஆரம்பித்துவிடும்; பழுத்த கோப்பி உதிர்வதற்கு முன்னர் பறிக்கப்பட வேண்டும். எனவே கோப்பி பறித்தல், அதனைக் காயவைத்தல், காய்ந்த பின்னர் தோலை அகற்றிச் சுத்தம் செய்தல், ஏற்றுமதிக்காக கொழும்புக்கு அனுப்புதல் ஆகிய அத்தனை வேலைகளும் இம்மாதங்களிலேயே செய்யப்பட்டன. ஆனால் இதே மாதங்களில் தான் மலையக விவசாயி தனது வயல்களில் சிறுபோக விளைச்சல் வேலைகளில் ஈடுபட்டான்.

தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்க, தோட்டங்களுக்குத் தேவைப்பட்ட தொழிலாளர்களின் தொகையும் அதிகரித்தது. தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்குத் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியா நிலை; கிடைக்கும் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள தோட்ட உடமையாளர்கள் மத்தியில் கடும் போட்டி; இதனால் ஏற்பட்ட கூலி அதிகரிப்பு.

இத்தகைய சிரமங்களுக்கு எல்லாம் முகங் கொடுத்துக் கொண்டிருந்த இலங்கை கோப்பித் தோட்ட உடைமையாளர்களுக்கு, இலங்கையைப் பார்க்கினும் இங்கிலாந்திற்கு அண்மையில் இருந்த மேற்கு இந்திய தீவுகளிலிருந்து இறக்குமதியான கோப்பியோடு லண்டன் சந்தையில் போட்டியிட வேண்டிய கட்டாயமும் இருந்தது. இந்த போட்டியில் ஜெயிப்பதற்கு ஒரு வழி உற்பத்திச் செலவினைக் குறைத்தல்; உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கு ஒரு வழி, உழைப்பாற்றல் மிக்க, விசுவாசமிக்க ஆனால் அதே நேரத்தில் குறைந்த கூலிக்கு வேலை செய்ய தயாராக இருக்கும் ஒரு தொழிலாளர் படையினைப் பெற்றுக் கொள்வதாகும்.

இத்தகைய ஒரு தொழிலாளர் படையினைப் பெற்றுக் கொள்வதற்குத் தோட்ட உடமையாளர்களும் அன்றைய ஆங்கிலேயஅரசாங்கமும் எடுத்த முயற்சிகளின் விளைவே இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் இலங்கை வருகையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தொழிலாளர்களின் வருகையைத் தோட்டத் துரைமார்கள் விரும்பியமைக்கு வேறு ஒரு காரணமும் இருந்தது என்பதை ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதுகளில் விடுமுறையைக்கழிப்பதற்காக இலங்கை வந்த எட்வர்ட் சுலிவன் என்பவரின்

> "பாரிய கட்டாயம் எதுவுமின்றி வேலை செய்யும் மக்கள் அல்லர் சிங்களவர்; பணத்தைக் காட்டி அவர்களை மயக்கவும் முடியாது. எனவே ஆங்கிலேயரும் இந்தியத் தமிழர்களும் தோட்டங்களை விட்டு வெளியேறினால், ஐந்து வருடங்களில் கோப்பி, கொக்கோ தோட்டங்கள் அனைத்தும் சீர்க்குலைந்து விடும்" எனும் கூற்று சாடையாக உணர்த்துகிறது.

மலையகமும் இலக்கியமும் எனும் நூலில் அந்தனி ஜீவா கூறியிருப்பது போல இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் ஈழத்து வரலாறு 1824 ஆம் ஆண்டில் இலங்கை வந்த பதினாறு தென்னிந்தியத் தமிழ் குடும்பங்களோடு ஆரம்பமாகியிருக்கும் என்ற போதிலும் ஆயிரத்து எண்ணூற்று நாற்பதுகளின் உதயத்திற்குப் பின்னரே இவர்கள் பெருந்தொகையினராக இலங்கை வர ஆரம்பித்தனர் என்பதே சேர். எமர்சன் டெனன்ட் போன்ற வரலாற்றாசிரியர்களின் கருத்தாக இருக்கிறது. இக்காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் பல பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த படியால் அத்தோட்டங்களின் தேவைகளுக்கேற்ப இந்தியத்தமிழ் தொழிலாளர்கள் இத்தோட்டங்களிலும் குடிய மர்ந்திருப்பர்.

தேயிலைத்தோட்டங்கள் மாத்தளைப் பிரதேசத்தில் நன்கு ஸ்தாபிதமாகும் வரை ஏனைய மலையகப் பகுதிகளில் போலவே இங்கு வந்த இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் பலரும் கடுங்குளிர் காலத்தில் சைபீரியாவை விட்டு இங்கு வந்து தங்கி, ஒரு சில மாதங்களுள் திரும்ப சைபீரியாவை நோக்கி பறக்கும் பருவக்கால பறவைகள் போலவே நான்கு, ஐந்து மாதங்கள் இங்கு தங்கி,உழைத்து, ஓரளவு பணத்தைச் சேர்த்துக் கொண்டு மீண்டும் தாயகம் திரும்புபவர்களாகவே இருந்திருப்பர். ஒரு சிலர் மாத்திரமே இங்கு நிரந்தரமாக தங்கியிருப்பர். ஆனால் தேயிலையின் வளர்ச்சி நிலையான ஒரு தொழிலாளர் படை தோட்டங்களில் வாழ்வதைக் கட்டாயமாக்கியது. எனவே தேயிலைப் பெருந்தோட்டச் செய்கை மாத்தளை மாவட்டத்தில் விருத்தியடைய ஆரம்பித்தவுடன் தமிழ் தொழிலாளர்கள் பெருந் தொகையானோர் தாம் வேலை செய்யும் தோட்டங்களிலேயே நிரந்தரமாக வாழத் தொடங்கிவிட்டனர் என உறுதியாகக் கூறலாம்.

மாத்தளை மாவட்ட பெருந்தோட்டங்களிலே 1871, 1881, 1891, 1901 ஆம் ஆண்டுகளில் வசித்த மக்களின் எண்ணிக்கையினை கீழே தரப்படும் அட்டவணை தருகின்றது.

| ஆண்டு | தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களின் தொகை (தொழிலாளர்கள் + அவர்களைத் தங்கியிருப்போர்) |
|---|---|
| 1871 | 13052 |
| 1881 | 18182 |
| 1891 | 15446 |
| 1901 | 26135 |

1901 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களில் 26135 பேர் வாழ்ந்திருக்கின்றனர்: இவர்களில் 24794 பேர் தமிழர்களாவர். இத்தொகையில் எத்தனை இந்தியத் தமிழர்கள் இருந்திருப்பர்; எத்தனை இலங்கைத் தமிழர்கள் இருந்திருப்பர் என்று திட்ட வட்டமாக கூறமுடியாது; ஆனால் இதில் தொண்ணூற்று ஒன்பது வீதத்திற்கு அதிகமானோர் இந்தியத் தமிழர்களாகவே இருந்திருப்பர். அவ்வாறே 1871, 1881, 1891 ஆம் ஆண்டுகளில் தோட்டங்களில் வாழ்ந்தவர்களில் எத்தனைப் பேர் இந்தியத் தமிழர், எத்தனைப்பேர் ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்கள் என உறுதியாக கூறமுடியா விட்டாலும், இவர்களில் தொண்ணூறு வீதத்திற்கு மேலானோர் இந்தியத் தமிழர்களாகவே இருந்திருப்பர் என அனுமானிப்பது தவறாகாது என்பதை 1911, 1921, 1931 ஆம் ஆண்டுக்கான புள்ளி விபரங்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

| ஆண்டு | தோட்டங்களில் வசித்தோரின் மொத்த எண்ணிக்கை | கரை யோரச் சிங்களவர் | கண்டிச் சிங்களவர் | இலங்கை தமிழர் | இந்திய தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் | இந்திய முஸ்லிம்கள் | மலாயர் | ஐரோப்பியர் | பரங்கியர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1911 | 30239 | 435 | 1262 | 167 | 27989 | 165 | 181 | 18 | 3 | 3 | 19 |
| 1921 | 34751 | 1061 | 807 | 124 | 31782 | 187 | 379 | 118 | 170 | 123 | – |
| 1931 | 38472 | 967 | 1493 | 228 | 34800 | 142 | 392 | 136 | 156 | 141 | 17 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத் தோட்டங்களில் வாழ்ந்த மொத்த சனத்தொகையினரின் 93% வீதத்தினரும், 1921ஆம் ஆண்டில் வாழ்ந்தவர்களில் 91% வீதத்தினரும் 1931ஆம்ஆண்டில் தோட்டங்களில் வாழ்ந்த மொத்த தொகையினரில் 94% வீதத்தினரும் இந்தியத் தமிழர்களாக இருந்ததை மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.மாத்தளை மாவட்ட பெருந்தோட்டங்களில் இன்றும் இதே நிலையே தொடர்கிறது.

மாத்தளை மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பெருந்தோட்டத்துறை வழங்கியுள்ள பங்களிப்பு கணிசமானதாகும். இந்த மாவட்டத்தில் காணப்படும் அனேகமான பாதைகள் பெருந் தோட்டங்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக, அமைக்கப்பட்டவையே. அவ்வாறே மாத்தளை நகரின் வளர்ச்சிக்கும், உக்குவளை, ரத்தொட்டை, மடவளை, பலாபத்வலை, அலுவிகாரை போன்ற சிறுநகரங்களின் வளர்ச்சிக்கும் பெருந்தோட்டங்களே காரணமாக இருந்தன.

மாத்தளை மாவட்ட பெருந்தோட்டத்துறை வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தவைகளில் ஒன்று ஆங்கிலேயரின் மூலதனம்; மற்றது இந்தியத் தமிழர் வழங்கிய உழைப்பு. ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களின் மூலதனமே மாத்தளை தோட்டங்களை இயக்கின என்பது உண்மை என்ற போதிலும் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளின் பின்னர் ஆங்கிலேயர்களின் மூதலீடு குறைந்தது என்பதும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் முதலீடு அதிகரித்தது என்பதும் வரலாற்று உண்மைகள். ஆனால் உழைப்பைப் பொறுத்தவரையில் அன்றிருந்து இன்று வரை மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டங்களுக்குத் தேவைப்பட்டஉழைப்பின் தொண்ணூறு வீதத்திற்கும் சற்றுஅதிகமானதை இந்தியத் தமிழர்களே வழங்கி வந்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மாத்தளைக் காடுகளை வெட்டி, அவற்றைப் பொன்கொழிக்கும் விளைநிலங்களாக்கி கோப்பியையும், கொக்கோவையும், தேயிலையையும், இறப்பரையும் வளர்த்து, அவற்றைப் பேணி பாதுகாத்த, பேணி பாதுகாக்கும்இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் பங்களிப்பினை நியாயமாக கணிப்பீடு செய்து, அவர்கள்பால் நன்றியுணர்வினைக் காட்டுதல் மாத்தளை வாழ் மக்களின் கடமையாகும்.

பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலே தோட்ட உடமையாளர்களுக்குத் தேவைப்பட்டவர்கள் தொழிலாளர்கள்மாத்திரமே. எனவே ஆரம்பத்தில் அந்தகையோர் மாத்திரமே இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். ஆனால் பெருந்தோட்டங்களில் வளர்ச்சி,அது ஏற்படுத்திய போக்குவரத்து விருத்தி, ஏராளமான இந்தியத் தொழிலாளர்களின் வருகை, அதனைத் தொடர்ந்த வணிக விருத்தி ஆகிய யாவும் ஒன்றிணைந்து, பல புதிய வணிக, தொழில் வாய்ப்புக்களை வழங்க 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' எனும் பாரம்பரியத்தில் வளர்ந்திருந்த செட்டிமார்களும், சிறுவணிகர்களும் பொற்கொல்லர் போன்ற தொழில் வினைஞர்களும் அண்மை நாடான இலங்கை வழங்கும் நல் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள மலையகம் வந்தனர்; அவர்களில் சிலர் மாத்தளை வந்தனர்.

இவர்களுள் செட்டிமார்கள், ஏனைய மலையக மாவட்டங்களில் போலவே, மாத்தளை மாவட்டத்திலும் அதன் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பு விதந்துரைக்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களினதும் வர்த்தகர்களினதும் பங்களிப்புகள் அங்கீகரிக்கப் பட்டுள்ள அளவிற்கு செட்டிமார்கள் மலையகத்தின் பொருளாதார விருத்திக்கு வழங்கியுள்ள பங்களிப்பு சரியான முறையில் இனம் காட்டப்பட்டதில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. இவர்களிடம் சிக்குண்டவர்கள் எளிதில் மீள்வது இல்லை என்ற மனப்பிரமையும் இவர்கள் ஈவிரக்கமற்றவர்கள் என கருதும் மனப்போக்கும் இலங்கையர் பலரிடம் இருக்கத்தான் செய்தது. பணக்கட்டுகளோடு, கடன்கொடுத்து பணம் சம்பாதிக்க கடல் கடந்து அன்னிய நாட்டுக்கு வந்த அவர்கள், தமது தொழிலிலே அளவுக்கதிகம் கருணை காட்டியிருந்தால் வெற்றுக் கரங்களோடேயே தாயகம் திரும்ப வேண்டி இருந்திருக்கும் என்பதைப்பற்றி செட்டிமார்களைப் பற்றி குறை கூறுபவர்கள் சற்றும் சிந்திப்பதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய பொருளாதாரப் பின்னணியினை மனதில் உள்வாங்கி, செட்டிமார்கள் அன்று மாத்தளை மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு வழங்கிய பங்களிப்பை ஆராய்ந்தோமேயானால் மாத்திரமே அவர்களின் சேவையின் உயர்வை நாம் உணர்வோம். செட்டிநாடு பகுதிகளிலிருந்து பணக்கட்டுகளோடு, செட்டிமார் மாத்தளை வந்த காலகட்டம், பல நூற்றாண்டுகள் நிலவிய மானியப் பொருளாதார நிலையிலிருந்து இலங்கை தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டிருந்த காலகட்டம்; பணப் புழக்கம் குறைவான காலம்; பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும், அதன் பயனாக ஏற்பட்ட போக்குவரத்து வசதிகளும், வணிக விருத்தியும் முன்வைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள ஊக்கமிக்கோர் ரொக்கப் பணத்தினைத் தேடிக் கொண்டிருந்த காலம்; ஆனால் அப்பணத்தினைக் கடனாக கொடுப்பதற்குப் போதிய அளவு வங்கிகளோ, தனிப்பட்ட நபர்களோ இல்லாதிருந்த காலம். எனவே அன்று ரொக்கப் பணத்தோடு வந்த செட்டிமார்களின் வருகை காலத்தின் தேவையாக இருந்தது.

செட்டிமார்களின் வருகைக்குப் பின்னர் தான் வட்டிக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் இலங்கைக்கு அறிமுகமாகியது என்பதற்கில்லை; கண்டியரசர்கள் காலத்திலேயே இம்முறை வழக்கில் இருந்தது என்பதற்கு கண்டி மாகாதிசாவ எகலப்பொல கண்டியில் வசித்த பச்சின் நம்பி என்பவரிடம் 1806 ஆம் ஆண்டில் பெறுமதி மிக்க நகைகள் சிலவற்றைக் கொடுத்து ஒரு பகோடாவுக்கு முப்பது நாட்களுக்கு நான்கு பணம் வட்டி என்ற அடிப்படையில் அறுநூறு பகோடாக்கள் கடனாகப் பெற்றது சான்றாகும். ஆனால் இப்படி கடன் கொடுக்கக் கூடியவர்கள் ஒரு சிலரே அன்று இருந்திருப்பர். 1850 களிலும் 1860 களிலும் தேவைப்பட்ட அளவுக்குப் பணம் கொடுப்பதற்கு மாத்தளை போன்ற பிரதேசங்களில் 'ரொக்கப் புள்ளிகள்' இருந்திருக்கப்போவதில்லை. எனவே மாத்தளையைப் பொறுத்தவரையில் செட்டிமார்களின் வருகை ஒரு வரப் பிரசாதமாகவே இருந்திருக்கும்.

ரொக்கப்பணம் அதிகமாக தேவைப்பட்ட ஒரு காலகட்டத்தில் மாத்தளை வந்து, சிக்கலான நடைமுறைகள் எதுவுமின்றி, செட்டிமார்கள் வட்டிக்குக் கடன் கொடுத்தது, தனிப்பட்ட குடும்பங்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு எந்தளவு உதவியாக இருந்ததோ அதைவிட பன்மடங்கு இம்மாவட்டத்தின் பொருளாதார விருத்திற்கு உதவியாக இருந்தது என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். இன, மத, வேறுபாடுகளைப் பாராது, தங்க நகைகள் போன்ற பெறுமதியான பொருட்களை ஈடாகப் பெற்றுக் கொண்டு, அவற்றின் பெறுமானத்திற்கு ஏற்ப, செட்டிமார்கள் கடன் கொடுத்து வட்டி பெற்றார்கள்; நிலங்களை, வீடுகளை ஈடாகப் பெற்றும் கடன் வழங்கினார்கள். சில வேளைகளில் வட்டியைப் பணமாக பெற்றார்கள்; சிலவேளைகளில் ஈடாக பெற்ற காணியைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தி அந்நிலத்தின்பயனைப் பெற்றனர். இவற்றைப் பற்றிய சான்றுகள் கீழே தரப்பட்டுகின்றன.

(அ) 8–12–1902 இல் கூனா பானா ராவன்னா மானா ஆனா அண்ணாமலைச் செட்டியார் தன் சகோதரர் வெங்கடாசலச் செட்டியாருடன் இணைந்து ஹரஸ்கமையில் காணி ஒன்றினை ஈடு பிடித்துள்ளார்.

(ஆ) 13–12–1902 இல் எஸ். பி. என். அண்ணாமலைச் செட்டியார் வில்லியம் டயஸ் என்பவரிடமிருந்து கொங்காவலைக் காணி ஒன்றினை ஈடு பிடித்துள்ளார்.

(இ) உக்குவளை மானாம்பொடையில் இருந்த கொமகஸ் தென்ன எனும் காணியினை அப்துல் ரஹ்மான் என்பவர் எஸ். பி. என். ஏ. என். அண்ணாமலைச் செட்டியாருக்கு ரூபா 1000 க்கு ஈடு வைத்துள்ளார். வட்டி வீதம் 100 ரூபாவுக்கு மாதம் ஒரு ரூபா இருபத்தைந்து சதம்.

(ஈ) 13–5–1919 இல் மாத்தளை திருகோணமலை வீதியில் வசித்த பேனா ரீனா சீனா நானா பெரிய கருப்பன் செட்டி தொம்பகொல்லையில் இருந்த காணி யொன்றினை ரூபா 1100 க்கு ஈடு எடுத்துள்ளார். வட்டி 10 ரூபாவுக்கு மாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து சதம். ஏனைய செட்டிமார்கள் நூறு ரூபாவுக்கு மாதம் ஒன்றரை ரூபாய் வட்டி என்று எழுதியபோது, பெரிய கருப்பன் செட்டி பத்து ரூபாவுக்கு பதினைந்து சதம் வட்டி என்று எழுதியது கடன் படுபவரின் உள்ளத்தில் ஏற்படும் மனக் கிலேசத்தைக் குறைக்க அவர் கையாண்ட 'டெக்னிக்கோ' தெரியாது.

(உ) 23–6–1910 இல் மாத்தளை திருகோணமலை வீதியில் வசித்த வீரப்ப செட்டி மகன் கதிரவேல் செட்டி அகலவத்தையில் இருந்த ஒரு காணியை, ஈட்டைத் திருப்பும் வரையில் காணியில் பயன் பெறுதல் என்ற அடிப்படையில் ஈடு பிடித்துள்ளார்.

(ஊ) 11–12–1902 இல் கொஹன்ஸிய பத்துவில் இருந்த காணி ஒன்றினை சீனா சீனா சின்னையா செட்டி என்பவர் ஈடு எடுத்துள்ளார். ஈட்டை மீட்டிய உடமையாளர் அதனை மீண்டும் 18 – 12 – 1908 இல் ஆனா பானா கானா ரூனா லட்சுமணன் செட்டியாரிடம் ஈடு வைத்துள்ளார்.

கடன் கேட்கும் தொகைக்கு ஏற்ற பொருட்களோ நிலங்களோ இருந்தால் செட்டிமார்களிடம் கடன் பெறுவது சிரமமானதாக இருக்கவில்லை. ஆனால் கொடுத்த பணத்தையும் உரிய வட்டியையும் மீளப் பெறுவதில் அவர்கள் மிக கறாராக இருந்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. கடன் பெற்றவர்கள் தம்மை ஏமாற்ற முயற்சிக்கையிலே சட்டத்தின் உதவியைப் பெறுவதற்கோ, அவ்வுதவியினைப் பெறுவதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு முகம் கொடுக்கவோ அவர்கள் தயங்கியதில்லை என்பதற்கு 24–06–1915 இல் தேவாரமுல்ல எனுமிடத்தில் இருந்த காணியொன்றினை ஈடாக வைத்து 100 ரூபாவுக்கு மாதம் ஒரு ரூபாய் வட்டி என்ற அடிப்படையில் ரூபா 3000/= கடனாகப் பெற்ற மீராசாய்வு என்பவர் வட்டியை ஒழுங்காக செலுத்தாததனால் கடன் கொடுத்த கானா பானா ரானா மானா ஆனா வெங்கடசலம் செட்டியார், மீராசாய்வு மீது வழக்குத் தொடர்ந்து கோர்ட் மூலம் வட்டியும் முதலுமாக ரூபா 4855/= பெற்றுக் கொண்டது ஒரு சான்றாகும்.

பரம்பரை பரம்பரையாக கிராமங்களில் வாழ்ந்த மக்களின் 'ஆத்திர, அவசரங்களுக்கு' உதவ அக் கிராமங்களில் யாராவது இருப்பர்; ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் நிலை அவ்வாறு இருக்கவில்லை. ஏனைய மக்களோடு நெருங்கிய தொடர்பு எதுவுமில்லாத தனி தனிச் சமூகங்களாகவே தோட்டத் தொழிலாளர் சமூகங்கள் இருந்தன. பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் பெரும்பாலும் சகலரும் ஒரே நிலையில் தான் இருந்தனர். திடீரென நோய் நொம்பலங்கள் ஏற்பட்டால், மரணங்கள் சம்பவித்தால், அல்லது வேறு தேவைகள் எதுவும் தோன்றினால் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தம் சமூகத்தவரிடம் உதவி பெறுவது கடினமானதாகவே இருந்தது. இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அவர்களது சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் 'அலாவுதீனின் அற்புத விளக்காக' இருந்தவை அவர்களிடம் இருந்த சிறு சிறு நகைகளே; அந் நகைகளை அடமானமாகப் பெற்றுக் கொண்டு, தேவையான பணத்தைக் கொடுத்து உதவும் கை கொடுக்கும் தெய்வங்களாக இருந்தவர்கள் செட்டியார்களே. இவ்வாறு நகைகளை அடமானம் வைத்தவர்களில் ஒரு சிலர் அந்நகைகளைத் திருப்பிக் காணும் பாக்கியத்தைப் பெறவில்லை என்பது உண்மைதான்; ஆனால் இது அவர்களது அசிரத்தையினால் நடந்ததாக இருக்குமே ஒழிய செட்டிமார்களின் வஞ்சகத்தினால் நடந்திருக்காது. பொதுவாக செட்டிமார்கள் பண விஷயத்தில் கறாராக இருந்தார்களே தவிர தொழில் நாணயத்தை மீறுபவர்களாக இருக்கவில்லை. எனவே செட்டி மார்களின் வருகை மக்களுக்குப் பயன் மிக்கதாகவே இருந்தது.

1881 ஆம் ஆண்டில் 8778 தமிழர்களும், 1891 ஆம் ஆண்டில் 2433 தமிழர்களும் 1901 ஆம் ஆண்டில் 10245 தமிழர்களும் பெருந்தோட்டங்களுக்கு உட்படாத மாத்தளை மாவட்ட பிரதேசங்களில் வாழ்ந்திருக் கின்றனர். அவ்வாறே 1911 ஆம் ஆண்டில் 1394 இலங்கைத் தமிழர்களும் 3383 இந்தியத் தமிழர்களும் தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்துள்ளனர்; 27989 இந்தியத் தமிழர்களும் 167 இலங்கைத் தமிழர்களும் தோட்டங்களில் வாழ்ந்துள்ளனர். தோட்டங்களில் வாழ்ந்தவர்களில் ஒரு சிலர் கணக்குப்பிள்ளைகளாக, கண்டக்டர்களாக, லிகிதர்களாக பணியாற்றியிருப்பர்; பெரும்பான்மையோர் தோட்டத் தொழிலாளர்களாகவே காலம் கழித்தனர். தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் எவ்வெவ் வகையான தொழில்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை 1911 ஆம் ஆண்டு தொழில் கணக்கெடுப்பு அறிக்கை புலப்படுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை மாவட்டம் - தொழில் கணக்கெடுப்பு -ஆண்டு 1911

| தொழில் | மாத்தளை மாவட்ட முழு சனத் தொகையிலும் குறிப்பிட்டுள்ள தொழிலில் ஈடுபட்டுள்ளோர் | | குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கைத் தமிழர் தொகை | | குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டிருந்த இந்தியத் தமிழர் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| நெற்காணிச் சொந்தக்காரர் | 7328 | 2806 | 7 | 9 | 2 | 5 |
| நெற்காணிச் செய்கையில் ஈடுபட்டோர் | 7362 | 3735 | 11 | | 17 | 2 |
| வயல்நிலம் அல்லாத வேறு காணிச் சொந்தக்காரர் | 395 | 14 | 2 | | 3 | 2 |
| தோட்ட முகவர்கள் | 218 | | 7 | | 209 | |
| விவசாய கூலித் தொழிலாளர் | 13 | 107 | 1 | | | 101 |
| கொக்கோ தோட்டங்கள்–உரிமையாளர் / மேலாளர் / நிர்வாகிகள் | 223 | 125 | 20 | 8 | 64 | 26 |
| கொக்கோ தோட்டங்கள் – தொழிலாளர் / கீழ்நிலைப்பதவிகள் | 1789 | 1256 | 10 | 4 | 1600 | 1222 |
| தென்னந் தோட்டங்கள் / உரிமையாளர் / மேலாளர் / நிர்வாகிகள் | 76 | 37 | 8 | 2 | 16 | 2 |
| தென்னந் தோட்டங்கள் / தொழிலாளர்கள் / கீழ்நிலை ஊழியர் | 67 | 49 | 2 | | 52 | 49 |
| ரப்பர் தோட்டங்கள் / உரிமையாளர் / மேலாளர் / நிர்வாகிகள் | 67 | 47 | 5 | 3 | 9 | |
| ரப்பர் தோட்டங்கள் / தொழிலாளர் / கீழ்நிலை ஊழியர் | 1718 | 1198 | 4 | | 1600 | 1184 |
| தேயிலைத் தோட்டங்கள் / உரிமையாளர் / மேலாளர் / நிர்வாகிகள் | 303 | 22 | 47 | | 66 | |
| தேயிலைத் தோட்டங்கள் / தொழிலாளர் / கீழ்நிலை ஊழியர் | 9819 | 8489 | 43 | 28 | 9249 | 8016 |
| புகையிலைத்தோட்டங்கள்–உடைமையாளர் | 146 | 4 | 10 | | 19 | 4 |
| புகையிலைத் தோட்டங்கள் – தொழிலாளர் | 39 | | 21 | | 10 | |
| பழவர்க்கங்கள் / பாக்கு / வெற்றிலை / மரக்கறி உற்பத்தியாளர் | 113 | 51 | 8 | 1 | 53 | 32 |
| ஆடு, மாடு மேய்ப்போர் | 101 | 3 | 1 | | 28 | |
| தச்சர்கள் | 441 | | 1 | | 2 | |
| கொல்லர்கள் | 103 | | 1 | | 13 | |
| சட்டி / பானை / ஓடு / செங்கல் உற்பத்தியாளர் | 98 | 74 | 2 | 3 | 14 | 6 |
| வண்ணார்கள் | 171 | 107 | 13 | 2 | 78 | 46 |
| முடித்திருத்துவோர் | 44 | | | | 44 | |
| கொத்தனார்கள் | 247 | | 25 | | 35 | |
| பொற்கொல்லர் | 120 | | 6 | | 69 | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பாதை வேலைகள்– கூலித் தொழிலாளர்கள் | 184 | 113 | 44 | 20 | 119 | 88 |
| வண்டி ஒட்டிகள் | 320 | | 14 | | 20 | |
| ரயில்வே தொழிலாளர்கள் | 54 | | 4 | | 11 | |
| தபால், தந்தி சேவையாளர்கள் | 34 | | 6 | | 8 | |
| ஜவுளி வியாபாரம் | 62 | | 1 | | 17 | |
| உணவு விடுதி நடத்துவோர் | 31 | | | | 6 | 6 |
| ஹிந்து குருமார்கள் | 16 | | 8 | | 8 | |
| ஹிந்து கோயில் ஊழியர்கள் | 7 | | 1 | | 6 | |
| இரும்பு சாமான்கள் /கண்ணாடிப் பொருட்கள் விற்போர் | 27 | | | | 4 | |
| செங்கற்கள்/ ஓடுகள் விற்போர் | 3 | | | | 3 | |
| கிறிஸ்தவ தேவாலயங்கள் – ஊழியர்கள் | 8 | | | | 5 | |
| மருத்துவமனைச் சிற்றூழியர்கள் | 14 | 2 | | | 8 | 2 |
| சோதிடர் | 7 | | | | 6 | |
| வீட்டு வேலைக்காரர்கள் | 879 | 295 | 56 | 22 | 223 | 34 |
| குதிரை பராமரிப்போர் | 47 | | | | 28 | |
| முட்டை வியாபாரம் | 7 | 7 | | | | 7 |
| எண்ணெய் வணிகர் | 14 | 1 | 2 | 1 | 5 | |
| அரிசி, பருப்பு வகைகள்/கடலை வியாபாரம் | 104 | 2 | | | 6 | |
| புகையிலை/ சுருட்டு/பொடி வியாபாரம் | 73 | | 67 | | 4 | |
| ஆடு விற்பனை | 21 | | | | 10 | |
| வியாபாரிகள்/கடைகள் நடத்துவோர் | 1012 | 85 | 34 | | 86 | 4 |
| வணிகநிலைய இலிகிதர்கள் | 87 | | 4 | | 31 | |
| பொலிஸ் சேவை | 34 | | 2 | | 1 | |
| பொது பரிபாலனம் | 76 | | 6 | | | |
| வழக்கறிஞர்கள் | 5 | | 1 | | | |
| நொத்தாரிஸ் | 6 | | 1 | | | |
| வழக்கறிஞர்களின் இலிகிதர்கள் | 32 | | 3 | | 1 | |
| மருத்துவர்கள் (மேற்கத்திய வைத்தியம்) | 49 | | 98 | | 3 | |
| நாட்டு வைத்தியம் | 32 | | 4 | | 6 | |
| ஆசிரியர்கள் | 111 | 44 | 6 | 4 | 24 | 4 |
| நடிகர்கள், நடனக்காரர், பாடகர்கள் | 13 | 1 | | | 11 | 1 |
| கூலித் தொழிலாளர்கள் | 1485 | 577 | 37 | 15 | 221 | 89 |
| பிச்சை எடுப்போர் | 112 | 29 | 3 | | 18 | 7 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911 ஆண்டில் மாத்தளை மாவட்ட தேயிலைத் தோட்டங்களில் வேலையில் இருந்த இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் தொகை 17,265 என்றும் அவர்களின் பராமரிப்புக்குள் வாழ்ந்த குழந்தைகள், சிறுவர் சிறுமியர், முதியோர், உடல் நலமற்றோர் போன்றோரின் தொகை 3,962 என்றும் அவ்வாண்டு தொழில் கணக்கெடுப்பு அறிக்கை மூலம் அறிகின்றோம். இந்த விகிதாசார அடிப்படையில் கணித்தால் அன்று மாத்தளையில் வாழ்ந்த 31,872 இந்தியத் தமிழர்களில் ஏறத்தாழ ஆறாயிரம் பேர் ஏனையோரின் பராமரிப்புக்குள் வாழ்ந்தோராகவும் ஏறத்தாழ இருபத்தாறாயிரம் பேர் உழைப்பாளிகளாகவும் இருந்திருப்பர் என்ற முடிவுக்கு வருவோம். இந்த இருபத்தாறாயிரத்தில் 23,364 பேர் மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டங்களில் நிர்வாகிகள், சிற்றூழியர்கள், தொழிலாளர்கள் எனப் பல்வேறு மாவட்டங்களில் வேலை செய்தனர்; 876 பேர் விவசாயக் கூலிகளாக, பாதைகள் அமைத்தல், அவற்றைச் செப்பனிடுதல் போன்ற வேலைகளைச் செய்யும் கூலிகளாக, வீட்டு வேலைக்காரர்களாகப் பணியாற்றினர் என்பதை மேலே தரப்பட்டுள்ள கணக்கெடுப்பு அட்டவணை சுட்டிக் காட்டுகின்றது. உழைப்பாளர் என கருதப்பட்ட இந்தியத் தமிழ் ஆண், பெண்களில் தொண்ணூற்றி மூன்று வீதத்தினர் உடல் உழைப்பு ஒன்றினை மாத்திரமே நம்பி அன்று மாத்தளை மாவட்டத்தில் வாழ்ந்திருக்கின்றனர் என்ற உண்மையை நாம் உணர்கின்றோம்.

அன்று மாத்தளையில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் ஏறத்தாழ இதே நிலையில்தான் இருந்தது. அன்று இவர்களின் மொத்த சனத்தொகையே 1500 தான்; அதில் ஏறக்குறைய 400 பேர் உடல் உழைப்பினை நம்பியே வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் ஏறத்தாழ முன்னூறு இலங்கைத் தமிழர்கள் வணிகம், மருத்துவம், சட்டம், கல்வி போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களை விட பதினேழு மடங்கு அதிக தொகையினராக வாழ்ந்த இந்தியத் தமிழர்களில் எண்ணூறு பேர் மாத்திரமே இத்தகைய தொழில்களில் ஈடுபட்டிருந்தமை, விகிதாசார அடிப்படையில் இந்தியத் தமிழர்களைவிட இலங்கைத் தமிழர் உயர்நிலையில் இருந்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

ஆனால் இவ்விரு சமூகத்தவர்களும் செய்யும் தொழில்களில் உயர்வு, தாழ்வு பார்க்கவில்லை; எத்தொழிலையும் செய்யத் தயாராகவே இருந்தனர் என்பதைத் தொழில் அட்டவணை கோடிட்டுக் காட்டுகிறது. மந்தை மேய்ப்பாளர்களாக, குயவர்களாக, வண்ணார்களாக, கொத்தனர்களாக, தச்சர்களாக, வண்டி ஓட்டிகளாக, கொல்லர்களாக, நாவிதர்களாக – இப்படி எந்த வேலை கிடைத்ததோ அதைச் செய்யத் தயாராக அவர்கள் இருந்திருக்கிறார்கள். இன்று இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, சவுதி அரேபியா என போகின்றவர்கள் என்ன வேலை செய்கின்றோம் என்றா பார்க்கிறார்கள்; பிழைக்க வந்த நாட்டில் என்ன வேலை செய்தால் என்ன என்றே நினைக்கின்றார்கள். இந்த மனபாங்குதான் மாத்தளைக்கு வந்த அன்றைய தமிழர்களுக்கும் இருந்திருக்கவேண்டும். மாத்தளை மாவட்டத்தில் அன்று வண்ணார்களாகத் தொழில் செய்து கொண்டிருந்த 278 பேரில் 139பேர் தமிழர்கள் என்பதும், நாவிதர்களாக தொழில் புரிந்த 44 பேரும் தமிழர்களே என்பதும் இதற்குச் சான்று.

இதே போக்கைத்தான் 1910களில் கண்டி, நுவரெலியா போன்ற ஏனைய மலையக மாவட்டங்களில் வாழ்ந்த தமிழர்களிடமும் நாம் அவதானிக்கின்றோம். அங்கேயும் விரும்பியோ,விரும்பாமலோ சகலவிதமான வேலைகளையும் தமிழர்கள் செய்திருக்கின்றார்கள். 1911ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் பாதை அமைப்புப் பணிகளில் கூலித் தொழிலாளர்களாக ஈடுபட்டிருந்த 722 பேரில் 558 பேர்களும், நகர துப்பரவுப்பணிகளில் ஈடுபட்டிருந்த 28 பேரில் 23 பேர்களும், வண்ணார்களாக தொழில் செய்து கொண்டிருந்த 503 பேரில் 291 பேர்களும், நாவிதர்களாக இருந்த 57 பேரில் 54 பேர்களும் தமிழர்கள் என்பது இதனை உறுதிப் படுத்துகின்றது. கிடைத்த வேலை எதுவென்று பாராமல் அதை நன்கு செய்து பத்துக் காசு சம்பாதித்து, அதில் நாலு காசைச் சேமித்து, நாளை முன்னேறுவோம் என்ற நம்பிக்கையோடு, அல்லது நப்பாசையோடு வாழ்ந்த இனமாக அன்று மலையகம் எங்கும் வாழ்ந்த தமிழ் இனம் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தமிழர்கள் சிலரும், இலங்கைத் தமிழர்கள் சிலரும் ஜவுளி, அரிசி, பருப்பு, எண்ணெய், புகையிலை, சுருட்டு, இரும்பு பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்வதில் ஈடுபட்டனர். சிலர் கடைகள் அமைத்து அவற்றில் இருந்து வியாபாரம் செய்தனர்; சிலர் பொருட்களைச் சுமந்து, ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்தனர். இக்கடைகள் சிறியனவாகவே இருந்திருக்க வேண்டும். எனினும் மாத்தளை மாவட்ட வணிகத்திலே தமிழர்கள் பின்னர் பெற்ற முதன்மைக்குத் தேவைப்பட்ட அடித்தளம், இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திலேயே இடப்பட்டுவிட்டது என கருத இடமுண்டு.

அத்தியாவசியமான உணவுப் பொருட்களான அரிசி பருப்பு போன்ற பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை 104 எனவும் அத்துணை அவசியமற்ற பொருளான புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 73 எனவும் 1911ஆம் ஆண்டு தொழில் கணக்கெடுப்பு வழங்கும் தகவல் பலருக்கு வியப்பினை ஊட்டும். இந்த 73 பேரில் 67 பேர் யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆவர்; நான்கு பேர் இந்தியத் தமிழர்கள் ஆவர். இவர்கள் அத்தனைப் பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்த புகையிலையையும் சுருட்டையும் இங்கு விற்றுக் கொண்டிருந்தவர்கள் அல்லர். சின்னக்குஞ்சர் போன்றவர்கள் மாத்தளையிலும் சரவணமுத்து போன்றவர்கள் மடவளையிலும் சுருட்டுக் கடைகள் வைத்திருந்தனர் என்ற போதிலும் பெரும்பான்மையோர் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட் டிருந்தது வேறு ஒரு வகையிலாகும்,

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண சுருட்டு உற்பத்தியாளர்கள் மட்டக்களப்பு தமன்கடுவைப் பகுதியிலிருந்து புகையிலையைப் பெற்று, யாழ்ப்பாணப் புகையிலையை அதன் உள்ளீடாக வைத்தே சுருட்டுத் தயாரித்தனர். ஆனால் இதன் சுவை சற்று குறைவானதாகவே இருந்தது. அக்காலப் பகுதியில் மாத்தளை வந்த சில சுருட்டு வியாபாரிகள் கண்டிப் புகையிலையைச் சுருட்டின் உள்ளீடாக வைத்தால் சுருட்டின் குணம், மணம், சுவைகூடும் என்பதை உணர்ந்தனர். அதே நேரத்தில் கண்டிப் புகையிலையின் உற்பத்திக்கு கலேவெல, வஹகோட்டை, எல்மல்பொத்த, மடவளை, மாதிப்பொல போன்ற மாத்தளைப் பிரதேசங்கள் உகந்தவை என்பதையும் அறிந்து கொண்டனர். எனவே அவர்கள் இப்பகுதிகளில் புகையிலை உற்பத்தியை மிக விரிவான முறையில் செய்ய ஆரம்பித்தனர். கலேவெல பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கு புகையிலை விருத்தியே காரணமாயிற்று. 1915 ஆம் ஆண்டுக்கான மாத்தளை உதவி அரசாங்க அதிபரின் பரிபாலன அறிக்கையில் புகையிலை விவசாயத்தினால் கலேவெல பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட பொற்கொல்லர்களைப் பற்றி 1911ஆம் ஆண்டு தொழில் கணக்கெடுப்பு தரும்புள்ளி விவரங்களும் சிந்தனையைத் தூண்டுவனவாக உள்ளன. இம்மாவட்டத்தில் 120 பொற்கொல்லர்கள் தொழில் புரிந்தனர் என்றும், அவர்களில் அறுவர் இலங்கைத் தமிழர்கள் என்றும், 69 பேர் இந்திய தமிழர்கள் என்றும் இவ்வறிக்கை கூறுகின்றது. இவ்வாண்டில் நுவரெலியா மாவட்டத்திலும் ஏறத்தாழ இதே நிலைதான் காணப்பட்டிருக்கிறது. அங்கு 147 பொற்கொல்லர்கள் தொழில் புரிந்திருக்கின்றனர்; இவர்களுள் எண்மர் இலங்கைத் தமிழர்களாகவும் 97 பேர் இந்தியத் தமிழர் என்றும் அம்மாவட்ட தொழில் கணக்கெடுப்பு அறிக்கை கூறுகின்றது. இங்கு வந்த பின்னர் தமிழ் பொற்கொல்லர்கள் ஏனைய இன மக்களுக்கும் ஆபரணங்கள் செய்து கொடுத்திருப்பர்; ஆனால் தம் இன மக்கள் மலையகத்தில் பண வசதியோடு வாழ்கின்றனர் – அவர்கள் நகைகள் செய்வர் என்ற நம்பிக்கையின் பெயரிலேயே இந்திய பொற் கொல்லர்கள் மலையக மாவட்டங்களுக்கு வந்திருப்பர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்திலே இலங்கை வந்த கிளட்டர்பக் என்பவர் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அணிந்த காற் சங்கிலிகள் கூட வெள்ளியினால் ஆனவை எனக் கூறி அத்தொழிலாளர்களின் செல்வ நிலைமையை தான் எழுதிய "இலங்கையும் போர்ணியாவும்" எனும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920 களில் மாத்தளை நகரம் பல வகைகளிலும் விருத்தியுற வணிகம் வளர்ச்சியுற்றது; பெரிய வியாபார நிறுவனங்கள் பல தோன்றின. அகில இலங்கை அடிப்படையில் பரிபாலன, கல்வி, மருத்துவம், வணிகம், பெருந்தோட்டங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் பற்றித் தகவல்களைத் தரும் 'பேர்கூஸன் வழிகாட்டி' (Fergusons Directory) 1920 ஆம் ஆண்டில் மாத்தளை நகரில் அமைந்திருந்த பாரிய வியாபார நிறுவனங்கள் எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது:

**கே. என். மாரிமுத்து அன் பிரதர்ஸ் :**
புடவை, சாப்பு, சாமான்கள், அரிசி வியாபாரம்

**என். பொன்னம்பலம் :**
பலசரக்கு வியாபாரம், போக்குவரத்து முகவர்கள்

**ஜே. கொஸ்டா அன் பிரதர்ஸ் :**
தோட்டங்களுக்கு உணவுப் பொருட்கள் வினியோகிப்போர்.

**ஐ. எல். எஸ். செய்யது இப்ராஹிம் சாய்பு:**
இரும்பு வியாபாரம், தோட்டங்களுக்குப் பொருள் வினியோகிப்போர்.

**கே. வி. செய்யது அஹமது லெப்பை :**
தோட்டங்களுக்குப் பொருட்கள் வினியோகிப்போர்.

**எஸ். எஸ். கந்தசாமி அன் கோ:**
தோட்டங்களுக்குப் பொருட்கள் வினியோகிப்போர்.

**குருஸ்பிள்ளை அன் சன்ஸ்:**
தோட்டங்களுக்குப் பொருட்கள் வினியோகிப்போர்.

**ஆர். பெரேரா அன் கோ:**
தோட்டங்களுக்குப் பொருட்கள் வினியோகிப்போர்.

**கே. நடராஜா :**
குதிரை வண்டிகள் வாடகைக்கு விடுதல்.

**கே. என். ராமசாமி செட்டி:**
அரிசி வியாபாரம்.

**உலகப்ப செட்டி:**
அரிசி வியாபாரம்.

**எஸ். எஸ். சரவணமுத்து அன் கோ:**
சுருட்டு வியாபாரம்.

**ஆ. கா. வெடிப்புள்ளை:**
சுருட்டு வியாபாரம்.

**எஸ். எஸ். சரவணமுத்து :**
குளிர்பானங்கள் தயாரித்தல்.

**ஏ. ஏ. செல்வநய்னார்:**
குளிர்பானங்கள் தயாரித்தல்.

**எஸ். எஸ். கந்தசாமி :**
மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடுதல்.

**ஐ. எல். எஸ். செய்யது இப்ராஹிம் சாய்பு :**
மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடுதல்.

**கே. எம். மாரிமுத்து :**
மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடுதல்.

மேலே தரப்பட்டுள்ள வணிக நிறுவன விவரங்கள் அன்றைய மாத்தளை மாவட்ட வியாபாரத்தில் தமிழர்கள் எத்தனை முக்கியமான பங்கினை வகித்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது. பெரிய வியாபார நிறுவனங்கள் எனக் கருதப்பட்ட 18 நிறுவனங்களில் நான்கு ஐந்தினைத் தவிர ஏனைய அனைத்தும் தமிழர்களுடையதாகவே இருந்தன என்பதை அறியும் போது ஒரு வகைப் பிரமிப்பு ஏற்படத்தான் செய்கிறது.

இப்பட்டியலில் காணப்படும் கே. வி. செய்யது அஹ்மது லெப்பை எனும் வியாபார நிறுவனத்தைப் பற்றி ஆயிரத்து தொளாயிரத்து இருபதுகளில் அக்கடையில் வாழ்ந்தவரும் அக்கடை உரிமையாளரின் உறவினருமான கீழ்க்கரை பிரமுகர், அறிஞர், பண்பாளர் அல்ஹாஜ் எம். இத்ரீஸ் மரிக்கார் அவர்கள் தனது சுயசரிதையான நினைவுமலர்கள் எனும் நூலில் பதிவு செய்துள்ள சில குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன:

> "கடையில் இருக்கும் எல்லோரும் பக்கத்திலுள்ள பள்ளிவாசலில் ஐந்து நேரமும் தொழச் செல்ல வேண்டும். மாலை ஆறு மணிக்கு கடை அடைத்துவிடுவோம். இரவு 9.00 மணிக்கு மேல் யாரும் வெளியே போக அனுமதி இல்லை. கடை விசாலமானது. கடையின் பின்புறம் 40, 50 தென்னை மரங்களும் இருந்தன. அப்பகுயில் றப்பர், தேயிலை, கொக்கோ முதலிய பெரிய பெரிய தோட்டங்கள் வெள்ளைக்கார கம்பனியருக்கு உரியது. அவர்களின் தோட்டங்களுக்கு சப்ளை செய்வதுதான் முக்கிய வியாபாரம். வெள்ளைக்கார துரைமார்கள் அடிக்கடி கடைக்கு வருவார்கள். நான் அங்கு இருக்கும் காலத்தில் பல ஆங்கில வார்த்தைகளைப் பேசக் கற்றுக்கொண்டேன். ......... அது சமயம் இரும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பிகளின் விலை அந்தர்1 க்கு 5 ரூபாய் முதல் 6 ரூபாயாக இருந்தது. அப்படியானால் டன் 1 க்கு 55 ரூபாய் முதல் 60 ரூபாயாக இருந்தது. இவைகள் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப் பட்டவையாகும். இன்று (1996) இந்தியாவில் உற்பத்தியாகும் கம்பியின் விலை டன் ஒன்றுக்கு ரூபா 12,000 ஆக இருக்கிறது".

இக்குறிப்புகள் அன்று மாத்தளை வணிகத்தில் வெள்ளைக்காரத் துரைமார்கள் எத்துணை முக்கியமான பங்கினை வகித்துள்ளார்கள் என்பதையும் அன்று பணத்தின் பெறுமதி எப்படி இருந்தது என்பதையும் உணர்த்துகின்றன.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபது, முப்பதுகளிலே மாத்தளை மாவட்ட வணிகத்துறையில் பெரும் அந்தஸ்து பெற்றிருந்த தமிழர்கள், பாரிய நில உடமையாளர்கள் என்ற அடிப்படையிலும் தம் அந்தஸ்த்தினை உறுதிப்படுத்திக் கொண்டனர். எஸ்.எஸ். கந்தசாமி, என். பி. செல்லையா, கே. எம்.சி. கதிரவேல், இராஜசிங்கம், எஸ்.அருணாசலம்பிள்ளை ஆகியோர்களுக்கு மாத்தளை நகரத்திலும், முருகையாவுக்கு வெள்ளைக் கல்லிலும், ஜீ. பொன்னம்மா, திருமதி விஜயரத்தினம், கனகசபை, சி. எஸ். ராஜரத்தினம், கே. எஸ். நாராயணன் போன்றோர்களுக்கு கவுடுபெலல்ல பகுதியிலும், அண்ணாமலைச் செட்டியாருக்கும் என். மாரிமுத்துப் பிள்ளைக்கும் கியுலயிலும் எஸ். இராமையாவுக்கு தொடன் தெனியவிலும் சுப்பையா சேகுவாரருக்கு தொரகும்புற பகுதியிலும், பொன்னையாவுக்கு ரத்தொட்டையிலும் சுப்பையா,செல்லசாமி, முத்துக்குமார், உச்சிமுத்துச் சேர்வை போன்றவர்களுக்குஉடுஹில்லயிலும் நிறையக் காணிகள் இருந்தன.

இக் காலப் பகுதியில் மாத்தளை மாவட்டப் பெருந்தோட்ட வளர்ச்சியிலே தமிழர்கள் வகித்த பாரிய பங்கினை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. காடுகளை வெட்டிச் சாய்த்தவர்களும், பின்னர் வெட்ட வெளிகளைத் தங்கம் விளையும் பூமிகளாக ஆக்கியவர்களும் தமிழர்களே என்பது எல்லோரும் அறிந்ததே; சகலரும் ஏற்றுக்கொள்ளும்உண்மையே. ஆனால் இக்கால கட்டத்தில் இம்மாவட்ட பெருந்தோட்டச் செய்கையில் அவர்கள் எந்தளவு பண முதலீடு செய்திருந்தனர்; எத்தனை தோட்டங்களை அவர்கள் நிர்வகித்தனர் ?, எத்தனை தோட்டங்கள் அவர்களது உடமைகளாக இருந்தன என்பதெல்லாம் பலரும் அறியாததாகும்.

மாத்தளை மாவட்டப் பெருந்தோட்ட வளர்ச்சிக்குத் தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப் பினைத் துல்லியமாகவும் நியாயமாகவும் எடை போட வேண்டுமென்றால் அவர்களது பங்களிப்பினை ஏனைய இனத்தவர்களது பங்களிப்புக்களோடு ஒப்பீடு செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்தால் மாத்திரமே தமிழர்களின் பங்களிப்பின் மேன்மையை சரியாகக் கணிப்பிடலாம்.

1931 ஆம்ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் நூற்றி அறுபத்து நான்கு தோட்டங்கள் இயங்கிக் கொண்டிருந்ததாக அவ்வாண்டில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பு கூறுகின்றது. தோட்ட உடமையாளர்கள், நிர்வாகிகள், கங்காணிகள், கணக்குப்பிள்ளைகள், சிற்றூழியர்கள்,தொழிலாளர்கள் போன்ற அத்தனைப் பேரும் உட்பட இந்த நூற்றி அறுபத்துநான்கு தோட்டங்களிலும் வாழ்ந்தோரின் மொத்த எண்ணிக்கை 38, 472 ஆகும்; இதில் தமிழர்களின் தொகை 35,028 ஆகும். உழைப்பு என்ற அடிப்படையில் தமிழர்கள் மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்கு நல்கியுள்ள பங்களிப்பினை இப்புள்ளி விபரம் காட்டுகின்றது.

1931 ஆம் ஆண்டில் இயங்கிக் கொண்டிருந்த தோட்டங்களில் மிக அதிகமானவை ஐரோப்பியர் களுக்கே சொந்தமாக இருந்தன. இவற்றுள் ஒவில்ல, இங்குருவத்தை, கைக்காவளை, குடாஓய, ரஜ்ஜம்மன, அரேம்பேபொல, விக்கார்ட்டன், வெவலேன எலிஸ்கோம், கெந்தவத்தை போன்ற ஒரு சில தோட்டங்களே சிங்கள இனத்தவர்களின் உடமைகளாக இருந்தன. அன்னாசிகந்த, ஒயபஹல, ஒக்ரி எனும் மூன்று தோட்டங்கள் மாத்திரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் வசம் இருந்தன. இத் தசாப்தத்திலே மாத்தளை மாவட்டத்திலே தமிழர்களுக்கு உரித்தாக இருந்த தோட்டங்களினதும் அவற்றின் உடமையாளர் களினதும் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

| தோட்டத்தின் பெயர் | உரிமையாளரின் பெயர் |
|---|---|
| வனராணி | ஆர். செகராஜசிங்கம் |
| ரத்தொட்ட காடு | ஆர். எல். எஸ். வி. என். அருணாசலம் செட்டியார் |
| உளுகும்புற | கே. ஆர். சின்னையாப்பிள்ளை |
| வெலிகந்த | கே. ஆர். சின்னையாப்பிள்ளை |
| பொல்வத்தை | கே. ஆர். சின்னையாப்பிள்ளை |
| ஹுலன்கமுவ | ஜே. ரி. வீரவாகு |
| எட்டிப்பொல | ஆர். எம். ராமசாமி பிள்ளை |
| நாகஹவத்த | கே. ஆர். சின்னையாப்பிள்ளை |
| அழகுமலை | எஸ். எஸ். கந்தசாமி |
| நியந்தகல | கே. வி. மாரிமுத்து |
| ரத்னிந்த | சி. அரியநாயகம் |
| சாப்புவத்த | கேட் முதலியார் ஏ. நாகநாதன் |
| வெள்ளைக்கல் | கே. எம். பொன்னையாத்தேவர் |

இப்பட்டியல் தமிழர்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் எத்துணை ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் ஈடுபட்டிருந்தனர் என்பதை உணர்த்துகின்றது. பெருந்தோட்டங்களில் கிடைத்த இலாபம் வேறு சிலரையும் கவர, முப்பதுகளில் கீழ்வரும் தோட்டங்களும் தமிழ்ச் செல்வந்தர்களால் வாங்கப்பட்டன.

| | |
|---|---|
| ஆதிலட்சுமி தோட்டம் | எஸ். டி. கே. எம். குமரப்ப செட்டியார் |
| அலுத் கெதரவத்த | ஏ. ருதுவர்ணம் |
| கிரன்பார்ட் | கே. பி. சோமசுந்தரம் |
| கன்சரப்பொல | கே. வி. மாரிமுத்து |
| எல்ட்வுட் | எம். ஆர். பி. எல். எம். ஆர். முருகப்ப செட்டியார் |
| மாத்தளை ஈஸ்ட் | கே. என். நல்ல கருப்பன் செட்டியார் |
| சோமாஸ் லேண்ட் | கே. பி. சோமசுந்தரம் |
| கொடஹேன | எஸ். கே. எம். மெய்யப்ப செட்டியார் |
| டிக்கிரிய | கே. வி. சுப்பையா, கே. பி. சோமசுந்தரம் |
| அன்னாசி கந்த | கே. வி. சுப்பையா |

பெருந்தோட்டத் துறையில் ஆர்வத்தோடும் எதிர்ப்பார்ப்போடும் தமிழர்கள் ஈடுபடும் போக்கும், நம்பிக்கையோடு தம் செல்வத்தை இத்துறையில் முதலீடு செய்யும் போக்கும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலும் தொடர்ந்தன. 1287 ஏக்கர் விஸ்தீரனமிக்க செலகம குரூப் டாக்டர் ராசைய்யாவினாலும், கடுவெல்ல தோட்டம் (207 ஏக்கர்) எஸ். எம். தவசியா பிள்ளையினாலும், சந்தனவத்த வை. எட்வின் ஜெயராஜினாலும் இக்காலப் பகுதியில் தான் வாங்கப்பட்டன. எஸ். பி. ஆர். எம். எல். ராமகிருஷ்ண செட்டியார், சுப்பிரமணிய செட்டியார், கண்ணப்ப செட்டியார் எனும் மூன்று சகோதரர்கள் கட்டாரத்தென்ன (736 ஏக்கர்) தோட்டத்தையும் இவர்களின் மற்றுமொரு சகோதரரான லெட்சுமணன் செட்டியார் தங்கந்த தோட்டத்தையும், (439 ஏக்கர்) வாங்கியுள்ளனர். இதே லெட்சுமணன் செட்டியார் தன்னுடைய சகோதரரான கண்ணப்ப செட்டியாருடன் சேர்ந்து கோலதாட்சி தோட்டத்தையும் வாங்கியுள்ளார். மாத்தளை மாநகர சபை உறுப்பினராகவு.ம், சமூக சேவையாளராகவும் விளங்கிய காலஞ்சென்ற எம். ஏ. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் தந்தை சின்னையா ஜேஸவத்த, ஹுனுகெட்ட எனும் தோட்டங்களையும், கே. கணேசன் நோர்த் மாத்தளை தோட்டத்தையும், கே. அருணாசலம் பிள்ளை 1723 ஏக்கர் விஸ்தீரணமிக்க பிரே குரூப் தோட்டங்களையும் வாங்கியதும் இதே காலப் பகுதியில்தான். அவ்வாறே பீர்தவெல, தாமரவள்ளி போன்ற தோட்டங்களை கதிரேசன் செட்டியாரும், ஹபுகஸ்பிட்டிய தோட்டத்தை ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் குடும்பத்தினரும், களுதாவளைத் தோட்டத்தை வழக்கறிஞர் பி. முத்தழகு அவர்களும் இக் காலப்பகுதியில் வாங்கியுள்ளனர்.

முன்னர் தமிழர்களின் உடமைகளாக இருந்த சில தோட்டங்கள் பின்னர் கைமாறி இருக்கலாம். பொதுவாக இது எதிர்பார்க்க வேண்டிய ஒன்றே. காணி உச்ச வரம்பு சட்டத்தின் கீழ்பெருந்தோட்டங்கள் பல அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும் வரை தமிழர்கள்பல பெருந்தோட்டங்களின் உரிமையாளர்களாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். இச்சுவீகரிப்பினால் ஏனைய இனங்களைச் சேர்ந்த தனி நபர்கள் பலர் தம் தோட்டங்களை இழந்ததைப் போலவே, பல தமிழர்களும் தம் தோட்டங்களை இழந்தனர். ஆனால் இன்றும் இம்மாவட்டத் தோட்டங்கள் அனைத்தும் தமிழர்களின் உழைப்பினையே பெரிதும் நம்பியிருக்கிறது என்பது மறுக்க முடியாததாகும்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் மாத்தளை மாவட்ட வணிகத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தின; இதர சமூகங்களைப் போலவே மாத்தளைத் தமிழ்ச் சமூகமும் இத்தாக்கங் களுக்குள்ளாகியது. பழையன சில கழிந்தன; புதியன பல புகுந்தன. அது காலம் வரை இம்மாவட்டத்தின் லேவா தேவி வியாபாரத்தில் முதன்மை பெற்றுவிளங்கிய செட்டிமார்கள் பலரும், வேறு வணிகங்களில் ஈடுபட்டிருந்த இந்தியர் பலரும் இப்பிரதேசத்தை விட்டு தம் தாயகம் திரும்பினர். கே. எம். மாரிமுத்து அன் சன்ஸ், என். பொன்னம்பலம், குரூஸ் பிள்ளை அன் சன்ஸ், கே. என். ராமசாமி செட்டி, செல்லநய்னார், வெடிப்பிள்ளை போன்ற சில பழைய வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. உரிமையாளர்கள் மரணிக்க, அவர்களின் நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பொருத்தமானவர்கள் இன்மை; வட இந்திய, தென்னிந்திய முஸ்லிம்களின் வருகை அதிகரித்ததனால் உருவான வணிகப் போட்டி; ஜப்பானிய குண்டு வீச்சு கிளப்பிய பீதி; பர்மாவில் ஜப்பானியர்களின் வருகையினால் செட்டிமார்களும் ஏனைய தமிழ் வணிகர்களும் அனுபவித்த நஷ்டங்கள், வேதனைகள் மாத்தளை வாழ் தமிழர்களின் உள்ளங்களில் ஏற்படுத்திய கிலி; இந்தியர் – பாக்கிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் – தமிழர்களின் வணிகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இப்படிப் பல காரணங்களைக் காட்டலாம்.

சென்ற நூற்றாண்டின் முப்பது, நாற்பதுகளில் பழைய தமிழ்க் கடைகள் சில மூடப்பட்டன என்பது உண்மை; ஆனால் இது மாத்தளை மாவட்ட தமிழ் வணிகத்தின் அஸ்தமனமாக அமையவில்லை. எஸ். எஸ். கந்தசாமி அன் கோ, கொஸ்தா அன் சன்ஸ் போன்ற பிரபல நிறுவனங்களும் யாழ்ப்பாணத் தமிழர்களான அன்னலிங்கம், எஸ். பி. முருகப்பிள்ளை, கந்தவனம், கந்தையா, சிவகுரு, செல்லக்கண்டு, வேலும்மயிலும், ராசைய்யா போன்றோர் நடத்திய சுருட்டுக் கடைகளும் தொடர்ந்து திருப்திகரமாக நடந்தன. ஆழ்வார்பிள்ளை கடை, பாலன் ஸ்டோர்ஸ், பாக்கியலட்சுமி ஸ்டோர்ஸ், ஜோதி ஸ்டோர்ஸ், ஈஸ்வரா ஸ்டோர்ஸ் எனப் பல புதிய சுருட்டுக் கடைகளும் தோன்றின. இவற்றுள் ஜோதி ஸ்டோர்ஸ், ஈஸ்வரா ஸ்டோர்ஸ் என்ற இரண்டும் புத்தக விற்பனையிலும், குறிப்பாக பாடநூல் விற்பனையிலும் ஈடுபட்டிருந்தன. இன்றைக்கும் இருபத்தைத்துக்கும் மேற்பட்ட யாழ்ப்பாண சுருட்டுக் கடைகள் மாத்தளை மாவட்ட வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன.

மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட சிவகுரு கடை பற்றிய ஒரு தகவல் இன ஒற்றுமையினை நாடுவோர்க்கு மிக இதமானதாகும். இக்கடையின் உரிமையாளரான சிவகுரு முப்பது, நாற்பதுகளிலே மாத்தளையில் சுருட்டுக் கடை நடத்திய சோமசுந்தரம் என்பவரின் மகனும் செல்லக்கண்டு எனும் சுருட்டுக் கடைக்காரரின் சகோதரருமாவார். சிவகுரு கடையில் தன்னுடைய சிறுவயதில் வேலைக்குச் சேர்ந்த பீட்டர் எனும் சிங்களவர் முதுமையை எட்டும் வரை அக்கடையிலேயே பணியாற்றினார். பீட்டரின் திருமணம் போன்ற அத்தனை விடயங்களையும் செய்வித்தவர் சிவகுருவே. இன்று சிவகுருவின் பேரனான வைகுந்தவாசன் என்பவரும் பீட்டரின் மகனான ராஜபக்ஸ என்பவரும் இணைந்து இக்கடையை நடத்துகின்றனர். சிங்கள–தமிழ் ஒற்றுமைக்கு எவ்வளவு அழகான ஓர் எடுத்துக் காட்டு.

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் மாத்தளை நகரத்திலே மிகப் பிரசித்தி பெற்ற மணிக்கடைகளாக விளங்கிய நிறுவனங்களுள் தென்னிந்திய தமிழ் கிறிஸ்தவர்கள் நடத்திய ஜுப்லி ஸ்டோர்ஸ், சந்தியாகோ ஸ்டோர்ஸ் என்பவை இரண்டாகும். இதே இனத்தைச் சேர்ந்த ஜோஸப் பெர்னாண்டோ என்பவரால் நடத்தப்பட்ட 'சித்ரா ஸ்டோர்ஸ்' அண்மையில்தான் மூடப்பட்டது. சீப் ஸ்டோர்ஸ், எஸ். கே. பொன்னுசாமி பிள்ளை அன் சன்ஸ், திருமுருகன் ஸ்டோர்ஸ், ஏ. எம். பெர்னாண்டோ அன் கோ போன்றவை ஐம்பதுகளிலும், கொழும்பு ஸ்டோர்ஸ், பொம்பே ஸ்டோர்ஸ் போன்றவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது, எழுபதுகளிலும் பிரபலமாக விளங்கிய தமிழ் ஜவுளிக் கடைகளாகும். எஸ். கே. பொன்னுசாமி அன் சன்ஸ், திருமுருகன் ஸ்டோர்ஸ் எனும் கடைகளின் வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களே. ஆனால் கொழும்பு ஸ்டோர்ஸ் வாடிக்கையாளர்களில் பெரும்பான்மையோர் சிங்களவர்களாகவே இருந்தனர். இன்று இரும்பு, பெய்ன்ட், தேயிலை, தேங்காய், மின்சார உபகரணங்கள், அரிசி என எல்லா விதமான கடைகளையும் தமிழர்கள் இந்நகரினிலே நடத்துகின்றனர்.

பி. மாரிமுத்து, பி. சின்னையா, கே. எஸ். சுப்பிரமணியம், ஜெகந்நாதன்பிள்ளை, வி. எஸ். நாடார், ஏ. ஓ. அரிய முத்து செட்டியார்,வேலும்மயிலும், வல்லிப்புரம் ஆகியோர் ரத்தொட்ட நகரில் நீண்ட காலமாக வியாபாரம் செய்தோர்கள் ஆவர். ஜவுளிக் கடை, அரிசிக் கடை என இரண்டு கடைகளின் உரிமையாளராக இருந்த வி.எஸ். நாடார் பிரஜா உரிமைச் சட்டத்தின் காரணமாக தாயகம் திரும்பிவிட்டார். எம்.கே. சுப்பையா பிள்ளை, கருப்பையா எனும் இருவரும் ஐம்பதுகளுக்குப் பின்னர் ரத்தொட்டை வணிகத்தில் நுழைந்து பெரும்வெற்றி ஈட்டியவர்கள் ஆவர். எம். கே. சுப்பையா பிள்ளை தனது உறவினர் சிலரோடு கூட்டுச் சேர்ந்து அறுபதுகளில் மாத்தளையில் ஓர் அரிசிக் கடையையும் பின்னர் அதே பெயரில் ஒரு இரும்புக் கடையையும் நடத்தினார். தனது பெயரில் ஒரு லேவாதேவி கடையையும் சிறிது காலம் நடத்தினார். பின்னர் இவற்றை விற்று விட்டு கண்டி சென்றுவிட்டார். கே. கருப்பையா ரத்தொட்டை பிள்ளையார் கோவில் அறங்காவலர் சபைத் தலைவராகவும் இந்நகரத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பெரும் சமூக சேவையாளராகவும் திகழ்கின்றார்.

ஐம்பது, அறுபதுகளில் கிருஷ்ணத்தம்பி என்பவர் அலுவிகாரையிலும் முருகப்பிள்ளை என்பவர் பலாபத்வலையிலும், சரவணமுத்து, சுப்பிரமணியம் என்போர் மடவளையிலும், வணிகத்துறையில் பிரபலமாக விளங்கிய யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆவர். ஐம்பதுகளிலே ஏ. எஸ். சங்கரப்பிள்ளை எனும் நிறுவனம் தம்புள்ளையில் பெட்ரல், மண்ணெண்ணெய் வினியோகம்,இரும்பு, மின்சார உபகரணங்கள் விற்பனை போன்ற பல துறைகளில் ஈடுபட்டு பெரும் வெற்றியோடு திகழ்ந்த ஒன்றாகும். 1958 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது பாரிய பாதிப்புக்களுக்குள்ளான இந் நிறுவனத்தார் அதன் பின்னர் தம்புள்ளையில் காட்டிய அக்கறைக் குறைவே. தம்புள்ளையில் மிக நீண்ட காலமாக நிலபுலம், ஆடு, மாடுகள் என சகல வசதிகளோடும் வாழ்ந்த பொன்னுத்துரை அப்பாவு, கணபதிப்பிள்ளை என்போரின் சந்ததியினரில் சிலர் தம்புள்ளை மரக்கறி மொத்த வியாபார உலகில் பெரும் புள்ளியாக இருக்கின்றனர். நாற்பது, ஐம்பதுகளில் சரவணமுத்து எனும் யாழ்ப்பாணத்தவர் உக்குவளை நகரில் நடத்திய சுருட்டுக் கடை, கணேஷா ஸ்டோர்ஸ் எனும் பெயரில் இப்போதும் தங்கவேல் குடும்பத்தினரால் நடத்தப்படுகின்றது. தினசரிப் பத்திரிகைகள் விற்பனை, தென்னிந்தியத் தமிழ் சஞ்சிகைகள் விற்பனை, நூல் விற்பனை போன்றவற்றிலும் இக்கடை ஈடுபட்டிருந்தது.

மாத்தளை மாவட்ட லேவாதேவி வியாபாரத்தில் பாரிய அளவில் ஈடுபட்டிருந்த செட்டிமார்கள் பலர் ஐம்பதுகளில் தாயகம் திரும்பிய போதிலும், க. நா. நல்ல கருப்பன் செட்டியார், கதிரேசன் செட்டியார், வைரவன் செட்டியார், உலகப்ப செட்டியார், அழகப்ப செட்டியார், லெட்சுமணன் செட்டியார், மாணிக்கம் செட்டியார், வன்னிவேல் செட்டியார் போன்றோர் இவ்வணிகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். ஆனால் இவர்களில் நல்ல கருப்பன் செட்டியார், கதிரேசன் செட்டியார், வைரவன் செட்டியார், உலகப்ப செட்டியார், அழகப்ப செட்டியார் போன்றோர் அறுபதுகள் பிறப்பதற்கு முன்னரே இந்தியா திரும்ப, மாத்தளை லேவாதேவி வணிகத்துறையில் ஒரு பெரிய வெற்றிடம் தோன்றிது.

அறுபதுகள் வரை பதிவு செய்யப்பட்ட வட்டி வியாபரம் ஏறத்தாழ செட்டிமார்களின் ஒரு குலத் தொழிலாகவே கருதப்பட்டது. அதற்கு முன்னரும் வணிகர், கங்காணிகள், சற்று பணவசதி படைத்த தொழிலாளர்கள் போன்றோரில் ஒரு சிலர் வட்டிக்குப் பணம் கொடுத்து சம்பாதித்திருப்பர்; ஆனால் இவை யாவும் பெரும்பாலும் உத்தியோக பூர்வமற்ற முறையிலேயே நடைபெற்றிருக்கும். ஆனால் இப்போது லேவாதேவி வியாபாரத்தில் ஏற்பட்ட பாரிய வெற்றிடத்தை நிரப்ப செட்டி சமூகத்தைச் சேராத சிலரும் இவ்வியாபாரத்தில் உத்தியோகபூர்வமான முறையிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை நிலை நாட்டிக் கொள்ள ஆரம்பித்தனர். ஜவுளிக் கடை நடத்திய எஸ். கே. பொன்னுசாமி தன் பெயரிலேயே ஒரு வட்டிக்கடையையும் ஆரம்பித்தார். சொக்கலிங்கம் பிள்ளையும் கொழும்பு ஸ்டோர்ஸ், மல்லிகா ஸ்டோர்ஸ் போன்ற நிறுவனங்களின் உரிமையாளர்களும் வட்டி வியாபாரத்தில் இறங்கினர்.

மாத்தளை மாவட்ட லேவாதேவி வணிகத்தில் ஈடுபட்டவர்களில் ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் ஸ்தாபனத்தினர் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர். இந்த ஸ்தாபனத்தை 1918 ஆம் ஆண்டில் ஒரு சின்ன வட்டிக் கடையாக ஆரம்பித்து, அதனை ஒரு நல்ல நிலைக்கு வளர்த்தெடுத்த ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியாருக்கு லெட்சுமணன், அரியமுத்து, மாணிக்கம் என மூன்று புதல்வர்கள்; இவர்களில் அரியமுத்து செட்டியார் ரத்தொட்டையில் வட்டிக்கடை ஆரம்பித்து, பெரும் முன்னேற்றம் கண்டார்; மாணிக்கம் செட்டியார் பொது விடயங்களில் காட்டிய அக்கறையில் ஒரு சிறு பங்கினையாவது தன்னுடைய வியாபாரத்தில் காட்டாததால் அவர் நடத்திய அடகு கடை குறிப்பிடக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. தன்னுடைய தந்தையின் கடையைக் கையேற்ற லெட்சுமணன் செட்டியார் தன்னுடைய அயரா உழைப்பினாலும் அர்ப்பணிப்பாலும் தனது கடையை மாத்தளை மாவட்டத்திலேயே மிகப் பெரும் வட்டிக்கடையாக மாற்றினார். அவரின் புதல்வர்களான தியாகராஜா செட்டியார், சோமசுந்தரம் செட்டியார், பத்மநாதன் செட்டியார் என்போர் தம் தந்தையின் வழியொட்டி நடந்து, தமது எளிமையான, இனிமையான போக்குகளினாலும், தமது உயர் தொழில் நேர்மையினாலும் தம்முடைய ஸ்தாபனத்தை ஓர் ஆல விருட்ஷமாகத் தழைத்தோங்கச் செய்துள்ளனர்.

தோட்ட உடமையாளர்கள், பெரும் வணிகர்கள் போன்றோர் பலவகையான நிதி நெருக்கடிகளை எதிர் கொண்டபோது, அவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து உதவிய ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் ஸ்தாபனத்தினர் செய்த மற்றுமொரு சேவை மாத்தளையிலே வங்கிகள் எதுவும் ஸ்தாபிக்கப்பட்டிராத ஐம்பது, அறுபதுகளிலே தோட்டங்களில் சம்பள பட்டுவாடாவைச் சிரமமின்றிச் செய்வதற்கு இவர்கள் வழங்கிய உதவியாகும். சம்பள பட்டுவாடா செய்ய வேண்டிய தினத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் தோட்ட நிர்வாகிகள் இவ் ஸ்தாபனத்தாரிடம் தமக்கு வேண்டிய தொகையையும் அது வழங்கப்படவேண்டிய முறையையும் குறிப்பிட்டுவிடுவர். இவர்கள் தேவையான ஒழுங்குகளைச் செய்து கொடுத்த பின்னர் தமது சேவைக்கென ஒரு குறிப்பிட்ட தொகையைக்கட்டணமாக பெற்றுக் கொள்வர். இந்தச் சேவையைக்கதிரேசன் செட்டியாரும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மாத்தளை மாவட்டத்தில் தமிழர்களின் அந்தஸ்த்தினை உயர்த்தி வைத்துக் கொண்டு இருக்கும் வர்த்தக ஸ்தாபனங்களில் ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் ஸ்தாபனமும் ஒன்றாகும்.

தங்க, வெள்ளி நகைகள் செய்வதில் தாம் அசாத்திய திறமை மிக்கவர்கள் என்பதை பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்கள் புலப்படுத்தி வந்துள்ளனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். இந்தத் திறமையை ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மாத்தளை மாவட்டத்திலே தமிழ் பொற்கொல்லர்கள் வெளிப்படுத்தியே வந்துள்ளனர் என்பதை இப்பிரதேசத்திலே நீண்ட காலமாக வாழ்கின்ற தமிழ்க் குடும்பங்களிடம் இருக்கும் பழைய நகைகள் உணர்த்துகின்றன. மாத்தளை மாவட்டத்திலே வாழ்ந்த நூற்றி இருபது பொற்கொல்லர்களில் எழுபத்தைத்து பேர் தமிழர்கள் என 1911ஆம் ஆண்டு தொழில் கணக்கெடுப்பு அறிக்கை கூறுவது இத்துறையிலே தமிழர்கள் காட்டிய ஆர்வத்தையும் ஈடுபாட்டினையுமே புலப்படுத்துகின்றது.

8–10–1902 இல் முத்து ஆசாரி என்பவர் முத்துராமன் செட்டியாரிடமிருந்து மந்தண்டாவளையில் ஒரு நிலத்தை வாங்கியுள்ளார் எனவும் 1903 இல் ராமசாமி ஆசாரியின் மகள் லெட்சுமி, கஞ்சமலை படையாச்சி ஆசாரியின் மகள் மாரியாயிக்கு மாத்தளையில் காணி யொன்றினை விற்றுள்ளார் எனவும் மாத்தளை காணிப் பதிவுக் காரியாலயத்தில் உள்ள சில ஆவணங்கள் தரும் தகவல்கள் காணி பூமிகள் வாங்கக் கூடிய அளவுக்குப் பண வசதிகளோடு ஆசாரிமார்கள் வாழ்ந்தனர் என்பதையே நிரூபிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் ஆசாரி, மருதமுத்து ஆசாரி, சிவன் ஆசாரி, பின்னவனம் ஆசாரி, மாடசாமி ஆசாரி போன்றோர் சென்ற நூற்றாண்டின் முதற் பகுதியிலே புகழோடு வாழ்ந்த ஆசாரிமார் ஆவர். மேலே குறிப்பிட்ட சங்கரன் ஆசாரிகளின் மகன் சுப்பிரமணியம் ஆசாரியாவார்; சுப்பிரமணியம் ஆசாரியாரின் புத்திரர்களான சங்கரனும் விஜயகுமாரும் கொழும்பில் நகைக்கடை நடத்துகின்றனர்; ரத்தினம் எனும் மகள் மாத்தளையில் தன்னுடைய தந்தையின் பெயரில் நகைக் கடை ஒன்றினை நடத்துகின்றார்; கொழும்பு நகை வியாபாரிகள் மத்தியில் புகழோடு விளங்கிய மற்றுமொரு புத்திரரான தியாகராஜா 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்திலே உயிரிழந்தார். அவ்வாறே மருதமுத்து ஆசாரியின் மகன் வீரப்ப ஆசாரியும் புகழோடு திகழ்ந்தவர்தான். வீரப்ப ஆசாரியாரின் புத்திரர்களில் ஒருவர் இன்று மாத்தளையில் நகைக் கடை வைத்திருக்கும் சுப்பையா ஆசாரி ஆவார்.

அம்பிகா ஜூவலர்ஸ் தங்கவேல் ஆசாரியார், சொர்ணமஹால் சங்கரன் ஆசாரியார் போன்றோர் இன்றும் தொழில் திறமைக்கும் தொழில் நேர்மைக்கும் எடுத்துக் காட்டுகளாக வாழ்கின்றனர்.

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் காராமணியார் என்றழைக்கப்பட்ட காயற்பட்டண முஸ்லிம் ஒருவர் நகைக்கடை ஒன்றினை நடத்தினார்; ஹுஸைன் எனும் மற்றுமொரு காயற்பட்டண வாசியும் ஒரு சிறு நகைக்கடை வைத்திருந்தார். எப்ரஹாம் ஹாமி எனும் சிங்களவர் ஒருவரின் கடையும் இருந்தது. ஏனைய அனைத்து நகைக் கடைகளும் தமிழர்களுடையதாகவே இருந்தன. ஐம்பதுகளின் இறுதிப் பகுதியில் மர்ஹூம் ஹாபிஸ் இஸ்மாயில் அவர்கள் ஜுவல்லரி மியுஸியம் என்ற பெயரில் ஒரு ஜுவல்லரி ஆரம்பித்தார்கள். அதன் பின்னர் பல முஸ்லிம்கள் இத்துறையில் இறங்கியுள்ளனர். ஒரு சில சிங்களவர்களும் நகைக்கடை ஆரம்பித்துள்ளனர். எனினும் இன்றும் மாத்தளை மாவட்டத்தில் இருக்கும் நகைக்கடைகளில் அதிகமானவை தமிழர்களுக்கு உரித்தானவையே. வேறு இனத்தவர்களும் நகைக் கடைகள் வைத்திருக்கின்ற போதிலும் ஆபரணங்களை உருவாக்குபவர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களே.

மாத்தளை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் தமிழர்களே அதிகமாக ஈடுபடும் ஒரு வணிகத் துறை எண்ணெய் வியாபாரத் துறையாகும். எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை பதினான்கு என்றும் அதில் எண்மர் தமிழர் என்றும் 1911 ஆம் ஆண்டு தொழில் கணக்கெடுப்பு அறிக்கை கூறுகின்றது. அதேநிலை தான் இன்றும் தொடர்கிறது எனலாம். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே மாத்தளை நகரோடு இணைந்திருக்கும் கொடப்பொல பகுதியில் தமிழர்கள் பல எண்ணெய் செக்குகளை இயங்கிக் கொண்டிருந்ததாகவும் அதனாலேயே அப்பகுதி செக்கடி என அழைக்கப்பட்ட தென்றும் இங்கு வாழும் முதியோர் கூறுவர். அண்மைக் காலம் வரை சில முதியவர்கள் இப்பகுதியினைச் செக்கடி என்றும் அழைத்தனர் என்பது இன்றும் பலருக்கு நினைவிருக்கும்.

செக்குகளில் உற்பத்தியாக்கப்படும் எண்ணெய் நகரங்களில் அமைந்திருந்த கடைகளில் வைத்தும் விற்கப்படும்; தோட்டங்களுக்கு, கிராமங்களுக்குக் கொண்டு சென்றும் விற்கப்படும். சிலர் தள்ளு வண்டிகளில் கொண்டு சென்று விற்றனர்; சிலர் சைக்கிள் வண்டிகளில் எண்ணெய்யைக் கொண்டு சென்று விற்றனர். சிலர் தலையில் சுமந்து சென்றும் விற்றனர். முப்பது நாற்பதுகளில் எண்ணெய்க் கடைகளாகக் கருதப்பட்டவை சுப்பையா செட்டியாரது கடையும் ராமச்சந்திர செட்டியாருடைய கடையுமே. இன்று ஆர். டி. சி. என மிகப் பிரபலமானதாக இருக்கும் 'ஆர். தங்கவேல் செட்டியார்' எனும் எண்ணெய்க் கடை ராமச்சந்திர செட்டியாரின் புத்திரரான தங்கவேல் செட்டியாரினால் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது. அவரது உழைப்பு, இனிய சுபாவம், பிறருக்கு உதவும் தன்மை, நேர்மை, அவரைச் சீக்கிரத்தில் உயர்த்தின. தந்தையின் அகால மரணத்தால், தனது இளம் வயதிலேயே வியாபாரப் பொறுப்பை ஏற்ற மாரிமுத்து செட்டியார் தன் தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனத்தை மிகச் சிறப்பாக இயக்கி, "இவன் தந்தை என்னோற்றான்" என ஊராரைச் சிந்திக்க வைத்துள்ளார். இன்று முஸ்லிம்களால் நடத்தப்படும் எண்ணெய்க் கடைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாத்தளையில் இருக்கின்றன என்ற போதிலும் ஏனைய அனைத்து எண்ணெய்க் கடைகளும் தமிழர்களால் நடத்தப்படுபவையே.

உரம், கிருமி நாசினிகள், பூச்சி கொல்லிகள், விவசாய உபகரணங்கள் போன்ற பொருட்களின் விற்பனையில் தம்புள்ளையிலும், ரத்தொட்டையிலும், கலேவெலையிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டுள்ளனர்; சிங்களவர்களும் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் மாத்தளை நகரினிலே இந்தப் பொருட்களின் விற்பனையிலே ஈடுபட்டிருக்கும் ஒரு நிறுவனம் பறங்கியர்களுடையது; இந்த விற்பனையில் முன்னணியில் இருக்கும் சிவசக்தி கோர்ப்பரேஷன், விஜயாஸ், அமுதாஸ் எனும் மூன்று நிறுவனங்களும் தமிழர்களால் நடத்தப்படுபவையே. தனது இளைய சகோதரர்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு, சிவசக்தி கோர்ப்பரேஷன் எனும் நிறுவனத்தை அமைத்து, முன் அனுபவம் எதுவும் இல்லாத ஒரு துறையில் இறங்கி, கடும் உழைப்பையும், நேர்மையையும், பணிவினையும் துணையாகக் கொண்டு, தான் இறங்கிய துறையில் பெரும் வெற்றியை ஈட்டி, அத்துறையில் மாத்தளை மாவட்டத்தின் முடிசூடா மன்னனாகத் திகழும் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சண்முகம் சந்திரசேகரத்தைப் பற்றி நிச்சயமாகத் தமிழர்கள் பெருமைப்படலாம்.

1911 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் நாவிதர்கள் நாற்பத்து நான்கு பேர் இருந்திருக்கின்றனர்; இவர்கள் அத்தனைப் பேரும் தமிழர்களே, நாற்பது ஐம்பதுகளிலே தம்புள்ளை, கலேவெல, நாவுளை போன்ற பிரதேசங்களிலே சிங்களவர்களும் நாவிதர்களாகத் தொழில் செய்திருக்கலாம்; ஆனால் 1955 ஆம் ஆண்டில் ஏ. ஜி. சமரவீர என்பவர் ஏ. ஜீ. எஸ். செலூன் என்பதை ஆரம்பிக்கும் வரை, மாத்தளை நகரினில் இருந்த செலூன்களில் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் தமிழர்களுடையனவாகவே இருந்தன; அந்த ஒன்று ஒரு முஸ்லிமுக்கு உரியதாக இருந்தது. ஆனால் இன்று இத்தொழிலில் தமிழர்களின் தொகை குறைந்து விட்டது; தமிழர்கள் நடத்தும் செலூன்கள் மூன்று மாத்திரமே மாத்தளை நகரில் இருக்கின்றன.

கவர்ச்சி மிகு கடற்கரைகளோ, அழகான பூங்காக்களோ, கேளிக்கைக் களியாட்ட வசதிகளோ அற்ற மாத்தளையிலே, ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளில் இருந்து, தொலைக்காட்சிப் பெட்டிகள் வீட்டுக்கு வீடு வரும்வரை இப்பிரதேச மக்களுக்குப் பிரதான பொழுது போக்காக இருந்தது சினிமாவே; மாத்தளைப் படமாளிகைகளுக்கும் தமிழர்களுக்கும் இடையே இருந்த உறவு அலாதியானதாகும். இந்நகரின் முதல் படமாளிகையான தாஜ்மஹால் தியேட்டர், நாற்பதுகளின் ஆரம்பத்திலே ஸ்டார் தியேட்டர் என்ற பெயரிலே, அப்துல் அஸீஸ் ஹாஜியார் எனும் முஸ்லிமால் கட்டப்பட்டபோதிலும், ஓரிரு ஆண்டுகளில் அது டாக்டர் சோமசுந்தரத்தின் உடைமையாகிவிட்டது. இன்று வரை அது அவரது குடும்பத்தினரிடமே இருக்கிறது. இரண்டாவதாகக் கட்டப்பட்ட சென்ட்ரல் தியேட்டர் 1958ஆம் ஆண்டிலிருந்து பெஸ்டியன் குடும்பத்தினரின் உடைமையாக இருக்கின்ற போதிலும் அது கட்டப்பட்டதும் 1958 ஆம் ஆண்டுவரை நடத்தப்பட்டதும் தமிழர்களாலேயே. 1960 களில் சுகந்தா, இராசு எனும் இரு தமிழர்கள் காஸினோ தியேட்டரைக் கட்டினர்; 1983ஆம் ஆண்டுவரை அவர்களே இப் படமாளிகையை நடத்தினர்.

மாத்தளை மாவட்டத்தில் மேசன்களாக, தச்சர்களாக, கட்டட ஒப்பந்தக்காரர்களாகப் புகழ்பெற்ற தமிழர்கள் மிகக் குறைவே. ஆனால் கட்டிடப் பொருட்களான செங்கல், சுண்ணாம்பு, உற்பத்தி, கருங்கல், ஜல்லிக்கல் வினியோகம் போன்றவற்றில் தமிழர்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். ஐம்பதுகளில் அழகக்கோன் எனும் தமிழர் செங்கல் உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒரு முக்கியப் புள்ளியாக திகழ்ந்தார். சுண்ணாம்பு உற்பத்தியிலும், கட்டிடப் பொருள் வினியோகத்திலும் தமிழர்கள் ஒரு கணிசமான பங்கினை வகிக்கின்றனர்.

தோட்டங்களுக்கு வெளியே, கிராமப் புறங்களில் வாழ்ந்த தமிழர்கள் ஆடு, மாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பதில் பேரார்வம் காட்டி வந்துள்ளனர். பால், தயிர், மோர் விற்பனை இவர்களுக்குக் கணிசமான ஒரு மேலதிக வருமானத்தை வழங்கியது. பெரிய பண்ணைகள் நடத்தும் தமிழர்கள் யாரும் மாத்தளை மாவட்டத்தில் இல்லை என்ற போதிலும் ஏழெட்டு பசுக்களை வளர்த்து குடும்பங்கள் நடத்தும் தமிழர்கள் பலர் இம்மாவட்டத்தில் இருக்கின்றனர்.

பழைய சாக்கு, போத்தல், பேப்பர் – இத்தகைய பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரம் ஒரே நேரத்தில் பலர் ஈடுபடக்கூடிய வியாபாரம் அல்ல; இதில் ஈடுபடக்கூடியவர்களின் எண்ணிக்கை மிகச் சிறியதாகவே இருக்கும். மாத்தளை மாவட்டத்தில் இவ் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் தொகை சிறியதே; ஆனால் ஈடுபட்டவர்கள் அனைவரும் தமிழர்களாகவே இருந்தனர். பொதுவாக நாடார் சமூகத்தைச் சேர்ந்த தமிழர்களே இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். சாத்தையா நாடார், கருப்பண்ணன் நாடார், சில்ல நாடார், தங்கையா நாடார், குழந்தை சாமி நாடார், கோவில் பிள்ளை நாடார் போன்ற பலரும் இவ்வியாபாரத்தில் ஈடு பட்டிருக்கின்றனர்.

சட்டம் தமிழர்கள் அதிகமாக ஈடுபட்ட மற்றொரு துறையாகும். வழக்கறிஞர்கள் என்போர் தோன்றுவதற்கு முன் காணி உறுதிகள் போன்றவற்றை நொத்தாரிஸ் என அழைக்கப்பட்டவர்களே எழுதினர். மாத்தளையில் அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த தமிழ் நொத்தாரிஸ்கள் முருகேசுப்பிள்ளை, சபாபதிப்பிள்ளை போன்றோர் ஆவர். அரியநாயகம், ஏ. சி. எஸ். ராஜரத்தினம் போன்றோர் ஆரம்ப கால தமிழ் வழக்கறிஞர்கள் ஆவர். நாற்பது ஐம்பதுகளிலே ஜே. எல். தம்பிராஜா, தியாகராஜா, எதிர்மானசிங்கம் போன்றோரும் பின்னர் முருகையா, முத்தழகு போன்றோரும் வழக்கறிஞர்களாகக் கடமையாற்றியுள்ளனர். இப்போது மூன்று தமிழ் வழக்கறிஞர்கள் மாத்தளையில் தொழில் புரிகின்றனர்.

மாத்தளைத் தமிழர்கள் பலர் கைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். வெற்றிகரமான கைத்தொழில் அதிபர்களாக பாபா பெடிக்ஸ், சிங்கராஜ் இன்டஸ்ட்டிரிஸ், டயானா சொக்லேட் கொம்பனி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மாத்தளைத் தமிழர்கள் பலர் கொழும்பு, கண்டி போன்ற இடங்களிலும் வியாபாரம் செய்கின்றனர். லெட்சுமி டெக்ஸ்டைல் அதிபர் திரு. சுப்பிரமணியம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாவார்.

ஆசிரிய, ஆசிரியைகளாக, அதிபர்களாக, வங்கி ஊழியர்களாக, அரசாங்க திணைக்களங்களில் கடமை புரிபவர்களாக – இப்படி பல தமிழர்கள்.

பொதுவாக உழைப்பாளிகளாகவே இங்கு வந்த தமிழர்கள் இன்றும் கடின உழைப்பாளிகளாகவே இருந்து, தாம் செய்யும் பல தொழில்களிலும் வெற்றி பெற்று நல்ல நிலையில் வாழ்கின்றனர் எனக் கூறலாம்.

★ ★ ★
★ ★
★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டத் தமிழர்களும் கல்வியும்

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஏறத்தாழ 900 சதுர மைல் பரப்புள்ள மாத்தளை மாவட்டத்தில் பல்லின மக்கள் மத்தியிலே பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் கல்வி வரலாற்றை எழுதுவது சுலபமான ஒரு காரியமல்ல. அவர்களுக்கான பாடசாலைகள் எப்போது தோன்றின; அவை எவ்வாறு தோன்றின? அப்பாடசாலைகளிலே காலத்திற்குக் காலம் மாணவர் தொகை எவ்வாறு வளர்ந்தது அல்லது எவ்வாறு குன்றியது? அப்பாடசாலைகளிலே பணியாற்றிய ஆசிரியர்களின் நிலை என்ன? அவர்களது கல்வித் தகைமைகள் யாவை? தம் பிள்ளைகளின் கல்வியைப் பற்றித் தமிழ்ப் பெற்றோர்கள் காட்டிய மனோபாவம் என்ன? வேறு இனப் பாடசாலைகளில் படித்த தமிழ் மாணவர்கள் எத்தனை பேர்? போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் பற்றி ஒழுங்கான ஆய்வுகள் நடத்திய பின்னரே இத்தகைய ஒரு வரலாற்றினைத் திருப்திகரமான முறையிலே எழுதலாம். எனவே இங்கே தரப்படுவது மேலோட்டமான ஒரு கண்ணோட்டமே.

பல இன மக்கள் வாழ்கின்ற மாத்தளை மாவட்டத்திலே ஒரு குறிப்பிட்ட பகுதியில் மாத்திரம் குடி அமராது, தமிழர்கள் தம் பொருளாதாரத் தேவைகளுக் கேற்ப பல்வேறு பகுதிகளிலும் பரவலாக குடியமர்ந்துள்ளனர்; பொதுவாக இவர்களது குடியமர்வுகள் சிங்களக் கிராமங்களின் மத்தியிலேயே அமைந்திருந்தன. இத்தகைய சூழலிலே குடியமர்ந்த தமிழர்கள் ஆரம்ப கால கட்டங்களிலே தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதிலேயே தம்முடைய கவனத்தைச் செலுத்தி இருப்பார்களே ஒழிய கல்வியைப் பற்றியோ, கலாசாரத்தைப் பற்றியோ சிந்தித்து இருக்கப் போவதில்லை. எனவே இக்கால கட்டத்தில் தம் பிள்ளைகளுக்கென அவர்கள் பாடசாலைகள் எதுவும் நிறுவி இருக்கப் போவதில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியிலே மாத்தளை மாவட்டத்துத் தமிழர்களுக்குப் படிப்பதற்குப் பாடசாலைகள் இருக்கவில்லை என்பதனால் அவர்கள் தம் பிள்ளைகளுக்குக் கல்வியறிவை வழங்குவதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்ற முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது. தமிழ் மொழி அறிவு ஒன்றை மட்டுமாவது வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதற்கு அக்கால கட்டத்திலே எழுதப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள் சான்றுகளாக இருக்கின்றன. ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பது, அறுபதுகளிலே வாழ்ந்த ஜெய்னுல் ஆப்தீன், குப்பைத்தம்பி, மீரா சாஹிபு, சபாபதிப்பிள்ளை, முருகேசுபிள்ளை போன்ற நொத்தாரிஸ்கள் தமிழில் எழுதியுள்ள காணி உறுதிப் பத்திரங்கள் அவர்கள் பெற்றிருந்த மொழி அறிவைக் காட்டுகின்றன. இவர்கள் மாத்தளையில் பிறந்து வளர்ந்தவர்களா என்பதைப் பற்றி எங்களுக்கு எதுவும் சொல்ல முடியாது இருப்பதனால் இவர்களுடைய தமிழறிவை நாம் மாத்தளையோடு உறுதியாகத் தொடர்புபடுத்த முடியாது.

ஆனால் தமிழர்களே விற்பவர்களாக, வாங்குபவர்களாக, சாட்சிகளாக விளங்கும் பல காணி உறுதிப் பத்திரங்களிலே சம்பந்தப்பட்ட தமிழர்களில் பலர் தத்தம் பெயர்களைத் தமிழிலில் எழுதியிருப்பது தமிழர்களில் பலர் தம் பெயர்களை எழுதக்கூடிய அளவிற்காவது தமிழை அறிந்திருந்தனர் என்பதை உணர்த்துகிறது.

மாத்தளை நகரத்தில் தாரவந்தைப் பகுதியில் 1915ஆம் ஆண்டில் பிறந்த ஒரு முஸ்லிம் மாது "நான் பாடசாலை என்று எங்கும் போனதில்லை; ஆனால் நானும் என்னோடு ஒத்த வேறு சில சிறுமிகளும் மங்களம் அக்கா வீட்டுக்குப் போய் படிப்போம்" என்று கூறுவார். நான்கு, ஐந்து இலக்கங்களையுடைய எண்களை இவருக்குச் சரியாக இனம் காணமுடியாது; ஆனால் வசன நூல்களையும் குதுபு நாயகம் போன்ற செய்யுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் மிக அழகாக வாசிப்பார். இப்படிப்பட்ட மங்களம் அக்காக்கள் பலர் தமிழர்கள் மத்தியில் முன்னரும் இருந்திருக்கலாம்.

மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்ட தமிழர் குடியமர்வுகளை, பெருந்தோட்டங்களுக்கு உள்ளே ஏற்பட்ட குடியமர்வுகள், அவற்றுக்கு வெளியே ஏற்பட்ட குடியமர்வுகள் என இருவகையாகப் பிரிக்கலாம். எனவே மாத்தளை மாவட்டத் தமிழர்களின் கல்வி வளர்ச்சியை நன்கு புரிந்து கொள்வதற்கு இவ்விருவகையான குடியமர்வுகளும் ஆராயப்பட வேண்டும்.

## பெருந்தோட்டங்களில் கல்வி

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பது களிலிருந்தே இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டங்களில் குடியமர ஆரம்பித்து விட்டனர் என்ற போதிலும் 1890 களில் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பமான பின்னரே இத் தோட்டங்களில் இந்தியத் தொழிலாளர்கள் ஓரளவு நிரந்தரமாக வாழ ஆரம்பித்தனர் எனக் கூறலாம். எனவே 1890களுக்கு முன்னர் ஏனைய மலையகப் பகுதிகளில் போலவே மாத்தளையிலும் அரசாங்கமோ, தோட்ட நிர்வாகமோ தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வியைப் பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்றே கூறவேண்டும். 1865 – 1872 காலப்பகுதியில் இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த ஹேர்குயிலிஸ் ரொபின்ஸன் குடியேற்ற நாட்டு செயலாளருக்கு அனுப்பிய அறிக்கை மேலே கூறப்பட்ட கூற்றினை உறுதிப்படுத்துகிறது.

1890களுக்கு முன்னர் தோட்டப் பிள்ளைகளுக்காக இருந்த ஒரே பாடசாலை தோட்டக் கங்காணிகளால் நடத்தப்பட்ட லைன் பள்ளிக்கூடங்கள் மாத்திரமே. இந்த லைன் பள்ளிக் கூடங்களும் இரு வகைப்பட்டன. ஒன்று தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடங்கள். இங்கு இரவு நேரங்களில் கல்வி புகட்டப்பட்டது; ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், ஒழுக்க நெறிகள் தொடர்பான கதைகள் போன்றவை வாய்மொழி மூலமாகப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இது மாத்திரந்தான் அவர்களுக்கு வழங்கப்பட்ட படிப்பு. இரண்டாவது வகையான லைன் பள்ளிக்கூடங்கள் கங்காணிமார், கணக்குப்பிள்ளை போன்றோர்களின் பிள்ளைகளுக்கான பள்ளிக் கூடங்கள்; இவற்றில் எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றுடன் சிறிது ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. பெருந்தொகையினராக இருந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கிடைத்த படிப்பு மிகச் சொற்பமே என்பது இவற்றிலிருந்து புலப்படும். மாத்தளை மாவட்டத்துப் பெருந்தோட்டங்களிலும் இதே நிலைதான் நிலவியிருக்கும்.

இலங்கை முழுவதிலுமே தோட்டச் சிறார்களின் கல்வி நிலை எந்தளவு தாழ்வானதாக இருந்தது என்பதைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை புலப்படுத்தும்:

*1903ஆம் ஆண்டு - தோட்டப் பள்ளிக்கூடங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள்*

| | | |
|---|---|---|
| இந்தியத் தொழிலாளர் தொகை | – | 4,06,821 |
| பாடசாலை செல்லும் வயதடைந்த (6–12) பிள்ளைகள் தொகை | – | 25,000 |
| மாணவர் வரவு | – | 1765 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1,765 மாணவர்களில் பெரும்பான்மையோர் இரண்டாம் வகுப்புக்கும் செல்வதில்லை என்றும் இந்த மதிப்பீடு கூறுகின்றது.

அன்று கல்வித் திணைக்களத் தலைவராகப் பணியாற்றிய எஸ். எம். பரோஸ் 1904ஆம் ஆண்டில் தோட்டச் சிறார்களின் கல்வி தொடர்பாக வெளியிட்ட ஓர் அறிக்கை வெள்ளைக்கார அதிகாரிகளின் தவறான மனப்போக்கை நன்கு காட்டுகிறது. தோட்டச் சிறார் கையொப்பமிடவும், தாய் மொழியில் எளிமையான வசனங்களை எழுதவும், வாசிக்கவும், நாளாந்த வரவு செலவுக் கணக்குகள், சம்பள அளவு என்பவற்றை விளங்கிக் கொள்ளும் வகையில் சிறிதளவு கணிதமும் தெரிந்து வைத்திருந்தால் போதும் என்றே அவர் கருதினார்.

"நாம் தொழிலாளிக்கு அவன் மேனிலை அடையக்கூடிய கல்வியை அளிப்போமாயின் அவன் அவனது சமுதாயத்திற்குப் பொருத்தமானவனாக இருக்க மாட்டான்" – இது தோட்டச் சிறார்களின் கல்வியை ஆராய்ந்த வோஸ் குழு வெளிப்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையாகும். நாட்டின் கல்வி நடவடிக்கைகளை நெறிப்படுத்தியவர்கள் தோட்டச் சிறார்களுக்குக் கல்வி அவசியமில்லை என்று பகிரங்கமாகவே கூறிக் கொண்டிருக்கையிலே தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வழங்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? மாத்தளை மாவட்டத் தோட்டச் சிறார்களின் கல்வி நிலையும் இப்படித்தான் இருந்திருக்கும்.

1951 ஆம் ஆண்டிலே, 10 வருடங்கள் கட்டாயக் கல்வி வயதாக உயர்த்தப்பட்டது; இத்துடன் தகுந்த வகுப்பறை, தளபாடங்களுடன் ஆசிரியருக்கான இருப்பிட வசதி போன்றவைகளுடன் பாடசாலைகளை அமைத்தல் தோட்ட நிர்வாகிகளின் பொறுப்புக்களாக்கப் பட்டன. இவற்றை நிறைவேற்றாத நிர்வாகி தண்டிக்கப்படுவர் எனவும் சட்டம் கூறியது.

இத்தகைய சட்டங்களின் காரணமாக மலையகத்தின் ஏனைய மாவட்டங்களில் போலவே மாத்தளை மாவட்ட பெருந்தோட்டங்களான பிட்டகந்த, கம்மடுவ, நிக்கலோய, ஹுபுகஸ்பிட்டிய, கந்தநுவரை, பண்டரப்பொல, விகாரகம, செலகம, மவுஸாகல, யடவத்த என இருபதுக்கும் மேற்பட்ட தோட்டங்களில் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

தோட்ட நிர்வாகம் தோட்டங்களிலே பள்ளிக் கூடங்களை ஆரம்பித்தவுடன் தோட்டச் சிறார்களின் கல்வியில் பெரும் முன்னேற்றம் ஏறபட்டுவிட்டது என்று கருதிவிடக் கூடாது. இப்பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் ஓர் அறை, ஓர் ஆசிரியர், முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையான கல்வி வசதி என்பவற்றை உள்ளடக்கியனவாகவே இருந்தன. "சிறைக் கூடத்தை விட, மாட்டுத் தொழுவத்தை விட மோசமானவை; அந்தக் காலத்தில் தோட்ட நிர்வாகிகள், தொழிலாளருடைய குழந்தைகள் தேயிலைச் செடிகளை மிதித்து நாசப்படுத்தி விடாமல் தடுக்கும் பொருட்டு, கல்விக் கூடம் என்ற பெயரில் அமைத்து வைத்த சிறைக்கூடமே இப்பள்ளிக் கூடங்கள்" – இது தோட்டப் பள்ளிக்கூடங்களைப் பற்றி திருமதி சொர்ணவல்லி பத்மநாபஐயர் தரும் தகவல். திருமதி பத்மநாப ஐயர் தோட்டப் பாடசாலைகளைப் பற்றி வழங்கியுள்ள வர்ணனை மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கும் பொருத்த மானதாகவே இருந்திருக்கும்.

1960 களிலிருந்து அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளைப் படிப்படியாக கையேற்க ஆரம்பித்தது, 1980ஆம் ஆண்டளவில் சகல தோட்டப் பாடசாலைகளும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டன. 1980ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் பதினெட்டு தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று இருந்தது. தோட்டப் பாடசாலைகள் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட பின்னர் அவற்றில் பெரும் முன்னேற்றத்தை நாம் காண்கின்றோம். பௌதீக வளங்களைப் பொறுத்த அளவிலும் கல்வித் திணைக்கள மேற்பார்வை அளவிலும் இப்போது முன்னேற்றம் காணப்படுவது உண்மையென்ற போதிலும் பெற்றோர்களின் வறுமை, கல்வியைப் பற்றிய அவர்களது மனோபாவம் போன்றவற்றில் மாற்றங்கள் ஏறப்ட்டாலே ஒழிய தோட்டச் சிறார்களின் கல்வியில் பெரும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

**1986 / 87 சமூக, பொருளாதார ஆய்வு**

| | நகர்ப்புறம் | கிராமப்புறம் | பெருந்தோட்டம் |
|---|---|---|---|
| 1. எழுத்தறிவு | 93 | 89.5 | 68.5 |
| 2. பாடசாலைக் கல்வியைத் தவிர்ப்போர் வீதம் | 7.4 | 10.9 | 32.3 |
| 3. எழுத்தறிவற்றோர் – பாடசாலை கல்வி அற்றோர் | 7.0 | 10.5 | 31.5 |
| 4. ஆரம்பக் கல்வி வரை | 31.7 | 42.2 | 52.5 |
| 5. இடைநிலைக் கல்வி வரை | 36.1 | 31.1 | 12.1 |
| 6. க. பொ. த. (சா/நி) சமமான | 18.5 | 11.2 | 2.1 |
| 7. க. பொ. த. (உ/நி) சமமான | 4.2 | 2.0 | 0.2 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள அட்டவணை தோட்டச் சிறார்களின் கல்வியில் இன்றும் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றது. நகர்ப் புறத்தோடு ஒப்பிடும்போது மட்டுமல்ல, கிராமப்புறத்தோடு ஒப்பிடும் போதும் பெருந் தோட்டத்துறை கல்வி நிலை திருப்தியற்றதாகவே இருக்கிறது.

தோட்டப் பாடசாலைகள் தோட்டச் சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கு எதுவும் செய்து விடவில்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக் கூடாது. மாத்தளை தோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிட்டு நகர்ப்புற பாடசாலைகளுக்குச் சென்று படித்த சிலர் பட்டதாரிகளாகி இருக்கின்றனர்; சிலர் பாடசாலை அதிபர்களாகி இருக்கின்றனர்; சிலர் ஆசிரியர்களாக, ஆசிரியைகளாக இருக்கின்றனர்.

1994ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்ட தோட்டப் பாடசாலைகள் அனைத்தும் 'சீடா' (SIDA) – சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் – எனும் அமைப்பின் அரவணைப்புக்குள் வைக்கப்பட்டன. இந்த நிறுவனத்தின் நிதி உதவியால் தோட்டப் பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அதிகரிக்கப்பட்டு இருப்பதைப் போலவே கல்வித் தரமும் உயர்த்தப் பட்டுள்ளன.

சீடா நிறுவனத்தின் மூலம் மாத்தளை மாவட்ட தோட்டப் பாடசாலைகள் இதுவரை பெற்ற சில சேவைகளும் அவற்றின் பெறுமானங்களும் கீழே தரப்படுகின்றன:

| பாடசாலைப் பெயர் | சேவை விபரம் | பெறுமானம் ரூபாய் |
|---|---|---|
| கந்தநுவர த. வி. | 100 x 20 வகுப்பறை – 3<br>அதிபர் விடுதி – மலசலகூடம் 6 | 48,75,176 |
| உனஸ்கிரிய த. வி. | 60 x 60 வகுப்பறை, அதிபர் விடுதி<br>மலசல கூடம் | 17,15,114 |
| எல்கடுவ த. வி. | 110 x 25 மாடிக் கட்டிடம்<br>அதிபர் விடுதி – மலசலகூடம் | 40,37,009 |
| வாரியபொல த. வி. | அதிபர் விடுதி, நீர் வசதி | 8,20,289 |
| ரத்வத்தை த. வி. | 100 x 20 வகுப்பறை, அதிபர் விடுதி<br>மலசல கூடம், நீர் வசதி | 19,05,002 |
| விகாரகம த. வி. | 60 x 20 வகுப்பறை, அதிபர் விடுதி,<br>மலசல கூடம் | 18,13,409 |
| செலகம த. வி. | 60 x 20 வகுப்பறை, அதிபர் விடுதி,<br>மலசல கூடம் | 16,30,149 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்றன வற்றைப் போன்ற அபிவிருத்தி வேலைகள் தங்கந்த த. வி. , நடுத்தோட்டம் த. வி., மாத்தளை மேற்கு த. வி., யட்டவத்த த. வி., கலைமகள் ந. வி., மாத்தளை இந்து ம.வி., நிக்கலோயா த. வி., பம்பரகல த. வி. , மவுஸாகல த. வி., எல்லகல த. வி., ஹபுகஸ்பிட்டிய த. வி. போன்ற வித்தியாலயங்களிலும் செய்யப்பட்டுள்ளன. இவை நிச்சயமாக இப்பாடசாலைகளின் கல்வித் தரம் எதிர்காலத்தில் உயர உதவும்.

முதலாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை மாத்திரம் இருந்த தோட்டப் பாடசாலைகள், சொற்பமான மாணவர்களை மாத்திரம் கொண்டிருந்த பாடசாலைகள், சிலவேளை ஒரு ஆசிரியரை மாத்திரம் கொண்டிருந்த தோட்டப் பாடசாலைகள் இப்போது எந்தளவு முன்னேறியுள்ளன என்பதைக் கீழே உள்ள அட்டவணை உணர்த்தும்:

**மாத்தளை மாவட்டத் தோட்டப் பாடசாலைகள்**

| பாடசாலைப் பெயர் | வகுப்புகள் | ஆசிரியர் தொகை | மாணவர் தொகை |
|---|---|---|---|
| நடுத்தோட்டம் த. வி. | 1 – 8 | 8 | 160 |
| பம்பரகல த. வி. | 1 – 5 | 2 | 37 |
| தங்கந்த த. வி. | 1 – 5 | 4 | 67 |
| கந்த நுவர த. வி. | 1 – 11 | 18 | 494 |
| மவுஸாகல த. வி. | 1 – 5 | 3 | 36 |
| நிக்கலோய த. வி. | 1 – 5 | 4 | 83 |
| வேவல்மட த. வி. | 1 – 5 | 3 | 61 |
| கனேஸ்வரா த. வி. | 1 – 9 | 10 | 185 |
| பிட்டகந்த த. வி. | 1 – 9 | 8 | 174 |
| விவேகானந்தா த. வி. | 1 – 5 | 5 | 66 |
| பண்டாரப்பொல த. வி. | 1 – 5 | 3 | 46 |
| யட்டவத்த த. வி. | 1 – 11 | 7 | 119 |
| செலகம த. வி. | 1 – 5 | 8 | 128 |
| மஹலவ கந்த த. வி. | 1 – 5 | 13 | 231 |
| எல்கடுவ த. வி. | 1 – 11 | 16 | 557 |
| ஹுனுகல த. வி. | 1 – 5 | 6 | 108 |
| வாரியப் பொல த. வி. | 1 – 5 | 6 | 95 |
| மாத்தளை மேற்கு | 1 – 5 | 2 | 51 |
| ரத்வத்த த. வி. | 1 – 11 | 13 | 165 |
| உனஸ்கிரிய த. வி. | 1 – 11 | 3 | 145 |
| ஒவிலிகந்த த. வி. | 1 – 5 | 2 | 35 |
| கம்மடுவ த. வி. | 1 – 11 | 13 | 324 |
| ஓபல்கல த. வி. | 1 – 5 | 4 | 69 |
| கரகஹ தென்ன த. வி. | 1 – 5 | 2 | 41 |
| நாகல த. வி. | 1 – 5 | 3 | 81 |
| மவுஸாகந்த த. வி. | 1 – 5 | 1 | 20 |
| ஹபுகஸ்பிட்டிய த. வி. | 1 – 8 | 5 | 73 |
| எல்லகல த. வி. | 1 – 5 | 2 | 41 |
| பள்ளே தென்ன த. வி. | 1 – 5 | 3 | 22 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தோட்டங்களுக்கு உட்படாத பிரதேசங்களில் குடி அமர்ந்திருந்த தமிழர்களின் கல்வி வளர்ச்சி

மாத்தளை மாவட்டப் பெருந்தோட்டங்களில் குடியமர்ந்து வாழ்ந்த அளவுக்குத் தமிழர்கள் அவற்றுக்கு வெளியே இருந்த பிரதேசங்களில் குடி அமரவில்லை என்ற போதிலும் காலப்போக்கில் கிராமப்புறங்களிலும் மாத்தளை மாவட்ட நகரங்களிலும் வாழ்ந்த தமிழர்களின் தொகை கணிசமாக வளர்ந்து விட்டது. இவ்வாறு வாழ்ந்த தமிழர்களின் தொகை தோட்டத் தொழிலாளர்களின் தொகையோடு ஒப்பிடும் போது சிறியதாக இருந்தது என்ற போதிலும், இவர்களின் உயர் சமூக, பொருளாதாரப் பின்னணி இவர்களுக்கு வழங்கிய வாய்ப்புக்களினால் இவர்கள் கல்வித்துறையில் கணிசமான வளர்ச்சி அடைந்து தம் சமூக, பொருளாதார நிலையினையும் அந்தஸ்த்தையும் மேலும் உயர்த்திக் கொண்டார்கள்.

1896 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் 21 அரசாங்க சிங்களப் பாடசாலைகளும் கிறிஸ்தவ சமயப் பிரச்சார சபைகளால் நடத்தப்பட்ட 17 பாடசாலைகளும் இருந்தன. சமய பிரச்சாரச் சபைகளால் நடத்தப்பட்ட பாடசாலைகளில் குளோடா எஸ்டேட் ஆண்கள் பாடசாலை ஒன்று மாத்திரமே தமிழ்ப் பாடசாலையாக இருந்தது. ஆனால் இந்தப் பாடசாலை குளோடா தோட்டத்தில் வாழ்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரமே உதவியிருக்கும்.

புனித தோமியர் ஆண்கள் பாடசாலை, புனித தோமியர் பெண்கள் பாடசாலை, கிறிஸ்து தேவலாய ஆண்கள் பாடசாலை எனும் மூன்றும் கிறிஸ்தவ பிரச்சார சபைகளினால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலை களாகும். மாத்தளை ஆண்கள் பௌத்த பாடசாலை என்பது பௌத்தர்களால் நடத்தப்பட்ட ஓர் ஆங்கிலப் பாடசாலையாகும். இதுவே பின்னர் விஜயாக் கல்லூரியாக மாற்றம் பெற்றது. இந்நான்கு பாடசாலைகளும் மாத்தளை நகரத்தில் அமைந்து இருந்தன.

மாத்தளை மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் அனைத்திலும் தமிழர்கள் வாழ்ந்த போதிலும் அவர்களுக்கென ஒரு தனிப் பாடசாலையும் இருக்கவில்லை. தம்முடைய பொருளாதாரத் தேவைகளின் காரணமாகத் தமிழர்கள் சிதறி வாழ்ந்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

சிங்களப் பகுதிகளில் சிங்களப் பாடசாலை களுக்கு அண்மையில் வாழ்ந்த தமிழர்களில் சிலராவது சிங்களப் பாடசாலைகளில் படித்திருக்கலாம். தம்புள்ளையில் வாழ்ந்த தமிழர்கள் பலர் சிங்களப் பாடசாலைகளுக்குச் சென்றனர் என்பதற்கு ஆதாரம் இருக்கின்றது. ஆனால் பண வசதிகளுடன் வாழ்ந்த தமிழர்கள் மாத்தளை நகரில் இருந்த ஆங்கிலப் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பியிருப்பர்.

பண வசதி படைத்த மாத்தளை மாவட்ட தமிழர்கள் பலர் தம் பிள்ளைகளைக் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி போன்ற இடங்களுக்கு அனுப்பிப் படிப்பித்துள்ளனர். ஆரம்பக் கட்டங்களிலே வெளிநாடு சென்று படித்து தாயகம் திரும்பிய மாத்தளைத் தமிழர்களில் ஒருவர் டாக்டர் கே. எம். ஆர். சுவாமி ஆவார். வைத்தியத் துறையில் பட்டம் பெற்று இலங்கை திரும்பிய டாக்டர் சுவாமி மாத்தளை மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் தனியார் வைத்தியசாலை ஒன்றை நிறுவித் தொழில் நடத்தினார். பொது விஷயங்களில் அதிகம் ஈடுபட்ட டாக்டர் சுவாமி மக்களால் மதிக்கப்பட்டவர் ஆவார். திரு. எஸ். எஸ். கந்தசாமி தன் புத்திரர்களான இராமநாதன், அருணாசலம், குமாரசாமி எனும் மூவரையும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சேர்த்துப் படிப்பித்தார். இவர்களில் இராமநாதன் ஒரு பொறியியலாளராகவும், அருணாசலம் ஒரு டாக்டராகவும், குமாரசாமி நில அளவையாளராகவும் கற்றுத் தேறினர். இவ்வாறே குமாரசாமி அவர்களும் தனது மகன் குகனை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியே படிப்பித்தார். திரு. என். பி. செல்லையாவின் மகன் ரத்னசோதி கண்டிக்குச் சென்று படித்தார். அதேபோல் கே. எம். கதிரவேல் அவர்களின் மகன் தர்மலிங்கமும் கண்டி சென்று படித்தவரே.

அன்றே மாத்தளையில் நல்ல ஆங்கிலப் பாடசாலைகளாக புனித தோமியர் கல்லூரி, கிறிஸ்து தேவ கல்லூரி, விஜயாக் கல்லூரி, புனித தோமியர் பெண்கள் கல்லூரி, பி. எம். எஸ். மகளிர் கல்லூரி போன்றவை விளங்கியதால் மாத்தளைக்கு வெளியே சென்று படித்த தமிழர்களின் தொகை சிறியதாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மாத்தளை நகரில் வாழ்ந்த பல தமிழ்ப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை மாத்தளையில் நடந்து கொண்டிருந்த ஆங்கிலக் கல்லூரிகளிலேயே சேர்த்தனர். இக்கல்லூரிகளில் படித்த மாணவர்கள் ஆங்கில அறிவுடையோராய் இருந்ததனால் அரசாங்க வேலைகளுக்கும் தனியார் துறைகளுக்கும் விரும்பிச் சேர்க்கப்பட்டனர். எஸ். குழந்தைவேலு, வீ. அமரசிங்கம், எல். தியாகராஜா செட்டியார், எல். சோமசுந்தரம் செட்டியார், பேராசிரியர் சேமுவல், பேராசிரியர் பிரின்ஸ் டேனியல், டாக்டர் ஜோதிகுமார், வீ. ராஜேந்திரா, வழக்கறிஞர் ஆர். நடராஜா, வழக்கறிஞர் பி. முத்தழகு, வழக்கறிஞர் எம். மாணிக்கவேலு, வழக்கறிஞர் ரெங்கன் தியாகராஜா, கணபதிப்பிள்ளை, டி. எம். சிங்கராஜ், பொறியியலாளர் பத்மநாதன் போன்ற பலரும் புனித தோமியர் கல்லூரியில் படித்தவர்களே. மாத்தளை தமிழர்களில் ''சிவில் சேர்விஸ்'' பரீட்சையில் சித்தியடைந்தவர் திரு. க. மயில்வாகனம் ஒருவரே; இவரும் புனித தோமியர் கல்லூரியில் படித்தவரே.

மாத்தளை சாகிராக் கல்லூரியில் ஏராளமான தமிழ் மாணவர்கள் படித்துள்ளனர்: பி. பாலசுப்பிரமணியம், சீவநாயகம், உதயகுமார், சதானந்தன், சுப்ரமணியம், டாக்டர் சேந்தன், டாக்டர் சியாமளா அருணாசலம், சத்தியபாமா கனகநாயகம், பெருமாள், தியாகலிங்கம் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

ஆசிரியர்களாகப் புகழ் பெற்ற ஜீ. அருணாசலமும் ராமசந்திரனும் விஜயாக் கல்லூரியில் படித்த தமிழர்களாவர்.

புனித தோமியர் கல்லூரி, விஜயாக் கல்லூரி போன்றவை நல்ல கல்லூரிகள் என்ற போதிலும் ஓரளவுக்காவது பண வசதி உடையவர்களுக்கு மாத்திரமே இக்கல்லூரிகளில் படிக்கக் கூடியதாக இருந்தது. வசதி குறைந்த தமிழர்களுக்குத் தம்முடைய பிள்ளைகளை அனுப்புவதற்கு இடம் இல்லாது இருந்த போதே திரு. எஸ். எஸ். கந்தசாமி அவர்கள் இந்து சுயபாஷா பள்ளிக்கூடம் என்று ஓர் பாடசாலையை ஆரம்பித்தார்கள். கந்தசாமி ஸ்கூல் என்று பின்னர் அழைக்கப்பட்ட இப்பாடசாலை பின்னர் தர்மலிங்கம், எஸ். செல்வகுமார், பெரியசாமி, கிருஷ்ணன் போன்ற பட்டதாரிகள் பலரை உருவாக்கியது. இவர்களில் பலர் கல்வித்துறையில் பெரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

1930 களில் திரு. எஸ். எஸ். கந்தசாமி பாக்கிய வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு மகளிர் கல்லூரியை ஆரம்பித்தது பெரும் முக்கியத்துவம் பொருந்தியதாகும். மத்திய மாகாணத்திலே தமிழ்ப் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆங்கிலக் கல்லூரி எனக் கருதப்படும் இது தமிழ்ப் பெண்கள் கல்வி வளர்ச்சிக்குச் செய்துள்ள பணி விதந்துரைக்கப்பட வேண்டியதாகும். இந்தப் பாடசாலையில் படித்த பெண்கள் பலர் இன்று நல்லாசிரியைகளாக மத்திய மாகாணம் எங்கும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மந்தண்டாவளையில் ஒரு கிறிஸ்தவப் பிரச்சார சபை நடத்திக் கொண்டிருந்த தமிழ்ப் பாடசாலை மூடப்பட்டவுடன் டாக்டர் சோமசுந்தரம் ஆரம்பித்த சிறு பள்ளிக்கூடம் இன்று மாத்தளை இந்துத் தேசியக் கல்லூரியாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இக்கல்லூரி மூலம் சர்வகலாசாலைகளுக்குச் சென்ற பல மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் படித்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது ஆமினா முஸ்லிம் மகளிர் கல்லூரி இயங்குகின்ற இடத்தில் அன்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்று ஒன்று திரு. ராமசாமி எனும் ஆசானின் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. வழக்கறிஞர் ஜே. எல். தம்பிராஜா தனது மகனையும் மகளையும் இப்பாடசாலையில் படிக்க வைத்து இப்பாடசாலையின் தரத்தை மாத்தளை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். திரு. மாத்தளை கார்த்திகேசு இப்பள்ளிக்கூடத்தில் படித்தவரே.

ரத்தோட்டை தமிழ் மகா வித்தியாலயம் 1930 களில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பாடசாலை. திரு. சபாபதி எனும் அற்புதமான அதிபரைப் பெற்ற இப்பாடசாலை, ரத்தோட்டைத் தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி இருக்கிறது.

பலாபத்வெல தமிழ்ப் பாடசாலை சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பாடசாலை என்ற போதிலும் உண்மையில் 1920க்குப் பின்னரே ஒரு தனிப் பாடசாலையாக இது இயங்க ஆரம்பித்தது. ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடமாக இருந்த இதனைச் சிரேஷ்ட பொதுத் தராதரப் பத்திரப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்ஷைக்குப் பரீட்ஷார்த்திகளை அனுப்பும் பாடசாலையாக மாற்றிய பெருமை திரு. ஏ. கே. சுப்பிரமணியம் எனும் ஓர் அற்புதமான அதிபருக்கு உரியதாகும். திரு. பீலிக்ஸ், திரு. கே. பழனிநாதன், திரு. பி. லோகநாதன், திரு. கே. அழகுராஜா, திருமதி எஸ். பார்வதி, திரு. கே. ரங்கநாதன், திரு. நஜீமுத்தீன், திரு. முராப், திரு. ஜலீல் போன்றோர் இப்பாடசாலையின் குறிப்பிடத் தகுந்த பழைய மாணவர்கள் ஆவர். இப் பாடசாலையின் பழைய மாணவரான திரு. லோகநாதன் 1962 இல் இருந்து இப்பாடசாலையில் ஆசிரியராகவும் 1972 இல் இருந்து 1993வரை அதிபராகவும் ஆற்றிய தூய, பாரிய பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏறத்தாழ 1920களில் கிறிஸ்தவப் பிரசாரச் சபை ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்ட கவுடுபெலல்ல தமிழ் வித்தியாலயம் மிக நீண்ட காலமாக ஓர் ஆரம்பப் பாடசாலையாகத்தான் இருந்திருக்கிறது. திரு. ஜீ. எஸ். ஜோஸப் எனும் ஆசிரியர் அதிபராகப் பணியாற்றியபோது இப்பாடசாலை படிப்படியாக முன்னேற ஆரம்பித்தது. இந்தப் பாடசாலையில் படித்த பலர் ஆசிரிய, ஆசிரியைகளாக இன்று விளங்குகின்றனர். ஜனாப்களான சாதுக், இஸ்ஸதீன், எம். எம். பாரூக், சக்காப், முகம்மது கான், வீரபுத்திரன் போன்றோர் இப் பாடசாலையில் படித்துப் பின் ஆசிரியர்கள் ஆனோர் ஆவர். பாக்கிய வித்தியாலயத்தின் அதிபராக அதைத் திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் திருமதி ஜெகதாம்பாள் நாகேந்திரன் இப்பாடசாலையின் பழைய மாணவியே. மீனாம்பாள் ஆசிரியை, கமலா ஆசிரியை, பிரணவதி ஆசிரியை போன்றவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவிகளே. பிரபல எழுத்தாளர்களான மலரன்பனும் மாத்தளை வடிவேலனும் இப்பாடசாலையில் படித்தவர்களே. இலக்கிய விதியும் இலக்கிய ஆர்வலருமான திரு. எச். எச். விக்கிரமசிங்கவும் இப் பாடசாலையின் பழைய மாணவரே. ரூபவாஹினி புகழ் திரு. எம். என். ராஜாவும் இங்கு படித்தவரே. திரு. ஜோசப் இப்பாடசாலைக்கு ஆற்றிய ஒப்பற்ற பணியை இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் இன்னும் மறக்கவில்லை.

மாத்தளை மாவட்டத்தில் கல்வித்துறையில் நற்பணியாற்றிய மற்றுமொரு பாடசாலை உக்குவளை அஜ்மீர் மத்திய கல்லூரியாகும். 1920 களில் ஓர் ஆரம்ப தமிழ்ப் பாடசாலையாக ஆரம்பமான இது 1930களிலே ஆழ்வார்பிள்ளை எனும் பேராசானின் திறமையினால் ஒரு நல்ல பாடசாலையாக உருவானது. அன்று மாத்தளையில் வாழ்ந்த ஒரு பெரும் தமிழ் அறிஞராக கருதப்பட்டவர் திரு. ஆழ்வார்பிள்ளை அவர்கள். அவரிடம் தமிழ் மொழி தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு கண்டி, வத்தேகம போன்ற இடங்களிலிருந்தும் ஆசிரியர்கள் வருவார்கள் எனக் கூறப்படுகிறது. இப்பாடசாலை உக்குவளைக்குப் பெரும் சேவையாற்றியுள்ளது.

மாத்தளைத் தமிழர்களும் கல்வியும் என்பது வேறு ஒரு கோணத்தில் இருந்தும் பார்க்கப்படல் வேண்டும். தமிழர் கல்வி எவ்வாறு வளர்ந்தது என்பது ஒரு அம்சம்; தமிழர்கள் ஏனைய இனத்தவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு உதவினர் என்பது மற்றுமொரு அம்சமாகும். மாத்தளை தமிழ் ஆசிரியர்கள் தமிழர்களுக்கு எந்தளவு படிப்பித்து இருக்கிறார்களோ, அதேபோல ஏனைய இனத்தவர்களுக்கும் படிப்பித்துள்ளனர். மாத்தளை விஞ்ஞானக் கல்லூரியின் முதல் அதிபரான திரு. ரத்னசபாபதி செய்த கல்விச் சேவை இன்றும் புகழ்ந்து பேசப்படுகிறது. எத்தனை டாக்டர்களை, பொறியியலாளர்களை, விஞ்ஞானப் பட்டதாரிகளை அவர் உருவாக்கினார் என்பதைக் கூறுவது கடினம்; அந்தளவு எண்ணிக்கை அதிகமாகும். திரு. இராமசாமி, திரு. கதிர்காமத்தம்பி ஆகியோர் மாத்தளை அரசினர் தமிழ்ப் பாடசாலையிலும், திரு. கதிரவேல், திரு. சிவப்பிரகாசம், திரு. புஷ்பநாதன், திரு. தியாகராஜா, திரு. சிதம்பரநாதன், திரு. சண்முகராஜா, திரு. வேலாயுதம், திரு. ராமச்சந்திரன், திருமதி எஸ். நடராஜா, திருமதி இமானுவேல், திரு. ரோஸரி அந்தனி போன்றவர்கள் மாத்தளை சாகிராக் கல்லூரியிலும் திரு. சுப்பையா குறிவெலப் பாடசாலையிலும் செய்த சேவை பாரியதாகும். முஸ்லீம் ஆசிரியர்கள் உருவாகும் வரை முஸ்லிம்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கியவர்கள் தமிழர்களே.

மாத்தளை மாவட்டத் தமிழர்கள் பொருட் செல்வத்தைத் தேடுவதில் காட்டிய அதே அக்கறையைக் கல்விச் செல்வத்தைத் தேடுவதிலும் காட்டியுள்ளனர் என்பது உண்மை. இரண்டிலும் கணிசமான வெற்றி பெற்றுள்ளனர் என்பதும் உண்மை. இதனை விட முக்கியமானது தமிழர்கள் தாம் தேடிப் பெற்ற கல்விச் செல்வத்தை தம் இனத்திற்கு மாத்திரம் அல்லாது பிற இனங்களுக்கும் வாரி, வாரி வழங்கினர் என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வாழ்வில் மாத்தளைத் தமிழர்கள்

ஒரு சமூகத்தின் நிலை உயரவேண்டுமானால், அச்சமூகம் இரண்டு அம்சங்களில் அவதானம் செலுத்த வேண்டும்; ஒன்று, அது தன் அகத்தே வாழும் ஒவ்வொரு தனி மனிதனையும் பற்றிச் சிந்தித்து, அவனது தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் இனங்கண்டு, அவற்றை நிறைவு செய்ய முயற்சித்தல் வேண்டும்; அவ்வாறே ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்கின்ற சமூகத்தின் மேம்பாட்டுக்காக எவ்வெவற்றைச் செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் ஓர் அர்ப்பணிப்போடு செய்து முடிக்க வேண்டும்.

தானம், தர்மம் என்பவை சமூகத்தில் வாழும் ஏழைகளுக்கு உதவுவதற்காகத் தனி மனிதனுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களாகும். ஒரு தனி மனிதன், வசதி குறைந்த தன் சக மனிதன் ஒருவனுக்குத் தான, தர்மங்கள் செய்யும் போது தன் சமூகத்தை வாழ வைக்கின்றான். அவ்வாறே வணக்க வழிபாட்டுத் ஸ்தலங்களை ஸ்தாபித்தல், கல்வி வளர்ச்சிக்கு உதவுதல், மருத்துவமனைகள் அமைத்தல், அனாதை விடுதிகளைக் கட்டுதல், முதியோர் நலன் பேணுதல் போன்றவைகளும் ஒரு தனி மனிதன் தன் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய சேவைகளே.

அவ்வாறே ஒருவன் ஓர் ஆசிரியனாக ஒரு வைத்தியனாக, ஓர் அரசியல் வாதியாக, ஒரு சமூக சேவையாளனாகப் பணியாற்றும் போதும் அவன் தன் சமுதாய வளர்ச்சிக்கு உதவுகின்றான். சமூக வளர்ச்சிக்காக இத்தகைய நற்பணிகள் செய்தோரை நன்றியுணர்வுடன் நினைவு கூரல் அவர்களின் சேவைகளால் நன்மையடைந்த சமூகத்தின் கடமையாகும். இவ்வாறு நினைவு கூரப்பட வேண்டிய சேவையாளர்கள் பலரை மாத்தளை மாவட்டத் தமிழ்ச் சமூகம் உருவாக்கியுள்ளது; இதைப் பற்றி அது பெருமைப்படலாம்.

மாத்தளை மாவட்டத்தில் தமிழர்களின் குடியேற்றங்கள் ஆரம்பமான காலத்திலேயே சமூக நன்மையைப் பெரிதாக மதிக்கும் மக்கள் சிலர் இருந்திருப்பர். இவர்கள் சமூக முன்னேற்றத்துக்காக ஏனையோரைவிடக் கூடிய பங்களிப்பை வழங்க விருப்பமுள்ள மக்களாகவும், ஆற்றலுள்ள மக்களாகவும் இருந்திருப்பர். இப்படிப்பட்ட தமிழர்கள், தாம் வாழ்ந்த காலத்திலே, தம்மால் இயன்ற சேவைகளைத் தம் சமூக வளர்ச்சிக்காகச் செய்திருப்பர்.

மாத்தளை நகரப் பரிபாலனத்திற்குப் பொறுப்பாக "லோக்கல் போர்ட்" (Local Board) எனும் ஓர் அமைப்பு 1888ஆம் ஆண்டிலேயே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்ற போதிலும், யூ. டீ. ஸி. (U. D. C. - Urban District Council) என அழைக்கப்பட்ட சபை ஒன்று 1923ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பின்னரே மாத்தளை மக்களுக்குத் தமது பிரதேச பரிபாலன விடயங்களில் நேரடியாக ஈடுபடக் கூடிய வாய்ப்புக்கள் எற்பட்டன. பதவி அடிப்படையில் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களையும் பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான்கு உறுப்பினர்களையும் கொண்டதாக இச்சபை அமைந்திருந்தது. 1923ஆம் ஆண்டிலிருந்து 1940ஆம் ஆண்டுவரை இயங்கிய இச்சபையில் உறுப்பினர்களாக இருந்து, இப்பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காகத் தமிழர்கள் பலர் உழைத்திருக் கின்றனர். அவர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

திரு. டீ. அரியநாயகம்
டாக்டர் ஏ. ஏ. வீரப்பெருமாள்
*(மாத்தளை மாவட்ட வைத்திய அதிகாரி)*
திரு. சி. ஏ. அரியநாயகம்
திரு. சி. எஸ். ராஜரத்தினம்
திரு. காசிநாதர்
திரு. வீ. வெள்ளையன் செட்டியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் ஆர். டபிள்யூ தம்பையா
திரு. கே. நடராஜா

இவர்களுள் திரு. சி. ஏ. அரியநாயகம் 1927, 28 ஆம் ஆண்டுகளிலும் திரு. சி. எஸ். ராஜரத்தினம் 1938ஆம் ஆண்டிலும் இச்சபையின் தலைவராகப் பணியாற்றியுள்ளனர். இவ்விருவரும் மாத்தளை நகரினில் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிந்தோராவர். 1935ஆம் ஆண்டிலிருந்து 1940 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் இச்சபையின் உறுப்பினராக இருந்து, திரு. வெள்ளையன் செட்டியார் பெரும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

1939ஆம் ஆண்டு அரசு கட்டளைப்படி 1940 ஆம் ஆண்டில் யூ. டீ. ஸி. முறை அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட நகர சபை ஸ்தாபிக்கப்பட்டது. 1963ஆம் ஆண்டு வரை நீடித்த இவ்வமைப்பிலும் தமிழர்கள் பலர் உறுப்பினர்களாக இருந்து மாத்தளை நகரத்தின் அபிவிருத்திக்கும் தம் இனத்தவரின் முன்னேற்றத்திற்கும் உழைத்துள்ளனர். தேவைகள் ஏற்படும் போது இவர்கள் தேசியப் பிரச்சினைகளிலும் தம் அவதானத்தைச் செலுத்தியுள்ளனர் என்பதற்கு, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் இலங்கையின் அரச கரும மொழிகளாக இருக்க வேண்டும் என்ற பிரேரணையை இவர்கள் நிறைவேற்றி அன்றைய பிரதமரான சேர் ஜோன் கொத்தலாவலையிடம் அதனைச் சமர்ப்பித்தது ஒரு சான்றாகும். மாத்தளை நகர சபை உறுப்பினர்களாகப் பணியாற்றிய தமிழர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

*திரு. வீ. வெள்ளையன் செட்டியார்*
*திரு. கே. நடராஜா*
*திரு. எஸ். ரத்னசோதி*
*திரு. ரி. தம்பிராஜா*
*திரு. ஆர். எதிர்மானசிங்கம்*

முந்திய சபையில் ஐந்து ஆண்டுகள் சேவையாற்றிய திரு. வெள்ளையன் செட்டியார் புதிய நகரசபையிலும் 1940 ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஏழு ஆண்டுகள் தனது வட்டார மக்களின் பிரதிநிதியாக இருந்து பெரும் சேவையாற்றியுள்ளார். மாத்தளை நகரிலே பரம்பரைச் சொத்துக்களான பல வீடுகள் இவருக்குச் சொந்தமாக இருந்தன; 1946 ஆண் ஆண்டிலே அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிய போது அவருக்கு எஞ்சி இருந்தது அவர் வசித்த வீடு ஒன்று மாத்திரமே. அரசியலால் சொத்துக்களை இழந்தவர் அவர். இன, மத வேறுபாடுகளைப் பாராது தன்னிடம் இருந்ததைக் கேட்டவர்களுக்குக் கொடுத்தவர் வெள்ளையன் செட்டியார் என்பது பல முஸ்லிம் முதியோர்களின் வாக்குமூலம். வெள்ளையன் செட்டியார் தனது பிள்ளைகளுக்குச் சொத்துக்கள் விட்டுச் செல்லவில்லை; ஆனால் இறைவன் வெள்ளையன் செட்டியாரின் பிள்ளைகளுக்குப் பல சொத்துக்களைக் கொடுத்து, தாய், தகப்பன் செய்த நன்மைகள் பிள்ளைகளுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தினான்.

'காட்டுக்கு கரடி, புலி, சிங்கம் கோட்டுக்கு எதிர்மானசிங்கம்' என மக்களால் போற்றப்பட்ட வழக்கறிஞர் எதிர்மானசிங்கம் 17. 05. 54 இல் இருந்து 24. 01. 56 வரை ஏறத்தாழ இருபது மாதங்கள் மாத்தளை நகர சபைத் தலைவராகச் சேவையாற்றியுள்ளார். இவரது சேவையைக் கருத்தில் கொண்டு மாத்தளை இந்துக் கல்லூரிக்கு அருகே திருக்கோணமலை வீதியையும் ரத்தொட்டை வீதியையும் இணைக்கும் குறுக்குப் பாதைக்கு எதிர்மானசிங்கம் மாவத்த எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

12. 01. 1954 இல் முதன் முதலாகக் கூடிய இந் நகர சபை தொடர்பான இரு சம்பவங்கள் எத்தகைய உயர் கனவான்கள் மாத்தளை நகரத்தின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை மிக அழகாகப் புலப்படுத்துகின்றன. நகர சபைக்கான தேர்தல் 1953இன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் முடிவுற்றிருந்தது. யார் நகரசபையின் தலைவராக இருப்பது என்பதில் கடும் போட்டி. ஒன்பது உறுப்பினர்களில் மீஸான் ஹாஜியார், எதிர்மானசிங்கம், தாஹிர் ஹுசைன், என். எல். ரி. டீன் எனும் நால்வர் ஓர் அணி, தம்பிராஜா, முத்துவா, இஸ்மாயில், ரத்னாயக்க எனும் நால்வரும் ஓர் அணி. பிரபல வழக்கறிஞரான எட்வர்ட் சில்வா எந்த அணியிலும் சேராது தனியே நின்றார்; அவர் சாயும் பக்கம் வெற்றி என்ற நிலை.

1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த மாட்சிமை தங்கிய மகாராணி இரண்டாம் எலிஸபெத் கொழும்பில் இருந்து விசேஷ ரயில் மூலம் மாத்தளை வந்து, இங்கிருந்து மோட்டார் பவனியோடு சீகிரியா, பொலன்னறுவை, அநுராதபுரம் செல்லுவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருந்தன. இராணியை மாத்தளைப் புகையிரத நிலையத்தில் வரவேற்கும் கௌரவம் மாத்தளையில் முதல் பிரசையான நகர சபைத் தலைவருக்கே கிட்டும். நகர சபைத் தலைவராக யார் இருப்பது என்ற போட்டி உக்கிரமடைவதற்கு இதுவும் ஒரு காரணம்.

எட்வர்ட் சில்வாவின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு இரு அணிகளும் பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்தன. முக வசீகரமும் எவரையும் கவரும் பேச்சாற்றலுமிக்க அல்ஹாஜ் எச். ஏ. ஹனான் தன் திறமைகளை எல்லாம் பிரயோகித்து எட்வர்ட் சில்வாவை மீஸான் ஹாஜியார் அணியோடு சேர வைத்தார்.

முதல் வருடத்தில் மாத்திரம் திரு. எட்வர்ட் சில்வா தலைவராக இருக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் அவர் ராஜினாமா செய்ய வேறு ஒருவருக்குத் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. நகரத்தின் முதல் பிரசை என்ற ஹோதாவில் இங்கிலாந்தின் இராணியை வரவேற்கும் கௌரவத்திற்காகவே தலைவர் பதவியைப் பெரிதும் விரும்பிய திரு. எட்வர்ட் சில்வா ஆறு மாதங்களில் தான் ராஜினாமா செய்வதாகக் கூறினார். எனினும் ஒரு வருட முடிவில் அவர் ராஜினாமா செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலேயே எழுத்து மூல ஒப்பந்தம் ஒன்றினைச் செய்ய அப்போதே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முந்திய நகர சபைத் தேர்தல் ஒன்றிலே ஆறாம் வட்டாரத்திலே மீஸான் ஹாஜியார் எட்வர்ட் சில்வாவோடு போட்டியிட்டு அவரைத் தோற்கடித்திருந்தார். இதனால் இவ்விருவர்களுக்குமிடையே சிறு மனக் கசப்பு நிலவியது. எனினும் எழுத்து மூல ஒப்பந்தம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைக் கண்ட திரு. எட்வர்ட் சில்வா, மீஸான் ஹாஜியாரின் முகத்தைப் பார்த்து சிங்களத்தில் கேட்ட கேள்வி, "முதலாளி! என் வாய்ச் சொல்லில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?" என்பதே. மனிதர்களைச் சரியாக எடை போடத் தெரிந்திருந்த மீஸான் ஹாஜியார், தனக்குத் திரு. எட்வர்ட் சில்வாவின் வார்த்தை ஒன்று போதும் என்று கூறி, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி இட்டார்.

12.1. 1954 அன்று நகர சபையின் முதற் கூட்டம்; தலைவர் தெரிவு ஆரம்பமானது. தலைவர் பதவிக்கு திரு. எட்வர்ட் சில்வாவின் பெயர் ஹுஸைனால் பிரேரிக்கப்பட்டு மீஸான் ஹஜியாரினால் ஆமோதிக்கப் பட்டது. அப்போது தம்பிராஜா சாணக்கியத் தந்திரம் ஒன்றினைக் கையாண்டார்; யாரும் எதிர்பார்க்காத முறையிலே அவர் தலைவர் பதவிக்கு எதிர்மான சிங்கத்தின் பெயரைப் பிரேரித்தார். திரு. எதிர்மான சிங்கம் இதனை ஏற்றிருந்தால் அவரது வாக்கையும் சேர்த்து அவருக்கு ஐந்து வாக்குகள் கிடைத்திருக்கும்; வெற்றி பெற்றிருக்கலாம்; எவ்விதமான நிபந்தனைகளுமின்றி மூன்று வருடங்கள் தலைவராக இருந்திருக்கலாம். ஆனால் ஏற்கனவே எட்வர்ட் சில்வாவுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்திருந்த எதிர்மானசிங்கம் தலைவர் பதவியைப் பற்றிச் சிந்திக்கவில்லை; தான் தலைவரானால் எலிஸபெத் மகாராணியை வரவேற்கும் கௌரவம் தனக்குக் கிடைக்குமே என்பதைப் பற்றி நினைக்கவில்லை; தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதற்குத் தன் சம்மதமின்மையை அறிவித்து, தன் பெயரை வாபஸ் பெற்றுக்கொண்டார். திரு. எட்வர்ட் சில்வா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமாத காலம் முடிவடைய இருந்தபோது தான் ராஜினாமா செய்யப் போவதை திரு. எட்வர்ட் சில்வா அறிவித்தார்; ராஜினாமா செய்யாது பதவியில் தொடர்ந்து இருக்குமாறு திரு. எட்வர்ட் சில்வாவை, மீஸான் ஹாஜியாரும் மற்றவர்களும் எவ்வளவோ வேண்டிய போதிலும் ஆறு மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாளேனும் பதவியில் இருக்க திரு. எட்வர்ட் சில்வா மறுத்துவிட்டார். அவர் சொன்னபடி ராஜினாமா செய்ய எதிர்மானசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. எதிர்மானசிங்கமும் திரு. எட்வர்ட் சில்வாவும் எத்துணை கண்ணியமான மனிதர்கள் என்பதை இந்நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

திரு. தம்பிராஜா மாத்தளை நகர சபையின் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, இந்நகரத்தின் அபிவிருத்திக்குப் பாரிய பங்களிப்புக்கள் வழங்கிய பெருமகனாவார். தலைவர் பதவியில் இருந்தபோது மாத்திரமல்ல, பதவியை விட்ட பிறகு கூட அவர் 'சேர்மன்' தம்பிராஜா என்றே பொதுவாக அழைக்கப்பட்டார். அவரது பெயரோடு 'சேர்மன்' என்ற அடைமொழி ஒட்டிக் கொள்ளக் கூடிய அளவிற்கு அவரது பதவிக் காலம் நீளமானதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது என்றே கருத வேண்டியிருக்கிறது.

மாத்தளை மணிக்கூட்டுச் சந்திக்கு அருகாமையில் வாழ்ந்த செல்வந்தரான என். பி. செல்லையாவின் மகன் ரத்னராஜாவிற்கும் ஆலமரத்தடிச் சந்திக்கு அருகாமையில் வாழ்ந்த கெக்கிராவ கந்தசாமி எனும் தனவந்தரின் மகளுக்கும் நடந்த திருமணம் அன்றைய மக்களால் மிக உயர்வாகப் பேசப்பட்ட ஒரு தமிழ்த் திருமணமாகும். தோகை விரித்தாடும் மயிலின் ரூபத்தில் உருவாக்கப்பட்ட ஓர் ஆசனம் பொருத்தப்பட்ட ஓர் பெரிய காரிலே மணமக்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட அழகையும், கல்யாண ஊர்வலம் சென்ற பாதை எங்கிலும், கேரளப் பகுதியிலிருந்து அதற்கென வரவழைக்கப்பட்டிருந்த வாண வேடிக்கை நிபுணன் செய்து காட்டிய வாண வேடிக்கைகளின் சிறப்பையும் அவற்றைக் கண்டு ரசித்தவர்கள் இன்றும் புகழ்கின்றனர். இக் கல்யாணம் கெக்கிராவ கந்தசாமியின் செல்வச் செழிப்பைக் காட்டிய கல்யாணம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளின் ஆரம்பத்தில் ஹல்கொல்லை குரூப் உரிமையாளரான கே. வி. மாரிமுத்துவின் புதல்வியை மணந்த சேர்மன் தம்பிராஜாவையும் அவரது மணமகளையும் ஆதரவாளர்கள் மாத்தளை நகரின் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்ற போது முழு நகரமுமே புதுத் தம்பதியினரைக் கௌரவித்தது என்றே கூற வேண்டும். அத்துணை மரியாதை; அத்தனை மாலைகள். இக்கல்யாணம் சேர்மன் தம்பிராஜா மீது மாத்தளை நகர மாந்தர் வைத்திருந்த அன்பையும் அபிமானத்தையும் காட்டிய கல்யாணம்.

**1963** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினைந்தாம் திகதி அரசாங்க கெசட் அறிவித்தலின்படி, மாத்தளை நகர சபை மாநகர சபை அந்தஸ்த்திற்கு உயர்த்தப்பட்டது. முன்னர் இருந்த சபைகளில் போலவே இச்சபையிலும் இதுவரை எட்டுத் தமிழர்கள் அங்கத்துவம் பெற்று இந்நகரின் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற பங்களிப்புக்களை நல்கியுள்ளனர். மாத்தளை மாநகர சபையில் அங்கத்துவம் வகித்துள்ள தமிழர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

*திரு. எஸ். சி. ராஜரத்தினம்*

*திரு. ரி. தம்பிராஜா*

*திரு. ஜீ. கனகரத்தினம்*

*திரு. ஆர். ஜீ. சதாசிவம்*

*திரு. எம். சிவஞானம்*

*திரு. எஸ். பூபாலச்சந்திரன்*

*திரு. என். கதிர்ச்செல்வன்*

*திரு. கே. நவரத்தினம்*

இவர்களுள் திரு. ராஜரத்தினமும் திரு. எம். சிவஞானமும் பிரதி முதல்வராகவும் பல வருடங்கள் பணியாற்றியுள்ளனர். **1991** இல் பெருந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையான வாக்குகளைப் பெற்று மாத்தளை மாநகர துணை முதல்வராகப் பதவியேற்ற 'மக்கள் மாமணி' எம். சிவஞானம் மாத்தளை மாநகர சபை அலுவல்களில் தமிழின் நிலையையும், மாத்தளை மாவட்டத்தில் தமிழரின் நிலையையும் உயர்த்த தொலை நோக்கோடும் அறிவு பூர்வமாகவும் செயல்படும் ஓர் இளம் அரசியல் வாதியாவார். பி. பி. சி. (B. B. C.), அவுஸ்திரேலியா வானொலி போன்ற சர்வதேச ஒலிபரப்பு நிறுவனங்கள் இவரைப் பேட்டி கண்டு அவற்றை ஒலிபரப்பியுள்ளமை மாத்தளை வாழ் தமிழர்கள் அனைவருக்கும் பெருமை சேர்ப்பதாகும். இதுவரை இரு தமிழர்கள் மாத்தளை நகர துணை மேயர்களாகப் பணியாற்றியுள்ளனர் என்ற போதிலும், மாத்தளை மாநகர சபையின் முப்பத்தேழு வருட வரலாற்றில் இதுவரை ஒரு தமிழராவது மேயராகப் பதவி வகித்ததில்லை என்பது அவதானத்திற்குரியது.

ரத்தொட்டை நகர பரிபாலனம் பட்டினச் சபை எனும் உள்ளூர் ஆட்சி அமைப்பின் பொறுப்பில் இருந்த போது, இச்சபைத் தலைவராக திரு. எஸ். வி. சுப்பிரமணியம் சில வருடங்கள் பணியாற்றியுள்ளார். பின்னர் இந்நகர பரிபாலனப் பொறுப்பு பிரதேச சபை எனும் ஒரு புதிய உள்ளூர் ஆட்சி அமைப்பின் கீழ் வைக்கப்பட்டது. இப்பிரதேச சபையின் உபதலைவராக இருந்து திரு. சுகுமாரன் பல தொண்டுகளைச் செய்துள்ளார்.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அரசுக் கழக (State Council) அங்கத்துவத்திற்காக 1931 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலிலும் 1936ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது தேர்தலிலும் முழு மாத்தளை மாவட்டமுமே ஒரு தொகுதியாகத்தான் அமைந்தது. 1931ஆம் ஆண்டில் நடந்த தேர்தலே சர்வசன வாக்குரிமை அடிப்படையில் நடந்த முதல் தேர்தலாகும். அத் தேர்தலிலே மாத்தளைத் தொகுதிக்காக டபிள்யூ. ரி. பி. கரலியத்த எனும் சிங்களவரும் ஆர். எதிர்மானசிங்கம், எஸ். முத்தையா எனும் இரு தமிழர்களும் போட்டியிட்டனர். அத்தேர்தல் விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

## 1931 ஆம் ஆண்டு - இலங்கை அரசுக் கழகத்திற்கான தேர்தல் முடிவு மாத்தளைத் தொகுதி

**பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை: 21, 725**

| | |
|---|---|
| டபிள்யூ. ரி. பி. கரலியத்த | 9,418 வாக்குகள் |
| ஆர். எதிர்மானசிங்கம் | 2,320 வாக்குகள் |
| எஸ். முத்தையா | 1,09 வாக்குகள் |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 11,875

முதல் தேர்தல் முடிவு இத்தொகுதியில் தமக்கு வெற்றி பெற முடியாது என்ற எண்ணத்தைத் தமிழர்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்க வேண்டும். இரண்டாவது தேர்தலில் தமிழர்கள் எவரும் போட்டியிட முன்வராது இருந்ததற்கு இந்த எண்ணமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

1936ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது தேர்தலிலே இத்தொகுதியில் கரலியத்த, பேர்னார்ட் அலுவிகார, எட்வர்ட் சில்வா, வில்லியம் கொபல்லாவ எனும் நால்வர் போட்டியிட்டனர். இங்கிலாந்தில் பரிஸ்டர் பட்டம் பெற்ற பேர்னார்ட் அலுவிகாரை, காந்தியடிகளாரின் அரசியல் நடைமுறைகளால் கவரப்பட்டு, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்; ஓர் இந்தியப் பெண்ணை மணமுடித்தவர்; இலங்கைக் காந்தி எனப் போற்றப்பட்டவர்; தமிழ் மக்களின் அன்பைப் பெற்றவர். என். பி. செல்லையா, எஸ். எஸ். கந்தசாமி, வெள்ளையன் செட்டியார் போன்ற தமிழ்ப் பிரமுகர்கள் அலுவிகாரையின் வெற்றிக்கு உழைத்தனர்; அவரும் பத்தாயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பிரதிநிதிகள் சபைக்காக 1947, 1952, 1956 ஆம் ஆண்டுகளில் நடந்த மூன்று தேர்தல்களின் போதும் மாத்தளை மாவட்டம், மாத்தளை, தம்புள்ளை எனும் இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இத் தேர்தல்களில் மாத்தளைத் தொகுதியிலோ தம்புள்ளைத் தொகுதியிலோ தமிழர்கள் எவரும் போட்டியிடவில்லை. இதே சபைக்காக 1960, 1965, 1970 ஆம் வருடங்களில் நடந்த தேர்தல்களில் இம் மாவட்டம் மாத்தளை, ரத்தொட்டை, லக்கல, தம்புள்ளை எனும் நான்கு தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இந்தத் தேர்தல்களிலும் இந்நான்கு தொகுதிகளில் ஒன்றிலேனும் தமிழர்கள் போட்டியிட வில்லை. அவ்வாறே 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் தேசியப் பேரவைக்காக 1977 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் மாத்தளை மாவட்டத் தொகுதிகள் ஒன்றிலேனும் தமிழர்கள் போட்டியிடவில்லை.

பாராளுமன்றத் தேர்தல்களிலே மாத்தளைத் தமிழர்கள் போட்டியிடவில்லை என்பதற்காக அவர்கள் இத் தேர்தல்களில் அக்கறை காட்டவில்லை என்று பொருள் எடுத்துவிடக்கூடாது. வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதனால் அவர்கள் போட்டி போடவில்லை; ஆனால் தேர்தல்களில் ஏனைய சமூகத்தவர்கள் காட்டிய அதே அக்கறையைத் தமிழர்களும் காட்டினர் என்பதை எவரும் எற்றுக் கொள்வர்.

1989 ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்றத் தேர்தல்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடைபெற்றுள்ளன. இவற்றில் தமிழர்கள் போட்டியிட்டுள்ள போதிலும் மாத்தளையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குத் தமிழர்கள் ஒருவரும் இதுவரை தெரிவு செய்யப்பட்டதில்லை.

எனவே சென்ற நூற்றாண்டின் கடைசித் தசாப்தத்திலே மாகாண சபை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்படும் வரை கிராமச் சபை, பட்டினச் சபை, பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை எனக் குறுகியதோர் வட்டத்திற்குள் சேவை செய்யக்கூடிய வாய்ப்புக்கள் மாத்திரமே தமிழர்களுக்குக் கிடைத்திருந்தன.

முழு மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்திக்கும், இம்மாவட்டம் எங்கும் சிதறி வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களினதும் முன்னேற்றத் திற்கும், கணிசமான நிதி ஒதுக்கீடுகளோடும், அரசாங்க இயந்திரங்களின் அனுசரணைகளோடும் சேவையாற்றும் பெரும் வாய்ப்பையும் பாக்கியத்தையும் பெற்ற முதலிரு மாத்தளைத் தமிழர்கள், முதல் மத்திய மாகாண சபைக்கு மாத்தளை மாவட்டப் பிரதிநிதிகளில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். கந்தையாவும், இரண்டாவது மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட திரு. எம். சிவஞானமும் ஆவார்கள். காட்சிக்கு எளியவர்களாக, சேவைக்கு முந்துபவர்களாக வாழும் இவ்விரு சமூக சேவையாளர்களும், தாமாக முன்வந்து ஏற்ற பெரும் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்கள் என்பதற்கு மாத்தளை மாவட்டத் தமிழ்ப் பாடசாலைகள் சில வெளியிட்டுள்ள மலர்களில் இவ்விருவரையும் பற்றி எழுதப்பட்டுள்ள குறிப்புக்கள் சான்றுகளாகும்.

மாத்தளை மாவட்டத்திலே கிராமச் சபைத் தலைவராகக் கடமையாற்றிய ஒரே ஒரு தமிழர் உடுபிஹில்லயில் வாழ்ந்த கதிரவேல் பிள்ளையின் மகனாக 1894 ஆம் ஆண்டில் பிறந்த திரு. முத்துக்குமார் ஆவார். இவர் தலைவராகப் பதவி வகித்த கிராமச் சபையின் ஏனைய அங்கத்துவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மாவட்டத்தில், குறிப்பாக மாத்தளை நகரத்தில் பல இன மக்களும் அங்கத்துவம் வகிக்கின்ற பல்வேறுப்பட்ட சமூக சேவை அமைப்புகள், இலக்கிய, கலாசார அமைப்புகள், விளையாட்டுத் துறை அமைப்புகள் ஆகியன இயங்கின; இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சமூக சேவையினையே நோக்கமாகக் கொண்டு ரோட்டரிச் சங்கம், அரிமா சங்கம் (லயன்ஸ்) என இரண்டு சங்கங்கள் மாத்தளை நகரினில் இயங்குகின்றன. திரு. டி . எம். சிங்கராஜ், திரு. எம். ஏ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். சொக்கலிங்கம், திரு. சந்திரசேகரம், திரு. மகேந்திரன் ஆகியோர் ரோட்டரி சங்கத்தின் தலைவர்களாகவும் டாக்டர் சிவபாலன், திரு. எம். ராஜரத்தினம் ஆகியோர் 'லயன்ஸ்' சங்கத் தலைவர்களாகவும் சமூக சேவையாற்றியுள்ளனர்.

பல்வேறு இனத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கும் அமைப்புகளில் தமிழர்களும் பங்குபற்றுவது இன ஒற்றுமைக்கும் பரஸ்பர நல்லெண்ணம் வளர்வதற்கும் உதவுகின்றது.

பல்லின மக்கள் அங்கத்துவம் வகிக்கும் சங்கங்களில் பங்குபற்றிப் பணியாற்றிய அதே வேளையிலே, தமிழர்கள் தமது சமயத் தேவைகளுக்காகவும் கலாசார தேவைகளுக்காகவும் தமிழர்களை மாத்திரம் உள்ளடக்கிய சில மன்றங்களையும் அமைத்துக் கொண்டனர். இத்தகைய மன்றங்களில் மிக முக்கியமானது சைவ மகா சபை என்பதாகும். மிக நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் இச்சபை சைவ சமயத்தோரின் ஆத்மீக, சமூக, கல்வி, கலாசார நலன்களை விருத்தி செய்வதில் பெரும் அக்கறையும் ஈடுபாடும் காட்டி வருகின்றது.

சமயச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், விழாக்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து தம்மவர் மத்தியில் சைவ சமய அறிவை வளர்த்தல், அறநெறிப் பாடசாலைகள் நடத்தல், இலவச வகுப்புகள் ஒழுங்கு செய்தல், வசதி குறைந்த மாணவ, மாணவிகளுக்கு உதவிகள் அளித்தல் எனப் பல்வேறுபட்ட செயற்பாடுகளிலும் சைவ மகா சபையினர் தம் கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர். இம் மாவட்ட தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு இச்சபை வழங்கியுள்ள பங்களிப்புக் காத்திரமானதாகும். அறுபதுகளிலேயே சைவக் கதிர் எனும் பெயரில் தரமான பல மலர்களை வெளியிட்ட பெருமை இம்மன்றத்திற்கு உரியது. 1964 ஆம் ஆண்டில் வெளிவந்த மலரில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம், பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், பேராசிரியர் துரை அரங்கசாமி போன்ற அறிஞர்களின் படைப்புகள் காணப்படுகின்றன என்று சொன்னால் போதும், அம்மலர் எந்தளவு காத்திரமான ஒன்றாக இருக்கும் என்பதையும் அம்மலருக்குப் பொறுப்பாக இருந்த மலர் ஆசிரியர் எத்தகைய பாரியதோர் உழைப்பை இம்மலருக்காக வழங்கியிருப்பார் என்பதையும், கட்டுரைகளை வழங்கியுள்ளவர்களின் அறிவு மேன்மையை அறிந்தவர்கள் உணர்வர். மலர் ஆசிரியர் வீ. அருணாசலம் பிள்ளை சைவமக்களின் நன்றிக்கு உரியவராவார். திரு. மாரிமுத்து செட்டியார் இச்சபைக்குத் தலைமை தாங்கிய எழுபதுகளில் இம்மன்றம் மாத்தளை இந்து மகா வித்தியாலய வளாகத்தில் அழகான விநாயகர் கோயில் ஒன்றை நிர்மாணித்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட காந்தி மகா சபை மாத்தளைத் தமிழர்களுக்குப் பாரிய நன்மைகள் எதனையும் செய்து விடவில்லை என்ற போதிலும் வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது இச்சபை அமைக்கப்பட்டது முக்கியமானதாகும். இந்திய தேசப்பிதா மகாத்மா காந்தியின் மறைவின் போது அமைக்கப்பட்ட இச்சபை, அன்று தமிழ் மக்கள் காந்தீய கொள்கைகளினால் எந்தளவு கவரப்பட்டு இருந்தனர் என்பதை உணர்த்தும் அதே வேளையில் இந்தியத் தலைவர்களைத் தம் தலைவர்களாக கருதும் போக்குத் தமிழர்களிடம் ஓரளவு இருந்தது என்பதையும் உணர்த்துகிறது. ஐம்பதுகளில் சிங்கள, முஸ்லிம் வீடுகளில் ஆங்கிலேய அரச குடும்பத்தினரின் படங்கள் காணப்பட்டதைப் போலவே, இந்தியத் தமிழர்களின் இல்லங்களில் நேரு, ராஜேந்திர பிரசாத், ராஜாஜி, சர்தார் பட்டேல் போன்ற இந்தியத் தலைவர்களின் படங்கள் காணப்பட்டன என்பதைப் பழைய தலைமுறையினர் அறிவர். இன்று நிலை முற்றாக மாறிவிட்டது.

குப்பைகளை எரிக்கும் இடம் பக்கத்தில் இருந்ததால் ஊத்தைக் குப்பை ஸ்கூல் என மக்களால் அழைக்கப்பட்ட மாத்தளை அரசினர் தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியராகப் பணியாற்றிய திரு. ராமசாமி அவர்களே காந்தி சபாவின் உந்து சக்தியாக விளங்கினார்கள். இச்சபையின் கூட்டங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜனைகள் போன்றவை ஆரம்பத்தில் மாத்தளை மணிக்கூட்டு சந்தியில் இருந்த ஒரு கடையின் மாடியில் தான் நடைபெற்றன. ஆனால் வெகு விரைவில் நகர சபைக் காணியொன்று குத்தகைக்குப் பெறப்பட்டது. டாக்டர் ராசையாவின் மாமியாரான திருமதி ராமசாமி என்பவர் தனது மகன் ராஜாவின் பெயரில் வழங்கிய ரூபா 20,000/= நன்கொடையுடன் சிறிதாக ஆனால் அழகாகக் குத்தகைக்குப் பெறப்பட்ட காணியில் காந்தி நினைவு மண்டபம் எழுப்பப்பட்டது.

எல். தியாகராஜ செட்டியார், திரு. எஸ். அருணாசலம், திரு. குழந்தைவேலு, திருமதி முத்து லெட்சுமி, குழந்தைவேலு, திருமதி வி. கே. அம்மா, திரு. எஸ். கதிர்காமத்தம்பி போன்றோர் இச்சபையின் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்தியவர்களில் சிலராவர். ஒரு நல்ல நூல் நிலையமும் இங்கு அமைக்கப்பட்டது. வாரந்தோறும் பஜனைகள், ரகுபதி ராஜவ ராஜாராம் என்ற அழகான பாட்டு, உயர் பண்புகளை வளர்க்கும் சொற்பொழிவுகள் என காந்தி சபா சிறப்பாக இயங்கியது. மகாத்மாவின் பெயரில் கட்டப்பட்ட மண்டபம் தவறான கரங்களுக்குச் சென்றது பிற்கால சோக வரலாறு.

மாத்தளை மாவட்டத் தமிழர்களின் வளர்ச்சிக்கு ஆகக்கூடிய பங்களிப்பினை வழங்கியுள்ள தனி மனிதர் யார் என்ற கேள்விக்கு வெவ்வேறு வகையான இரண்டு பதில்கள் இருக்கமுடியாது; அக்கேள்விக்குரிய ஒரே பதிலும் சரியான பதிலும் அமரர் எஸ். எஸ். கந்தசாமி என்பதாகவே இருக்கும். நில அளவையாளராக, யாழ்ப்பாண பரமேஸ்வரா கல்லூரிக் கட்டடங்கள், இராமநாதன் கல்லூரிக் கட்டடங்கள் உட்பட எத்தனையோ பாரிய கட்டடங்களை நிர்மாணித்த கட்டட ஒப்பந்தக்காரராக, மாத்தளையில் மிகச் சிறப்பாக இயங்கிய எஸ். எஸ். கந்தசாமி அன் கோ. எனும் வியாபார நிறுவனத்தின் அதிபராக திரண்ட செல்வத்தைச் சேர்த்துக் கொண்ட கந்தசாமியார், கல்வியின் அவசியத்தைப் பற்றி மாத்தளை வாழ் தமிழர்களோ, முஸ்லிம்களோ அதிகம் சிந்திக்காத ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதுகளிலேயே

*"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்ன யாவினும் புண்ணியங் கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"*

எனும் தத்துவத்தை வேதவாக்கென ஏற்று, மாத்தளை நகரத்தின் மையப்பகுதியிலே, ஒன்றரை ஏக்கர் காணியிலே ஆண்களுக்கு ஒரு பாடசாலை, பெண்களுக்கு ஒரு கல்லூரி என இரண்டு கல்விக் கூடங்களை நிறுவி, அவற்றை மாத்தளை மக்களுக்கு மனமுவந்து வழங்கிய மாமனிதர். அவர் மாத்தளை மக்களுக்காக இந்த ஒன்றரை ரக்கர் நிலத்தை ஒதுக்கிய காலகட்டத்திலே, அதன் பெறுமதி எவ்வளவாக இருந்திருக்கும் என்பதைக் கூறமுடியாது; ஆனால் இன்று அந்நிலத்தின் பெறுமதி பல கோடிகள்.

இருபதாம் நூற்றாண்டு விடிவதற்கு முன்னரே, மாத்தளை மாவட்டத்தில் சிங்களப் பாடசாலைகள் பல அமைக்கப்பட்டிருந்தன; அவற்றுள் சில அரசாங்கப் பாடசாலைகள்; சில கிறிஸ்தவ சமயப் பிரச்சார சபைகளினால் நிறுவப்பட்டவை. மாத்தளை நகருக்கு வெளியே வாழ்ந்த தமிழ்ப் பிள்ளைகள் படிப்பதற்கு குளோடா எஸ்டேட் ஆண்கள் தமிழ்ப் பாடசாலை போன்ற ஓரிரண்டு மாத்திரமே இருந்தன. மாத்தளை நகரினில் அமைந்திருந்த புனித தோமியர் ஆண்கன் ஆங்கிலப் பாடசாலை, புனித தோமியர் பெண்கள் ஆங்கிலப் பாடசாலை, புனித ஏக்னஸ் பெண்கள் சுயபாஷா பாடசாலை, கிறிஸ்து தேவ ஆண்கள் ஆங்கிலப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, மாத்தளை பௌத்த ஆண்கள் பாடசாலை போன்றவற்றில் தமிழ் மாணவ, மாணவிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; ஆனால் இப்பாடசாலைகளில் படிப்பதற்கு ஓரளவு பண வசதியாவது இருக்கவேண்டு மென்பதே யதார்த்தம். இவற்றைத் தவிர தமிழ் மாணவ, மாணவிகளுக்கு வேறு பாடசாலைகள் இருக்கவில்லை.

சென்ற நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களிலும் மாத்தளை நகரினில் கூட, தமிழ்ப் பிள்ளைகள் படிப்பதற்குப் போதிய அளவு வசதிகள் இருக்கவில்லை என்றே கூறவேண்டும். இக்குறைபாட்டை உணர்ந்தது மட்டுமில்லாமல், அதனை நிவர்த்தி செய்வதற்கு ஆக்க பூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டார் என்பதால்தான் நாம் கந்தசாமியாரை இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூர்கின்றோம்.

திரு. கந்தசாமி முதலில் இந்து ஆங்கில சுயபாஷா கலவன் பாடசாலை எனும் கல்விக் கூடத்தை ஆரம்பித்தார். எச். ஏ. வி. ஸ்கூல் என இதனைச் சிலர் சரியாக அழைத்த போதிலும், கந்தசாமி ஸ்கூல் என்றே இது பலராலும் அறியப்பட்டது. ஏராளமான தமிழ்ப் பிள்ளைகளினதும் கணிசமான அளவு முஸ்லிம் பிள்ளைகளினதும் அறிவுக் கண்களைத் திறந்த பெருமை பின்னர் இந்து மகா வித்தியாலயம் என அழைக்கப்பட்ட இக் 'கந்தசாமி ஸ்கூலுக்கு' உரியதாகும்.

தான் நிறுவிய முதல் பாடசாலையின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்த திரு. கந்தசாமி, பெண்களுக்கென ஓர் ஆங்கிலப் பாடசாலையை அமைக்கத் தீர்மானித்தார். இப்பாடசாலைக்கான அடிக்கல் 1927 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசப்பிதா மகாத்மா காந்தியினால் நாட்டப்பட்டது; ஓரிரண்டு வருடங்களில் இப்பாடசாலை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை தனது அரவணைப்புக்குள் வந்த பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள, இஸ்லாமிய சிறுமிகளுக்கு நல்லறிவையும் பண்பையும் ஊட்டி, அவர்களை நல்லதிபர்களாக, ஆசிரியைகளாக, அரச சேவகிகளாக, வங்கி அதிகாரிகளாக, டொக்டர்களாக, விரிவுரையாளர்களாக, அனைத்துக்கும் மேலாக நல்ல குடும்பத் தலைவிகளாக உருவாக்கியிருக்கும் பாக்கிய வித்தியாலயத்தைப் பற்றி இவ்வித்தியாலயத்தின் புகழ்ப்பூத்த பழைய மாணவியும் இன்றைய அதிபருமான திருமதி ஜெகதாம்பாள் நாகேந்திரன் எழுதியுள்ள கீழ்வரும் பந்திகள் இக்கல்லூரியைப் பற்றி நல்லதோர் விளக்கத்தைத் தருகின்றன.

> "18.05.1927 ஆம் ஆண்டில் கால்கோல் இடப்பட்ட இக்கலாலாலயம் திரு. எஸ். எஸ். கந்தசாமி அவர்களதும், அவரது பாரியார் திருமதி பாக்கியம் கந்தசாமி அவர்களதும் தனிப்பெரும் கொடையாகும். 1960 ஆம் ஆண்டு வரை அவர்களது முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிய இப்பாடசாலை மூவினத்திற்கும் நான் மதங்கட்கும் சமத்துவம் வழங்கியுள்ளது. ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் கல்வி கற்பித்த இப்பாடசாலையில் பின்பு சிங்களமும் தமிழும் போதனா மொழிகளாக விளங்கி வந்துள்ளன. 1965, 66 களில் இங்கிருந்த சிங்கள மொழிப் பிரிவு வேறு பாடசாலைகட்கு அனுப்பப்பட்டு தனித் தமிழ் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.
>
> இப்பாடசாலைக்குக் கட்டடங்களையும் காணியையும் வழங்கியது மட்டுமன்றி பல்கலைக்கழகம் செல்வோருக்கு புலமைப் பரிசில்களும் திரு. கந்தசாமி தம்பதியினரால் வழங்கப்பட்டுள்ளன. முதன் முறையாக செல்வி ஷீலா ராஜகருணா என்ற மாணவி இப்புலமைப் பரிசிலைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றுள்ளார். பெண் பிள்ளைகட்கு விடுதி வசதியும் அக்காலத்தில் வழங்கப்பட்டிருந்தமையால் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து மாணவியர் வருகை தந்து கல்வி கற்றுச் சென்றனர்".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் திருமதி நாகேந்திரன் அவர்களின் குறிப்புக்கள் ஐம்பது, அறுபதுகளில் படித்த ஒரு மாணவியின் உள்ளத்தில் கந்தசாமி தம்பதியினர் எந்தளவு உயர்வான இடத்தைப் பிடித்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. அவ்வாறே மிக அண்மைக் காலத்தில் பாக்கிய வித்தியாலயத்தில் படித்து இப்போது ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருக்கும் செல்வி பழனிவேலு சாரதாதேவி, 'எம் அன்னை பாக்கியம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் வரும்

> "அகிம்சை வழிக்கோர் அண்ணல் காந்தியென்று வரலாற்றிலே தன் பெயரைப் பொறித்துக் கொண்ட மகாத்மா காந்தியடிகளினால் அடிக்கல் நாட்டப்பெற்று அன்று முதல் இன்று வரை வரலாற்றிலே தன் பெயரை அழியாமல் பேணி வரும் இந்தப் பாடசாலையை 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்று மனதிலே எண்ணி தரணியிலே தமிழ் மாணவர்களும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் எனப் பேராசை கொண்டு நமக்கு உவகையுடன் தந்தவர்கள் திருவாளர் கந்தசாமி ஐயாவும் அவர் பாரியார் பாக்கியம் அம்மாளும் ஆவார். என்றும் இவர்களை நாம் போற்றுதல் வேண்டும்".

எனும் வரிகள் காலங்கள் மாறலாம், தலைமுறைகள் மாறலாம் – ஆனால் பாக்கிய வித்தியாலய மாணவிகளின் உள்ளங்களில் கந்தசாமி தம்பதியினரின் பால் ஏற்படும் நன்றியுணர்வில் மாத்திரம் மாற்றமே ஏற்படுவதில்லை என்பதை உணர்த்துகின்றன. இதில் ஆச்சரியப் படுத்துவற்கு எதுவும் இல்லை. உண்மையில் கந்தசாமி ஐயாவையும் பாக்கியம் அம்மாவையும் நன்றியுணர்வுடன் நினைக்காத மாத்தளைத் தமிழன் கல்வியின் மகத்துவத்தை உணராத தமிழன் என்றே கருதப்படல் வேண்டும். ஒரு பெண்ணுக்கு வழங்கப்படும் கல்வி ஒருவருக்கு வழங்கப்படும் கல்வியல்ல; அது ஒரு குடுபத்திற்கு வழங்கப்படும் கல்வி என்ற உண்மையை உணர்ந்தவர்கள் அமரர் கந்தசாமியின் பங்களிப்பின் மாண்பினை நன்கு உணர்வார்கள்.

1928 ஆம் ஆண்டு மாத்தளை உதவி அரசாங்க அதிபரின் பரிபாலன அறிக்கையில் கீழ்வரும் குறிப்பு காணப்படுகிறது:

> "ஜூன் நான்காம் திகதி மன்னரின் பிறந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பும் நடைபெற்றது. வழக்கம் போல் இவ்வருடமும் திரு. எஸ். எஸ். கந்தசாமி மாணவர்கள் எல்லோருக்கும் உணவு வழங்கினார்".

இக்குறிப்பில் காணப்படும் 'வழக்கம் போல் இவ்வருடமும்' எனும் சொற்கள், பல வருடங்களாக, பொது விஷயங்களில் திரு. கந்தசாமி தாராளமாகப் பங்கேற்றிருக்கிறார் என்பதை உணர்த்துகின்றன.

மாத்தளை நகரின் வளர்ச்சிக்கு திரு. கந்தசாமி வழங்கியுள்ள உன்னதமான பங்களிப்புக்களின் காரணமாகவே, மாத்தளை பிரதான தபாற் கந்தோரிலிருந்து மணிக்கூட்டு சந்தி வரை பாக்கிய வித்தியாலயத்தை ஒட்டி ஓடும் வீதி 'கந்தசாமி மாவத்த' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ் வீதிக்கு கந்தசாமி அவர்களின் பெயர் சூட்டப்படல் வேண்டும் என்ற பிரேரணையை நகர சபைக் கூட்டத்திலே சமர்ப்பித்தவர் அல்ஹாஜ் எச். ஏ. ஹானான் ஆவார்; அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது சிங்களவர்கள் பெரும்பான்மை யினராக இருந்த ஒரு சபையிலாகும். இது தமிழர்கள் அல்லாதோரும் திரு. கந்தசாமி அவர்களின் சேவையை எவ்வளவு உயர்வாக மதிக்கின்றனர் என்பதை நன்கு புலப்படுத்துகின்றது.

சென்ற நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலே, சமூக நலன்களில் அக்கறை காட்டி, தன்னைச் சுற்றி வாழ்ந்த சக மனிதர்களின் வாழ்க்கையினை மேம்படுத்தி, மாத்தளை மாவட்ட வரலாற்றில் தன் பெயரைப் பொன் எழுத்துக்களால் பொறித்துக் கொண்ட மற்று மொரு தமிழ்ப் பெருந்தகை டாக்டர் கே. பி. சோமசுந்தரம் ஆவார். மந்தண்டாவளையில் விசாலமான ஆட்டுப்பட்டிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து, ஆடு வியாபாரத்தில் ஈடுபட்டு, அப்பகுதிக்கு ஆட்டுப்பட்டி என்ற மற்றொரு பெயரையும் பெற்றுக் கொடுத்த கருப்பண்ண பிள்ளையின் மகனான இவர் பல சிரமங்களுக்கு மத்தியில் வைத்தியம் படித்து பல்வேறு அரசாங்க மருத்துவ மனைகளில் டாக்டராகப் பணியாற்றியவர். அநுராதபுரத்திற்கு அண்மையில் அமைந்திருக்கும் யக்கல எனும் ஊரில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது, விடுமுறை நாட்களில், அடர்ந்த யானைக் காடுகளின் ஊடாகத் தனது துவிச்சக்கர வண்டியில் மாத்தளை வந்து இம்புலன்தண்ட எனும் கிராமத்தில் தான் வாங்கியிருந்த முப்பத்தைந்து ஏக்கர் நிலத்தில் தன் கரங்களாலேயே ரப்பர் கன்றுகள் நாட்டி, அத்தோட்டத்திற்கு 'சோமாஸ் லேன்ட்' என பெயரிட்டு மகிழ்ந்த ஒரு கடும் உழைப்பாளி. பின்னர் 215 ஏக்கர் பரப்புள்ள டிக்கிரியாத் தோட்டத்தையும், 75 ஏக்கர் கொண்ட ரத்தொட்டை தோட்டத்தையும் மந்தண்டாவளையில் ஏராளமான காணி, பூமிகளையும், மாத்தளை நகரின் முதல் படமாளிகையான தாஜ்மஹால் தியேட்டரையும் வாங்கிய பெரும் செல்வந்தர்.

இத்தோடு மாத்திரம் நின்றிருந்தால், நாம் டாக்டர் சோமசுந்தரத்தை உழைப்பாளி என்றிருப்போம்; திறமைசாலி என்றிருப்போம்; பெரும் தனவந்தர் என்றிருப்போம். ஆனால் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமனிதன் என நாம் அவரைக் கருதியிருக்க மாட்டோம். மனித நேய மிகு டாக்டர் சோமசுந்தரமோ நோயாளிகள் தங்குவதற்குரிய வசதிகள் அனைத்தும் அமைந்த ஒரு மருத்துவமனையைத் தன் காணியில் கட்டி, இனம், மதம் பாராது இலவசமாக வைத்திய சிகிச்சைகள் செய்தார். ரத்தொட்டை பிள்ளையார் கோவிலின் வளர்ச்சிக்கும் ரத்தொட்டை தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்புக்களை வழங்கினார்.

ஆனால் டாக்டர் அவர்களின் சேவைகளில் தலையானது, பரந்துபட்ட அவரது சமூகப்பணிகளுக்கு மகுடமாக இருப்பது, இன்று மாத்தளை மாவட்டத்தின் மிகப் பெரும் தமிழ்ப் பாடசாலையாக விளங்கும் மாத்தளை இந்துக் கல்லூரிக்கு அடித்தளம் அமைத்தாகும். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபது, முப்பதுகளில் மந்தண்டாவளையில் பிரன்ட்ஸ் மிஷன் எனும் கிறிஸ்தவப் பிரச்சார சபையினரால் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த தமிழ், ஆங்கில இரு மொழிப் பாடசாலை 1934 இல் மூடப்பட்டது; பாடசாலைக் கட்டமும் இடிக்கப்பட்டது. காணி, பூமிகளோடு தமிழர்கள் பெருந்தொகையினராக வாழ்ந்த இடம் மந்தண்டாவளை. எனவே அம்மக்களுக்காகவே நடத்தப்பட்ட பாடசாலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் தொகையும் பெரிதாகத் தானே இருந்திருக்கும்? தமக்கென இருந்த ஒரே பாடசாலை மூடப்பட, படிப்பதாக இருந்தால் சுமார் ஒன்றரை மைல் தொலைவில், நகரத்தின் மறு கோடியில் அமைந்திருந்த கந்தசாமி பள்ளிக்கூடத்திற்கே போக வேண்டிய கட்டாயம்; தொலைவின் காரணத்தால் கணிசமான அளவு பிள்ளைகள் தம் படிப்பை நிறுத்திவிடக் கூடிய சாத்தியம்.

தன்னைச் சூழ வாழ்ந்த மந்தண்டாவளைத் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கிய பிரச்சினையின் தன்மையை டாக்டர் சோமசுந்தரம் நன்கு உணர்ந்தார்; பாரிய திட்டங்கள் தீட்டிக் கொண்டிருப்பதில் அவர் நேரத்தை வீணாக்கவில்லை: உடனடியாகச் செயலில் இறங்கினார். தன்னுடைய காணி ஒன்றில் சில தற்காலிக ஏற்பாடுகளைச் செய்து, ஓர் ஆசிரியரை நியமித்து, உடனே பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். ஒரு சில மாதங்களில் நிரந்தர கட்டடம் ஒன்றை எழுப்பி, திரு. ஏ. சிவஞான ஐயர், திரு. எஸ். நடராஜா எனும் இரு ஆசிரியர்களையும் நியமித்து, இப் பாடசாலையை ஸ்திரப்படுத்திவிட்டார். பாடசாலை படிப்படியாக வளர்ந்தது; மாணவர்களின் ஆசிரியர்களின் தொகைகள் அதிகரித்தன.

1943 ஆம் ஆண்டில் டாக்டர் சோமசுந்தரம் சிவபதமடைந்தார்; அதுவரை அவர் ஆரம்பித்த பாடசாலை அவரது சொந்தச் செலவிலேயே நடந்தது. அதன் பின்னர், 1946 ஆம் ஆண்டில் இப்பாடசாலையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் கையேற்கும் வரை, டாக்டரது குடும்பத்தினர் அதனை நடத்தினர். மந்தண்டாவளைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு பாடசாலை உடனடியாகத் தேவைபட்ட ஒரு காலகட்டத்திலே, ஒரு பாடசாலையை நிறுவியதன் மூலம் டாக்டர் சோமசுந்தரம் அவர்கள் மாத்தளை மாவட்டத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்குக் காத்திரமான ஒரு பங்களிப்பினை நல்கியுள்ளார் என உறுதியாகக் கூறலாம். ஆண்டுகள் பல கடந்து விட்ட பின்னரும் மாற்றங்கள் பல ஏற்பட்ட பின்னரும், தன் ஸ்தாபகரை ஏற்றிப் போற்ற மாத்தளை இந்துக் கல்லூரி ஒரு போதும் மறந்ததில்லை என்பதைச் சென்ற ஆண்டில் இக்கல்லூரி வெளியிட்ட பரிசளிப்பு விழா மலர் உணர்த்துகிறது.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானப் பரிபாலன சபையில் பல முக்கியமான பொறுப்புக்களை வகித்தவரும், அக்கோவில் திருப்பணிகள் சிலவற்றைத் தன் சொந்தச் செலவில் செய்தவரும், இன, மத வேறுபாடுகளின்றி கல்வி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய வருமான திரு. இரா. தங்கவேல் செட்டியாரின் சிரேஷ்ட புதல்வரான 'சிவனெறிச் செம்மல்' மாரிமுத்து செட்டியார் மாத்தளை நகர் வாழ் சகல இனத்தவர்களாலும் மதிக்கப்படும் ஓர் உயர் சமய, சமூக சேவையாளராவார்.

மாத்தளை மாவட்டத் தமிழர்களின் கல்வி வளர்ச்சியையும் குறிப்பிட்ட பாடசாலைகளின் கட்டடத் தேவைகளையும் மனதில் கொண்டு, மாரிமுத்து செட்டியார் மாத்தளை இந்துக் கல்லூரிக்கும் கவுடுபெலல்ல கலைமகள் தமிழ் வித்தியாலயத்திற்கும் வழங்கிய கட்டடங்களும், பாக்கிய வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தைத் திருத்தியமைப்பதற்கு அவர் வழங்கிய உதவிகளும் பண அடிப்படையில் கணிக்கப்பட்டால் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியானவையாகும்; ஆனால் இவ்வுதவிகள் வழங்கப்பட்ட காலகட்டங்களிலே, இவை அக் கல்விக் கூடங்களுக்கு எவ்வளவு அவசியமானவையாக இருந்தன, எவ்வளவு பயன்மிக்கவையாக விளங்கின என்ற அடிப்படைகளில் கணிப்பீடு செய்தால், இவ்வுதவிகள் விலைமதிக்க வொண்ணாதவை என்ற முடிவுக்கு வருவோம்.

வாசிப்புப் பழக்கமும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட மாரிமுத்து செட்டியார் தன்னுடைய தந்தையாரின் அடியொட்டி, மாத்தளை, கண்டி மாவட்டத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்தும், இலக்கியக் கூட்டங்கள் நடத்துவதற்கு உதவிகள் வழங்கியும், மாத்தளை வரும் தமிழறிஞர்களைக் கௌரவித்தும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புக்கள் வழங்கி வருகின்றார்.

இலங்கையில் உள்ள பல கோயில்களில் மாத்திரமின்றி, திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல் போன்ற தென்னிந்திய மாவட்டங்களில் அமைந்திருக்கும் சில கோயில்களிலும் திருப்பணிகள் செய்து பக்தி மான்களின் உள்ளங்களைக் குளிர்வித்த பெருமை இவ்விளம் செட்டியாருக்கு உரியது.

மாரிமுத்து செட்டியார் ஆற்றிய இச்சமய, சமூகப் பணிகள் யாவும் அவருக்கு மனத் திருப்தி வழங்கியிருக்கும்; சமூக வளர்ச்சிக்கும் உதவியிருக்கும். ஆனால் இவருக்கு ஆகக் கூடுதலான ஆத்ம திருப்தியை வழங்கியவை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானப் பரிபாலன சபையின் தலைவராக 1988 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ பத்து வருடங்கள் அவர் அத் தேவஸ்தானத்திற்கு ஆற்றிய அரும் பணிகளாகும். 1983 வன்செயல்களின் போது கோயில் சேதப்படுத்தப் பட்டிருந்தது; பஞ்ச ரதங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. இத்தகைய நிலையில் இருந்த மாரியம்மன் தேவஸ்தானத்தைப் பொறுப்பேற்ற மாரிமுத்து செட்டியார் ஏனைய அறங்காவலர்களின் ஒத்துழைப்புடனும் பக்தர்களின் ஆதரவோடும் 1989 ஆம் ஆண்டில் கோயிலில் கும்பாபிஷேகம் நடத்தினார்; புதிய சித்திரத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்களும் செய்யப்பட்டன; பக்திப் பரவசத்தோடு மீண்டும் தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. இப்பாரிய திருப்பணிகளின் காரணமாக திருப்பணி நாயகர், ஆன்மீக நாயகர், சிவதர்ம வள்ளல் எனப் பல பட்டங்கள் திரு. மாரிமுத்து செட்டியாருக்கு வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசு, அகில இலங்கை சமாதான நீதவான் பட்டமளித்து இவரைக் கௌரவித்திருக்கிறது.

சிவசக்தி கோர்ப்பரேஷன் நிர்வாக இயக்குனர் திரு. சந்திரசேகரன், திரு. எஸ். தியாகராஜா செட்டியார், அனோஜா ஐஸ்கீரிம் அதிபர் திரு. சுப்பையா, விஜயா மெடிக்கல்ஸ் திரு. ராமலிங்கம், பாபா பெடிக்ஸ் திரு. எம். ராஜரத்தினம், நில அளவையாளர் கே. குமாரசுவாமி போன்ற பலரும் நல்ல காரியங்களுக்கு உதவியுள்ளனர். திரு. கந்தசாமி அவர்களின் புதல்வரான திரு. குமாரசுவாமி மாத்தளை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தின் ஆயுட்கால அறங்காவலராக இருந்து செய்த சேவைகள் விருந்துரைக்கப்படவேண்டியவையாகும்.

இவ்வாறுமாத்தளைமாவட்டத்தின் பொதுவாழ்வின் சகல துறைகளிலும் பூரணமாக ஈடுபட்டு தம் பங்களிப்பை வழங்கியுள்ளதைக் காண்கின்றோம். மாத்தளை மாவட்டம் தமிழர்களுக்கு நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ்வதற்குத் தேவையான அத்தனை வசதிகளையும் வழங்கியுள்ளது. இதனைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவே அவர்கள் மாத்தளைமாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு, தம்மால் இயன்றதைச் செய்து தம் நன்றிக்கடனைச் செலுத்தியுள்ளார்கள் என்று கூறலாம்.

---



Beloved Doctor, Your kind card of the 31st ulmo redirected from Batticaloa was duly received. I am at present at Annamalainagar, Chidambaram and I shall probably go to Ceylon by the middle of September. Swami Avinashanandaji and Swami Sharvanandaji are at present in Colombo, their address is: Ramakrishna Mission, Sri Wickrama Road, Wellawatta, Colombo. If you would pay a visit to Colombo you may see them both as well as the two resident Swamis who carry on the mission. If you want to meet me and I can see you at Matale about the 20th September. Kindly write to me. I am keeping good health and hope this will find you in health. With loving regards

Yours in the Lord
Swami Vipulananda

To. Dr K. P. Somasundaram
Unnichary
Matale.

Annamalai University
Annamalainagar
Chidambaram, S. India.
14/8/1952

சுவாமி
விபுலாநந்தர்
எழுதியது.

*(டாக்டர் கே. பி. சோமசுந்தரம் அவர்களுக்கு சுவாமி விபுலானந்தர் அவர்கள் எழுதிய மடல்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளைத் தமிழர்களும் அவர்களது கோயில்களும்

**கோ**யில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஆன்றோர் வாக்கின்படி, தாம் குடியேறிய இடங்களிலெல்லாம் கோயில்கள் அமைப்பதை தமது கடமைகளில் ஒன்றென்றே தமிழர்கள் கருதி வந்திருக்கின்றனர்; அவ்வாறே செயல்பட்டும் இருக்கின்றனர். எனவே தமிழ் குடியிருப்புகள் தோன்றிய பகுதிகளில் எல்லாம் கோயில்கள் கட்டப்பட்டன. இவை அவ்வப் பிரதேச மக்களின் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப, சில பெரியனவாகவும் சில சிறியனவாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் சில ஊர்மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கட்டியவையாகும்; சில, ஊர்ப் பிரமுகர்கள் சிலர் சேர்ந்து கட்டியவையாகும்; சில, தனிப்பட்டவர்களினால் கட்டப்பட்டவையாகும். அவ்வாறே கட்டப்பட்ட காலங்களின் அடிப்படையிலும் இக்கோயில்கள் வேறுபடுகின்றன. கோயில்கள் அமைந்துள்ள இடங்களின் பெயர்களும் அவ்விடங்களில் காணப்படும் கோயில்களின் எண்ணிக்கையும் கீழே தரப்படுகின்றன :

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கோயில் அமைந்துள்ள ஊர்ப் பெயர் | கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | அலுத்வத்தை | 01 |
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | டன்கன் பிளேஸ் | 02 |
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | கலகம | 02 |
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | மாளிகாதென்ன | 02 |
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | நோர்த் மாத்தளை | 07 |
| யட்டவத்தை உ. அ. அ. பிரிவு | மேற்கு உடகம | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | பலக்கடுவ | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | எல்வள | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | குறலவெல | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | ஹலாங்கொட | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | உனஸ்கிரியவத்தை | 03 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | உனுகெட்டவல | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | கொஹொம்பிலி வல | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | லேவி அம்ப | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | மகுல மட | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | ஒவிலி கந்த | 02 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | தவலன் கொய | 02 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | தொம்பகஸ்தெனிய | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | குறலவெல வடக்கு | 01 |
| உக்குவளை உ. அ. அ. பிரிவு | மொரகஹபிட்டிய | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | அள்வத்த | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | பம்பரகிரியெல்ல | 04 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | தொம்ப கொல்ல | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | தங்கந்த | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | எபிலமுல்ல | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | கலேகொட்டுவ | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | கன்சரப் பொல | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | கொடப் பொல | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | ஹங்கரன்கந்த | 06 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | ஹொர கொல்ல | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | இஹல ஓவல | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | இக்கிரியா கொல்ல | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | கந்தே நுவர கிழக்கு | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | கந்தே நுவர மேற்கு | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | மடக்கும்புற | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | மெதவத்த | 03 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | புஞ்சி செலுவா கந்த வத்த | 06 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | ரத்தொட்ட | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | தம்பலகல | 03 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | உடகம | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | உட ஹபுவித | 02 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | விகாரகம | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | வெலன்கஹ வத்த | 01 |
| ரத்தொட்ட உ. அ. அ. பிரிவு | வெடசேயாய | 02 |
| லக்கல உ. அ. அ. பிரிவு | திவுல்கஸ்பட்டன | 06 |
| லக்கல உ. அ. அ. பிரிவு | ரத்னிந்த | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | அலுவிகாரை | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | அங்கந்த | 02 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | பீர்தவெல | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | தியபுபுல்ல | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | கொங்காவளை | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | ஹுலன்கமுவை வடக்கு | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | களுதாவெல | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | கந்தே கெதர | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | மடவல உள்பொத்த | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | மகுலகஹ ரூப | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | மந்தண்டாவளை | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | மொரகஹமட | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | முஸ்லிம் நகரம் | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | பலாபத் வெல | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | புவக்பிட்டிய | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | விகாரபார | 01 |
| மாத்தளை உ. அ. அ. பிரிவு | வள்ளி வெல | 01 |
| கலேவெல உ. அ. அ. பிரிவு | கலேவெல நகரம் | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | அலுத்வெவ | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | கம்மடுவ | 03 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | குருபெபில்ல | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | உனுகெட்ட | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | இம்புல்கொல்ல | 02 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | மெட்டியக்க | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | நுகலியத்த | 02 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | பள்ளேதென்ன | 01 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | புஸ்ஸெல்ல | 02 |
| அம்பான்கங்கை உ. அ. அ. பிரிவு | சிரிரங்கவத்த | 01 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் கணிசமான அளவு வாழ்கின்ற அத்தனைப் பகுதிகளிலும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன என்பதை மேலே தரப்பட்டுள்ள அட்டவணை புலப்படுத்துகின்றது. உக்குவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் தொம்பகஸ்தெனிய, குருலவெல வடக்கு, மொரகஹபிட்டிய எனும் இடங்களில் கோயில்கள் இருக்கின்ற போதிலும் இப்போது தமிழர்கள் யாரும் அவ்விடங்களில் வசிப்பதில்லை. வில்கமுகவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு கோயிலாவது இல்லை; ஆனால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் அப்பிரிவில் ஹிந்துக்கள் ஒருவரும் இல்லை.

ஆனால் முறையே 228, 1050, 1330 எனத் தமிழர்கள் வாழும் தம்புள்ளை, நாவுளை, பள்ளேப்பொல எனும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கோயில்கள் ஒன்றேனும் இல்லாதிருப்பது வேதனைக்குரியதே. கோயில் என்பது ஆத்மீகம் தொடர்பானது மாத்திரம் அல்ல; தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கலாசாரத்தைக் கட்டிக் காக்கும் அமைப்பும் அதுவே. கோயில் இல்லாத இடங்களில் வாழும் தமிழர்கள் தம் சமயத்தையும் தம் கலாசாரத்தையும் இழக்கக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்பதற்கு 1921 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கை ஒரு சான்றாக இருக்கிறது.

இவ்வறிக்கையின்படி நாலந்தைக்கு அருகாமையில் இருக்கும் பாரகஹமட என்னுமிடத்தில் இனவாரியாகப் பார்க்கும்போது 129 சிங்களவர்களும் 10 இந்தியத் தமிழர்களும் வாழ்ந்திருக்கின்றனர்; ஆனால் சமயவாரியாகப் பார்க்கும்போது பௌத்தர்களின் தொகை 131 ஆகவும் இந்துக்களின் தொகை 8 ஆகவும் இருந்திருக்கிறது. அவ்வாறே எஹலப்பொல என்னும் கிராமத்தில் 347 சிங்களவர்களும் 11 இந்தியத் தமிழர்களும் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் சமய ரீதியாகப் பிரிக்கும்போது இத்தொகைகள் 351 பௌத்தர்களென்றும் ஏழு இந்துக்களென்றும் பிரிகின்றன. இந்தியத் தமிழர்கள் இங்கு வந்தபோது பௌத்தர்களாக வந்திருக்க மாட்டார்கள்; இந்துக்களாகவே வந்திருப்பர். கோயில் இல்லாத பாரகஹமட சூழ்நிலை இரண்டு இந்துக்களையும் கோயில் இல்லா எஹலப்பொல சுற்றாடல் நான்கு இந்துக்களையும் பௌத்தர்களாக ஆக்கியுள்ளன என்பது நிரூபணமாகின்றது.

மாத்தளை மாவட்டத்தில் காணப்படும் சில கோயில்களைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

இலங்கையில் இருக்கும் மிகப் பிரபலமான கோயில்களில் ஒன்றெனக் கருதப்படும் இது, பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே, அத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகும் என இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 'இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள்' எனும் நூல் கூறுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் கதிராமர் சுப்புத்தம்பி என்பவரின் பொறுப்பில் இக்கோயில் இருந்ததென்றும் பெரியகருப்பன் செட்டியாரின் மகன் கருப்பன் செட்டியார் கொங்காவலையில் அவருக்கிருந்த சில காணிகளை இக்கோயிலுக்கு நன்கொடையாக வழங்கியிருந்தார் என்றும் ஆறுமுகம் சபாபதிப்பிள்ளை எனும் நொத்தாரிசினால் எழுதப்பட்ட ஓர் ஆவணம் கூறுகின்றது. எது எப்படியிருப்பினும் இது பழமை வாய்ந்த ஒரு கோயில் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

ஆரம்பத்தில் பூஜைகள் மாத்திரம் நடைபெற்ற இக்கோயிலில் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில் இரதோற்சவம் நடைபெற்றுள்ளது. இக்காலப் பகுதியில் முத்துராமன் சேர்வை, கருப்பையர் சேர்வை, வன்னிவேல் செட்டியார், சிறாப்பர் சோமசுந்தரம், விசுவநாதன், மாணிக்கம் செட்டியார், எதிர்மானசிங்கம், டாக்டர் சோமசுந்தரம், திரு. எஸ். எஸ். கந்தசாமி போன்ற பலர் இக்கோயில் பரிபாலனத் தலைமைத்துவத்தை ஏற்று அதன் உயர்வுக்காக உழைத்துள்ளார்கள்.

ஐம்பதுகளில் இக்கோயிலின் பரிபாலன சபைப் பொறுப்பை ஏற்று ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்கள் அப்பொறுப்பை வகித்து இக்கோயிலைப் பல வகைகளிலும் வளர்த்த பெருமை திரு. கந்தசாமி குமாரசாமி அவர்களுடையதாகும். இவரது முயற்சியினால் பல திருப்பணிகள் இக்கோயிலில் நடந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம் ஆண்டு வன்செயல்களால் பாதிப்புக்குள்ளாகியிருந்த இக்கோயிலைப் பொறுப்பேற்று இக்கட்டுகள் நிறைந்திருந்த அக்கால கட்டத்திலே, இதனைச் சிறப்பாக வழிநடத்திய திரு. இராஜரத்தினம் மாத்தளை வாழ் இந்து மக்களின் நன்றிக்கு உரியவராவார்.

எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஏறத்தாழ தொண்ணூறுகளின் இறுதிவரை இக்கோயில் அறங்காவலர் சபைத் தலைவராகப் பணியாற்றிய திரு. மாரிமுத்துச் செட்டியார், திரு. எஸ். சந்திரசேகரம், திரு. எம். சபாரட்ணம், திரு. க. மனோகரன், திரு. எஸ். ஜெயக்குமார், திரு. கே. ராமநாதன், திரு. எஸ். பத்மநாதன், திரு. என். செல்வரட்ணம், திரு. பி. தங்கவேல், திரு என். சுப்பையா ஆச்சாரியார், திரு. எம். இராமையா, திரு. வி. தங்கராஜ், திரு. எஸ். விஸ்வநாதன், திரு. பா. பாலசுப்ரமணியம் போன்ற பலரின் ஒத்துழைப்போடு ஆற்றிய பெரும் திருப்பணிகள் இக்கோயிலுக்குப் பெரும் பொலிவினையும் சர்வதேசப் பிரபல்யத்தினையும் பெற்றுக் கொடுத்துள்ளன.

மாத்தளை என்றால் மாத்தளை மாரியம்மனையும் மாசிமக இரதோற்சவத்தையும் நினைக்காத இந்துக்கள் இந்நாட்டில் இருக்க முடியாது. இந்த இரதோற்சவத்தைப் பற்றிய தனது நினைவுகளை மலையகத் தமிழ் மக்களின் பெருந்தலைவர் அமரர் சௌ. தொண்டமான் அவர்கள் சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பிதழுக்குத் தான் அனுப்பிய ஆசிச் செய்தியில் கீழ்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்கள்:

> "மாத்தளை தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் பிரதேசமாகும். அங்கு நடைபெறும் தேர்த் திருவிழா நமக்கு இந்தியாவின் தமிழ் நாட்டு சமயபுரத்தை நம் மனக்கண் முன் கொண்டு வரும். தமிழ் கலை, கலாசார பாரம்பரியத்தை மலையக மக்கள் எந்த அளவுக்குக் காப்பாற்றி வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாக விளங்கியது மாத்தளைத் தேரோட்டம். தமிழ் நாட்டிலே பெரிய தேர்களை ஊர் மக்களெல்லாம் ஒன்று திரண்டு வடம் பிடித்து இழுப்பார்கள். இந்தக் காட்சியை நாம் மாத்தளை தேர்த் திருவிழாவிலே கண்டு வந்தோம்".

தலைவர் தொண்டமான் கூறியுள்ளதைப் போல எத்தனையோ ஆண்டுகள் வருடா வருடம் வெகு விமரிசையாக நடந்த இரதோற்சவம் வன்செயல்கள் காரணமாகப் பத்து ஆண்டுகள் நடவாதிருந்தது. தேவைப்பட்ட பெருந்தொகைப் பணத்தைத் திரட்டி புது பஞ்சரதங்களை உருவாக்கி மீண்டும் மாத்தளை இரதோற்சவத்தை நடத்திய பெருமை திரு. மாரிமுத்துச் செட்டியார் அவர்களுக்கும் ஏனைய அறங் காவலர்களுக்கும் உரியதாகும்.

மாத்தளை மாவட்டத் தமிழ் மக்களின் ஆத்மீக நலன்களை விருத்தி செய்வது மாத்திரம்தான் தம் கடமை என இக்கோயில் அறங்காவலர்கள் ஒருபோதும் நினைத்ததில்லை; இம் மக்களின் சமூக, பொருளாதார, கலாசார நலன்களை விருத்தி செய்வதும் தம் கடமையே என நினைக்கும் இவர்கள், பல சமூக அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளனர். அறநெறிப் பாடசாலை நடத்துதல், பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் இந்து மாணவ, மாணவிகளுக்கு இலவச வகுப்புகள் நடத்துதல், தொழில் பயிற்சிகள் வழங்குதல், ஏழை மாணவ, மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள், பேனா, பென்சில்கள் வழங்குதல், இலங்கை, இந்திய அறிஞர்களை வரவழைத்து சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தல் எனப் பல விதமான சேவைகளையும் இத் தேவஸ்தானம் நிறைவேற்றி வருகின்றது.

மாத்தளை மாவட்டத் தமிழர்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் இக்கோயிலின் அறங்காவலர் சபைத் தலைவராகக் கடந்த சில ஆண்டுகளாகப் பணியாற்றும் திரு. சண்முகம் சந்திரசேகரம் இக்குறுகிய காலத்துக்குள் தன்னுடைய ஆற்றலையும் அர்ப்பணிப்பையும் நன்கு வெளிப் படுத்தியுள்ளார். கனிவும், கண்ணியமும், சாந்தமும், 'சக்தி'யும் மிகு பண்பாளர் திரு. சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் இத்தேவஸ்தானம் மேலும் சிறப்படைய வேண்டும் என்பதே மாத்தளை தமிழ் மக்களின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைக்கல் ஸ்ரீ அழகர் பெருமாள் கோயில்

மாத்தளைக்கு வடக்கே, ஏறத்தாழ நான்கு மைல் தொலைவில் மாத்தளை – திருகோணமலைப் பாதையில் பலாபத்வலைக்கு அண்மையில் இருக்கும் வெள்ளைக்கல் எனும் கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ அழகர் பெருமாள் கோயில் பழமைமிக்கதாகும்.

இக்கோயிலில் சித்திரா பூரணை விழா வருடா வருடம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. சித்ரா பௌர்ணமிக்கு முதல் நாள் ஆரம்பிக்கும் இத்திருவிழா தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும். இறுதி நாளன்று தீ மிதித்தலும் அன்னதானமும் நடைபெறும்.

இந்துக்களும் பௌத்தர்களும் இணைந்து வாழும் சிற்றூர், வெள்ளைக்கல் எனும் இக்கிராமம். இரு சாரார்களும் இக்கோயில் விழாக்களில் பங்கு பற்றுவது இவ்வூரின் விசேஷமாகும்.

## மாத்தளை களுதாவளை சுதுகங்கை ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் ஆலயம்

மாத்தளை – ரத்தொட்டைப் பாதையின் மருங்கில் அழகாக, அமைதியாக நெளிந்தோடும் சுது கங்கை ஆற்றங்கரைக்கு அண்மையில் அமைந்திருக்கும் இக்கோயில் ஆவுடை கங்காணி என்பவரால் 1908ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது எனப் பொதுவாக நம்பப்படுகிறது. தான் மரணிக்கும் வரையில் ஆவுடை கங்காணியாரே இக்கோயிலைப் பராமரித்தும் இருக்கிறார்.

மண்ணால் கட்டப்பட்டிருந்த கோயிலை உடைத்துவிட்டு அதே இடத்தில் கல்லால் கோயில் கட்டிய சுதுகங்கை தோட்டத் துரை பென்னி தனது மரண பரியந்தம் இதனைப் பராமரித்து வந்திருக்கிறார். 1930 ஆம் ஆண்டிலிருந்து நாற்பதாம் ஆண்டுவரை சின்னையா கணக்கப்பிள்ளை இதனை பரிபாலித்து வந்துள்ளார். நெடுங்காலமாக குணசேன எனும் பௌத்த தனவந்தரின் பராமரிப்புக்குள்ளும் இக்கோயில் இருந்திருக்கிறது. இக்கோயிலைச் சுற்றி இருக்கும் சிறு மதில்களைக் கட்டியவர் இவரே. 1980ஆம் ஆண்டளவில் டாக்டர் மகாலிங்கம் அவர்கள் இக்கோயில் பரிபாலனப் பொறுப்பினைக் கையேற்று பெருமளவுக்கு அபிவிருத்திப் பணிகள் செய்துள்ளார். ஓரளவு சிதிலமடைந்திருந்த கோயில் புதுப்பிக்கப்பட்டது. இராமநாதபுரம் புல்லாணி எனும் ஊரைச் சேர்ந்த ச. முத்துராமப்பிள்ளை, வி. நாகலிங்கம் எனும் இரு சிற்ப ஆச்சாரிகளின் தலைமையிலே நுட்பமான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த ஓர் அழகான ராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இவை டாக்டர் மகாலிங்கம் அவர்களின் பரிபாலன காலப்பகுதியில் நடைபெற்ற சில திருப்பணிகளாகும்.

## மாத்தளை கதிர்வேலாயுதர் ஆலயம்

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தியினால் மாத்தளை பெற்ற செழிப்பில் பங்கேற்க வந்த நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரால் ஏறத்தாழ நூற்று அறுபது ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகக் கருதப்படும் இக்கோயிலின் சரியான பெயர் கதிர்வேலாயுதர் ஆலயம் என்பதே என்ற போதிலும் இது கதிரேசன் கோயில் என்றே பொதுவாக அழைக்கப்படுகிறது.

தேவகோட்டைச் சேவுகன் செட்டியார் மகன் உடையப்பச் செட்டியார் அரச மரத்தடிச் சேனை என்ற காணியைக் கிரயத்திற்கு வாங்கி இக்கோயிலை நிர்மானித்தார் என 1839 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 17ஆம் திகதியன்று தமிழில் எழுதப்பட்ட நொத்தாரிஸ் உறுதிப்பத்திரம் ஒன்று கூறுகின்றது.

நாட்டுக்கோட்டை செட்டியார்கள் பலரால் பரிபாலிக்கப்பட்ட இக்கோயில் சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் அரு. உல. உலகப்பச்செட்டியாரின் பொறுப்புக்குள் வந்தது; அவருக்குப் பின் கோயில் பரிபாலனப் பொறுப்பினை உலகப்பச் செட்டியாரின் மகன் வைரவன் செட்டியார் கையேற்று 1965ஆம் ஆண்டு வரை மிகச் சிறப்பாக அப்பொறுப்பினை நிறைவேற்றினார்.

தாய்நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டதால் வைரவன் செட்டியார் கோயில் பொறுப்பை தாமரவள்ளித் தோட்டத்தின் நிர்வாகியாகப் பணியாற்றிய திரு. சொக்கலிங்கம் செட்டியார் என்பவரிடம் ஒப்படைத்தார். 1978ஆம் ஆண்டில் கோயில் பொறுப்பினைச் சொக்கலிங்கம் செட்டியார் தனது புதல்வரான திரு. அண்ணாமலைச் செட்டியாரிடம் ஒப்படைத்தார். 1983ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பிரச்சினைகளால் மன வேதனையுற்ற அண்ணாமலைச் செட்டியார் இக்கோயிலின் பரிபாலனப் பொறுப்பை, இக்கோயில் பூஜைகளை நெடுங்காலமாக நடத்தி வந்த பிராமண குருக்கள் பரம்பரையின் வாரிசான பாலசுப்ரமணியசர்மா குருக்களிடம் கையளித்தார்.

பாலசுப்ரமணியம் குருக்களின் புத்திரரான திரு. யோகானந்த சர்மா அவர்கள் பொதுமக்களிடம் இருந்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரம் ரூபாய் திரட்டி இக்கோயிலுக்கு ஒரு புதிய வசந்த மண்டபம் கட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை சுனங்காமம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

மாத்தளையில் வாழும் ஒரு பிரபலமான தமிழ்க் குடும்பத்திற்குச் சொந்தமான இக்கோயிலைப் பற்றி கீழே தரப்படும் தகவல்கள் இக்குடும்பத்தைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி நமசிவாயம் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இருந்து பெறப்பட்டவையாகும்.

பதினோழாம் நூற்றாண்டின் இறுதியில் வியாபாரத்திற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து மாத்தளை வந்து, நகருக்கு அண்மையில் இருக்கும் சுனங்காமம் என்னும் கிராமத்தில் குடியமர்ந்த ஆறுமுகம்பிள்ளை என்பவர் இக்கோயிலைக் கட்டினார். 1826இல் அவரது புத்திரரான வெற்றிவேலுப்பிள்ளை இக்கோயிலைக் கல்லினால் கட்டினார். அவருக்குப் பின் அவரது மகளான திருமதி தங்கப்பொண்ணு தம்பிப்பிள்ளை இக் கோயிலைச் சிறப்பாகப் பராமரித்து வந்திருக்கிறார். அவர் 1944 ஆம் ஆண்டில் காலமாக அவரது மகன் முன்னாள் நகர பிதா திரு. தம்பிப்பிள்ளை தம்பிராஜா இதனை மிகச் சிறப்பாகப் பரிபாலித்தார். 1983ஆம் ஆண்டு வன்செயலின் போது சேதப்படுத்தப்பட்ட கோயில்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் திரு. தம்பிராஜா மிகுந்த பொருட்செலவில் இக்கோயிலை மீண்டும் அழகாகக் கட்டியெழுப்பினார்.

17ஆம் நூற்றாண்டில் இருந்து ஆறுமுகம் பிள்ளை அவர்களின் வம்சாவழியினரால் நிர்வாகம் செய்யப்படும் குடும்பத் தனியார் கோயில் இதுவாகும்.

## மாத்தளை விநாயகர் கோயில்

மாத்தளை நகரப் பிரதான வீதியில் கதிரவேற்பிள்ளை என்பவரால் 1901ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இக்கோயில் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமான கோயில்களில் ஒன்றாகும். திரு. எஸ். எஸ். கந்தசாமி அவர்களால் பரிபாலிக்கப்பட்ட இக்கோயிலை அவரது மறைவுக்குப் பின்னர் அவரது புதல்வரான திரு. குமாரசாமி தனது இறுதிக் காலம் வரை மிகச் சிறப்பாகப் பராமரித்து வந்துள்ளார்.

## ரத்தொட்ட இராமர் கோயில்

நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாது இருந்த ரத்தொட்ட தமிழ்ப் பிரமுகர் ஏ. ஒ. அரியமுத்துச் செட்டியார், பிள்ளைப்பாக்கியம் கிடைத்தவுடன் தன் நன்றியைக் காட்டத் தன் சொந்தச் செலவில் கட்டிய கோயில் இது. ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில் கட்டப்பட்ட இக்கோயில் இன்றும் அரியமுத்துச் செட்டியார் அவர்களின் குடும்பத்தினராலேயே பரி பாலிக்கப்படுகிறது.

## பரமகுரு சுவாமி மடம்

பரமகுரு சுவாமிகள் என அழைக்கப்படும் ஆத்மஞானி, மாத்தளை மந்தண்டாவளையில் சமாதியடைந்த ஒரு பெரியாராவார். இவர் சமாதியடைந்த இடத்தில் ஒரு மடம் நிறுவப்பட்டது. இம்மடமே பரமகுரு சுவாமி மடம் என அழைக்கப்படுகிறது.

தன்னுடைய இளமையிலே தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்ட வேலைக்கு அழைத்து வரப்பட்ட இவர் அவ்வேலையிலே அக்கறை காட்டாதபடியால் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டார். மனமுடைந்த இவர் மூன்று வருடங்கள் சமூகத்திலிருந்து விலகிக் காடுகளிலே இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையினை நடத்தியுள்ளார். காட்டிலே இவரைச் சந்தித்த சில வழிப்போக்கர்கள் இவரை மாத்தளைக்கு அழைத்து வந்து சேர்த்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பறியா இப்பாட்டாளி பண்டிதர்களும் வியக்கும் வண்ணம் தத்துவம் பேச ஆரம்பித்தது இதன் பின்னரே. கோப்பித் தோட்டத் தொழிலாளியாக வந்த இவர் பரமகுரு சுவாமிகள் என அழைக்கப்பட்டதும் இதன் பின்னரே.

ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி பெரியவர் சிறியவர் என்ற வித்தியாசம் எதுவுமின்றி எல்லோருடனும் அன்போடும் பண்போடும் பழகிய பரமகுரு சுவாமிகளால் மிகவும் கவரப்பட்டவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆவார். தான் எழுதிய 'தத்துவமும் சமயமும்' எனும் ஆங்கில நூல் ஒன்றில் தான் சந்தித்த பெரும் அறிவாளிகளில் ஒருவரென பரமகுரு சுவாமி அவர்களை சேர் பொன். அருணாசலம் வர்ணித்துள்ளார்.

பரமகுரு மடத்தைச் சூழ இருந்த சிறு தென்னந்தோட்டமும் வேறு சில காணிகளும் இம்மடத்திற்கு உரியனவாக இருந்தன. இச் சொத்துக்களைப் பராமரிப்பதற்கு சுவாமி சிலரைத் தர்மகர்த்தாக்களாக நியமனம் செய்திருந்தார். இத் தர்மகர்த்தாக்களில் ஒருவர் சேர் பொன். அருணாசலம் ஆவார். சேர் அருணாசலம் இறந்த பின்னர் அவரது இடத்திற்கு அவரது புதல்வரான சேர் அருணாசலம் மகாதேவா அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் இவர்களின் சார்பில் திரு. க. குமாரசாமி தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டார்.

சுவாமிகள் இவ்வுலகை நீத்தது 1904ஆம் ஆண்டிலாகும்.

மாத்தளை மாவட்டத்தில் நூற்றி இருபத்தைந்துக்கும் அதிகமான கோயில்கள் இருக்கின்றன. இக்கோயில்கள் ஆத்மீக, கலாசார மையங்களாகத் திகழ்ந்து இந்துத் தமிழர்களை வழிநடத்தின. இவை யாவும் இன்றும் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன என்பதே பொதுவான கருத்தாகும்.

★ ★ ★
★ ★
★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டத் தமிழர்களின் தமிழ் இலக்கியப் பாரம்பரியம்

ஆயிரத்து எண்ணூற்று எண்பதுகளில் மாத்தளை மாவட்ட மொத்தச் சனத்தொகை ஏறத்தாழ எண்பத்தேழாயிரம் என்றும் அதில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு அதிகமானோர் தமிழ்ப் பேசும் மக்கள் என்றும் 1881 ஆம் ஆண்டு குடிசனத்தொகை மதிப்பீடு அறிக்கை வெளிப்படுத்தும் புள்ளி விவரங்கள் இம்மாவட்டம் தமிழ்ப் பாரம்பரியம் வேரூன்றியிருந்த ஒரு பிரதேசம் என்பதை உணர்த்துகின்றன. சனத்தொகை மதிப்பீடு அறிக்கை 1881 லேயே பெருந்தொகையான தமிழர்கள் இங்கு வாழ்ந்தனர் என்பதைப் புலப்படுத்துவதைப் போலவே, ஆறுமுகம் சபாபதிப் பிள்ளை, முருகேசுப்பிள்ளை, ஜெய்னுல் ஆப்தீன், மீரா சாஹிபு, குப்பைத்தம்பி போன்ற நொத்தாரிஸ்கள் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதுகளிலிருந்து தமிழில் எழுதியுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் அக் காலத்திலேயே இங்கு வாழ்ந்தவர்களில் ஒரு சிலர் தமிழ் மொழியில் நல்ல பாண்டித்யம் உடையவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. அதே வேளையில் இத்தகைய பத்திரங்களோடு சம்பந்தப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோர் அப்பத்திரங்களிலே தமிழில் தத்தம் கையொப்பங்களைப் பதித்திருப்பது, தமது பெயர்களை எழுதக் கூடிய அளவிற்காவது பெருந்தொகையான தமிழர்கள் தமிழ் மொழியினை அறிந்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றது.

இம்மாவட்டத்து மக்களிடம் தமிழறிவு காணப்பட்டது என்பதனால், இவர்கள் மத்தியில் இலக்கியமும் வளர்ந்திருந்தது என்று கூறி விட முடியாது. இப்பிரதேசத்தின் ஆதாரபூர்வமான தமிழ் இலக்கிய வரலாறு, இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் விடிவுக்குப் பின்னரே ஆரம்பமாகின்றது என்பதுதான் உண்மை. ஆனால் இக்கூற்று, அதற்கு முன்னர் இப்பிரதேச இலக்கியம் வாய் மொழி இலக்கியமாக வளர்ந்திருக்கலாம் என்ற ஊகத்தை மறுக்கவோ, நிராகரிக்கவோ இல்லை என்பதை உணர தவறிவிடக் கூடாது. உலகின் எந்த ஒரு மொழியினதும் காலத்தால் முற்பட்ட இலக்கியம் நாட்டார் பாடல்களே எனவும் அவற்றிலிருந்தே ஏட்டிலக்கியம் எனக் கொள்ளப்படும் ஏனைய வகை இலக்கியங்கள் தோன்றின எனவும் கலாநிதி க. அருணாசலம் கூறுவது இதனையே உணர்த்துகிறது.

மாத்தளை மாவட்டத்தில் குடியமர்ந்துள்ள தமிழர்கள் இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் என இரு வகைப்படுவர். இலங்கைத் தமிழர்களில் கணிசமானோர், இரகுவம்சம் எனும் காவியம் பாடிய மன்னன் அரசகேசரி, மருத்துவத்தைப் பற்றி நூல் எழுதிய அரசன் செகராசசேகரன், தான் சிறுவனாக இருக்கும்போது, கனகராய முதலியார் வீட்டுக்கு வழி கேட்கப்பட 'பொன் பூச் சொறிந்து பொலிந்த செழுந்தா திறைக்கும்" என்ற பாட்டினால் பதில் கூறிய சின்னத்தம்பிப் புலவர், யாழ்ப்பாண வைபவ மாலை பாடிய மயில்வாகனப் புலவர், நல்லைக் குறவஞ்சி பாடிய இருபாலைச் சேனாதிராய முதலியார் போன்ற பெரும் தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த யாழ்ப்பாண மண்ணிலிருந்து வந்தவர்கள்.

இந்தியத் தமிழர்களில் பெரும்பாலானோர் பஞ்சத்தில் வந்தவர்கள் தான்; ஆனால் பாரம்பரியமற்று வந்தவர்கள் அல்லர். அவர்கள் விக்கிரமாதித்தன் கதை, மதுரை வீரன் கதை, மதன காமராஜன் கதை எனப் பல வகையான கதைகள் கேட்டு வளர்ந்த பரம்பரையினர். பிறப்பிலும் பாட்டு, வளர்ப்பிலும் பாட்டு; சாவிலும் பாட்டு என வாழ்ந்த பரம்பரையினர். இதனால்தான், என்ன என்னவோ எதிர்பார்த்து, மலையகம் வந்து ஏமாந்த பெண் ஒருத்தி, தன் சோகத்தை,

*பாதையிலே வீடிருக்க*
*பழனிச் சம்பா சோறிருக்க*
*எருமே தயிரிருக்க*
*ஏன்டி வந்தே கண்டிச் சீமை*

எனப் பாட்டாலேயே கூறக்கூடிய நிலையில் இருந்தாள் எனலாம்.

இத்தகைய செழுமை மிகு இலக்கியப் பாரம்பரியத்தின் சொந்தக்காரர்களை உள்ளடக்கியிருந்த மாத்தளை மாவட்டத் தமிழ் சமூகத்திலே சுட்டிக் காட்டுவதற்கு இன்று ஆதாரங்கள் எதுவும் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, இலக்கிய முயற்சிகள் எதுவும் இருந்திருக்காது என்ற முடிவுக்கு வருதல் நியாயமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானா என்ற கேள்வி தோன்றுகின்றது. ஆதாரங்கள் எதுவுமில்லாததால் இதுதான் நடந்தது என்று கூற முடியாத இக்கட்டான நிலை.

ஆனால் இவர்களின் பாரம்பரியத்தின் அடிப்படையில் நாம் சில அனுமானங்களுக்கு வரலாம். தோட்டங்களில் எழுத வாசிக்கக்கூடிய ஒரு சிலர் இருந்திருப்பர்; பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, மதுரை வீரன் கதை போன்றவற்றை ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் சுவாரஸ்யத்தோடு கேட்டுக் கொண்டு இருந்திருப்பர். படித்த மக்கள் அதிகம் இருந்த நகர்ப்புறங்களிலே இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை வாசித்திருப்பர்; கலந்துரையாடி இருப்பர்; விமர்சனங்கள் செய்திருப்பர். ஒருவர் மகாபாரதத்தை, இராமாயணத்தை, வேறு நூல்களைத் தன் வீட்டிலே வாசித்து விட்டு, மேடைக்கு வந்து அவற்றைப் பற்றிப் பேசுவதை, இலக்கியச் சொற் பொழிவு என்றும் இலக்கிய முயற்சி என்றும் கூறமுடியுமானால், தான் வாசிப்பதைக் கேட்பதற்காக வந்திருப்போர் முன் அமர்ந்து, ஏதோ ஒரு கதையை வாசிப்பதையும் இலக்கிய முயற்சி எனக் கருதலாம் தானே?

மாத்தளைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் பிதாமகன் என திரு. எஸ். எஸ். சிவனாண்டி எனும் சைவப் பெரியாரைச் சில இலக்கியவாதிகள் சுட்டிக் காட்டுகின்றனர். மாத்தளை நகருக்கு அண்மையில் இருக்கும் உடுபிஹில்ல எனும் கிராமத்தில் வாழ்ந்த இப்பெரியார் உடுபிஹில்ல சச்சிதானந்த பேரின்ப மாதவர் சங்கம், உடுபிஹில்ல செந்தமிழ்ச் சங்கம் எனும் பெயர்களிலே மன்றங்கள் நிறுவி, சமய, இலக்கியப் பணிகள் ஆற்றியுள்ளார் என இவர்கள் கூறுகின்றனர். தமிழ்ப் பற்றும் தமிழறிவும் மிக்க இவர் பல பாக்களை இயற்றியுள்ளார் என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். அச்சில் வந்துள்ள இவரது முதற் படைப்பு 1931ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள பஞ்சமாபாதக விளக்க வினா விடை எனும் வசன நூலே. ஆனால் மாத்தளை நகருக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் உள்பொத்தப்பிட்டிய எனும் கிராமத்தில் வாழ்ந்த கோட்டாறு ஷெய்கு சுலைமானுல் காதிரி எனும் இஸ்லாமியப் பெரியார் எழுதிய பல நூல்கள், 1916 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருப்பதாலும், மாத்தளை நகரில் வாழ்ந்த முருகேசப்பிள்ளை எனும் தமிழ்ப் பெரியார் எழுதிய முத்துமாரி அம்மாள் பதிகம் 1922 ஆம் ஆண்டில் அச்சுவாகனம் ஏறியிருப்பதாலும் திரு. சிவனாண்டி அவர்களை மாத்தளை மாவட்டத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முன்னோடியாகக் கருதுவது பொருத்தமற்றதே.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் மூன்றாம் தசாப்தங்களிலே தன் புலமையை வெளிப்படுத்திய முருகேசப்பிள்ளையின் ஆக்கங்கள் யாவும், அக்கால இலக்கியப் பண்புக்கேற்ப சமயச் சார்புடையனவாகவே விளங்குகின்றன. நீர் வளமும் நில வளமும் மக்கள் மனவளமும் குன்றாத பண்ணாமம் என்னும் எழில் கொஞ்சும் மாத்தளையில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது பதிகம், அந்தாதி, ஊஞ்சல் எனப்பல பிரபந்தங்கள் பாடி மாத்தளை வாழ் சைவப் பெருமக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டவர் உயர் திரு. முருகேசப்பிள்ளை.

*"சீரான செந்நெல் விளை கழனி களமைந்துலவு*
*செய்ய பங்கேருகங்கள்*
*செப்பு வால் வளையினிது சூற் கொண்டல் பூசுமா*
*செண்பக மலர்ந்துல விடப்*
*பேரான நீரோடை வாவிகளமைந்து நற்பெய்யுமுகி*
*லினமதென்னப்*
*பிரபலத்துடனருவி சொரிநறவ மணிகளும்*
*பிரிவிலாதுலவி யொளிறும்*
*நேரான நய மருவு நிகரில் வளமுற்றிடும்*
*நீள் பன்ன காமமுறையும்*
*நிறை முத்துமாரி மேற்பதிகம தியான்பாட*
*நேசமுற்றருள் புரிகுவாய்"*

என அன்று பன்னகாமம் என்றும் அழைக்கப்பட்ட மாத்தளையின் இயற்கையழகுகளை மாத்தளை முத்துமாரி அம்மாள் பதிகத்தின் காப்புச் செய்யுளில் எடுத்துரைத்த முருகேசப்பிள்ளை அவர்களின் மொழி அறிவையும் கவிதா ஆற்றலையும் முத்துமாரி அம்மை ஊஞ்சலில் வரும்

*"மேகநிகர் குழலசையப் பணிகளாட*
*விளங்கிய குண்டலங் கொப்பு மின்னியாட*
*வேகனைய சுடி பக்கம் விளங்கியாட*
*மேகலை நற்சிறு செச்சை மிளிரென்றாட*
*வாகனைய பாணியணி கிள்ளையாட*
*வயங்கிய நூபுரச் சிலம்பு கலீரென்டாடப்*
*பாகனைய பங்கயப் பொற்பாத மாடப்*
*பரிந்துறையும் மாரியம்மை யாடீரூஞ்சல்"*

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன. இதனைப் படிக்கும் மூத்த தலைமுறையினருக்கு 'கற்றோடு குழலாட ஆட' என்ற பாட்டு நினைவுக்கு வரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார் முருகேசப்பிள்ளை அவர்களின் மாத்தளை முத்துமாரி அம்மாள் பதிகம், முத்துமாரியம்மை வினைவிடந்தாதி, முத்துமாரி அம்மை ஊஞ்சல் எனும் மூன்று ஆக்கங்கள் 1922ஆம் ஆண்டளவில் நூலுருப் பெற்று வெளிவந்துள்ள போதிலும் ஐம்பது, அறுபதுகளில் பக்தர்களின் பார்வைக்குக் கிட்டா ஒரு நூலாகவே அது இருந்தது. ஏறத்தாழ மறைந்த நிலையில் இருந்த இந்நூலினைத் தேடிப்பெற்று, அதனை மீண்டும் பதிப்பித்து, முருகேசப்பிள்ளையின் கவித்துவத்தை இளைய தலைமுறையினருக்கும் அறிமுகம் செய்த மாத்தளை கார்த்திகேசுவின் பணி போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

முருகேசப்பிள்ளை அவர்களின் ஆக்கங்களின் எண்ணிக்கை குறைவு ; அளவிலும் அவை சிறியவையே. ஆனால் அவரின் மொழியறிவையும், சொல்லாட்சியையும், கவித்துவத்தையும் வெளிப்படுத்த அவை போது மானவையாகும். நான்கு சிறிய பிரபந்தங்களை மாத்திரமே பாடி இருக்கின்ற போதிலும் காரைக்காலம்மையார் பெரும் புலவர் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவரே என்ற மதிப்பீட்டை நியாயப்படுத்தப் பேராசிரியர் வி. செல்வநாயகம் எழுதியுள்ள,

> *"ஒரு புலவனின் பெருமையை அல்லது சிறுமையை அவன் பாடிய பாடற்றொகையை மட்டும் கொண்டு அளவிடுதல் பொருந்தாது. அது அவன் பாடியவற்றின் சிறப்பில் அல்லது சிறப்பின்மையிற்றான் பெரும்பாலும் தங்கியிருக்கிறது".*

எனும் வசனங்கள் பெரியார் முருகேசப்பிள்ளைக்கும் பொருந்தும். மாத்தளை தமிழ்க் கவிதை இலக்கிய வரலாற்றிலே முருகேசப்பிள்ளையின் முதன்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

உடுப்பிட்டிச் சிவசம்பு புலவர், புலோலியூர் குமாரசாமிப் புலவர், மயில்வாகனப் புலவர் போன்ற அறிஞர் பெருமக்கள் வாழ்ந்த அதே காலத்தில் வாழ்ந்து அவர்களுக்கு ஒப்பாகக் கவி பாடி சைவம் வளர்த்த பெரியார் முருகேசப்பிள்ளை மாத்தளைக்குப் புகழ் சேர்ப்பவர் என்பதில் சந்தேகமில்லை.

திரு. சிவனாண்டி அவர்களின் 'பஞ்சமா பாதக விளக்க வினா விடை' எனும் நூல் வெளி வந்த 1931 ஆம் ஆண்டைத் தொடர்ந்த முப்பதுகளிலும், நாற்பதுகளிலும் மாத்தளை எனும் ஊர்ப் பெயரைத் தமிழ் இலக்கிய உலகிற்கு ஞாபகம் ஊட்டிக்கொண்டே இருந்தவர் 'மலையக இலக்கிய வளர்ச்சிக்கு வழி சமைத்தவர்களில் ஒருவர்' எனக் கலாநிதி க. அருணாசலம் அவர்களால் இனம் காட்டப்பட்டுள்ள மாத்தளை அருணேசர் ஆவார். மதம், வரலாறு, மருத்துவம், மொழி, இலக்கியம், அரசியல், விஞ்ஞானம் எனப் பல்வேறு துறைகள் தொடர்பாக நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், விஞ்ஞானம் பிறந்த கதை, நாணயங்களின் வரலாறு, தமிழ் மொழியும் தமிழ் நூல்களும் தோன்றிய வரலாறு, தபால் முத்திரையின் வரலாறு, ஒன்பது மணிகள் போன்ற நூல்களையும் எழுதி, வாசகர்கள் மத்தியில் நன்கு அறிமுகமாகியிருந்த இவர், மிக எளிமையாக, அமைதியாக வாழ்ந்து மறைந்த ஓர் எழுத்தாளராவார். இவர் எழுதிய 'ஒன்பது மணிகள்' எனும் நூல் ஒரு சிறந்த ஆய்வாகக் கருதப்படுகிறது.

தினகரன், வீரகேசரி, சிந்தாமணி போன்ற இலங்கைப் பத்திரிகைகளில் மாத்திரமன்றி இரஞ்சித போதினி, ஆனந்த போதினி, மஞ்சரி, கலைக்கதிர், கலைமகள் போன்ற தென்னிந்திய சஞ்சிகைகளிலும் திரு. மாத்தளை அருணேசர் அவர்களின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தந்தையின் உபதேசம் எனும் இவரது சிறுகதை 1947இல் கலைமகளில் வெளியானது; இவ்வகையில் மாத்தளைத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் பிதாமகர் என இவரை நாம் கருதலாம்.

1951ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் நடந்த காந்தீய சேவா சங்க மகாநாட்டில் 'ஐம்பதுகளில் – தமிழன் புதை பொருள்' எனும் தலைப்பில் தான் நிகழ்த்திய சொற்பொழிவினை மாத்தளையில் வாழ்ந்த மு. வே. ஜீவரத்தினம் என்பவர் ஒரு சிறு நூலாக வெளியிட்டுள்ளார்.

தமிழ் அறிஞர்களான பேராசிரியர் தெ. போ. மீனாட்சிசுந்தரம், அ. ச. ஞானசம்பந்தன், பிரபல எழுத்தாளர் 'நாடோடி' ஆகியோர் பங்கேற்க, 1954 இல் மாத்தளையில் நடந்த தமிழ் விழா உண்மையில் மாத்தளைத் தமிழர்கள் பெருமைபடக் கூடிய பெரு விழாவே.

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சில வளர்ச்சிகள், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் மொழிப்பற்றும் இலக்கிய ஆர்வமும் வளர்வதற்கு உதவின. இக் காலகட்டத்தில் அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, ஆசைத்தம்பி, விருதை ந. ராமசாமி, தில்லை வில்லாளன் போன்ற திராவிட இயக்கப் பிரமுகர்களின் நூல்கள் இலங்கைத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் உள்ளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவ்வெழுத்தாளர்களின் அழகான வர்ணனைகளாலும் அடுக்கு மொழிகளாலும் கவரப்பட்ட இளைஞர்கள் அந்நூல்களை வாசிக்க ஆரம்பித்தனர். மற்றும் ஒரு சாரார் டாக்டர் மு. வரதராசனாரின் எழுத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்டனர். இவற்றினால் வாசகர்களின் தொகை கூடியது. எழுதுபவர்களின் தொகையும் அதிகரித்தது. இவ்வளர்ச்சிகள் மாத்தளை மாவட்டத்திலும் ஏற்பட்டன.

வள்ளுவர் மன்றம், சைவ மகா சபை, மாத்தளை இளைஞர் மன்றம் போன்ற அமைப்புகளின் தோற்றம் – கந்தவனம், ஈழவாணன், சொக்கநாதன் எனும் கவிஞர்கள் 'சிட்டுக்குருவி' எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டமை – சிங்ககிரிச் செல்வி, இதுதான் முடிவு, ஒரே குடும்பம், தங்கையின் கணவன், எழுத்தாளன் காதலி போன்ற தரமான நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டமை – 1967இல் மாத்தளை இளைஞர் மன்றம் பிரமாண்டமான முறையிலே பாரதிவிழா ஏற்பாடு செய்தமை – மலரன்பன், மாத்தளைச் சோமு, மாத்தளை வடிவேலன் போன்ற பேனா மன்னர்களின் இலக்கியப் பிரவேசம் – இவை யாவும் மாத்தளைத் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்பட்டிருந்த மாற்றங்களின் விளைவுகளே எனக் கருத இடமுண்டு.

இம்மாற்றங்களின் பிரதிபலிப்பை 'சாந்தி' ஆசிரியர் சிதம்பர ரகுநாதன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் மாத்தளை வந்தபோது, அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கத் திரண்டிருந்த மக்கள் தொகைகளிலே மாத்தளை கண்டது. குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவு நடைபெற்றது மாத்தளை பொது மைதானத்திலே. ஒரு பெரிய மைதானத்திலே ஒரு தமிழ் இலக்கியக் கூட்டம் நடத்துவதற்கு எவ்வளவு துணிச்சல் இருந்திருக்க வேண்டும்? ஆனால் கூட்ட ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் வீண்போகவில்லை; கூட்டத்திற்குப் பெருந் தொகையான மக்கள் வந்திருந்தனர்.

எச். எம். பி. மொஹிதீனும் மாத்தளை எஸ். பொன்னுத்துரையும் இணைந்து 'உரிமைக்குரல்' எனும் பத்திரிகையை 1958இல் ஆரம்பித்ததும், சில தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்று சேர்ந்து, கடை ஒன்றின் மாடியை வாடகைக்கு எடுத்து ஜோதி நூல் நிலையம் எனும் பெயரிலே நூல் நிலையம் ஒன்றினை நடத்தியதும் இம்மாற்றங்களின் விளைவுகளே.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் மாத்தளைத் தமிழ் இலக்கியத்தின் போக்கிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. புதிய நோக்குகள், புதிய சிந்தனைகள் உடைய எழுத்தாளர்கள் பலர் தோன்றினர்; ஒரு புதிய உலகினைக் கட்டி எழுப்புவோம் என்ற திடசங்கற் பத்தோடு இவர்கள் பேனா பிடித்தனர். இப்படி ஒரு புதிய பார்வையுடன் இலக்கியம் படைக்க ஆரம்பித்தவர்களாக நாம் ஈழவாணன், கந்தவனம், சொக்கநாதன், பொ.பூபாலன், சிறிகாந்தன், கே.வேலாயுதம், மலரன்பன், மாத்தளைச் சோமு என ஓர் எழுத்தாளர் படையைப் பார்க்கின்றோம்.

சொக்கநாதன், கந்தவனம், ஈழவாணன் எனும் மூவரும் மாத்தளையில் பிறந்தவர்கள் அல்லர்; ஆனால் நெடுங்காலமாக இங்கு வாழ்ந்தவர்கள். இம்மூவரும் ஒன்றிணைந்து தமது கவிதைகளில் சிலவற்றை சிட்டுக்குருவி எனும் பெயரிலே ஒரு சிறு தொகுதியாக 1963ஆம் ஆண்டில் வெளியிட்டனர். தரமான ஓர் இலக்கிய விமர்சகர் எனத் தன்னை இனம் காட்ட ஆரம்பித்துக் கொண்டிருந்த திரு. கைலாயபதியின் காத்திரமான முன்னுரையைத் தாங்கி வந்த சிட்டுக்குருவி ஒரு சிறு தொகுதிதான்; ஆனால் அத் தொகுதி மாத்தளைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல் என்றே பொதுவாகக் கருதப்படுகின்றது.

தினகரன் தங்கத்தாத்தா கவிதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றவரான சொக்கநாதன் தனது தனிப் படைப்பான மாத்தளை முத்துமாரி அம்மன் குறவஞ்சியை 1964ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூலின் சிறப்பினையும் தேவையினையும் கருதி இலக்கிய ஆர்வலர் எச். எச். விக்கிரமசிங்க இதனை 1993ஆம் ஆண்டில் மீள் பதிப்புச் செய்துள்ளார். இந்நூலில் காணப்படும் கீழ்வரும் செய்யுள் சொக்கநாதனின் கவித்துவத்தை நன்கு புலப்படுத்துகிறது:

*வான முகி லொடு வாதம் புரிகிற*
*மாமலை சூழ்பதி மாத்தளைக் கண்*
*கானக்குயில் பயில் கா லெழி லோடுறை*
*கனக மணிப் பரற் கோவிலுக்குள்*
*ஞான மணிக் கண்ணுக் கான வுருவுடன்*
*நாளு முறைபவள் மாரி முத்து – அவள்*
*மோன நிலையிற் கண் மூடி யிருந்திடில்*
*மூவுல கங்களு மில்லை யாமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் மாத்தளைத் தமிழ் கவிதா பாரம்பரியத்திற்கு வளத்தையும் வனப்பையும் ஊட்டிய ஏனைய மாத்தளைக் கவிஞர்களில் முக்கியமான வர்களாகக் கவிஞர் பூபாலன், சிறிகாந்தன், வேலாயுதம் போன்றவர்களைக் காட்டலாம்.

அறுபதுகளில் மாத்தளை பொன்னுத்துரை எழுதிய பல சிறுகதைகள் சாரல், மலைமுரசு போன்ற பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவ்வாறே வீ. சதாசிவம் தன் சொந்தப் பெயரிலும் அமரசதா, தாமிரபர்ணன் எனும் புனைப் பெயர்களிலும் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். மலரன்பனின் இலக்கியப் பிரவேசம் யாருக்காக அழுதான், என்னைப் போல் ஒருவன் எனும் சிறுகதைகள் மூலம் இக்காலத்திலேயே ஏற்பட்டது என்ற போதிலும் அவரது எழுத்தின் முழு வீச்சையும் வீரியத்தையும் நாம் எழுபதுகளில்தான் சரியாகக் காண்கின்றோம்.

இக்காலத்தில் வேலாயுதத்தின் மொழி பெயர்ப்புகள் சில வெளிவந்தன. தனி மனிதராக நின்று சாந்தி எனும் பெயரில் ஓர் இலக்கிய இதழையும் அவர் வெளிக் கொணர்ந்தார்; ஆனால் அதனைத் தொடர அவரால் முடியாது போயிற்று. இவரும் திரு. திருச்செந்தூரனும் மாத்தளை இளைஞர் மன்றத்தின் இணைச் செயலாளர்களாகப் பணியாற்றிய போதுதான் அம்மன்றம் பாரதியாரின் பேத்தியான திருமதி விஜய பாரதி, பேராசிரியர் சுந்தர ராஜன், எழுத்தாளர் மு. அழகிரிசாமி ஆகியோர் பங்குபற்றிய பாரதி விழாவை ஏற்பாடு செய்தது.

அறுபதுகளில்தான், மாத்தளைத் தமிழர்கள் ஈழத்துத் தமிழ் நாடக உலகில் முதன் முறையாக ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தினர் எனக் கூறலாம். ஹட்டன் நகரில் நடைபெற்ற தேசிய நாடகப் போட்டி ஒன்றில் சொக்கநாதன் எழுதி, ஈழவாணன் நெறிபடுத்திய 'சிங்ககிரிச் செல்வி' எனும் கவிதை நாடகம் முதற் பரிசினை வென்ற போதே இத்தாக்கம் ஏற்பட்டது. இந்நாடகத்தில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்த மாத்தளை பொன்னுத்துரை, ஜோ சத்திய சீலன், கண்டி சந்திரா போன்றோரின் நடிப்பு பத்திரிகையாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. ஏறத்தாழ இதே காலத்தில் திரு. ராஜரட்னம் மேடை ஏற்றிய 'இதுதான் முடிவு' எனும் நாடகமும் பெரும் வெற்றி பெற்ற ஒன்றே. கவிஞர் பூபாலன் பலாபத்வளைப் பகுதியில் பல சிறந்த நாடகங்ளை மேடை ஏற்றினார்.

அறுபதுகளின் பிந்திய பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்த 'மலரன்பன்' மாத்தளை வழங்கியுள்ள மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராவார். செய்தி, தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகள் நடத்திய பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ள இவர், இலங்கை கலாசாரத் திணைக்களம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளார். இவரது ஆக்கங்கள் பல வீரகேசரி, தினகரன், சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும் மல்லிகை, அஞ்சலி, கொழுந்து போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. 1980 ஆம் ஆண்டினில் மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் வெளியிட்ட "தோட்டக் காட்டினிலே' என்ற தொகுதியிலே மலரன்பன் எழுதிய பார்வதி, தார்மீகம், உறவுகள் எனும் மூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. மலரன்பனின் சிறுகதைகள் பன்னிரண்டை 'கோடிச்சேலை' எனும் பெயரிலே ஒரு தொகுதியாக இலக்கிய ஆர்வலர் மாத்தளை சிவஞானம் வெளியிட்டார்; இத்தொகுதி சிறுகதைகளுக்கான அவ்வாண்டு சாகித்திய விருதினை மலரன்பனுக்குப் பெற்றுக் கொடுத்தது.

மலரன்பனோடு சமகாலத்தில் எழுத்துலகில் நுழைந்து, சிறுகதை, நாவல், பிரயாணக் கட்டுரைகள் எனப் பல்வேறு துறைகளிலும் தன் ஆற்றலைக் காட்டி, தமிழிலக்கிய வளர்ச்சிக்கு மிகக் காத்திரமான பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருப்பவர் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாத்தளைச் சோமு. மலையக மக்களின் வாழ்வின் யதார்த்தங்களைத் தம் படைப்புக்களின் மூலம் படம் பிடித்துக் காட்டி, அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு எழுதும் சோமு, தன் லட்சியத்தில் பெருமளவு வெற்றி பெற்றுள்ளார் எனக் கூறலாம். இலங்கை, இந்தியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ள சோமுவின் சிறுகதைகளின் எண்ணிக்கை கணிசமானது. வீரகேசரி நடத்திய சிறுகதைப் போட்டியொன்றில் முதல் பரிசினைப் பெற்ற இவரது 'எல்லை தாண்டா அகதிகள்' எனும் படைப்பினைத் தமிழக இலக்கிய இதழான கணையாழியும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிவரும் தேடல், தாயகம் போன்ற சஞ்சிகைகளும் மறுபிரசுரம் செய்து இவரைக் கௌரவித்திருக்கின்றன. 'தோட்டக் காட்டினிலே' எனும் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒன்பது சிறுகதைகளில் மூன்று இவருடையனவாகும். நமக்கென்றொரு பூமி, அவன் ஒருவனல்ல, அவர்களின் தேசம் என்ற மூன்றும் இவருடைய கதைகளை மாத்திரம் தாங்கி வெளிவந்துள்ள தொகுதிகளாகும்; இவற்றுள் அவர்களின் தேசம் எனும் தொகுதிக்கு தமிழ் நாடு லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசு வழங்கப்பட்டிருப்பது மாத்தளை சோமுவின் எழுத்தின் தரத்தை உணர்த்தப் போதுமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சிறுகதைகளின் மூலம் ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ள மாத்தளை வடிவேலன் மலரன்பனுக்கும், சோமுவுக்கும் வயதில் இளையவர் என்ற போதிலும் ஆற்றலில் அவர்கள் இருவருக்கும் சமமானவரே. 'தோட்டக்காட்டினிலே' தொகுதியில் இடம் பெற்றுள்ள 'புத்தாண்டு புதிதல்ல', வெட்டு மரங்கள், கறிவேப்பிலைகள் என்ற மூன்று கதைகளும் இவருடையனவாகும், புத்தாண்டு புதிதல்ல எனும் இவரது சிறுகதை ஆங்கிலத்தில் மொழி–பெயர்க்கப்பட்டுள்ளது. 'ஊமையன் கோட்டை' இவரது மற்றுமொரு சிறந்த படைப்பாகும். பல தொகுதிகளை அமைக்கக் கூடிய அளவிற்குத் தரமான சிறுகதைகளை இவர் படைத்துள்ள போதிலும், இவரது கதைகள் ஒரு தனித் தொகுதியாக இதுவரை வெளிவராதிருப்பது ஒரு குறையே.

தன்னுடைய சொந்தப் பெயரிலும் கங்குலன் என்ற புனைப் பெயரிலும் பிரபலமாகியுள்ள கே. கோவிந்தராஜும் மாத்தளையைச் சேர்ந்தவர்தான். இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தன் ஆற்றலைக் காட்டிவரும் கோவிந்தராஜ், காத்திரமிக்க பல சிறுகதைகளைப் படைத்துள்ளவர். ''மலையக மக்களின் அவலங்களைப் பற்றி உலகுக்கு எடுத்துக் காட்டி, அவர்களின் வாழ்விலும் வசந்தம் வீச வைக்க வேண்டுமென்ற நோக்கோடு எழுதும் இவரின் சிறுகதைகள் சிந்தாமணி, தினகரன், வீரகேசரி, கதம்பம், தினபதி, சுமதி போன்ற பல பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன 'கப்பல் எப்பங்க?' என்ற இவரது சிறுகதை கலைஒளி முத்தையா பிள்ளை நினைவு சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசினைப் பெற்றதாகும். 'சமூக அநீதிகளுக்கு எதிரான ஒரு ஆவேசத்தை, மனித நேயமிக்க ஒரு படைப்பாளியின் ஆத்திரத்தை இக்கதைகளில் நாம் காண்கின்றோம்'' என கோவிந்தராஜின் 'பசியா வரம்' எனும் சிறுகதைத் தொகுதியில் காணப்படும் கதைகளை மதிப்பீடு செய்துள்ளார் பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோஸப்.

கல்விமான், பிரபலமான எழுத்தாளர் என்ற பெயரோடு சப்பிரகமுவை மாகாணத்திலிருந்து கல்விப் பணிக்காக மாத்தளை வந்து, இப்போது மாத்தளை வாசியாகவே மாறிவிட்ட ஏ. பி. வி. கோமஸ் பல நல்ல சிறுகதைகளைப் படைத்துள்ளவர். 'வாழ்க்கை ஒரு புதிர்' என்ற பெயரோடு இவரது சிறுகதைத் தொகுதி ஒன்று 1992 இல் வெளியானது. ஒரு சிறந்த கவிஞரான இவர் இப்போது கட்டுரைகள் மூலமாகவே கூடுதலாகத் தன் பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

கவிதை, சிறுகதை போன்ற துறைகளில் பங்களிப்புக்கள் வழங்கியுள்ள மாத்தளைத் தமிழ் எழுத்தாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது, நாவல் துறையில் ஈடுபட்டுள்ள மாத்தளைத் தமிழ் எழுத்தாளர்கள் தொகை குறைவுதான்; மற்றப் பிரதேசங்களிலும் இதுதான் நிலை என்பதை நாம் உணரத் தவறக்கூடாது.

மாத்தளை சோமு எழுதிய 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்பதே மாத்தளை மாவட்டத்தின் முதல் தமிழ் நாவலாகும். இது வெளிவந்த ஆண்டில், அவ்வாண்டின் மிகச் சிறந்த நாவலுக்கான சாகித்திய விருதினை இது பெற்றது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இதனைத் தொடர்ந்து அவர் எழுதிய 'எல்லை தாண்டா அகதிகள்', 'அவள் வாழத்தான் போகிறாள்' எனும் இரண்டு நாவல்கள் வெளிவந்தன. இதில் 'எல்லை தாண்டா அகதிகள்' சிறந்த நாவலுக்கான விபவி பரிசினைப் பெற்றது. சோமு எழுதிய மூன்று நாவல்களில் இரண்டிற்கு உயர் பரிசுகள் வழங்கப்பட்டிருப்பது அவரின் எழுத்தின் உயர் தரத்தினைக் காட்டுகின்றது.

மாத்தளை கார்த்திகேசு 'வழி பிறந்தது' எனும் தனது நாவலை 1993இல் வெளியிட்டார். 'ஒரு நாவல் எழுத வேண்டும்; அதில் நான் பிறந்த மலையக வாசனையைப் பின்னி எழுத வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே எனக்கோர் ஆசை. அந்த ஆசையில் பிறந்தது தான் 'வழி பிறந்தது நாவல்' இது கார்த்திகேசு தனது நாவலின் முன்னுரையில் செய்துள்ள கொள்கைப் பிரகடனம். ''நாடகங்கள் பல எழுதி அவற்றை மேடை ஏற்றியும், குணசித்திரப் பாத்திரங்களில் நடித்தும், பராட்டுக்களும் பரிசுகளும் பெற்றுள்ள மாத்தளைக் கார்த்திகேசு நாவலிலும் வெற்றிகரமாகத் தனது திறமையை நிரூபித்திருக்கிறார்'' இது வழி பிறந்தது எனும் நாவலைப் பற்றி தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணன் செய்துள்ள மதிப்பீடு.

இரண்டாம் மகாயுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் கூட மாத்தளைப் பகுதியில் வாழ்ந்தவர்கள் மாத்தளை ஸ்டார் தியேட்டரில் ஒரு நாடக விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். பல தோட்டங்களிலிருந்து ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர் என்று இந்த முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்த தோட்ட நிர்வாகி ஒருவர் கூறியிருப்பதைக் காணலாம்''. இது, மலையக இலக்கிய, சமூக ஆய்வாளர் சாரல்நாடன் மாத்தளைத் தமிழ் மக்கள் நாடகக் கலையின் பால் காட்டிய அக்கறையை எடுத்துக்காட்டத் தரும் தகவல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மீனலோசனி'' நாடக சபா போன்ற தென்னிந்திய நாடக சபாக்கள் பல மாத்தளையில் நாடகங்களை மேடை ஏற்றும்; பின்னர் சினிமா மூலம் பிரபலமான எஸ். எஸ். கொக்கோ போன்ற பல தென்னிந்திய நாடகக் கலைஞர்கள் இங்கு வந்து மாதக் கணக்கில் தங்கி, நாடகங்களை மேடை ஏற்றுவர்''. இவை மாத்தளையில் வாழும் வயது முதிர்ந்தோர் வழங்கும் தகவல்கள்.

இந்த நாடகப் பாரம்பரியமே பின்னர் தேசிய மட்டத்தில் உயர் அங்கீகாரம் பெற்றிருக்கும் கார்த்திகேசு, கோவிந்தராஜ் போன்ற நாடகவியலாளர்கள் மாத்தளையில் தோன்றுவதற்கு அடித்தளமாக இருந்தது எனக் கருதலாம். மாத்தளைக் கார்த்திகேசு இலங்கைத் தமிழ் நாடக உலகின் ஜாம்பவான்களில் ஒருவராக விமர்சகர்களால் மதிக்கப்படுவர். முப்பது நாடகங்களுக்கு மேல் மேடை ஏற்றியிருக்கும் இவரின் 'களங்கம்', 'போராட்டம்', 'ஒரு சக்கரம் சுழல்கின்றது' போன்ற நாடகப் படைப்புக்கள் தேசிய நாடக விழாக்களில் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன. பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி போன்ற உயர் விமர்சகர்களால் பாராட்டப்பட்ட 'காலங்கள் அழுவதில்லை' எனும் கார்த்திகேசுவின் நாடகம் பல மேடைகளைக் கண்ட ஒன்றாகும். யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழ் மகாநாட்டிலும் இது மேடை ஏற்றப்பட்டு, பிறநாட்டு நல்லறிஞர் பலரின் பாராட்டுக்களைப் பெற்றது. அவள் ஒரு ஜீவநதி எனும் திரைப்படத்தை எழுதித் தயாரித்த கார்த்திகேசு, 'காலங்கள்', 'குடும்பம் ஒருக் கலைப் கதம்பம்' போன்ற தொலைக்காட்சி நாடகங்களையும் தயாரித்துள்ளார்.

மாப்பிள்ளை வந்தார், அரும்பு, மலையோரம் வீசும் காற்று, புதுக்குடும்பம் போன்றவை கோவிந்தராஜ் எழுதி, ரூபவாஹினியில் ஒளிப்பரப்பப்பட்டு ரசிகர்களின் அமோக ஆதரவினைப் பெற்றுக் கொண்ட நாடகங்களாகும். 1994 ஆம் ஆண்டில் இந்து கலாசார திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மேடை நாடகப் போட்டியில் இவர் எழுதிய தோட்டத்து ராஜாக்கள் பரிசையும் பராட்டையும் பெற்றது.

நாடகத்துறையில் பெரும் ஈடுபாடும் திறமையும் காட்டியுள்ள மற்றுமோர் மாத்தளைத் தமிழர் ராஜ் சிவா என அழைக்கப்படும் எஸ். சிவலிங்கம் ஆவார். கலைவாணி நாடக மன்றத்தின் ஸ்தாபகரான இவர் மாத்தளையிலும் வேறு நகரங்களிலும் தான் எழுதித் தயாரித்த பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். யாருக்கு யார் சொந்தம், ராதையின் நெஞ்சமே எனும் இவரது நாடகங்கள் அமோக வரவேற்பைப் பெற்றுவையாகும். எக்ஸ். சி. ரஞ்சன், எம். எஸ். ஆர். ஜோதி போன்றோர் நடித்த 'ராதையின் நெஞ்சமே' கொழும்பில் இரண்டு முறை மேடை ஏற்றப்பட்டது. ராஜ் சிவாவின் கவிதைகளும், சமயம் தொடர்பாகவும், நாடகக் கலை தொடர்பாகவும் அவர் எழுதிய கட்டுரைகளும் தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. கே. ஜெயக்குமார் 'மோகம் முப்பது நாள்' போன்ற நாடகங்களை மேடை ஏற்றியுள்ளார்.

விவசாயம், பண்ணை பராமரிப்பு, விலங்கு வேளாண்மை போன்ற துறைகளில் ஈடுபாடுமிக்க வைத்திய கலாநிதி மகேந்திரராஜா இத்துறைகள் தொடர்பாகப் பல ஆய்வுகளை மேற்கொண்டு, ஆழமான அறிவைப் பெற்றுள்ளவர். இத்துறைகள் தொடர்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்றிருக்கும் பல ஆய்வரங்கங்களிலே பங்குபற்றிக் காத்திரமான பங்களிப்புகள் செய்துள்ளவர். இவ்விடயங்கள் தொடர்பாகக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். விஞ்ஞானத் துறைகளில் ஈடுபாடு காட்டும் அதே வேளையில் மகேந்திரராஜா தமிழிலக்கியத்திலும் ஆர்வம் மிக்கவர். தமிழ் இலக்கண அறிவுமிக்க இவர் ஒரு சிறந்த மரபுக் கவிஞர் என்பதை 1995 இல் வெளிவந்த கண்ணீர்த் துளிகள் எனும் கவிதைத் தொகுதி புலப்படுத்துகிறது.

ஆசிரியராகவும், அதிபராகவும் பெரும் பணியாற்றியுள்ள திரு. பொ. லோகநாதன், கல்வி, தொழிலாளர் பிரச்சினைகள், இந்தியத் தமிழர் வரலாறு போன்ற விடயங்களைப் பற்றி பத்திரிகைகளுக்கு ஏராளமான கட்டுரைகள் வரைந்துள்ளார். தோட்டப்பகுதி நாடகத்துறை வளர்ச்சி பற்றி இவர் எழுதியுள்ள கட்டுரை மிகக் காத்திரமானதாகும்.

நாட்டாரியல், மலையக மக்களின் பாரம்பரிய கலைகள் போன்றவற்றில் ஈடுபாடு உடைய மாத்தளை வடிவேலன் அத்துறைகள் தொடர்பாகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' எனும் தலைப்பில் ஒரு நூலும் வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கியம் தொடர்பாக வீ. நமசிவாயம் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இலக்கிய ஈடுபாடு மிகு திருமதி பாலரஞ்சினி ஜெயபால் சிறுகதைத் துறையிலும், கவிதைத் துறையிலும் தன்னை மிகத் தெளிவாக இனங்காட்டிக் கொண்டிருக்கும் ஓர் இளம் படைப்பாளி ஆவார். இவரது கவிதைகளும் சிறுகதைகளும் ஈழத்துப் பத்திரிகைகளில் மாத்திரமன்றி ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கூட பிரசுரமாகியுள்ளன. சில வித்தியாசமான பார்வைகள், மனதை அள்ளும் சில சொற் பிரயோகங்கள் அவரது இலக்கியப் படைப்புகளுக்கு ஓர் அலாதியான அழகைக் கொடுக்கின்றன.

எழுபது, எண்பதுகளில் இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்த ராஜ் சிவா, ரீ. விஜயகுமார் போன்றவர்களின் பங்களிப்புக்கள் தொடர்ந்து வர, இம்மா வட்டத்தில் வாழும் பல தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சிறுகதை, கவிதை போன்ற துறைகளில் தம் ஆற்றல்களை வெளிப்படுத்திக் கொண்டு இருப்பது மகிழ்ச்சி தருவதாகும். மொனிக்கா கோமஸ், தமிழ்ச்செல்வன், முரளிதரன், பவானி, கோகிலா நடராஜா, சஜீதரன் போன்றோர் கவிதைத் துறையிலும் ஆனந்தி, விஜயமலர் ஆறுமுகம் போன்றோர் சிறுகதைத் துறையிலும் தம்மை நன்கு இனம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அனுபவம் இன்னும் சற்றுக் கூடிய பிறகு, காத்திரமான பங்களிப்புக்களை இவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

மாத்தளை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வள்ளுவர் மன்றம், சைவ மஹா சபை, மாத்தளை இளைஞர் மன்றம், கலைவாணி நாடக மன்றம், மாத்தளை இலக்கிய வட்டம் போன்ற அமைப்புகள் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளன. இலக்கியச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தல், விழாக்கள் எடுத்தல், நூல் வெளியீடுகள் ஒழுங்கு செய்து எழுத்தாளர்களுக்கு உதவுதல், கவியரங்கங்கள், ஆய்வரங்கங்கள் ஒழுங்கு செய்தல் என இம்மன்றங்களின் பணிகள் வெவ்வேறு ரூபங்கள் எடுத்தன.

அறுபதுகளில் மாத்தளை இளைஞர் மன்றம் ஆற்றிய பெரும் பணிகளைப் பின்பற்றி எண்பதுகளிலிருந்து மாத்தளை இலக்கிய வட்டம் ஆற்றி வரும் பணி போற்றப்பட வேண்டியதாகும். இம் மன்றம் எண்பதுகளுக்கு முன்னரே அமைக்கப்பட்ட ஒன்று என்ற போதிலும் செயற்பாடு இன்றி இருந்த இந்த அமைப்புக்குப் புத்துயிர் கொடுத்தவர் கவிஞர் பாஷையூர் தேவதாஸன் ஆவார். தொழில் நிமித்தமாக 1979ஆம் ஆண்டு மாத்தளை வந்த தேவதாஸன் மாத்தளை வடிவேலன், நமசிவாயம், கிருஷ்ணன், பெரியசாமி, மாத்தளை பாலா போன்ற துடிப்புமிக்க பல இளைஞர்களை ஒன்றிணைத்துக் கொண்டு பல இலக்கியப் பணிகளைச் செய்தார். பின்னர் பல்கலைச் செல்வர் கோமஸ் அவர்களின் தலைமையில் இது இயங்கியது. அவருக்குப் பின் தலைமையை ஏற்ற கவிஞர் விஜயகுமார், நமசிவாயம், இந்திரா தனேந்திரன் போன்ற பலரின் துணையோடு நற்பணிகள் பல செய்து வருகிறார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆகக் கூடுதலான பங்களிப்பினை வழங்கியுள்ள மாத்தளைத் தமிழர் யார் என்ற வினாவுக்கு ஒரு விடை திரு. துரை விஸ்வநாதன் என்பதாகவே இருக்கும். பல வருடங்களாக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் உதவி வந்த திரு. துரை விஸ்வநாதன் 1997 இன் ஆரம்பத்தில் துரைவி எனும் பதிப்பகத்தை நிறுவி இரண்டு வருட காலப்பகுதிக்குள் எட்டு நூல்களை வெளியிட்டு பாரிய இலக்கிய பணியினைச் செய்தார். அத்தோடு திருப்தி அடைந்து விடாது, அகில இலங்கைச் சிறுகதைப் போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்து அதற்குப் பரிசுத் தொகையாக ஒரு இலட்சத்து ஓராயிரம் ரூபா வழங்கினார் இம்மாமனிதர். எழுத்தை மதித்த, எழுத்தாளனை மதித்த இலக்கிய ஆர்வலர் விஸ்வநாதனை எழுத்துலகம் என்றும் மறவாது. தனது பாரிய தமிழ் இலக்கியப் பணிகளால் தான் வாழ்ந்த மாத்தளைக்கும் புகழ் சேர்த்த திரு. துரை விஸ்வநாதன் அவர்களை மாத்தளைத் தமிழ் இலக்கிய உலகமும் ஒரு போதும் மறவாது. தமிழ் இலக்கியத்திற்கு மாத்தளை மாவட்டத் தமிழர்கள் வழங்கியுள்ள மிகப் பெரிய கொடை எது என்ற கேள்விக்கு ஒரே பதில் திரு. துரை விஸ்நாதன் என்பதாகவே இருக்கும்.

தமது பாரிய இலக்கியப் பணிகளால் மாத்தளைக்குப் புகழ் சேர்ந்துள்ள திரு. பியதாச வெலிகன்னகே, பண்ணாமத்துக் கவிராயர் ஜனாப் எஸ். எம். பாரூக், திரு. மாத்தளை சோமு, திரு. மலரன்பன் எனும் நான்கு எழுத்தாளர்களினதும் புகைப்படங்களை மாத்தளை மாநகர சபைப் பொது நூல் நிலையத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து அவர்களை அழகாகக் கௌரவப்படுத்தியுள்ளது மாத்தளை மாநகர சபை. மாத்தளை மாநகர சபை எழுத்தாளர்களுக்கு வழங்கியுள்ள இக் கௌரவம் ஏனைய நகரங்களாலும் பின்பற்றக் கூடியதாகும். எழுத்தாளர்களுக்கு இப்பெரும் கண்ணியத்தைப் பெற்றுக் கொடுத்த பெருமை அன்று மாத்தளை மாநகர சபை துணை முதல்வராகப் பதவி வகித்த திரு. எம். சிவஞானம் அவர்களுக்கு உரியதாகும். கௌரவிக்கப்பட்ட நால்வரில் மூவர் தமிழ் எழுத்தாளர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மாத்தளை மாவட்டத் தமிழர்கள் வழங்கியிருக்கும் பங்களிப்பினை நியாயமாக மதிப்பீடு செய்யும் எந்த ஓர் இலக்கிய விமர்சகரும் அப்பங்களிப்பு கனதியானது, காத்திரமானது என்ற முடிவுக்கே வருவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறையில் மாத்தளைத் தமிழர்கள்

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பது, நாற்பதுகளில் கிரிக்கட், ஹொக்கி, கால் பந்து போன்ற மேற்கத்திய விளையாட்டுகள், புனித தோமியர் கல்லூரி, கிறிஸ்து தேவ கல்லூரி, விஜயாக் கல்லூரி போன்ற மாத்தளை நகர்ப் பாடசாலைகளில் பிரபல்யம் பெற்றிருந்தன. 1942 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாத்தளை சாகிராக் கல்லூரியும் இவ்விளையாட்டுக்களில் முழுமையாக ஈடுபட்டது.

கால்பந்து, ஹொக்கி போன்ற விளையாட்டுகளில் பொது மக்களும் அதிகம் ஆர்வம் காட்டினர். இவர்களில் சிலர் விளையாட்டுகளில் விளையாட்டு வீரர்களாக ஈடுபட்டனர்; வேறு சிலர் பண உதவிகள் வழங்கி விளையாட்டு வளர்ச்சிக்குப் பங்களிப்பு நல்கினர். பெருந்தொகையானோர் போட்டிகளின் போது பார்வையாளர்களாக வந்து, விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டி, விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு உதவினர்.

மாத்தளை நகரத்தில் விளையாடப்பட்ட அத்தனை விளையாட்டுக்களிலும் தமிழர்களும் ஈடுபட்டுள்ளனர்; தம் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். மாத்தளை மாவட்ட விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு இம்மாவட்டத் தமிழர்கள் சிலர், விளையாட்டு வீரர்களாகப் பங்களிப்புச் செய்துள்ளனர். விளையாட்டுப் பரிபாலனத்தில் ஈடுபட்டு சிலர் விளையாட்டு விருத்திக்கு உதவியுள்ளனர். சிலர் பண உதவிகள் வழங்குவதன் மூலம் இத்துறையை வளர்த்துள்ளனர். மாத்தளை மாவட்ட விளையாட்டுத் துறை வரலாற்றினைப் பாரபட்சமின்றி ஆராயும் எவரும் இவ்வரலாற்றில் தமிழர்களின் முத்திரையும் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது என்ற முடிவுக்கே வருவர்.

மாத்தளை மாவட்ட விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு அம்மாவட்டத் தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப்பினை ஆராய முற்படுவோர், இவர்கள் இத்துறையில் முன்னேறுவதற்குத் தடையாக இருந்த சில காரணிகளைப் பற்றியும் சிந்தித்தல் அவசியமாகும். கிரிக்கட், உதைப்பந்தாட்டம், ஹொக்கி போன்ற மேற்கத்திய விளையாட்டுக்களில் பயிற்சியும் அவற்றைப் பற்றிய அறிவும் கிடைத்தது, மாத்தளை நகர ஆங்கிலப் பாடசாலைகளில் படித்தவர்களுக்கும், மாத்தளை நகரிலும் நகர்ப் புறங்களிலும் வசித்த மக்களுக்கும் மாத்திரமே. ஆனால் மாத்தளை நகர்ப் பாடசாலைகளில் படித்த தமிழ் மாணவர்களின் தொகை குறைவாக இருந்ததைப் போலவே, மாத்தளை நகரிலும், நகர்ப் புறங்களிலும் வாழ்ந்த தமிழர்களின் தொகையும் குறைவானதாகவே இருந்தது. 1921 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தொகை 36, 380 ஆக இருந்த போதிலும் மாத்தளை நகரிலும், நகர்ப்புறங்களிலும் வாழ்ந்த தமிழர்களின் தொகை 2209 ஆக மாத்திரமே இருந்தது என்ற புள்ளி விவரமும் இதனையே உணர்த்துகிறது. மாத்தளை மாவட்டத் தமிழர்களின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்குத் தடையாக இருந்த காரணிகளில் ஒன்றாக இதனைக் காட்டலாம். இத்தகைய தடைகள் இருக்கும் போதே குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் வழங்கியுள்ள தமிழர்கள் இத்தகைய தடைகள் எதுவும் இல்லாதிருந்திருந்தால் எந்தளவு பாரிய பங்களிப்புக்களை நல்கியிருப்பர் என்ற சிந்தனை ஏற்படத்தான் செய்யும்.

விளையாட்டு மைதானங்களில் தான் இங்கிலாந்தின் பிரதமர்கள் உருவாக்கப்படுகின்றனர் என ஆங்கிலேயர் கூறுவர். ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் விளையாட்டின் பங்கினை எந்தளவு உயர்வானதாக ஆங்கிலேயர் கருதுகின்றனர். என்பதையே இது உணர்த்துகின்றது. படிப்பும் விளையாட்டும் இணைந்து இருக்க வேண்டும் எனும் பிரித்தானிய கல்விச் சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதால் மாத்தளை நகர ஆங்கிலப் பாடசாலைகளிலும் ஓட்டம், பாய்தல் போன்ற தடகள விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டன.

சிறந்த ஓட்ட வீரர் எனப் பெரும் புகழ் பெற்ற முதல் மாத்தளைத் தமிழர் செல்லையா ரத்னசோதி ஆவார். மாத்தளைத் தமிழ்ப் பிரமுகர் 'லோக்கல் போர்ட்' என். பி. செல்லையாவின் புத்திரரான இவர் கண்டி திரித்துவ கல்லூரியில் மாணவனாக இருக்கும் போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்லூரியின் மிகச் சிறந்த ஓட்ட வீரர்களுள் ஒருவராக இருந்தார் என்பது அவரது நண்பர்கள் பலர் தரும் தகவலாகும். ஐம்பதுகளின் ஆரம்பத்தில் சாகிராக் கல்லூரி மாணவரான மார்க்கண்டு ஒரு சிறந்த ஓட்ட வீரராகத் திகழ்ந்ததைப் போலவே புனித தோமியர் கல்லூரி மாணவனாக இருந்த ஆர். நடராஜாவும் ஒரு சிறந்த ஓட்ட வீரராகத் திகழ்ந்தார். ஐம்பதுகளின் பிற்பகுதியில் புனித தோமியர் கல்லூரி மாணவர்களான மனுவேல் சிங்கராஜ், சதாசிவம், கருப்பண்ணன், ராசையா, ரொபின் ராஜேந்திரா போன்றவர்கள் மிகச் சிறந்த ஓட்ட வீரர்களாக மதிக்கப்பட்டனர்.

கோலூன்றிப் பாய்தலில் பல சாதனைகளைப் படைத்த ஒரு கல்லூரி மாத்தளை சாகிராக் கல்லூரி; இக்கல்லூரி தோற்றுவித்த முதல் கோலூன்றிப் பாய்தல் வீரர் என். தியாகலிங்கம் ஆவார். உயரப் பாய்தல், நீளம் பாய்தல், 880 யார் ஓட்டம் போன்றவற்றிலும் இவர் வல்லவராக இருந்தார். அஸாட் இல்ல மாணவனாக இருந்த இவரை அன்றைய சாகிராக் கல்லூரி அதிபர் திரு. எம். வி. மத்தாய் ஏதோ ஒரு காரணத்திற்காக, இக்கல்லூரியின் மற்றொரு இல்லமான ஜின்னாஹ் இல்லத்திற்கு மாற்றிய போது, அஸாட் இல்ல பொறுப்பாசிரியரான ஜனாப் சின்ன லெப்பை குலுங்கி, குலுங்கி அழுததை சாகிராக் கல்லூரிப் பழைய மாணவர் பலரும் அறிவர். தியாகலிங்கம் அந்தளவு ஓர் உன்னதமான விளையாட்டு வீரராக அன்று மதிக்கப்பட்டார். உயரப் பாய்தலில் வல்லவராக இருந்த மற்றும் ஒரு தமிழர், புனித தோமியர் கல்லூரி மாணவனான ஸ்பெக் ஆவார். "வெஸ்டர்ன் ரோல்" எனும் நவீன உயரப் பாய்தல் முறையை மாத்தளையில் முதல் முறையாக அறிமுகப் படுத்தியவர் இவரே.

கிரிக்கட் விளையாட்டில் பெரும் புகழ் பெற்ற முதல் மாத்தளைத் தமிழர் மந்தண்டவளை தமிழ் தனவந்தரான திரு. கே. எம். சி. கதிர்வேல் அவர்களின் மகனும், மாத்தளையில் முதல் முதலாக சிவில் சேர்விஸ் பரீட்சையில் வெற்றி பெற்ற தமிழரான திரு. மயில்வாகனத்தின் சகோதரருமான தர்மலிங்கம் ஆவார். கண்டி திரித்துவ கல்லூரி கிரிக்கெட் அணியின் கெப்டனாக விளையாடிய இவர் பின்னர் தேசிய அளவிலும் புகழ் ஈட்டிய ஒரு கிரிக்கட் வீரராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ சமகாலத்தில் மாத்தளை விஜயாக் கல்லூரி கிரிக்கட் அணியின் தலைவராக இருந்த கிருஷ்ணராஜாவும் ஒரு புகழ் பெற்ற கிரிக்கட் வீரராவார்.

ஐம்பதுகளில் வீ. அமரசிங்கம், எல். சோமசுந்தரம், கதிராமபிள்ளை, எம். எக்ஸ். எட்வர்ட்ஸ், பி. பாலசுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை போன்ற தமிழ் மாணவர்கள் சிறந்த கிரிக்கட் வீரர்களாக மதிக்கப் பட்டனர். வெள்ளையன் செட்டியாரின் மகனான அமரசிங்கம் புனித தோமியர் கல்லூரி கிரிக்கட் அணியின் தலைவராகவும், வெள்ளைக்கல் பகுதியைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் சாகிரா கிரிக்கட் அணியின் தலைவராகவும் பெரும் புகழோடு விளங்கினர்.

ஐம்பதுகளில் ஒரு நல்ல சுழல் பந்து வீச்சாளராக விளங்கிய எல். சோமசுந்தரம், மாத்தளை புனித தோமியர் கல்லூரி உருவாக்கிய மிகச் சிறந்த கிரிக்கட் வீரர்களில் ஒருவராவார். மாத்தளை தோமியர் கல்லூரியின் 'அன்றைய முரளிதரனாக' விளங்கிய இவர் அநுரதபுரம் புனித ஜோஸப் கல்லூரிக்கு எதிரான ஒரு போட்டியில் பதினான்கு விக்கட்டுகளை வீழ்த்தி ஒரு சாதனையை நிலைநாட்டியவராவார். ஏ. ஒ. ஒய்யவந்தான் செட்டியார் ஸ்தாபனத்தின் பங்குதாரர்களில் ஒருவரான திரு. சோமசுந்தரம் செட்டியார் இந்தளவு சிறந்த ஒரு கிரிக்கட் வீரராக இருந்துள்ளார் என்பதை இன்றைய தலைமுறையினரில் எத்தனை பேர் அறிந்திருப்பர்?

ஐம்பதுகளில் தோமியர் கல்லூரி கிரிக்கட் துறையில் பெற்ற பெரும் வெற்றிகளுக்கு ஒரு காரணமாக விளங்கியவர் அக்கல்லூரியின் உப அதிபராகப் பணியாற்றிய திரு. ஞானப்பிரகாசம் ஆவார். கிரிக்கட் விளையாட்டுக்கும் மற்ற விளையாட்டுகளுக்கும் பொறுப்பாக இருந்த இவரின் கண்டிப்பும் அர்ப்பணிப்பும் அப்பாடசாலையின் உயர்வுக்குப் பெரிதும் உதவின. இவரின் புத்திரரான டேவிட் ஞானப்பிரகாசம் அறுபதுகளில் புனித தோமியர் கல்லூரி கிரிக்கட் அணியின் தலைவராக விளையாடினார்.

எஸ். குழந்தைவேலு செட்டியார், எல். தியாகராஜா செட்டியார், அமரசிங்கம் என்போரின் தலைமையில் இயங்கிய 'டையமன்ட் ஸ்போர்ட்ஸ் கிளப்' ஐம்பதுகளில் மிகப் பிரபலமான ஒரு மென்பந்து கிரிக்கட் அணியாக விளங்கியது. ஓரிரண்டு முஸ்லிம்களையும் ஓரிரண்டு சிங்களவர்களையும் பல தமிழர்களையும் விளையாட்டு வீரர்களாகக் கொண்டிருந்த இந்த அணி அதன் திறமைக்கு மதிக்கப்பட்டதைப் போலவே, அணியினர் கடைப்பித்த விளையாட்டு ஒழுக்கத்திற் காகவும் மதிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஏனைய பகுதிகளில் போலவே மாத்தளையிலும் ஏறத்தாழ எண்பதுகளிலிருந்து மென்பந்து கிரிக்கெட் விளையாட்டு பிரபலமாகிக் கொண்டே வந்திருக்கிறது. பல குழுக்கள் மோதும் சுற்றுப் போட்டிகள் அடிக்கடி நடக்கின்றன. வெற்றி பெறும் அணிகளுக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப் படுகின்றன. சங்கர்லால், முரளி, ரவி. சரவணன், ராஜ்குமார், ராஜேந்திரன் போன்ற பல தமிழ் இளைஞர்கள் இப் போட்டிகளில் தம் திறமைகளை வெளிப் படுத்தியுள்ளனர்.

மிக அண்மைக் காலங்களிலிருந்து தான் கிரிக்கட் சகல விதமான மக்களினதும் ஆதரவைப் பெறும் விளையாட்டாக மாறியிருக்கிறது. முன்னர் அது ஓர் உயர்மட்ட விளையாட்டாகவே கருதப்பட்டது. அன்று உதைப்பந்தாட்டமும் கரப்பந்தாட்டமுமே சாதாரண மக்களின் விளையாட்டுகளாக இனம் காணப்பட்டன. அதிலும் பொதுவாகக் கரப்பந்தாட்டம் கிராமப் புற விளையாட்டாகவும் உதைப்பந்தாட்டம் நகர்ப் புற விளையாட்டாகவும் கருதப்பட்டன. பல தோட்டங்களில் தமிழ் இளைஞர்கள் மாலை வேளைகளில் கரப்பந்தாட்டம் விளையாடுகின்றனர். ஆனால் இவர்கள் இதனை ஒரு பொழுது போக்காக நினைத்து விளையாடுகின்றார்களே ஒழிய மாவட்ட மட்டத்தில், தேசிய மட்டத்தில் விளையாட வேண்டும் எனும் அர்ப்பணிப்போடு விளையாடுவதில்லை. எனவே பல தமிழ் இளைஞர்கள் இவ்விளையாட்டில் விசேஷ திறமை காட்டிய போதிலும், அவர்கள் குடத்துள் விளக்காகவே பெரும்பாலும் இருக்கின்றனர்.

சென்ற நூற்றாண்டின் முப்பது, நாற்பதுகளிலே நல்ல உதைப்பந்தாட்ட வீரர்களாகக் கருதப்பட்ட ஓரிரு தமிழர்களின் பெயர்களைக் கூறுங்கள் என வயது முதிர்ந்த பிரமுகர்கள் நான்கு, ஐந்து பேரிடம் தனித் தனியாகக் கேட்கப்பட்ட போது அத்தனை பேரும் கூறிய முதல் பெயர் சௌந்தரநாயகம் என்பதாகவே இருந்தது. சௌந்தரநாயகம் அலாதியான திறமை படைத்த ஓர் உதைப்பந்தாட்ட வீரராக இருந்திருக்க வேண்டும் என்பதனையே இது உணர்த்துகிறது. இக்கால கட்டத்திலே ராமநாதன் என்பவரும் ஒரு நல்ல உதைப்பந்தாட்ட வீரராக இருந்திருக்கின்றார்.

ஐம்பதுகளில் ஏ. பி. அருணாச்சலம் ஆசாரியார், எஸ். குழந்தைவேலு போன்றோர் தரமான உதைப்பந்தாட்ட வீரர்கள் எனக் கருதப்பட்டனர். விதிமுறைகளை மீறாது அழகாக விளையாடும் ஒரு வீரராகத் திரு. குழந்தைவேலு மதிக்கப்பட்டார். கேரளத்தில் இருந்து வந்து மாத்தளை சாகிராக் கல்லூரியில் விஞ்ஞானம் படிப்பித்துக் கொண்டிருந்த திரு. சுகந்தராஜ் என்பவர் மாத்தளை உதைப் பந்தாட்டத்திற்கு ஓர் அலாதியான அழகை வழங்கினார் என்று கூறமுடியும்.

செல்லையா, துரைசிங்கம், சோமா, சிவநேசன் போன்றோர் அறுபதுகளில் உதைப்பந்தாட்ட ஆர்வலர்களினால் பெரிதும் மதிக்கப்பட்ட மாத்தளை மாவட்ட உதைப்பந்தாட்ட வீரர்கள் ஆவர்.

அண்மைக் காலங்களில் சிரிதரன், பாலகுரு, அன்பழகன், குணசீலன், மணிசேகரன், மாடசாமி, செல்வராஜா, பத்மநாதன், முத்துக்குமார் போன்ற தமிழ் இளைஞர்கள் தேசிய உதைப்பந்தாட்டப் போட்டிகளிலே மாத்தளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி யுள்ளனர். சிரிதரன் மாத்தளை அணி சார்பாக மட்டு மல்லாது பொலிஸ் அணி சார்பாகவும், மத்யம லங்கா எனும் புகழ் பெற்ற கண்டி அணி சார்பாகவும் விளையாடியுள்ள திறமை மிக்க ஆட்டக்காரர். இவ்வாறே மணிசேகரன் மாத்தளை அணிக்காக விளையாடியதைப் போலவே கொழும்பு அணி ஒன்றுக்காகவும் விளையாடியுள்ளார். மாத்தளை மல்வத்தை விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த பத்மநாதன் இலங்கை இராணுவ உதைப்பந்தாட்ட அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உதைப்பந்தாட்டத்தில் பேரார்வம் கொண்டிருந்த திரு. நடராஜா வயோதிக வயதிலும் மாத்தளை மாவட்ட உதைப்பந்தாட்ட வளர்ச்சிக்காக செய்த உயர் பணிகள் மதிக்கப்பட வேண்டியவைகளாகும்.

ஹொக்கி விளையாட்டைப் பற்றி எங்கு பேசப் படுகின்றதோ அங்கே மாத்தளையைப் பற்றியும் பேசப்படும் என்று கூறுமளவுக்கு ஹொக்கி விளையாட்டில் புகழ்பூத்த நகரமாக மாத்தளை திகழ்கின்றது. இந்த விளையாட்டில் மாத்தளை இந்தளவு புகழ் பெறுவதற்கு ஏனைய இனத்தவர்கள் பங்களிப்புகள் வழங்கி யிருப்பதைப் போலவே தமிழ் இனமும் தன் பங்களிப்பை நல்கியுள்ளது.

மாத்தளையில் ஹொக்கி அறிமுகப் படுத்தப்பட்ட ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பது களிலேயே மாயழகு என்பவர் விளையாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே 1942 ஆம் ஆண்டில் மாத்தளை ஹொக்கி சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது அதன் உப தலைவர்களாக டாக்டர் புவிராஜசிங்கம், காசிநாதர் என்போரும் தனாதிகாரியாக சோமசுந்தரம் என்பவரும் தெரிவு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

பதினேழு மாணவர்களைக் கொண்ட மாத்தளைப் பாடசாலைகள் ஹொக்கி அணி 1954 ஆம் ஆண்டிலே தென்னிந்திய சுற்றுலா ஒன்றினை மேற் கொண்ட போது, அவ் அணியிலே பி. பாலசுப்ரமணியம், என். வீ. தேவராஜ், என். திலகநாதன், எஸ். சோமசேகரம், பீட்டர் பிரென்ஸிஸ் எனும் ஐந்து தமிழ் மாணவர்கள் இடம் பெற்றிருந்தனர் என்பதும் அவ்வணியின் தலைவராகச் சென்றவர் பால சுப்ரமணியம் என்பதும் மாத்தளைத் தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பனவையாகும்.

1956 – 1991 காலப்பகுதியில் நடைபெற்றுள்ள தேசிய ஹொக்கிப் போட்டிகளில் பங்கு பற்றிய மாத்தளை மாவட்ட ஹொக்கி அணியில் 170 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் சிங்களவர் 87 பேர், முஸ்லிம்கள் 59 பேர், பறங்கியர் 3 பேர், தமிழர்கள் 21 பேர். மாத்தளை அணியில் இடம் பெற்ற தமிழ் ஹொக்கி வீரர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

| பெயர் | ஆண்டு | விளையாடிய தேசிய போட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| எஸ். சுப்பையா | 1956 – 1961 | 06 |
| என். திலகர் | 1956 –1958 | 03 |
| ஆர். எஸ். சோமசேகரம் | 1956 | 01 |
| கே. எம். ராஜா | 1957 | 01 |
| எஸ். ராஜநாதன் | 1959 | 01 |
| பி. ராஜேஸ்வரன் | 1960, 61, 63 – 1965, 1968, 1969 | 07 |
| எஸ். சண்முகநாதன் | 1960 – 62 | 03 |
| எஸ். பொன்னுத்துரை | 1960 – 61 | 03 |
| எம். ஆர். ராஜா | 1962 – 1964 | 02 |
| பேர்னார்ட் | 1963 | 01 |
| கே. பாலசுந்தரம் | 1962 – 1964 | 03 |
| டீ. ஞானப்பிரகாசம் | 1965 | 01 |
| எம். மனோகரன் | 1972, 1973, 1975, 1977 | 04 |
| கே. சௌந்தரநாயகம் | 1975 | 01 |
| கே. எம். மகேந்திரன் | 1975 | 01 |
| ஆர். செல்வகுமார் | 1977 – 79 | 03 |
| எஸ். ஜெயராமநாதன் | 1977 – 1980 | 04 |
| முரளி மோகன் | 1978 | 01 |
| எஸ். சுதேசநாதன் | 1978 | 01 |
| எம். எல். ராஜா | 1980 – 1982 | 02 |
| கே. மகேஸ்வரன் | 1982 | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956 – 1991 காலப்பகுதியில் மாத்தளை உருவாக்கிய தமிழ் ஹொக்கி வீரர்கள் ஐந்து பேர் இலங்கை தேசிய ஹொக்கி குழுவில் இடம் பெற்று தம் இனத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களின் பெயர்கள் வருமாறு;

எஸ். சுப்பையா
ஆர். எஸ். சோமசேகரம்
ஆர். செல்வகுமார்
கே. சௌந்தரநாயம்
ஆர். மகேந்திரன்

தேசிய ஹொக்கி குழுவில் இடம் பெற்ற முதல் மாத்தளைத் தமிழர் என்ற பெருமை மாத்தளை ஹொக்கி வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் பங்களிப்பு நல்கியுள்ள திரு. எஸ். சுப்பையாவைச் சாரும்.

ஹொக்கி விளையாட்டு வீரர்களாக மாத்தளையின் புகழைக் கூட்டியிருப்பதைப் போலவே தமிழர்கள், மாத்தளை மாவட்ட ஹொக்கி சங்க பரிபாலனத்திலும் பெரும் பங்கு வகித்துள்ளனர். டாக்டர் கே. எம். ஆர். சுவாமி, திரு. சிவாசெல்லையா (மாவட்ட நீதிபதி), திரு. ஜே. சேனாதிராஜா (மாவட்ட நீதிபதி) ஆகியோர் இச் சங்கத்தின் தலைவர்களாகவும், திரு. பாலசுப்பிரமணியம், திரு. கே. பாலேந்திரா போன்றறோர் இச்சங்கத்தின் செயலாளர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

மாத்தளை ஹொக்கி சங்கத்திற்கு நிதி உதவிகள் தேவைப் பட்ட போதெல்லாம் அவ்வுதவிகளை வழங்கி அச்சங்கத்தின் வெற்றிக்குத் தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப்பு காத்திரமானதாகும். டாக்டர் சுவாமி, திரு. ரத்னசோதி, நோர்த் மாத்தளை தோட்ட அதிபர் திரு. கணேசன், திரு. தியாகராஜா செட்டியார், டொக்டர் அழகக்கோன், திரு. ராஜரத்தினம் போன்றோர் மாத்தளை ஹொக்கி சங்கத்தின் வளர்ச்சிக்குக் கணிசமான நிதியுதவிகள் வழங்கியுள்ளனர்.

சாரணீயம், 'கெடேட்டிங்' போன்றவைகளுக்கும் விளையாட்டுத் துறைக்கும் ஓரளவு தொடர்பு இருக்கின்றது. இலங்கையின் முதல் சாரணீயக் குழு 1921 ஆம் ஆண்டில் மாத்தளை கிறிஸ்து தேவ கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. அக்குழுவில் இடம் பெற்ற ஏழு சாரணீயர்களில் வி. நடராஜா என்பர் ஒருவர். இலங்கையின் முதல் சாரணீயக் குழுவிலேயே ஒரு மாத்தளைத் தமிழர் இடம் பெற்றதைப் பார்க்கின்றோம். திரு. ரோசரி அந்தனி, திரு. டேனியல், திரு. சிதம்பரம் போன்றோர் மாத்தளை மாவட்ட சாரணீய இயக்கத் தலைவர்களாக இருந்து சாரணீயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர். அவ்வாறே மேஜர் பாலேந்திரா, கேப்டன் குழந்தை வேலு போன்றோர் 'கெடேட்டிங்' வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்புக்கள் வழங்கியுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் வாழும் பல்வேறுபட்ட இனங்களுக்குமிடையில் ஒற்றுமை, புரிந்துணர்வு, சௌஜன்யம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு விளையாட்டுத் துறை பெரும் பங்களிப்பை நல்கியுள்ளது. மாத்தளை விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு மாத்தளைத் தமிழர்கள் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

★ ★ ★
★ ★
★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இந்நூலுக்கான விவரங்களைத் திரட்டும் முயற்சிகளில் நான் ஈடுபட்டிருந்த வேளையிலே எனக்கு உதவிகளை நல்கியவர் பலர் சிலர் தமக்குத் தெரிந்த விவரங்களை என்னிடம் கூறினார்கள்; சிலர் தேவையான நூல்களை, சஞ்சிகைகளை பத்திரிகைகளைத் தந்து உதவினார்கள்; சிலர் விவரங்கள் தெரிந்தவர்களை எனக்கு இனம் காட்டித் தந்தார்கள். நான் பலரை அவர்களது இல்லங்களுக்கே சென்று சந்தித்தேன். சிலரை அவர்களது காரியாலயங்களில், அவர்களது வியாபார நிறுவனங்களில் சந்தித்தேன், சிலரைப் பாதையில் சந்தித்தும் உரையாடியிருக்கிறேன். நான் இந்த நண்பர்களை சந்திக்கச் சென்ற வேளைகள் அவர்களுக்கு வசதியாக இருந்ததோ இல்லையோ அதைப் பற்றிச் சிந்தியாது, மன மகிழ்ச்சியோடு என்னோடு அளவளாவினார்கள். தமக்குத் தெரிந்த விவரங்களைத் தந்தார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் என் உளம் நிறைந்த நன்றியினைச் சமர்ப்பிக்கும் இவ்வேளையிலே அவர்களின் பெயர்களைத் தருவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. எம். கார்த்திகேசு.
திரு. எஸ். பொன்னுத்துரை.
திரு. பி. லோகநாதன்.
திரு. எஸ். செல்வகுமார்.
திருமதி ஜெகதாம்பாள் நாகேந்திரன்.
திரு. எஸ். குழந்தைவேல் செட்டியார்.
திரு. எல். தியாகராஜா செட்டியார்.
திரு. எல். சோமசுந்தரம் செட்டியார்.
அல்ஹாஜ் ஏ. எச். எம். பாட்சா.
அல்ஹாஜ் எஸ். எச். ஏ. வதூத்.
திரு. அ. லட்சுமணன் செட்டியார்.
திரு. த. மாரிமுத்து செட்டியார்.
திரு. உருத்திரா சின்னத்தம்பி.
திரு. எஸ். பத்மநாதன்.
திரு. எஸ். சந்திரசேகரம்.
திரு. டி. எம். சிங்கராஜ்.
திரு. எஸ். கணேசன்.
திரு. எம். சிவஞானம்.
அல்ஹாஜ் ஏ. இசட். ஓமர்தீன்
திரு. வீ. சுப்பையா ஆச்சாரி.
திரு. ராஜ் சிவா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஈ. குழந்தைவேலு.

திரு. மலரன்பன்.

அல்ஹாஜ் எஸ். ஜுனைத்.

அல்ஹாஜ் எம். ஐ. எச். இனூன்.

திரு. த. விஜயகுமார்.

திரு. வீ. நமசிவாயம்.

ஹாஜியானி திருமதி பருஜா ஆப்தீன்.

திரு. சங்கரன் ஆச்சாரி

ஜனாப் எம். ஆர். எம். நவாஸ்.

திரு. குழந்தைசாமி.

அல்ஹாஜ் வை. மஹ்ரூப்.

அல்ஹாஜ் எச். ஏ. ஹனான்.

ஜனாப் எஸ். எம். பாரூக்.

திருமதி எம். குமாரசாமி.

அல்ஹாஜ் எம். ஜப்பார்.

அல்ஹாஜ் எம். ரி. எம். ஹனீபா.

திரு. எஸ். மணி ஆச்சாரி.

ஜனாப் எம். எம். பாரூக்.

அல்ஹாஜ் எஸ். ரகூக்.

திரு. கே. மோகன்.

ஜனாப் எஸ். ஜுனைதீன்

திரு. சரவணமுத்து.

ஜனாப் பீ. ஏ. சரிப்தீன்.

திரு. எம். சுந்தரேசன்.

இந்த நூல் தொடர்பாக நான் சந்தித்தவர்கள் அனேகர். அத்தனை பேரும் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறினார்கள். இப்படி எனக்குத் தகவல்கள் தந்துதவிய அத்தனைப் பேர்களின் பெயர்களையும் குறிப்பிடுவது இயலாதது. பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சரி குறிப்பிடப்படாது இருந்தாலும் சரி இவர்கள் அனைவரும் இந்நூலின் பங்காளிகளே எனக் கூறி நிறைவு செய்கின்றேன்.

ஏ. ஏ. எம். புவாஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிநிகர் சமானமாய்
வாழ்வமிந்த நாட்டிலே"

*- பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GRAPHIC DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.